# செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்

## 10

## மெ முதல் வெள வரை

ஆசிரியர்

முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

முனைவர் **பி. தமிழகன்**

பதிப்பாளர்

**கோ. இளவழகன்**

நூற்குறிப்பு

# செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம் - 10

**மெ முதல் வெள வரை**

| | |
|---|---|
| ஆசிரியர் | முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாசிரியர் | முனைவர் **பி. தமிழகன்** |
| பதிப்பாளர் | **கோ. இளவழகன்** |

| | | |
|---|---|---|
| முதல்பதிப்பு | : | 2018 |
| பக்கம் | : | 20+300 = 320 |
| விலை | : | 400/- |

பதிப்பு

**தமிழ்மண் பதிப்பகம்**

எண். 2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே.: 24339030, செல்: 9444410654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

◆ தாள் : 16.0 கி. மேப்லித்தோ, ◆ அளவு : 1/8 தெம்மி ◆
◆ எழுத்து : 11.5 புள்ளி, ◆ பக்கம் : 320 ◆
◆கட்டமைப்பு : இயல்பு ◆ படிகள் : 1000 ◆
◆ கணினி & நூலாக்கம் : நல்லதம்பி, கோ. சித்திரா ◆
◆ அட்டை வடிவமைப்பு : செல்வன் பா. அரி (ஹரிஷ்) ◆
◆ அச்சு : வெங்கடேசுவரா ஆப்செட்,
ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006. ◆

## களஞ்சியம்

வளமான வீடுகள் கட்டி வாழும் நிலக்கிழார் பெருநிலக்கிழார் ஆகிய உழவர்கள், தங்கள் வீட்டின் உட்பகுதியில் களஞ்சியங்கள் அமைத்திருப்பர். களஞ்சியம் இருக்கும் வீடு என்றால் வளமிக்க உழவர்வீடு என்பது பொருள்.

களத்தில் வரும் தவசங்கள் பயறு வகைகள் ஆகியவற்றை அங்கே பூச்சியரிப்பு, மட்குதல் ஏற்படாவகையில் தளத்தின்மேல் உயர்த்தியும் புன்கு வேம்பு ஆகியவற்றின் தழைகளைப் பரப்பியும், பாதுகாப்பர். அவ்வாண்டு முழுமைக்கும் பயன்படும். அடுத்த ஆண்டு விளைவு குறைந்தாலும் களஞ்சியப் பொருள் கவலையின்றி வாழ உதவும்.

ஏருழவர் போலச் சொல்லேர் உழவராம் சான்றோர் நூல்கள், அக்காலத்தார்க்கே அன்றி எக்காலத்தார்க்கும் பயன்படும் வகையில் பாதுகாத்துப் பயன் கொள்ளச் செய்வது நூல் களஞ்சியமாகும்.

இந்தியப் பரப்பில் தமிழ் மொழியில் தான் முதன்முதல் **'கலைக் களஞ்சியம்'** உருவானது என்பது பெருமிதப்படத்தக்கதாம். இப்பொழுது **தமிழ்மண் பதிப்பகத்தால் வெளியிடப்படும் செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்** செவ்வியல் மொழிக் கொடையாக வந்து, **தமிழ்மண் பதிப்பக வெளியீட்டால், தமிழ்கூறு நல்லுலகப் பொருளாவது, செம்மொழிச் செம்மல் முனைவர் திருமிகு க. இராமசாமி அவர்கள்** தூண்டல் வழியாகத் துலங்கிய துலக்கமாகும். ஆதலால் படைப்பாளன் என்ற நிலையில் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்.**

# கடப்பாட்டு உரை

*தமிழ் இயற்கை இயங்கியல் வழிப்பட்ட ஒலி, வரி, வடிவுகளையும் இயற்கை இயங்கியல், மெய்யியல், வாழ்வியல், படைப்பியல் என்பவற்றை அடிமனையாகவும் கொண்ட மொழி.*

*"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் மூல முழக்கத்தை முழுவதாகக் கொண்டது நம்மொழி என்பதை ஓராற்றான் விளக்குவதாக அமைந்தது இக் களஞ்சியம்.*

*ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர் என்பவை இல்லாமல், வெளிப்பட எவரும் அறிந்து கொண்டுள்ள வழக்கு, செய்யுள் என்பவை கொண்டே விளக்குவது இக்களஞ்சியம்.*

*இதனை, ஊன்றியும் விரும்பியும் கற்பார் தாமும் இவ்வாய்வு செய்ய வியலும் என்பதைத் தூண்ட வல்ல ஆய்வும் இது! ஆதலால், "படிப்பாளியைப் படைப்பாளி ஆக்கவல்லது" என்பதை என் பட்டறிவுத் தெளிவாகக் கண்டு வருகிறேன்! எளிமையாய் - ஆழ்ந்த நுணுக்கங்களை - ஓரளவு கற்றாரும், கொள்ள வழிகாட்டும்* **'கைவிளக்கு'** *அன்னது இது.*

*இதனை முதல் - இடை - நிறைவு என்னும் மூன்று நிலை களிலும் உற்ற பெறலரும் உதவுநராக இருந்து முற்றுவித்ததுடன், தமிழ் உலகப் பயன்பாட்டுக்கும் வழியமைத்துத் தந்த* **'கலங்கரை விளக்கம்' செம்மொழிச் செம்மல் முனைவர் திருத்தகு க. இராமசாமி** *அவர்களே ஆவர். ஆதலால், அவர்களை நெஞ்சாரப் போற்றுவது என்* ***தலைக்கடனாம்!***

***திருவள்ளுவர் தவச்சாலை*** *நிறுவன வழியே இப்பணி செய்ய வாய்த்த அளவில் சொற்றிரட்டியும் மெய்ப்புப் பார்த்தும உதவிய பெருந்தகு கேண்மையும் உழுவலன்பும் உடைய முனைவர் பெருந்தகை* **கு. திருமாறனார்** *அவர்களுக்கும் எம் எழுத்துப்பணியைத் தம் பணியாக் கொண்டு தொடர்ந்து*

*செய்துவரும் தொய்விலாத் தொண்டர் மெய்ப்புப் பார்த்தலில் வல்லார்* ***முனைவர் பி. தமிழகனார்*** *அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.*

*என் எழுத்தைப் படியெடுத்தும், கொங்கு வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்தும் உதவிய புலவர் கலைமணியார் அவர்களுக்கும், இப்பணியில் இல்லை எனினும் உழுவ லன்பாலும் உரிமைப் பேற்றாலும் என் எழுத்துகளைப் படியெடுத்து உதவிய திருக்குறள் செம்மல் பெரும்புலவர் மு. படிக்கராமு அவர்களுக்கும் பெருநன்றியும் வாழ்த்தும் உடையேன்.*

*இத்தொகை அனைத்தையும் கணினிப்படுத்தியும், மெய்ப்புப் பார்த்தும், வரவு செலவு கணக்கைத் தக்க வகைத் தணிக்கைக்கு உரியவையாகச் செய்தும், பணிநிறைவை ஒப்படைத்தும் பெருநன்றாற்றிய கவனகச் செம்மல் முனைவர் கலை. செழியனார் அருந்தொண்டைப் பாராட்டி நன்றி பெரிதுடையேன்.*

*பணி நிறைவுப்பயன், தமிழ் கூறு நல்லுலகப் பயன்பாடு ஆதல் வேண்டும் என்பது தானே! இல்லாக்கால் செய்த பணியால் ஆவதென்ன? செய்யாமை ஒப்பது தானே! அவ்வாறு ஆகாமல் தாய்த்தமிழக ஆர்வலர்களுடன், அயலகத் தமிழ்ப் பெருமக்களாக விளங்கினும் தாய்த்தமிழக ஆர்வலர்களிலும் மேம்பட்ட ஆர்வலர்களாகக் குவையத்து, அமெரிக்கா, கனடா, மலையகம், சிங்கபுரி, ஈழம் முதலாக வாழ்வார் ஆர்வத் தளிர்ப்பும் தூண்டலும் முன்னிற்கும் பேறு வியப்புக்கும் பெருநன்றிக்கும் உரியதாம்;*

*இப்பெருமக்கள் அனைவர் உள்ளமும் ஒருருவாக வாய்த்து, கருவி நூற்பணியைத் தொகை தொகையாக வகைப்படுத்தி வான் பெருந்தொண்டாகச் செய்தலே எம் பிறவிக் கடன் எனக் கொண்ட தமிழ்ப் போராளி திருமிகு கோ. இளவழகனார் வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பதை நிலைநாட்டியதைப் போற்றுவதன்றி என் சொல்வேன்?*

*களஞ்சியம் கணினிப்படுத்திய அளவில் நிறைவுறுமா? பத்துத் தொகுதிகளையும் ஒருமுறைக்கு மும்முறையாய் முழுதுற மெய்ப்புப் பார்த்தல், எளிமைப் பாடா? கண்புரை வளர்ந்தாலும் இடைத்தடை நேர்ந்தாலும் இத்தொண்டு தமிழன்னை தளிர்க்கும் தொண்டு என்று இமைப் பொழுதும் சோராது கடனாற்றிய கடப்பாட்டாளர் மெய்ப்புச்செம்மல் முனைவர் பி. தமிழகனார்க்குப் பெருங்கடப்பாடு உடையேன்; பதிப்புச் சுமையை ஏற்றமை என் சுமை ஏற்றமையாம்!*

*வாழிய நலனே! வாழிய நலனே!*

**இரா. இளங்குமரன்**

# தமிழ்க் களஞ்சியம்

*மொழியின் வளம், அம்மொழியைப் பேசுவோர் பயன்படுத்தும் சொற்களாலும், அம் மொழியில் உள்ள இலக்கண, இலக்கிய வகைகளாலும் அறியப்படும். தமிழின் வளம் இலக்கியங்களிலும் மக்கள் வழக்குகளிலும் நிறைந்துள்ளது. சொற்களின் வளமும், பெருக்கமும் மொழியின் சிறப்பைக் காட்டும். சொற்களின் பெருக்கைக் காட்ட எத்தனையோ நிகண்டுகளும், அகராதிகளும், களஞ்சியங்களும் தமிழில் வந்துள்ளன. இவற்றுள் பல பிறமொழிச் சொற்களையும் தமிழ்ச் சொற்களாய்க் கருதிப் பொருள் தந்துள்ளன. பிற மொழிகளில் ஏறிய தமிழ்ச் சொற்களும் வேற்றாடை உடுத்தியுள்ளன. அவற்றை அறிந்து தமிழெனக் காட்ட, மொழி உணர்வும், இலக்கிய இலக்கணப் புலமையும், தமிழ் முழுதறி தகுதியும், மக்கள் வழக்குகளை வழங்கும் சூழலில் கேட்டறிதலும், சொற் பொருளாய்வும், சொல்லியல் நெறிமுறைகளும், வேர்ச் சொல்லாய்வும், கூர் மதியும் நிறைந்திருக்க வேண்டும்.*

*இத்தமிழ்ச் சொற் களஞ்சியம் சொற்களின் பொருளை மட்டுமா தருகின்றன? சொற்களின் வேரும், அதன் விரிவும், அவற்றின் விளக்கமும், சான்றுகளும், மக்களின் பொது வழக்கும், வட்டார வழக்கும், யாழ்ப்பாணத் தமிழ் வழக்கும் செறிந்துள்ள தமிழ்க் களஞ்சியமாம்.*

*ஒரு வினைச் சொற்கள் தொகை தொகையாகிய தொகை இக்களஞ்சியம். 'அடி'த்தல் சொல்லடியாக 145 சொற்கள் உண்ணல் வகைகள், ஊர்ப் பெயர் ஈறுகள் (504) நோய் வகைகள் (229), நோய் வினைகள் (216), மதில் பொறி வகைகள் (28) மலை வகைகள் (25) முதலிய எத்தனையோ வகைகளும் தொகைகளும் அடங்கியுள்ளன. இவற்றின் தொகுப்பு கற்பாரை வியக்க வைக்கும்!*

*இக் களஞ்சியத் தொகுதிகளுள் நூற்றுக்கணக்கில் மரபுத் தொடர்கள், இணை மொழிகள், ஒலிக்குறிப்புகள், அவற்றின் விளக்கங்கள் அடங்கியுள்ளன.*

*சொற்கள் விளக்கத்திற்கு அன்றாடச் செய்திகளும் (செய்தித்தாள்கள்) சான்றாகின்றன.*

*சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்பர். ஆனால், பற்பல நூறுவகைகள் உள்ளமையை இக்களஞ்சியம் காட்டும்.*

*மேனாட்டு உடைகளை மாட்டியதால் தமிழர் மேனாட்டார் ஆகாரன்றோ? பஜ்ஜி ஏதோ பிறமொழி என்றே மயங்கி நிற்பர். அது பச்சைக் காய்கறிகளால் செய்யப்படுவது.*

*தேவநேயப் பாவாணர் உடன் பழகியமையாலும், அவர் நூல்களைத் தோய்ந்து தோய்ந்து கற்றமையாலும், அவரே பாராட்டியமையாலும் ஐயா, பல சொற்களுக்கு வேர்ச்சொல் வழி மூலமும் கிளையும் காட்டியுள்ளார். புழுதி, பூழ்தி, பூதி.*

*பல சொற்களின் பொருள் வேறுபாடுகளும் காட்டப்பட்டுள்ளன: விரைப்பு- விரைப்பு; விறைப்பு - தொய்வின்மை;*

*இக்களஞ்சியம் தவசங்களாம் சொற்கள் கொட்டப்பட்டு நிறைந்துள்ளது. படிப்பார் தத்தமக்குத் தேவையான தவசங்களை அள்ளி அள்ளிப் பயன் கொள்ளலாம். எவ்வளவு அள்ளினும் என்றும் குறையாது இக்களஞ்சியம்.*

*தமிழரின், மொழி, இன, இலக்கிய, இலக்கணம் ஆகியவற்றின் வரலாறு, பண்பாடு, நாகரிகங்களின் அடங்கல்களைப் படை படையாகத் திரட்டித் தொகுத்து வெளியிடும் தமிழ்மண் பதிப்பகம் தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் முதலிடம் பெற்றிருக்கிறது.*

*ஐயா முதுமுனைவர், இளமை முதல் தொகுத்த சொற்களஞ்சியங்களைச் சேர்த்துச் சேர்மானமாக்கித் திரட்டித் தந்துள்ளார்கள். தமிழர்களே! இங்கே வம்மின்! களஞ்சியம் கொண்மின்!! தமிழை வளர்மின்!!!*

**பி. தமிழகன்.**

# அணிந்துரை

செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம் என்னும் இந்நூல் இன்று நம்மிடையே வாழும் தொல்காப்பியராக விளங்கும் மூத்த தமிழறிஞர் செந்தமிழ் அந்தணர் முதுமுனைவர் இரா. இளங்குமரனார் அவர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஏறத்தாழ 8000 தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் விளக்கத்தினை மேற்கோள் சான்றுகளுடன் வழங்கும் இந்நூல் தோராயமாக 3254 பக்கங்களில் பத்துத் தொகுதிகளாக வெளிவந்து தன்னேரிலாத தமிழ் மொழிக்குத் தனிப்பெருமை சேர்க்கும் முன்னோடிப் பணியாக அமைந்துள்ளது. அகரமுதலிகளில் இடம்பெறாத சொற்கள், மரபுச்சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள், பழமொழிகள் போன்றவை இக்களஞ்சியத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க தாகும். இசை, மருத்துவம், கல்வெட்டு, அறிவியல் ஆகிய துறைகள் சார்ந்த இன்றியமையாத சொற்களுக்கும் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. அகரத்தில் தொடங்கும் சொற்களுக் கான பொருள் விளக்கங்கள் மட்டுமே 276 பக்கங்களில் முதல் தொகுதியாகவும் தனித் தொகுதியாகவும் அமைந்திருப்பது நூலின் செறிவையும் விரிவையும் பறை சாற்றுவதாக அமைந் துள்ளது. அயன் மொழிச் சொற்கள் அறவே தவிர்க்கப் பட்டிருப்பது நூலின் தனிச்சிறப்பாகும்.

சொற்பொருட் களஞ்சியப் பணியை நிறைவேற்றும் வகையில் நூலாசிரியருக்குத் தூண்டுதலாக அமைந்தது ஒல்காப் புகழ் தொல்காப்பியமே. குறிப்பாக, “எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே” (தொல். 640) என்னும் நூற்பா. இந் நூற்பாவினை மூல முழக்கமாகக் கொண்டது தமிழ்மொழி என்பதை விளக்கும் பொருட்டே இக்களஞ்சியம் உருவாக்கப்

பட்டதென நூலாசியிர் குறிப்பிட்டுள்ளார். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் காட்டியவாறு "ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர் எனக் காணாமல் வெளிப்படையாக அறியக்கூடிய சொற்களுக்கு மட்டுமே அமைதியும் திரிபும் பொருள் விளக்கமும் காட்டுவது இக்களஞ்சியம்" என்பதும் நூலாசிரியர் கூற்றாகும். பொருள் விளக்கங்களினூடே கீழ்க்காணும் தொல்காப்பிய நூற்பாக்களின் பயன்பாட்டினையும் உணரலாம்.

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர். (தொல். 641)

தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே. (தொல். 642)

பொருட்குப் பொருள்தெரியின் அதுவரம் பின்றே. (தொல். 874)

பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின் (தொல். 875)

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா. (தொல். 877)

ஒரு பொருள் பல சொற்கள் மிகவும் நுட்பமாய் ஆராயப் பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. 'அழகு' பொருண்மையைக் குறிக்கும் 67 தனித்தமிழ்ச் சொற்களை அடையாளங்கண்டு அவற்றிற்கு நுட்பமான விளக்கங்களைத் தந்திருப்பது ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்திற்கும் வளமான பட்டறிவிற்கும் சான்றாக விளங்குகிறது.

பெருமதிப்பிற்குரிய ஐயா இளங்குமரானாரின் நெடுங்கால அவா இந்நூல் வெளியீட்டின் வழி நிறைவேறியுள்ளமை மகிழ்வளிக்கிறது. இது காலத்தை வென்றுநிற்கும் நிலைத்த பணி. தமிழ் ஆய்வாளர்களுக்குக் கிட்டியுள்ள தலைசிறந்த நோக்கீட்டு நூல். உலகெங்கும் வாழும் தமிழ் உணர்வாளர்கள் இந்நூலினை வரவேற்றுப் போற்றுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. களஞ்சியப் பணி ஒரு தொடர் பணி. இப்பத்துத் தொகுதிகளை அடித்தளமாகக் கொண்டு தொடர்ந்து நூற்றுக்கணக்கான

தொகுதிகள் வெளிவந்து தமிழிற்கு வளம்சேர்க்க வேண்டும் என்பது என் அவா.

தனித்தமிழ்ப் பற்றாளராகவும் அரிய தமிழ் நூல்களின் பதிப்புச் செம்மலாகவும் விளங்கும் தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் திரு. கோ. இளவழகனார் இக்களஞ்சியத்தை அருமுயற்சியுடன் சிறப்புற வெளிக்கொணர்ந்திருப்பது பாராட்டிற்குரியதாகும்.

முனைவர் **க. இராமசாமி**

முன்னாள் பேராசிரியர் - துணை இயக்குநர்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்
முன்னாள் பொறுப்பு அலுவலர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

# நுழைவுரை

தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் புதைந்து கிடக்கும் அறிவுச் செல்வங்களைத் தனக்கே உரிய நடையில் இருந்து தமிழின் ஆழ அகலங்களை அகழ்ந்து காட்டும் அய்யா இளங்குமரனாரின் நினைவாற்றலை நினைந்து நினைந்து மகிழ்பவன்.

அவர் அருகில் இருக்கவும், அவருடன் உரையாடவும், வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவும் கருதுகிறேன். மொழிஞாயிறு பாவாணர், செந்தமிழ் அறிஞர் இலக்குவனார், மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் முதலான பெருமக்களை எட்டி இருந்து பார்த்தவன். அவர்களின் அறிவு நலன்களைக் படித்துச் சுவைத்தவன். இப் பெருமக்களின் மொத்த உருவமாக அய்யா **இளங்குமரனாரைப்** பார்த்து நெஞ்சம் நெகிழ்பவன்.

அய்யா அவர்களின் அறிவுச் செல்வங்களைக் கடந்த காலத்தில் பேரளவில் எம் பதிப்பகம் வெளியிட்டு அவரின் உழைப்பை தமிழ் கூறும் உலகுக்கு அளித்ததில் நிறைவு அடைகிறேன்.

இன்று உங்கள் கைகளில் தவழும் **செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்** எனும் இவ்வருந்தமிழ்த் தொகுப்பை உருவாக்குவதற்கு எவ்வளவு காலம் உழைத்திருப்பார் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். வியந்து போகிறேன். இச்செந்தமிழ்த் தொகுப்பு **தமிழ் அகராதி** வரலாற்றில் தமிழுக்குப் புது வரவாகும். இதுவரை யாரும் செய்ய முன்வராத பெரும்பணி யாகும். அய்யாவின் இலக்கிய, இலக்கண பெரும்பரப்பைத் தாங்கிவரும் இப்பொற் குவியலை உலகத் தமிழர்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

*பாவாணர் போல் வேர்காட்டி, வளம் கொடுக்கும் சொற்கடலாய் வாழும் அய்யாவின் பேருழைப்பால் விளைந்த இலக்கிய இலக்கணக் களஞ்சியத்தை வெளியிடுவதன் மூலம் என்னையே நான் பெருமைப் படுத்திக் கொள்கிறேன். என் வாழ்க்கையில் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகிறேன்.*

*அய்யாவின் 75ஆம் (30.01.2005) அகவை நிறைவைத் திருச்சித் திருநகரில் தமிழர் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிய நிகழ்வில்* **புலமைக்குத் தலைவணக்கம்** *எனும் நிறைவுமலரினைத் தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்டு மகிழ்ந்தது. அந்த மலரில் மலேசியப் பாவரசு சு.ஐ.உலகநாதன் எழுதிய பாடலினைக் கீழே சுட்டியுள்ளேன்.*

*“வாய்த்திருக்கும் அகவையெலாம்*
*வரலாறு படைக்கின்றார்*
*வையகமே வந்து போற்று”*

*நம் முன் சான்றாக வாழும் ‘ஐயா’ அவர்களால் உருவாக்கப்பட்ட இக்களஞ்சியத்தைத் தமிழ் உலகுக்கு வழங்குவதில் பெருமையும், பூரிப்பும் அடைகிறேன்.*

**கோ. இளவழகன்**



**ஆசிரியர் விவரம்**

# முதுமுனைவர்
# இரா. இளங்குமரனார்

**பிறப்பு** : 30. 1. 1930

**பெற்றோர்** : இராமு - வாழவந்தம்மை (உழவர்குடி)

**ஊர்** : சங்கரன்கோவில் வட்டம், வாழவந்தாள்புரம்

**கல்வி** : தொடக்கக் கல்வி - உள்ளூரில்
நடுநிலைக் கல்வி - பாவாணர் பயின்ற முறம்பு பள்ளி
வித்துவான் - தமிழ்த் தேர்வு - தனித் தேர்வர்

***ஆசிரியர் பணி :***

தொடக்கப் பள்ளி - 16ஆம் அகவையில் தொடக்கம்

உயர்நிலைப் பள்ளி - தமிழாசிரியப்பணி

***ஆய்வுப்பணி :***

பாவாணருடன் - செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் - கலைச் சொல் விளக்கம் தொகுப்புப் பணி, தமிழக வட்டார வழக்குச் சொல் தொகுப்புப் பணி.

***தமிழ்ப்பணி :***

கட்டுரை, கவிதை, கதை, நாடகம், காப்பியம், இலக்கண - இலக்கிய உரை - தமிழ்ச் சொல்லாய்வு - பழந்தமிழ்நூல் பதிப்புகள் - தனிமனித - இலக்கண - இயக்க, இசை, வரலாறு. தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம் - நாடகம். குழந்தைப் பாடல்கள் - ஆய்வுப் பொழிவு - தொகுப்பு நூல்கள் நாளொன்றுக்கு 18 மணிநேர எழுத்துப் பணி திருவள்ளுவர் தவச்சாலை நிறுவி இயக்குதல். செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம் ...

**நூல்கள் :**

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணிவாசகர் பதிப்பகம், ஈரோடு குறளாயம், திருவள்ளுவர் தவச்சாலை, தமிழ்மண் பதிப்பகம் வழி 420க்கும் மேல்

**வெளிநாட்டு பயணம் :**

தமிழீழம், சிங்கப்பூர், மலேயா, அமெரிக்கா முதலிய நாடுகளில் தமிழ் அமைப்புகளில் பொழிவுகள்.

**திருமணம் நிகழ்த்துதல் :**

தமிழகம், சிங்கப்பூர், மலேயாவில் 4000க்கும் மேற்பட்ட தமிழ்நெறித் திருமணங்கள் நிகழ்த்துநர்.

**இயக்கப்பணி :**

தமிழகத் தமிழாசிரியர் கழகம், உலகத் தமிழ்க் கழகம், தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், திருக்குறள் பேரவை, ஈரோடு குறளாயம், தமிழ்ச்சான்றோர் பேரவை

**விருது :**

இலக்கியச் செம்மல், செந்தமிழ் அந்தணர், முதுமுனைவர் முதலியன.

## பதிப்பாசிரியர் விவரம்



### முனைவர் பி. தமிழகன்

**பிறப்பு** : 5. 10. 1946

**பெற்றோர்** : பிச்சை - மீனாட்சி (வேளாண்குடி)

**ஊர்** : இலால்குடி வட்டம், குமுளூர்

**கல்வி** : தொடக்கக் கல்வி - உள்ளூர்

நடுநிலைக் கல்வி - இருங்கலூர்

உயர்நிலைக் கல்வி - பூவாளூர் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி

புலவர் - கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

தமிழியல் இலக்கிய இளைஞர், முதுகலை, கல்வியியல் முதுகலை, தனித் தேர்வர்

**ஆய்வு** : தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம், 'சங்க இலக்கியத்தில் மரபியல் சொற்கள்'

**ஆசிரியர்கள்** : முதுபெரும்புலவர் அடிகளாசிரியர், பாவலரேறு பாலசுந்தரனார்

**ஈடுபாடு** : சங்க இலக்கியம், பத்தி இலக்கியங்கள், தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், நாட்டுப்புறவியல்

**ஆசிரியப் பணி** : திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசுப் பள்ளிகளில் 33 ஆண்டுகள் தமிழாசிரியர், பணி நிறைவுக்குப்பின் ந.மு. வேங்கடசாமி நாட்டார் கல்லூரியில் பேராசிரியர் பணி தொடர்தல்.

**இயக்கப் பணி** : தமிழியக்கம், பாவாணர் தமிழியக்கம், திருவள்ளுவர் தவச்சாலை

**நூல்கள்** : தமிழகத் தொல்பொருள் ஆய்வு (புலவர் பாடநூல்)
வழக்குச் சொல் அகராதி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

**பதிப்புப் பணி** : முதுமுனைவர் இரா. இளங்குமரனாரோடு இணைந்து தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட முதுமொழிக் களஞ்சியம், சங்க இலக்கியம்.



## பதிப்பாளர் விவரம்

# கோ. இளவழகன்

| | |
|---|---|
| பிறந்த நாள் | : 3.7.1948 |
| பிறந்த ஊர் | : உறந்தைராயன்குடிக்காடு அஞ்சல்<br>உரத்தநாடு வட்டம் - 614 625<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| கல்வி | : கல்லூரி புகுமுக வகுப்பு |
| இப்போதைய தொழில் | : புழக்கத்தில் இல்லாத பழந்தமிழ் நூல்களைத்<br>தேடியெடுத்து வெளியிடல் |

### ஆற்றியுள்ள பொதுப்பணிகள்

1965இல் பள்ளி மாணவனாக இருந்தபோதே மொழிப் போராட்டத்தில் முனைப்பாகப் பங்கேற்றுத் தளைப்படுத்தப் பெற்று 48 நாள்கள் சிறையில் இருந்தவர்.

பிறந்த ஊராகிய உறந்தைராயன்குடிக்காட்டில் **'ஊர்நலன் வளர்ச்சிக் கழகம்'** எனும் சமூக அமைப்பில் இருந்து ஊர் நலப்பணி ஆற்றியவர்.

உரத்தநாட்டில் **'தமிழர் உரிமைக் கழகம்'** என்னும் அமைப்பையும், **பாவாணர் படிப்பகத்தையும்** நண்பர்களுடன் இணைந்து நிறுவித் தமிழ்மொழி, தமிழின, தமிழக மேம்பாட்டிற்கு உழைத்தவர். இளம் தலைமுறைக்குத் தமிழ்த் தொண்டாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவின் மதுவிலக்குக் கொள்கையை நெஞ்சில் ஏந்தி உரத்தநாடு மதுவிலக்குக் குழுவின் முக்கிய அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து செயலாற்றியவர். 1975-இல் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் **'உரத்தநாடு திட்டம்'** என்று பாராட்டப் பெற்ற மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற உழைத்தவர்.

தமிழ்மண் பதிப்பகத்தை நிறுவி புழக்கத்தில் இல்லாத பழந்தமிழ் நூல்களையும், புதிய படைப்பு இலக்கியங்களையும், 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் வாழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் எழுதி வைத்துச் சென்ற தமிழின் அறிவுச் செல்வங்களைத் தேடி எடுத்து முழுமையாகப் பொருள் வழிப் பிரித்து, கால நிரலில் தொடர் தொடராக வெளியிட்டுத் **தமிழ்நூல் பதிப்பில் தனி முத்திரை பதித்து வருபவர்.**

## பொதுநிலை

தனித்தமிழ் இயக்கத் தந்தை **மறைமலையடிகள்**, **தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ் சித்திரனார்** ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்டு அவர்தம் கொள்கைகளை நிறைவேற்ற அயராது உழைத்து வருபவர்.

# நூலாக்கத்திற்கு உதவியோர்

**ஆசிரியர்:**

முதுமுனைவர் **இரா. இளங்குமரன்**

**பதிப்பாசிரியர்:**

முனைவர் **பி. தமிழகன்**

**கணினி மற்றும் நூல்வடிவமைப்பு:**

திரு. **நல்லதம்பி** (யாழினி கணினி)
திருமதி. **கோ. சித்திரா**

**மேலட்டை வடிவமைப்பு:**

செல்வன் **பா. அரி (ஹரிஷ்)**

**திருத்தத்திற்கு உதவியோர்:**

முனைவர் **பி. தமிழகன்**

**நூலாக்கத்திற்கு உதவியோர்:**

திரு இரா. பரமேசுவரன், திரு தனசேகரன்,
திரு கு. மருது, திரு வி. மதிமாறன்

**அச்சாக்கம் - நூல் கட்டமைப்பு:**

வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு, ஆயிரம் விளக்கு, சென்னை-14.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | ‘மெ’ வரிசைச் சொற்கள் | | 2 |
| 2. | ‘மே’ | ” | 15 |
| 3. | ‘மை’ | ” | 25 |
| 4. | ‘மொ’ | ” | 31 |
| 5. | ‘மோ’ | ” | 40 |
| 6. | ‘மௌ’ | ” | 45 |
| 7. | ‘ய’ ‘யா’ | ” | 47 |
| 8. | ‘வ’ | ” | 77 |
| 9. | ‘வா’ | ” | 147 |
| 10. | ‘வி’ ‘வீ’ | ” | 183 |
| 11. | ‘வீ’ | ” | 229 |
| 12. | ‘வெ’ | ” | 240 |
| 13. | ‘வே’ | ” | 269 |
| 14. | ‘வை’ | ” | 287 |
| 15. | ‘வௌ’ | ” | 293 |

# ‘மெ’ முதல் ‘வௌ’ வரை

# ‘மெ’ வரிசைச் சொற்கள்

**மெ:**

*மகர எகரம்; மெல்லின உயிர்மெய். இதழ் ஒட்டப் பிறக்கும் எழுத்து.*

**மெச்சக் கொட்டல்:**

*மெச்சக் கொட்டல் = பாராட்டல். மெச்சல் = பாராட்டல் (ம.வ.) மெச்சுதல் என்பதும் இது.*

*ஒன்றைச் சொல்லும் போது அல்லது செய்யும் போது பாராட்டுவதற்கு அடையாளமாக 'இச், இச்' என நாவால் ஒலி எழுப்புவதை மெச்சக் கொட்டல் என்பது வழக்கு. மெச்ச = பாராட்ட. கொட்டல் = ஒலித்தல். பாராட்டுதலுக்குக் குறியாக ஒலிசெய்தல் மெச்சக் கொட்டல் என்க.*

*மெச்சுக் கொட்டுதல் என்பது தின்பதற்கு இல்லாமல் வெறும் வாயை மென்று கொண்டிருப்பதாம். 'மெச்சு மெச்செனக் கொட்டல்' என்க.*

*மெச்சு = ஒலிக்குறிப்பு; மெச்சுமெச்செனத் தின்னல் என்பதில் இவ்வொலிக் குறிப்புண்மை அறிக. 'மெச்சமிடுதல்' என்பதும் தின்னலே.*

**மெதை:**

*மிதை என்பது எகரத் திரிபாக மெதை ஆயது. மிதை என்பது மிதந்து வரும் நுரை. நாகர்கோயில் வட்டாரத்தினர் நீரின் நுரையை மெதை என்கின்றனர். மிதப்பது மிதை என்பது இயல்பான ஆட்சி.*

**மெத்தை:**

*மெது > மெத்து > மெத்தை = மென்படுக்கை, மாடி.*

*மெத்து மெத்து என்பது மென்மைத் தன்மையது என்னும் பொருளது. சிறிது சிறிதாக மண், கல் முதலியவற்றைப் போட்டு, பள்ளம் குழி ஆயவற்றை மூடுதல் மெத்துதல் ஆகும். பஞ்சு, துணி ஆகிய மென்பொருள்கள் பலவற்றை உறையுள் போட்டுப் படுக்கையாகப் பயன்படுத்துவது உண்டு. அதன் தன்மையால் ‘மெத்தை’ எனப்பட்டது. ‘மாடி’ என்பது அடித்தள வீட்டின் மேல் எழுப்பப்பட்டது. பெரும்பாலும் கம்புகள் இலை தழைகள் ஆயவற்றைப் பரப்பி மண்சேறு பூசிச் செய்யப்பட்ட மண் பரணையே முதற்கண் மெத்தை எனப்பட்டுப் பின்னர் மாடி என்னும் பொருள் தருவதாயிற்று. மெத்தை வீடு, மெத்தைக் கட்டில் என்பவை வழக்கில் உள்ளவை.*

**மெய்:**

1. *மெய் = உடல்; மெய்யுணர்வு (ஊறு). ‘பொய்’ என்னாராய்ப், பொய்யாய் ஒழியும் உடல் எனினும், தன்னையுடையான் புகழுக்கு இடனாகி உலகு ஒழியினும் ஒழியா நிலைபேற்றை வழங்கி நிலைபெறுத்தும் மாண்பு கருதி ‘மெய்’ என்றார்.*
2. *மெய் = மெய்யெழுத்து அல்லது புள்ளி எழுத்து.*
3. *மெய் = உண்மை.*

“யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற” - திருக். 300

4. *மெய் = நிலைபேறு; மெய்யுடல் (அ) புகழுடல்.*
5. *மெய் = ஆள். “இந்நெல் தண்ட வந்தார்க்கு மெய்கண்டு சோறு கொடுப்பதாகவும்”*

*மெய் = ஆள் எண்ணிக்கை. தெ.க.தொ.8:5*

**மெய்ச்சீர்த்தி (மெய்க்கீர்த்தி):**

*சீர்த்தி > கீர்த்தி.*

*அரசரது மெய்யான புகழைக் கூறுவது மெய்க்கீர்த்தி எனப்பெறும். மெய்க்கீர்த்தி அடியும் வஞ்சியடியுமாகிய*

*சொற்சீரடியான் வரும். "சீர்த்தி மிகுபுகழ்" என்பது தொல்காப்பியம் (796).*

"சிறந்தமெய்க் கீர்த்தி அரசர் செயல்சொற் றனவா செய்யுள்
அறைந்ததோர் சொற்சீரடியாம்" - நவநீத. 53

"சொற்சீ ரடியால் தொழிற்படு புகழை
வேந்தர்பாற் கூறின் மெய்க்கீர்த்தி யாகும்" - இலக். பாட். 71

*இதனைச் சீர்மெய்க்கீர்த்தி என வழங்கி அதன் இலக்கண அமைதியையும் இயம்பும் பன்னிரு பாட்டியல்.*

"சீர்நான் காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி" - பன்னிரு. 313

"நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம்
உரையாய் முடியும் எனவுரைத் தனரே" - பன்னிரு. 314

*இதனை மெய்க்கீர்த்தி மாலை என்பாரும் உளர்.*

"சொற்சீர் அடியெனும் கட்டுரைத் தொடர்பாற்
குலமுறை ஆற்றிய கீர்த்தியைக் கூறல்
மெய்க்கீர்த்தி மாலையாம் விளம்பும் காலே" - முத்துவீ. 1060

**மெய்ப்பாடு:**

*மெய்ப்பாடு என்பது சொற்கேட்டோர்க்குப் பொருள் கண்கூடாதல். (தொல். பொருள். 313, பேரா.)*

*மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல். (தொல். பொருள். 249, பேரா.)*

*மெய்ப்பாடு என்பது புறத்துக் கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சின்கண் தோன்றிய விகாரத்தின் விளைவு. (திருக்கோ. 1, பேரா.)*

*மெய்ப்பாடு என்பது அகவுணர்வுகளை ஆராயாமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் புறவுடல் இயற்குறியாம். மெய்ப்படத் தோன்றும் உள்ளுணர்வை மெய்ப்பாடு என்றது ஆகுபெயர். (தொல். பொருள். மெய்ப். முன்னுரை. ச.சோ.)*

*(உ.க.சொ.நு.வி. பக். 214)*

*மெய் + பாடு = மெய்ப்பாடு.*

*ஒருவர் மெய்யின்கண் தோன்றுகின்ற உணர்வுத் தோற்றம் மெய்ப்பாடு எனப்படும்.*

*ஒருவன் உள்ளத்தே நிகழ்ந்த நகை முதலிய குறிப்பு, புறத்தார்க்கு அவன் உடம்பு வேறுபாட்டால் வெளிப்படுதல் மெய்ப்பாடு என்பது பேராசிரியர் கருத்தாம். (குறிப்பு சி.க.).*

*மெய்ப்பாடுகள் எட்டு என்பர்.*

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப” - தொல். 1197

*நகை என்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப. அழுகை என்பது அவலம்; அஃது இருவகைப்படும். தானே அவலித்தலும் பிறரவலங் கண்டு அவலித்தலும் என. இவற்றை ஒன்று கருணை எனவும் ஒன்று அவலம் எனவும் பட்டுச் சுவை ஒன்பது ஆகலும் உடைய என்பது.*

*இளிவரலென்பது இழிபு. மருட்கை என்பது வியப்பு; அற்புதம் எனினும் அமையும். அச்சம் என்பது பயம். பெருமிதம் என்பது வீரம். வெகுளி என்பது உருத்திரம். உவகை என்பது காம முதலிய மகிழ்ச்சி.*

*இவை, அவ்வெட்டுமாவன. இவற்றைச் சுவை எனவும் குறிப்பு எனவும் வழங்கினும் அமையும்.*

*மற்றிவ் வெட்டனொடும் சமநிலை கூட்டி ஒன்பது என்னாமோ நாடக நூலிற் போல எனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதிலன் என்பது. அதற்கு விகாரம் உண்டெனின் முன்னை எட்டனுள்ளும் சார்த்திக் கொள்ளப்*

*படும். அல்லதூஉம் உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் ஈண்டு உலகவழக்கினுள் சொல்லியதிலன் என்பது. ஒழிந்த எட்டும் உலகியலாகலிற் கூறினான் வழக்கும் செய்யுளுமாயிரு முதலின் (பாயிரம்) என்று புகுந்தமையின் என்பது. (பேரா.).*

*சமனிலையாவது வாளால் வெட்டினாலும் தாளில் வீழ்ந்து வணங்கினாலும் ஒப்ப நிற்கும் ஒருநிலை. அந்நிலையைக் காணக் காட்டினான் ஒரு சிற்பி. அச்சிலை கழுகுமலை வெட்டுவான் கோயில் பகுதியில் உள்ளது. நகைமுதல் சமனிலை ஈறாக ஒன்பான் மெய்ப்பாடுகளும் ஒருங்கே விளங்கச் செய்யும் சிற்பங்கள் அவை.*

**மெய்ப்பு:**

1. *உள்ளதற்கு மிகச் சரியானது. அச்சிடுவதை மூலப்படியொடு ஒப்பப்பார்த்து மாறுபாடறச் செய்வது. அது மெய்ப்புப் பார்த்தல் எனப்படும்.*
2. *வழக்கில் வேண்டும் சான்று சாட்சி முதலியவற்றைக் காட்டி மெய்ப்பித்தல் (அ) உண்மையை நிறுவுதல்.*
3. *உண்மையைக் கூறி அல்லது பொய்ம்மையைப் புனைந்து புகழ்தல். நீதான் மெ(ய்)ச்சிக் கொள்ள வேண்டும். மெய்ச்சு > மெச்சு.*

**மெய்ப்பை:**

*மெய் + பை = மெய்ப்பை.*

*மெய்யை மூடும் பை மெய்ப்பை; அது சட்டை.*

“மெய்ப்பை புக்கு” - சிலப். 16:107

***பொருள்:*** *“மெய்ப்பை = சட்டை” அரும்., அடியார்க்.*

**மெய்ப்பொருள்:**

*மெய்ம்மை + பொருள் = மெய்ப்பொருள். நிலைபேறாம் பொருள் மெய்ப்பொருளாம்.*

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு” - திருக். 423

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" - திருக். 355

*மெய்ப்பொருள் மெய்யுணர்வு எனவும்படும்.*

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" - திருக். 368

*செம்பொருள் என்பதும் அதுவே.*

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு" - திருக். 358

**மெய்ம்மயக்கம்:**

*ஒரு மெய்யெழுத்தொடு மற்றொரு மெய்யெழுத்து மயங்கி (கலந்து) வருதல் மெய் மயக்காகும். எ-டு: கண்ணன், கண்டான்.*

*'கண்ணன்' என்பது உடனிலை மெய்ம்மயக்கம். 'கண்டான்' என்பது வேற்றுநிலை மெய்ம்மயக்கம். 'மெய்ம்' என்பது வேற்று நிலை மெய்ம்மயக்கம் (ய்ம்). 'மயக்கம்' என்பது உடனிலை மெய்ம்மயக்கம் (க்க).*

"அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை" - தொல். 22

**மெய்ம்மறத்தல்:**

*தன் மெய்யாம் உடல்தன்னையும் மறந்து, ஒருமித்து ஒன்றில் ஒன்றிவிடுதல்.*

"யான்படிக்கும் போது என்னைநான் அறியேன்" - வள்ளலார்

*என்பது அது.*

**மெய்ம்மறை (கவசம்):**

***மெய்ம்மறை (கவசம்):[1]***

*மெய் + மறை = மெய்ம்மறை = மெய்புகு கருவி.*

*போரில் பாதுகாப்பாகக் கொள்ளப்பட்ட ஒரு கருவி மெய்ம்மறை என்னும் கவசமாகும். இதனை 'மெய்புகு கருவி'*

என்பர். 'மெய்ம்மறை'என்றும் கூறுவர். வீட்டை 'வளிமறை' என்பது கருதத்தக்கது.

"சான்றோர் மெய்ம்மறை" என்றது, அச்சான்றோர்க்கு மெய்புகு கருவி போலப் போரில் புக்கால் வலியாய் முன்னிற்றலின்"(பதிற்.14, ப.உ.).

**மெய்ம்மறை (கவசம்):**[2]

உடலுக்கு வரும் ஊறுபாட்டை விலக்கிக் காப்பதற்குக் கவசம் இடுமாப்போல உள்ளத்திற்கு வரும் ஊறுபாட்டை விலக்கிப் பாதுகாக்கும் வண்ணம் இறையருளை நாடிப் பாடும் நூல் கவசம் எனப் பெற்றது.

மணிமொழியார் சுட்டும் 'திருநீற்றுக் கவசம்'என்னும் ஆட்சி (46:1) இறையருள் நாடிய கவச ஆட்சிக்கு எடுத்துக் காட்டாம்.

கவசம் பெருநூல்களின் பகுதியாக இருந்து தனிநூலுருக் கொண்டமை. காசிக்காண்டச் சக்தி கவசம், பாகவத நாராண கவசம் முதலியவற்றால் விளங்கும்.

இந்நாளில் கவசங்கள் பல விளங்குகின்றன. அவற்றுள் 'கந்தர் சட்டி கவசம்'பெருவழக்கினது. அது நிலைமண்டில ஆசிரியப்பாவான் அமைந்தது. அறுசீர் விருத்தத்தால் கவசம் அமைதல், பாம்பன் குமரகுருதாச அடிகள் இயற்றிய 'சண்முக கவசத்தால்'அறியலாம். உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகிய முப்பது எழுத்துகளில் தொடங்கும் முப்பது பாடல்களை யுடையது அது.

**மெய்ம்மொழி அழகு (மெய்ம்மொழி அலங்காரம்):**

உள்ளதை உள்ளவாறு கூறுதலாகிய அழகு, மெய்ம்மொழி அலங்காரம் எனப்படும். இவ்வழகு, கலிவெண்பாவால் கூறப்படும்.

"பொய்ம்மொழியும் மெய்ம்மொழியும் போற்றுமலங் காரமிரண்
டய்யகலி வெண்பாவால் ஆற்றுவன" - பிர. திர. 16

மெய்ம்மையைக் கூறுதற்கும் அழகு வேண்டுமோ எனின் பாலின் தூய்மையுடன் பாற்கலத்தின் தூய்மையும் வேண்டத்

*தக்கதே அல்லவோ! கலந்தூய்மை யின்மையால் நலம் பயக்கும் பாலும் நஞ்சாம் தன்மை எய்திவிடுதல் உண்டு என்பதால் அன்றோ, "நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று" என்றார் பொய்யா மொழியார் (1000).*

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

*என்பதும் குறளே (648) ஆகலின் மெய்ம்மொழியையும் அழகு நலம் கெழுமக் கூறுதல் வேண்டுமென்க.*

*"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" என்பன முதலாகப் பத்துவகை அழகுகளை நூல்கள் கூறிய நுட்பம் இன்னதேயாம்.*

**மெய்யப்பெட்டி:**

*அடக்கம் செய்வதற்குச் 'சவப்பெட்டி' செய்கின்றனர். சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்வது பெரிதும் கிறித்தவ வழக்கு. இரணியல் வட்டாரத்தார் சவப் பெட்டியை மெய்யப் பெட்டி என்பது அருமை மிக்க வழக்காகும். மெய் = உடல். உடலை வைக்கும் பெட்டி மெய்யப்பெட்டி. 'சவம்' என்பதனினும் 'மெய்' செவிக்கும் வாய்க்கும் மணப்பதாக அமைகின்றதே.*

**மெய்யுணர்தல்:**

*நிலையாமை கண்டார், பற்றற்றவராவர்! அவர் அந் நிலையில் மெய்யுணர்வாளராகவும் அவா இல்லாதவராகவும் விளங்குவார்.*

*மெய்யுணர்வு என்பது ஐயுணர்வுக்கு மேற்பட்டது. பகுத்தறிவு எனப்படும் ஆறாம் அறிவிலும் முதிர்ந்து மேலேறியது. எப்பொருள் எக்காட்சி வழங்கினாலும் அப்பொருளின் மெய்க்காட்சி இன்னதெனத் தெளிவாக அறிந்து கொள்ளும் தேர்ச்சி, மெய்யுணர்தலாம். அவ்வாறு அறிதிறம் பெற்ற மெய்யுணர்வாளர், "மருள் நீங்கிய மாசறு காட்சியர்" எனப் படுவார். அவர்கள் மண்ணகத்தே இருந்தாலும் விண்ணகத்து நிகழ்வையும் கண்ணுறக் கண்டு அளந்து கூறுவார் போலக் கூறும் ஆற்றல் கைவரப் பெற்றவர். கணியன், முதுகண்ணன் என்பார் பெயர்களும் "ஏறாத மேட்டில் ஏறினேன்" என்னும் வள்ளலார் வாக்கும் எண்ணத்தக்கவை.*

**மெய்வகை:**

*உடல் இருவகை; அழியா உடல், அழியும் உடல். அழியும் உடலைப் பொய்யுடல் என்பர் சமயவாணர். அவ் அழியும் உடலே அதன் இயலாலும் செயலாலும் அழியா உடலை ஆக்கி நிலைப்படுத்துகிறது. உடலில் உயிர் உள்ள நாளில் செய்த செயலும், அவ்வுடலின் வடிவுமே உரையும் பாட்டும் சிலையும் ஓவியமும் எடுக்க அடையாளமாகிறது. அவ்வடையாளம் இல்லாக்கால் சவமும் காற்றுமேயாம். ஆகவே அழியும் உடல் எனப்படுவதே அழியா உடல் மூலமாகலின் அதுவே மெய் - அழியா உடலின் மெய்ப்பிப்பு என்பதாம்.*

*மெய்யைப் பொய்யென்பதோ மங்கல வழக்கு என்பதோ பொருந்துவ அன்றாம். வள்ளுவர் உருவம் கண்டார் இலர்; வடித்தாரோ தீட்டினாரோ அவர்காலத்தில் இல்லை. ஆனால் ஓருரு அமைக்கப்பட்டதால் அவ்வமைப்பே அவர் மெய்யாகப் பதிவாகியுள்ளமை கண்கூடு. எத்தனைபேர் எத்தனை வடிவுகளில் தீட்டினாலும் முகக்கூறு வள்ளுவர் இவர் என மெய்ப்பித்து விடுகிறது அல்லவா!*

*உடலுக்கு மேனி என்பது ஒருபெயர். மேல் என்பதும் அது. அந்த உடலே மேன்மை மிக்க வாழ்வு வாழ்ந்தார் என்பது காட்டும் மெய்ச்சான்றாகி விடுதலும் எண்ணத் தக்கதாம்.*

*“மேல் குளித்தல்” என்பது ம.வ.; “மேனி நுடங்காது” என்பது செ.வ.*

*‘திருமேனி’ பெயர்.*

**மெய்வல்லுநர்:**

*மல்லர், பயில்வான் என உடற்கட்டு வல்லாரை நாம் வழங்குகின்றோம். ஈழத்தில் அவர்கள் ‘மெய்வல்லுநர்’ என வழங்கப்படுகின்றனர். வல்லுநர் என்பதில் உடல்வலிமையொடு, உள வலிமை, அறிவு வலிமை என்பனவும் இணைய அமைந்த சொல் வல்லுநர் என்பதாம்.*

**மெலிவு:**

1. மெல் > மெலி > மெலிவு. ஒல்லி வேறு; மெலிவு வேறு; வலுவாக இருந்து நோய் நொடியால் உடல் இளைத்தால் மெலிவாம்.
2. வல்லின ஒலியில் குறைந்த ஒலி மெலிவு; மெல்லினம், மென்கணம், மென்மை எனப்பல பெயர்களைப் பெறும்.

   "மெல்லெழுத்தென்ப ஙஞண நமன" - தொல். 20
3. பண்ணீர்மையுள் ஒன்று. "வலிவும் மெலிவும் சமனும் வரையறையும்" சிலப். 3:41-42. அடியார்க்.

**மெல்ல:**

1. மெல்ல = மெல்லுவதற்கு.
2. மெல்ல = மெதுவாக. மெல்ல > மெள்ள (ம.வ.).

"மெள்ள மெள்ளப் பாயும் தண்ணீர் கல்லிலும் பாயும்"

"மெள்ள மெள்ள நம்மையே பதம் பார்க்கிறான்" ம.வ.

**மெல்லம்:**

மெல் + அம் = மெல்லம். மென்னிலம் ஆகிய மருதமும் நெய்தலும் மெல்லமாம்.

"மெல்லம் புலம்பன்" - நற். 38; ஐங். 120

**பொருள்:** "மெல்லிய கடற்சேர்ப்பன்" உரை, பின்னத்.

வன்னிலம் முல்லையும் குறிஞ்சியும்; வல்லம் என்க.

* 'வன்னிலம்' காண்க.

**மெல்லாமல் கொள்ளாமல்:**

மெல்லாமல்= நன்றாகப் பல்லால் அரைக்காமல்.

கொள்ளாமல்= வாய்கொள்ளும் அளவு இல்லாமல்.

சில பிள்ளைகள் பண்டத்தின் மேல் உள்ள ஆர்வத்தால் வாயில் அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டு இருப்பர்.

அவர்களை இப்படி மெல்லாமல் கொள்ளாமல் தின்றால் வயிற்றுக்கு ஆகாது எனக் கடித்து மென்று தின்னச் சொல்வர்.

மெல்லுதல் அரைப்பதுடன் உமிழ்நீர் சேர்வதற்கும் வாய்ப்பாம். கொள்ளுதல் மெல்லுதற்கு வாய்ப்பாம்.

**மெல்லுதல்:**

வெற்றிலை முதலியவற்றைப் பல்லால் கடித்துத் தின்னல் மெல்லுதல் ஆகும். மெல்லல் என்பதும் அது. மெல்லிலை என்பது மெல்லிய இலை என்னும் பண்பைக் குறிக்காமல் மெல்லுதற்கு ஏற்ற இலையென வினையைக் குறிக்கும் என்பது சிந்தாமணி (2403). வெற்றிலையை மெல்லல் என்பதே மரபு என்பதை, "வெற்றிலையை யுண்ணவென்றல் மரபன்மையின்" என்றும், "பாகு, பசிப்பிணி தீர நுகரும் பொருளன்மையின்" என்றும் நச்சினார்க்கினியர் இவண் குறித்தார். "குளிருக்கு ஏதாவது மெல்லேன்" என்று பயறுகளை வறுத்துக் கொடுத்தல் சிற்றூர் வழக்கு.

**மெழுகு:**

1. ஒழுகு > மெழுகு = வெப்பால் உருகி ஒழுகுவது மெழுகு. மெழுகுப் பதம் = மருந்தெண்ணெய்க் கடுகு; மெழுகு போல் உருகும் பதம் வெ.வி.பே.
2. ஏவல். வீட்டை மெழுகு.
3. மெழுகு = மறைத்தல். நடந்ததைப் பூசி மெழுகி விட்டான். சுவரின் துளை, பொத்தல், வெடிவு இல்லாமல் பூசி மெழுகுதல் போல் குற்றம் குறைகளை மறைத்துவிடல்.

**மெனக்கி நாள்:**

வினைக்கேடு என்பது மெனக்கேடு என வழங்கும். வினை மெனை என ஒலிவகை வழுவாகின்றது. வேலையின்றி இருப்பது வினைக்கேடு. திருச்செந்தூர் வட்டாரத்தார் விடுமுறை நாளை 'மெனக்கிநாள்' என்கின்றனர். மெனக்கெட்ட (வினைகெட்ட) நாள் மெனக்கி நாளாயிற்று.

**மென்பால்:**

*மென்மை + பால் = மென்பால்.*

1. *மென்பால் = வயலும் கடலுமாகிய நிலம்.*
2. *மென்பால் = மெல்லினம்.*
3. *மென்பால் = மெல்லியலாராம் மகளிர்.*

✻ ✻ ✻

# ‘மே’ வரிசைச் சொற்கள்

**மே:**

*மகர ஏகாரம்; உயிர்மெய் நெடில். மேல், மேற்கு, மேவு (அடைக).*

மேஎ = மேல். "மேஎந்தோல்" (மதுரைக். 634).

மேஎம் = மேல். "இரும்பிடி மேஎந்தோல் அன்ன இருள்" (மதுரைக். 634).

*"மே என்பது வகரவுகரம் விரியப் பெற்று மேவு, மேவுதல், மேவி, மேவ, மேவினன் முதலியனவாயும் யகரம் விரியப்பெற்று மேய, மேயின முதலியனவாயும் வரும். மே என்பதினின்று மேவினர், மேவார் முதலிய பெயர்கள் பிறக்கும். மேவு என்பதே இயற்கை முதனிலை என்றும் மேய என்பது மேவிய என்பதன் விகாரம்என்றும் கூறுவாரும் உளர். தொல்காப்பியச் சொல்லதிகார உரையிலே நச்சினார்க்கினியர் உயிரீற்று வினைப்பகுதி பதினொன்றெனக் கூறி ஏகார ஈற்றுக்கு மே என்பதனைக் காட்டி 'மேவினான்' என உதாரணமுங் காட்டினார்." (செந்தமிழ்.11:119)*

*(உ.க.சொ.நு.வி. பக். 215)*

**மேகலை:**

1. *மேகலை = மகளிர் இடை அணிகலம்.*

"மெல்லிடையில் மேகலையும்" - சுத்தா.

2. *மேகலை = மணிமேகலை - பெயர்.*
3. *மேகலை = மணிமேகலை பற்றிய காப்பியம்.*
4. *மேகலை = மணிமேகலா தெய்வம்.*

"மென்பூ மேனி மணிமேகலா தெய்வம்" - மணிமே. 29:33

5. *மேகலை = உயர்ந்த கலை.*

"சாத்தன் தந்த மேகலை,
சால்பு மிக்க மேகலை" - இ.கு.

**மேக்கு:**

மேல் > மேற்கு > மேக்கு

"மேக்குயர்ந் தோங்கி" - மதுரைக். 486

"மாரி யான்று மழைமேக் குயர்கென" - புறம். 143

"மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை" - குறுந். 26

**மேசைக்காரர்:**

மிசை என்பது மேல். உயரமான பலகை என்னும் பொருளில் மேசை வழக்குப் பெற்றது. அதனை மேடை என்பார் பாவாணர். நெல்லை மாவட்டத்தில் 'மேசைக்காரர்' என்று அலுவல் பார்ப்பவரை (அலுவலரை) வழங்குகின்றனர். அலுவல் அலுவலர் என்றால் மேசை கண்முன்னே வருகின்றதே.

**மேடம்:**

மேடம் என்பது ஆடு. ஆடு மேடு நோக்கிச் செல்லவே விரும்பும். மேட்டிலும் மேல்மட்டம் ஏறவே விரும்பும். ஆடுதலால் அதற்கு 'ஆடு' எனப் பெயரிட்ட அறிவறிந்த தமிழ்ப் பெருமக்கள், அது மேடேறும் இயல்பை நோக்கி 'மேடம்' என்றனர். மேடம் என்ன ஆனது கைகண்ட சரக்குப் போல் 'மேஷம்' ஆக்கப்பட்டது.

**மேடு:**

மே = மேல். மேடு = மேடான இடம்.

"ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆம்செல்வம்" - நல்வழி. 32

"வித்து இடுபுலம் மேடாயிற் றென" - பரிபா. 7

**மேடு தாவு:**

மேடு = மேட்டு நிலம்.

தாவு = தாழ்வு நிலம்.

நிலம் மேடு தாவாகக் கிடந்தால் சமனிலைப்படுத்துதல் முதல் வேலையாம். அதனைப் பண்படுத்துதல் அடுத்த வேலையாம். நன்செய் நிலமெனின் மேடு தாவுகளைத் தனித்தனிக் குண்டுகளாகப் பிரித்துக் கொள்வது வழக்கம். மலை நிலத்து வேளாண்மை மேடு தாவுகளில் அதனதன் நிலைக்குத் தகச் சமப்படுத்தி வரப்பமைத்துச் செய்யப்படும். வாழ்வில் 'மேடு தாவு' உண்டு. அதனைச் சமப்படுத்திக் கொள்ள திட்டமும் திறமும் கட்டாயம் வேண்டும்.

**மேடேறுதல்:**

மேடேறுதல் = மேனிலை அடைதல், கடன்தீர்த்தல்.

பள்ளத்தில் இருந்து மேடேறுதல் பெரும்பாடு. மேட்டில் இருந்து பள்ளத்திற்கு வருதல் எளிமை. மேடேறப் பெருமுயற்சி வேண்டும். முயற்சியில்லாமல் இருந்தாலே போதும் பள்ளத்திற்கு உருண்டு வந்து விடலாம். ஆதலால், மேடேறுதலின் அருமை புலப்படும்.

மேட்டைக் குறியாமல், தொழில், பதவி, படிப்பு ஆகிய வற்றில் மேனிலை யடைதல், பட்ட கடன்குழியில் இருந்து தீர்த்து மேனிலை யடைதல் என்பவை மேடேறலாகக் கொள்ளப்படும் போது வழக்குச் சொல்லாம். ஏதாவது நெருக்கடிச் செலவு நேருங்கால் இந்த ஆண்டு போகட்டும். அடுத்த ஆண்டு மேடேறிக் கொண்டு பார்க்கலாம் என்பதில் மேடேறல், வளமை பெறல் பொருள் உள்ளதாம்.

**மேட்டிமை:**

மேடு = உயரம். மேட்டிமை = தன்னை உயர்வாக - தற்பெருமையாகப் பேசும் இயல்பை மேட்டிமை என்பர். அத்தகையவனை 'மேட்டிமைக்காரன்' எனப் பழிக்கவும் செய்வர். மேட்டுக்குடி என்பது செழிப்பான வாழ்வினர் குடியிருப்பு. இம் மேட்டிமை செருக்குத் தனமாகும். இது நெல்லை, முகவை வழக்கு.

**மேதகு:**

மே + தகு = மேதகு, மேம்பட்ட தகுதி.

"மேதகு சிறப்பு" - சிலப். 26:114

"மேதகு தகைய மிகுநலம்" - மதுரைக். 565

**பொருள்:** "பெருமை தருகின்ற அழகினை யுடைய மிகுகின்ற நன்மை" உரை, நச்.

**மேதி:**

மேய்தி > மேதி.

வேறு இரைபோடல் வேண்டாது மேய்தலாலேயே தன் வயிற்றை நிறைத்துக் கொள்வது. ஆடும், ஆவும் மேய்ந்தாலும் மேலும் இரை தரப் பெறுவது. மேதிக்குத் தனியே இரை போடுவது இல்லை. பால் பெருக்குக்காக பால் மாட்டுக்கு இரை போடுவது வழக்கம்.

"மேதி அன்ன கருங்கல்" - மலைபடு. 111

**மேதை:**

மே > மேதை = மேம்பட்ட அறிவாளர்.

"பேதை அல்லை மேதையங் குறுமகள்" - அகம். 7

**மேம்பாடு:**

மேல் > மேன் > மேம் + பாடு = மேம்பாடு.

"மேன்மக்கள் மேன்மக்களே" - மூதுரை. 4

"மேம்படு சிறப்பு" - புறம். 378

"பூமேம் பாடுற்ற புனைகரும்பு" - பரிபா. 10

* 'மேல்' காண்க.

**மேய்ச்சல்:**

மேய்ச்சல் = வருவாய்.

ஆடு மாடு மேய்தல் உடையவை; மேய்ப்புத் தொழிலும், மேய்ப்பரும், மேய்ச்சல் புலமும் உண்மை அறிந்தவை. இவ் வாடுமாடு மேய்தலை விடுத்துப், போன போன இடங்களில் எல்லாம் வருவாய் தேடிக் கொண்டு வருவதை 'மேய்ச்சல்'

என்பதும் 'நல்ல மேய்ச்சல்' என்பதும் வழக்கு. "அவனுக்கு என்ன எங்கே போனாலும் மேய்ச்சலுக்குக் குறைவு இல்லை; நமக்குத்தான் காய்ச்சல்" என்பர். மேய்ச்சல் என்பது வருவாய்ப் பொருளும், காய்ச்சல் என்பது வருவாய் இன்மைப் பொருளும் தருவனவாம்.

**மேய்தல்:**

ஆடு மாடு முதலியன புல் முதலியவற்றை மேலாகத் தின்னுதல், 'நுனிப்புல் மேய்தல்' என்னும் தொடர், மேய்தல் பொருளை விளக்கும். விலங்கு உண்ணுதலைக் குறிக்கும் மேய்தல், தீ எரித்தலையும் சுட்டும் என்பது 'வீட்டையும் தான் மேய்ந்தான்' என்னும் தனிப்பாடலால் புலப்படும். ஆடு மாடுகளை மேயச் செய்வாரை 'மேய்ப்பர்' என்பதும், கிறித்து தம்மை மேய்ப்பர் என்று கூறியதும், 'மேய்ச்சல் நிலம்' என நில ஒதுக்கீடு செய்வகையும் கருதத் தக்கன. முகில் கடலில் நீர் குடித்தலை 'கலங்கு தெண்டிரை மேய்ந்து' என இலக்கணை வகையால் கூறினார் திருத்தக்க தேவர் (சிந். 32).

ஆடுமாடுகளை மேய்தற் கமைந்த குறுமலைப் பகுதி 'மேக்கல்' என இராமக்கல் (நாமக்கல்) முசிறிச் சாலை இடையேயுள்ளது.

**மேலாக்கு:**

பாவாடை கட்டும் சிறுமி மேலே 'தாவணி' போடுவது வழக்கம். தாவணி சட்டையின் மேலே போடுவதால் அதனை மேலாக்கு என்பது நெல்லை வழக்காயது. காதணி கலங்களுள் மேலாக்கு என்பதும் ஒன்று.

**மேல்:**

மே > மேல் = மேலே, உயரம், மேற்கு.

பலகை மேலே வை.

பறவைக்கும் மேலே பறப்பது வானூர்தி.

மேல்காற்று (மேற்குக் காற்று).

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லார்" - திருக். 973

**மேல் வைப்பு:**

*ஒரு பாடலின் மேல் வைக்கப்படும் மிகையடி மேல் வைப்பு எனப்படும். ஈரடி மேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு என இஃது இருவகையாம்.*

"தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே"

*இஃது ஈரடி மேல் வைப்பு.*

"இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன அரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழில் புகலி தன்னுள்
நிலனாள்தொறு மின்புற நிறைமதி யருளினனே"

*மேலது நாலடி மேல்வைப்பு.*

*இவை திருஞான சம்பந்தர் அருளியவை. பதிகம் தனி நூலாம் பான்மைய வென்பதறிக.*

**மேவுதல்:**

*மே > மேவு > மேவுதல் = அடைதல், மூடுதல்.*

"வேறு புலன்களை மேவுதல் என்ப" - மணிமே. 30:89

"வீட்டின் முன் பள்ளத்தை மண்போட்டு மேவுதல் வேண்டும்" ம.வ.

**மேழி:**

*மே > மேழி.*

1. *மேழி = கலப்பையின் மேலாக உயர்ந்து நின்று, உழுவார் கையால் பிடித்து உழும் கலப்பையின் உறுப்பு.*
2. *மேழி = உழவுத் தொழில். "மேழிச் செல்வம் கோழை படாது" என்பது பழமொழி.*

**மேற்கணக்கு:**

*அகவற்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியவற்றால் ஐம்பது முதலாக ஐந்நூறு ஈறாகப் பொருள் நெறிமரபில் தொகுக்கப்படும் செய்யுள்கள் மேற்கணக்கு எனப்படும். கணக்கு = நூல்; கணக்காயர் = நூற்கற்பிக்கும் ஆசிரியர்.*

"அகவலும் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் தொகுப்பன மேற்கணக் கெனவும்" - பன்னிரு. 346

*இனி, அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபா என்னும் ஐவகைப் பாவாலும் 'மேற்கணக்கு'த் தொகுக்கப்படும் என்றும் கூறுவர்.*

"ஐம்பது முதலா ஐந்நூ றீறா
ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்" - பன்னிரு. 347

*கீழ்க்கணக்கு பதினெட்டாதல் போல மேற்கணக்கும் பதினெட்டாம். அவை பாட்டு தொகை என்பன. பாட்டாவது பத்துப்பாட்டு; தொகையாவது எட்டுத் தொகை.*

*திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்பவை பத்துப்பாட்டு.*

*நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை எட்டுத்தொகை.*

*இப்பாட்டும் தொகையும் பதினெண் மேற்கணக்கு என்றும், மேற்கணக்கு என்றும் வழங்கப்படுகின்றன.*

*பாட்டும் தொகையும் 18 என்றமை கண்டு, அதன் பின்னே தொகை செய்யப்பட்டது கீழ்க்கணக்கு 18. தொகை முறை வரலாறு காட்டுவது அது.*

**மேற்கோள்:**

***மேற்கோள்:*[1]**

*மேல் + கோள் = மேற்கோள்.*

*பிறர் கூறிய கூற்றை அப்படியே எடுத்து நம் எழுத்தொடும் ஆள்வது மேற்கோள் ஆகும்.*

"முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுதும் என்பதற்கும் - முன்னோரின்
வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்" - நன். 10

***மேற்கோள்:*[2]**

*மேற்கோள் = கடைப்பிடி.*

"செய்யாமை மேற்கோள் சிதடியின் துவ்வாது" - முதுமொழிக். 4:5

**மேற்கோள் குறி:**

*பிறர் கூறுவதை மேற்கொள்ளும் போது, தாம் பிறர் கூறியதை மேற்கொண்டதாகத் தெரிவிக்கும் வகையில் “”எனக் குறியீடு செய்தல் நிறுத்தக் குறியாகும். இஃது இரட்டை மேற்கோள் குறி.*

*ஒரு மேற்கோளை ஆளுங்கால் அம்மேற்கோளில் அவர் ஒரு மேற்கோள் காட்டியிருப்பின் அதனை ஒற்றை மேற்கோளிட்டுக் காட்டல் வேண்டும்.*

***எ-டு:***

*"கல்லுதல் தோண்டுதல் என்னும் பொருள் தருமா? தரும். 'கொழுங்கொடியில் விழுந்த வள்ளிக் கிழங்கு கல்லி எடுப்போம்'என்பது குற்றாலக் குறவஞ்சி. 'மலையைக் கல்லி எலியைப் பிடித்தல்'என்பது பழமொழி. இவற்றால் கல்லுதல் என்பதற்குத் தோண்டுதல் என்னும் பொருளுண்மை புலப்படும்"(கல்விச்செல்வம் பக்.9).*

**மேனி:**

*மிகுவிளைவாதல் மேனி எனப்படும். குறித்த அளவின் மேல் விளைவுடையது. நெல்லை மாவட்டச் சாத்தூர் சார்ந்ததோர் ஊர் நென்மேனி.*

**மேனித்து:**

*மேனித்து = உழையாமை.*

*குனியாமல் வளையாமல் (வேலையின்றித்) திரிவதை மேனித்தாகத் திரிதல் என்பர். "மேல் வலிக்காமல் சாப்பிட வேண்டும். அவ்வளவுதான் வேலை" என்பது மேனித்தரைப் பற்றிச் சொல்லும் வசையுரை. மேனிற்றல், மேனிற்று, மேனித்து என ஆகியிருக்கலாம். மேனிற்றலாவது மிதத்தல் என்பதாம். "அவன் மிதப்பில் திரிகிறான்" என்னும் வழக்குச் சொல் இதனை விளக்கும். மிதப்பில் திரிதல் என்பது அங்கும் இங்கும் அலைதல், ஆழ்ந்து ஒன்றிலும் ஈடுபடாதிருத்தல் என்பவற்றைக்குறிப்பதாம். மேனி குலுங்காமல் இருக்க வேண்டும் என்பதே அவன் நோக்கம் என்பதும் இவ்வழிப் பட்டதே.*

✲ ✲ ✲

## ‘மை’ வரிசைச் சொற்கள்

**மை:**

*மகர ஐகாரம், உயிர்மெய் நெடில். ஓரெழுத்து ஒருமொழி.*

*கண்மை, எழுதுமை, வண்டிமை, கருமை, செம்மறியாடு, எருமை, முகில், மை போல் ஆக்கு என்னும் ஏவல், குற்றம் இவை பெரிதும் மக்கள் வழக்கில் உள்ளவை. நூல் வழக்கிலும் சில உள்ளவை.*

*'ஐ' என்பதன் பொருள் 'அய்' தராமை போல, 'மை' என்பதன் பொருளை 'மய்' தராது என்பதை உணர்ந்து போற்றல் வேண்டும். குறிலும் ஒற்றும் கூடினால் நெடிலாகவோ ஓரெழுத்து ஒருமொழியாகவோ ஆய்விடாது என்க.*

"ஐயவி அமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீள்நறு நெய்தல்" - மலைபடு. 123-124

"மையற விளங்கிய கழலடி" - ஐங்குறு. 399

"மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை" - குறுந். 121

"மைந்நிண வலைஞர்" - சிலப். 5:26

**மைக்குட்டி:**

*குமரி மாவட்டத்தார் கம்பளிப் பூச்சியை மைக்குட்டி என்கின்றனர். கம்பளிப் பூச்சியின் கருவண்ணம் கருதிய பெயர் அது. ஓர் உயிரை மதிக்கும் மதிப்பீடாகக் குட்டி விளங்கி இனிமை செய்கின்றது.*

**மைக்கூடு:**

*எழுதுதற்குரிய மை உள்ள புட்டில் பொதுமக்களால் மைக்கூடு என வழங்கப்படும். வண்டிக்குப் போடும் உயவு நெய் உள்ள புட்டியும் மைக்கூடு எனப்படும். கண்ணுக்குத் தீட்டும் (அ) எழுதும் மை உள்ள மைப்புட்டியும் மைக்கூடு எனப்படும்.*

**மைந்தன்:**

*மைந்து > மைந்தன். மைந்து = வீரம்.*

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்கும் சிறப்பிற் றென்ப"

*என்பது தொல்காப்பியம் (1016).*

*வீரமுடையானே மைந்தன் எனப் பண்டையோர் கொண்டனர் என்பது விளங்கும்.*

**மைந்து:**

*மைந்து என்பது வீரம். மைந்து உடையான் யாவனோ அவன், 'மைந்தன்' என்க! பண்டை நாள் மன்பதைக் கடமைகள் அனைத்தும் வீரத்தின் நிலைக்களம் கொண்டே அமையப் பெற்றனவாகலின் வீரம் உடையானே 'மைந்தன்' எனவும், வினையாண்மை மீக்கூர்ந்தவனே 'ஆண்' எனவும், இடுக்கணை எள்ளி நகைத்து வெற்றி காண்பவனே 'ஆடவன்' எனவும் பொருள் பொதிந்த குறியீடுகள் அமைத்துப் பேணிக் காத்தனர் என்க.*

**மைந்நிலை:**

*மை + நிலை = மைந்நிலை.*

*மழை முகில் படர்ந்த முகடுகளையுடைய மலைப்பகுதி மைந்நிலை. அப்பகுதி சார் ஊரும் மைந்நிலையாம். உதகையில் உள்ள ஓரிடம் இது.*

**மைப்பு:**

*மை = கருமேகம், முகில். மைப்பு = கதிரோனைக் கருமுகில் மூடுதல்.*

*மக்கள் வழக்கில் 'மப்பு' என வழங்கப்படுகின்றது. மைப்பு என்பது மப்பு என ஆயிற்றாம். அம்மூடுதல் போல அறிவொளியை மூடும் 'ஆணவச் செருக்கை' மப்பு எனப் பழிப்பதும் மக்கள் வழக்கே. "அவனுக்குள்ள மப்பு அப்படி நடக்க - பேச வைக்கிறது" என்பர்.*

**மைமீன்:**

*மை + மீன் = மைம்மீன்.*

*கரியமீன்; சனிக்கோள்.*

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்" - புறம். 117

**மைம்மைப்பு:**

*மை + மைப்பு = மைம்மைப்பு; பெருமயக்கமாம் அறிவு இல்லாமை.*

"மைம்மைப்பின் நன்று குருடு" என்பது பழமொழி நானூறு (188).

*நல்லறிவில்லாமல் நயத்தகு தன்மையும் இல்லாமல் கண் பார்வை யுடையாராய் இருப்பவரினும் மிக நன்மையாம் பார்வை இல்லாமல் இருப்பது என்பது இதன் விளக்கம்.*

"இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பிரியார் தமர்போல் அடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ?
மைம்மைப்பின் நன்று குருடு"

*என்பது முழுப்பாடல்.*

**மையம்:**

*மை + அம் = மையம்.*

*மை = கருமை. மர வயிரம். மரத்தின் ஊடாக இருப்பது. வயிரம் மை எனப்படும். அது ஊடாக இருப்பதால் மை > மையம் = நடு ஆயது (ம.வ.).*

**மையல்:**

*மையல் = மயக்கம்; மயல் என்பதும் இது.*

"மையல் கொண்டு மொய்யென உயிர்த்து" - முல்லைப். 83

***பொருள்:*** "*மையல் கொண்டு = மயக்கம் கொண்டு*" *உரை, நச்.*

**மையாடுதல்:**

"மையோலை பிடித்தல் ஓதுதல்" வெ.வி.பே.

*ஏடுகளில் எழுதிய எழுத்து பளிச்சிடத் தெரியுமாறு மைபூசுதல் உண்டு. அது மையாடுதல் எனப்படும். அது, ஏடு எடுத்தலுக்கும் படித்தலுக்கும் ஆகியது.*

"மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்" - தமிழ்விடுதூது

**மையாத்தல்:**

*மை + ஆர்த்தல் = மையார்த்தல் > மையாத்தல் = மயக்கமுறுதல்.*

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று" - திருக். 1112

**மையூர்:**

*சேரல நாட்டில் இருந்த ஓர் ஊர். அவ்வூரில் வாழ்ந்த சிறந்தோன் மையூர் கிழான் என்போன். (பதிற்று. பதி. 9).*

**மையொற்றி:**

*மை + ஒற்றி = மையொற்றி.*

*மைதொட்டு எழுதிய முந்திய நாளில் மை தாளில் மிகுமானால் அதனை உறிஞ்சி எடுக்கும் வகையில் செய்யப்பட்ட கரட்டுத்தாள் மையொற்றியாகும்.*

*மைக்கூட்டில் உள்ளமையைத் - தொட்டு எழுதும் எழுதுகோல் பயன்பட்ட நாளில் அவற்றொடு பயன்பட வாய்த்த தாள் மையொற்றித் தாளாகும் (ம.வ.).*

**மையோட்டம்:**

*ஒரு பொருள் களவு போனால் அக்களவு கொடுத்தார் களவு செய்தார் யார் என அறிய மையோட்டம் பார்த்துக் குறி சொல்வாரை அணுகுதல் முன்னைச் சிற்றூர் வழக்கம். மையோட்டம் பார்ப்பார் குறிகாரர் எனவும் வழங்கப்பட்டார்.*

கையில் மை தடவி இதோ போகிறான் அதோ போகிறான் என்று தாமே சொல்லிப் பொருள் இருக்கும் இடம் இதுவெனக் கூறுதலுண்டு. ஒன்றிரண்டு மெய்யாதலும் உண்டு. அதனால் அவர் வேலை நடந்து வந்தது. இப்பொழுது துப்பறி துறையர் ஒற்றர் உளவு காண்பார் என அரசு கொண்டுள்ளது.

**மைவிடை:**

மை + விடை = மைவிடை; ஆட்டுக் கிடாய்.

"மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்" - புறம். 113

**பொருள்:** "மது இருந்த சாடியை வாய்திறப்பவும் ஆட்டுக் கிடாயை வீழ்ப்பவும்" ப.உ.

* * *

# 'மொ' வரிசைச் சொற்கள்

**மொ:**

*மகர ஒகரம்; உயிர்மெய்க்குறில்; மெல்லினம்.*

**மொக்கு:**

*அரும்பு முகை திரண்டால் 'முகை மொக்கு' எனப்படும்.*

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்" - திருக். 1274

*மொக்கு என்பது கோலம் எனவும், மொக்குமா என்பது கோலப்பொடி எனவும் சேலம் வட்டார வழக்கில் உள்ளது. கோலம் கொடியும் பூவுமாகப் போடலால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.*

**மொக்குதல்:**

*வாய் நிரம்ப அள்ளிப் போட்டுத் தின்னல் 'மொக்குதல்' எனப்படும். இது, 'நொக்குதல்', 'மொதுக்குதல்' எனவும் வழங்கும். குதிரைக்குக் கொள் கட்டித் தின்ன வைக்கும் பையை 'மொக்குணி' என்பது உண்டென அறிதலின் (திருவாசகம், திருவிளையாடல்) அப் பை போல உதப்பிய கன்னம் தோன்றுதல் கொண்டு மொக்குதல் என்னும் சொல் ஆகியிருக்கக் கூடும். மொக்குணி என்பது மொக்கை, பரியது என்னும் பொருளில் வழங்குதல் அறியத் தக்கது. முக்கல் என்பதற்கும் உண்ணுதற் பொருள் தரும் பேரகராதி.*

**மொங்கான்:**

*உடல் பெரிய ஆளை அல்லது பெரிய உயிரி ஒன்றை மொங்கான் என்பது மக்கள் வழக்கு. "முகைமொக்குள்" என்பது அரும்பு முகையாய்த் திரண்டு பருத்தல் (திருக். 1274). மொக்குப் போலப்பருத்தல் மொக்கை. மொக்கை மொங்கான் ஆயதாம்.*

"அவன் நல்ல மொங்கானாக உள்ளான்", "பாம்பு நல்ல மொங்கை"என்பவை மக்கள் வழக்கு. மொக்கை என்பது ஒரு பட்டப்பெயர்.

மொக்கைச்சோளம் என்பது பெரிய சோளம். வெள்ளைச் சோளம் என்பதும் அது.

**மொசித்தல்:**

'மொசிதல்' என்பது மொய்த்தல் பொருளில் வருவதுடன் (பதிற். 11) தின்னல் பொருளிலும் வரும் என்பது புறநானூற்றால் விளங்குகின்றது. "மையூன் மொசித்த ஒக்கல்" என்பது அது (96). "செம்மறி யாட்டுத் தசையைத் தின்ற சுற்றம்" என்பது அதன் பழையவுரை.

**மொச்சை:**

மொச்சை குத்துச்செடி வகையைச் சேர்ந்தது. மொச்சைப் பயறு மற்றைப் பயறு வகைகளுள் பெரியது. அவரை வகையைச் சேர்ந்ததாகும். அதன் இலை கொடி காய் தோல் ஆகியவற்றில் ஒருமணம் (நாற்றம்) உண்டு. அதனால் வில்லுக்குழி வட்டாரத்தார் மொச்சை என்பதற்கு நாற்றம் எனப் பொருள் தந்துள்ளனர்.

**மொடக்கிட்டி:**

படுப்பதும் புரள்வதும் ஓடி இளைப்பதும் படுப்பதுமாகிய நாயை, ஒட்டன்சத்திர வட்டாரத்தார் மொடக்கிட்டி என வழங்குகின்றனர். முடம், மொடம் ஆயது. போய் முடங்கு என்பது போய்ப்படு என்னும் பொருளில் முகவை, நெல்லை வழக்குகள் உண்டு.

**மொட்டு:**

மொட்டு என்பது பூவின் முகைப் பருவமாதல் பொது வழக்கு. மொட்டு என்பதற்கு முட்டை என்னும் பொருளைப் பழனி வட்டாரத்தார் வழங்குகின்றனர். நீர்க் குமிழியை முட்டை என்பது முகவை, நெல்லை வழக்கு.

**மொட்டை சொட்டை:**

மொட்டை = முழுவதும் மயிரற்ற தலை.

சொட்டை = இடையிடையே துள்ளி துள்ளியாய் மயிரற்ற தலை.

மொட்டை என்பது அடிக்கப்படுவது. மழுக்கை அல்லது வழுக்கை என்பது மயிர் அறவே இல்லாமல் உதிர்ந்து விடுவது.

சொட்டுச் சொட்டாக நீர்விழுந்த இடம் போல வட்ட வட்டமாக மயிர் உதிர்ந்தது சொட்டை. மொட்டையும் சொட்டையும் அவரவர்க்கே கூட மனத்துயர் ஊட்டுவது உண்டு. 'மொட்டை சொட்டை'மரத்தில் இலையுதிர்தலைச் சுட்டவும் பின்னே வளர்ந்தது. 'மொட்டை மாடி''மொட்டான்' (stool) என்பனவும் ஆட்சி பெற்றன. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் பழமொழி.

**மொட்டைச்சி:**

மொட்டைச்சி = கைம்மை யாட்டி.

கணவனை இழந்த பெண்ணுக்கு ஒரு காலத்தில் மொட்டை போடுதல் வழக்காக இருந்தது. அவ்வழக்கம் அண்மைக் காலம் வரைகூட இருந்தது. அவ்வழக்கமும் குறித்த இன வழக்காகவே இருந்தது. பொதுவழக்கன்று. மொட்டை போடும் வழக்கில் இருந்து, மொட்டை போட்டவளைக் காண்பது செயற்பாட்டுத் தடை (சகுனத் தடை) என்னும் இழிவுக்கு ஆட்படுத்தவும் இடமாயிற்று. சமய வழக்கமாக மொட்டை போடுதல் பல்வேறு சமயங்களில் இடம்பெற்று இந்நாள் வரை கூட நடைமுறையில் உள்ளது. ஆனால் அவை பழிப்பின்பாற்படுத்தப் படுவன அல்ல.

**மொட்டையடித்தல்:**

மொட்டையடித்தல் = வெறுமையாக்கல்.

மரங்களை மொட்டை தட்டல், மொட்டை யடித்தல் போல் செல்வத்தை மொட்டை தட்டலாக வழங்குகின்றது. தலையை மொட்டை போட்டால் மழுக்கையாதல் போல உள்ளவை உரியவை எல்லாம் இல்லாமல் செய்வதே மொட்டை யடித்தலாகின்றது.

மொட்டையன், மொட்டைச்சி என்னும் வழக்கு வேறு. அது தலையைக் குறித்த வழக்கு. இது செல்வத்தைக் குறித்த வழக்கு.

**மொண்ணை:**

மொண்ணை = கூர்மை இல்லாமை.

மொட்டை. மழுக்கை என்பவை போன்ற பொருளதே மொண்ணை. முனை அல்லது நுனை மழுங்கிய கருவி மொண்ணை எனப்படும். அவ்வாறே கூர்ப்பில்லாதவன் (மூடன்) மொண்ணையன் எனப்படுவான். இனி, ஆண்மைத் திறம் இல்லாதவனும் மொண்ணை எனப்படுவான். அவன் சரியான மொண்ணைப் பயல். அவனுக்கு எதற்குக் குடியும் குடித்தனமும் என ஒதுக்கும் உரையால் அப்பொருள் வெளிப்படும். பேச்சாற்றல் இல்லாத மூங்கையன் மொண்ணையன் எனப்படுதலும் அருகிய வழக்காம்.

**மொத்தல் மொதவல்:**

மொத்தல் = நிலப் பரப்பெல்லாம் களை செம்மிக் கிடத்தல்.

மொதவல் = நிலத்துச் செம்மியதுடன் கிளைத்துத் தழைத்துப் பயிரையும் மூடிக் கிடத்தல் மொதவலாம்.

மொத்தப் பரப்பையும் கவர்தலால் 'மொத்தல்' எனவும், முதைத்துக் கிடத்தலால் மொதவல் எனவும் சொல்லப்பட்டதாம். "களை, 'மொத்தல் மொதவ'லாகக் கிடக்கிறது; பயிரை எழுந்திருக்கவிடவில்லை" என்று வருந்துதலும், களை யெடுத்தலும் வேளாண்மைத் தொழில் சார்ந்தவை..

**மொந்தை:**

மண்கல வகையுள் ஒன்று மொந்தை; உள்ள அளவில் பெரியது மொக்கையாவது போல் மொந்தை யாயது. கட்குடம் (கள் வைக்கும் கலயம்) மொந்தையாம். மொந்தை போல் அமைந்த தோற்பறையும் மொந்தை எனப்பட்டது. மொங்கான் என்பது முரட்டுத்தனமான பெரிய உடலை யுடையவர்க்கும், உடையவற்றுக்கும் பொதுக்குறியீடாக வழங்கும். மொக்கை,

மொக்கையன் ஆவதுபோல், மொந்தை மொந்தையன் ஆவதுமுண்டு. மண்டை என்னும் பண்டைக்கலம் எண்ணத்தக்கது.

**மொய்:**

***மொய்:***[1]

ஈயும் எறும்பும் கூடிச் செறிதல் மொய்த்தல் எனப்படும். அவற்றைப் போல மக்கள் சேர்ந்து கூடி மணமக்களுக்குப் பணக்கொடை புரிதல் மொய் என்பது மணமகனுக்குச் செய்யும் கொடை எனவும் சுருள் என்பது மணமகளுக்குச் செய்யும் கொடை எனவும் 'தமிழக ஒழுகு' கூறும். மொய்த்து எழுதுவதால் மொய். மொய் எழுதுதல் என்றே கூறுவர். மொய்த்தல் = கூடிச் சேர்தல்.

***மொய்:***[2]

கூடுதல் பெருகுதல் ஆகிய பொருளில் மொய் வழங்கப்படும். ஈ மொய்த்தல், எறும்பு மொய்த்தல், மொய் எழுதுதல் என்பவை அவை. ஆனால் ஆயர் வழக்கில் மொய் என்பது 20 ஆடுகளைக் குறிப்பதாக உள்ளது. நூறு, ஆயிரம், வெள்ளம் என்பவற்றை நினையலாம்.

**மொய்ம்பு:**

மொய் > மொய்ம்பு = வலிமை.

மொய்த்தல் = செறிதல், சேர்தல், கூடுதல், வலிமை பெறல் முதலியவை குறிக்கும் சொல். இவற்றின் திரட்டு வலிமையாம்.

"செருமிகு மொய்ம்பின் கூர்வேற் காளை" - நற். 184

**மொய்யோ முறையோ:**

மொய்யோ = கூட்டாக வந்து தொல்லை தருதல்.

முறையோ = முறைகேடாகத் தொல்லை தருதல்.

ஒருவரைப் பலர் திரண்டு வந்து தாக்கும் போது தாக்கப் படுபவர் 'மொய்யோ முறையோ' எனக் கத்துவதாகச் சொல்வர்.

மொய்த்தல் என்பது எறும்பு மொய்த்தல், ஈ மொய்த்தல் போன்ற கூட்டம். முறை = நேர்மை, அறமுறை. ஒருவனைப் பலர் தாக்குதல் முறையன்று என்பதாம்.

**மொய் வைத்தல்:**

மொய் வைத்தல் = பணம் தருதல்.

மொய்த்தல் என்பது பலவாக நெருங்குதல், ஈ மொய்த்தல், எறும்பு மொய்த்தல் என்பன வழக்குகள். ஒரே வேளையில் பலரும் கூடிச் சேர்ந்து தருவதால் 'மொய்' எனப்பட்டது. இப்பொழுது 'மொய்'ப் பணம் எழுத்தாக இருப்பதால் மொய் எழுதுதல் என்னும் வழக்கு உண்டாகியுள்ளது.

முன்பு மொய் என்பது இரங்கல் நிகழ்ச்சித் தொடர்பாகவே நிகழும் பணக் கொடையாம். சுருள் மங்கல நிகழ்ச்சித் தொடர்பாகவே நிகழும் பணக்கொடையாம். இவ்வியல்பு மாறி இரண்டிற்கும் இரண்டும் வழங்குவதும் சில இடங்களில் உண்டு.

**மொலுங்கு:**

தவசம் போட்டு வைக்கும் குதிர், கூடு என்பவற்றை மொலுங்கு என்பது நெல்லை மாவட்ட வழக்காகும். மொலு மொலு என்பது ஒலிக்குறிப்பு. தவசத்தைப் போட்டு அள்ளுதல் ஒலிக்குறிப்பு வழியாக ஏற்பட்ட பெயராக இருக்கலாம்.

**மொழி:**

மொழிவதால் உண்டாயது மொழி. மொழிதல், இழிதல், வழிதல், பொழிதல் ஒப்பவை போல அமைந்த சொல்.

"இழுமென் மொழியால் விழுமியது பயிலல்"

என்பதால் மொழிவது கொண்டு அது மொழியாதல் புலப்படும். மாந்தர் எண்ணத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்த வாய்த்த கருவிகளுள் தலையாயது மொழியாகும்.

மொழி முன்னவர் அறிவு ஆய்வு கலை உணர்வு வரலாறு முதலாய பலவற்றையும் பின்னவர் அறிந்து கொள்ள வாய்த்ததாம். இயல்மொழி இசைமொழி; தாய்மொழி அயல்மொழி; வட்டாரமொழி, நாட்டுமொழி, இணைப்புமொழி

ஆட்சிமொழி எனவும் அடுக்குமொழி, ஆணைமொழி; வாய்மொழி எழுத்துமொழி; இயற்கை மொழி, செயற்கை மொழி எனப் பலப்பல பகுப்புகளை உடையதாயிற்று.

மொழியே இனத்தின் மண்ணின் அடையாளமாயிற்று. மொழியாலேயே அம்மொழி பேசுவார் ஓர் இனத்தவர் என்பது ஆய்வின் முடிவாயிற்று. மொழியைத் தெய்வமாகக் கொள்ளுதலை,

"மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகென" - சிலப். 10:100

என்பதால் அறியலாம்.

**பொருள்:** "மொழிப்பொருள் தெய்வம் = மொழியாகிய தெய்வம்" அரும்பத.

பொருள்: "பொருள்மொழியாகிய தெய்வம்" என்றார் அடியார்க்.

**மொழிபெயர்ப்பு:**

ஆசிரியர் தொல்காப்பியர் மொழிபெயர்ப்பு என்னும் இலக்கிய அல்லது நூல் வகையைச் சுட்டுகிறார். அதன் இலக்கணத்தைச் சுருக்கமாக ஆனால் தெளிவாக உரைக்கிறார். அது, "அதர்ப்பட யாத்தல்" என்பது.

தொகை நூல்களில் காணப்படும் ஒருதொடர் "மொழிபெயர் தேயம்" என்பது, "தமிழல்லாத வேறுமொழி வழங்கும் இடம்" என்பது பொருள். ஆட்டுக்கிடையை எழுப்பி வேறிடத்துப் படுக்க வைத்தல் 'பெயர்வை' யடித்தல் என வழக்கில் உள்ளது.

ஒரு மொழியில் இருந்து மற்றொரு மொழிக்கு மாற்றுதல், 'மொழிபெயர்த்தல்' என்பதன் வழியாக வரப்பெற்ற ஆட்சிகளே மேற்சுட்டியவை.

தொல்காப்பியர் வகுத்துக் காட்டிய மொழி பெயர்ப்புக்கும், அதன் இலக்கணமாம், 'அதர்ப்பட யாத்த'லுக்கும் முதற்கொடை யாக அமைந்த பாரிய இலக்கியம் பெருங்கதையேயாகும். மாக்கதை என்பதும் அது.

*இதற்குப் பிற்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களே சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலியன. ஆகலின், பிற்பட வந்த காவியங்களுக்கு முற்பட எழுந்து வழிகாட்டிய மொழிபெயர்ப்புக் காப்பியம் பெருங்கதையே என்பது சுட்டும் பெருமையதாம்.*

*சில பெயர்களையும் இடங்களையும் தவிர்த்து நோக்கினால், பெருங்கதை தமிழ்மண்ணில் தமிழ் மணமே தன்மணமாகக் கொண்டு வெளிப்பட்டது என்பதை உணர்ந்து போற்ற முடியும். கொங்குவேளின் பிறந்த மண்ணும் அவர் பேசிய மொழியும் அப்படி அவரை ஆட்கொண்டிருந்தன என்பதை நன்கு விளங்கிக் கொள்ளவும், நல்ல படிப்பினையாகக் கொள்ளவும் வாய்க்கும். பின்வருவார்க்கு அவர் காட்டிய வழிகாட்டுதல் அது.*

**மொழிமாற்று:**

*மொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள வைக்கும் மிறைக்கவி மொழிமாற்று ஆகும்.*

“உரித்தது பாம்பை உடல்மிசை இட்டதோர் ஒண்களிற்றை
எரித்த தொராமையை இன்புறப் பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை வேள்வி பன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே” - தேவா. ஞான.

*இதில்,*

*“உரித்தது களிற்றை; உடல்மிசை யிட்டது பாம்பை; எரித்தது முப்புரத்தை; பூண்டது ஆமையை; செருத்தது தக்கனை வேள்வி; ஏந்திற்று சூலத்தை” என மொழிமாற்றி அமைக்க.*

✲ ✲ ✲

# ‘மோ’ வரிசைச் சொற்கள்

**மோ:**

*மகர ஓகாரம்; மெல்லின நெடில்; உயிர்மெய் ஓரெழுத்து ஒருமொழி. 'முகர்ந்து பார்' என்னும் ஏவல். முன்னிலை அசைச்சொல். எ-டு: 'கேண்மோ'.*

**மோடு:**

*முகடு > மோடு = பெரியது; முகடு கூட்டப்பட்டது. முகடு கூட்டி வைத்தாற் போன்ற எருமை.*

"காய்ச் செந்நெல் கதிரருந்து
மோட்டெருமை முழுக்குழவி" - பட்டினப். 13-14

*கூரை வீடு, ஓட்டு வீடு, படப்பை ஆயவற்றுக்கு மழைநீர் வழிந்தோடும் வகையில் கூட்டப்பட்டது முகடு > மோடு.*

"மோட்டெருமை வாவிபுக" - கம்ப. தனிப்.

**மோட்டை:**

*ஓட்டை என்பது நெல்லை வழக்கில் மோட்டை என வழங்குகின்றது. தண்ணீர் எல்லாம் ஓடிவிட்டது. வரப்பில் மோட்டை உள்ளதா என்பதைப் பார்த்து அடைக்க வேண்டும் என்பர். ஓட்டை, மோட்டை யாதல் மெய்யொட்டாகும்.*

**மோதகம்:**

*மொத்தமாகத் திரட்டி உருட்டப்பட்ட மாவுருண்டை யாகிய பண்டம். எள்ளுருண்டை, பொரி உருண்டை, பருத்த தோசை.*

"கவவொடு பிடித்த வகையமை மோதகம்" - மதுரைக். 626

*பொருள்: "பருப்பும் தேங்காயுமாகிய உள்ளீடுகளோடே கண்ட சருக்கரை கூட்டிப் பிடித்த அப்பம்" உரை, நச்.*

**மோத்தை:**

*மொத்து > மோத்து > மோத்தை.*

*ஆண்பாற் பெயர்களுள் ஒன்று.*

“மோத்தையும் தகரும். ஆண்பாற் பெயரென
மொழிப” - தொல். 1501

*ஆட்டின் ஆண்பெயர் மோத்தை.*

“மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப யாட்டின் கண்ணே” - தொல். 1547

*மொத்தமான - பருத்த - உடலுடையதும் மோதுதலில் வலியதுமாம் செம்மறிக்கடா மோத்தை எனப்பட்டது. அறிவில்லாமையும் மோத்தை எனப்பட்டது என்பது நாவலர் ச.சோ. பாரதியார்க்குப் பேரா. இரா. கந்தசாமியார் எழுதிய கடிதத்தில், “தங்கள் போல்வாரை அன்றி மோத்தை போல்வரா தமிழ்த்துறைத் தலைமைக்குத் தக்கார்?” என்று எழுதியது சான்றாம். அறிவிலாக் கூட்டத்தைச் செம்மறியாட்டுக் கூட்டம் என்பது ம.வ.*

**மோர்:**

*முகர் > மோர்.*

*முகர்தல் முகத்தல் முகந்து கொடுப்பது.*

“நீருலையாக ஏற்றி மோரின்று
அவிழ்பத மறந்து பாசடகு மிசைந்து” - புறம். 159

“மோரென்று பேர்படைத்தாய்” - காளமே. தனிப்.

**மோவாய்:**

*முகவாய் > மோவாய் = நாடிப் பகுதி, தாடி.*

“குச்சின் நிரைத்த குரூஉமயிர் மோவாய்” - புறம். 257

***பொருள்:*** *“குச்சுப்புல் நிரைத்தாற் போன்ற நிறம் பொருந்திய மயிரினை யுடைய தாடி” ப.உ.*

**மோழையடுப்பு:**

மூன்று குமிழ்கள் அடுப்பில் இருக்கும். திண்டுக்கல் வட்டாரத்தில் இருகுமிழ் அடுப்புகளும் உண்டு. அவ் வடுப்பு மோழையடுப்பு எனப்படுகிறது. அடுப்புக் குமிழ்களுள் ஒன்று குறைவதால் அப்பெயரிட்டனர் போலும். கொம்பு இல்லாத கடா, மோழைக் கடா எனப்படுதலைக் கருதலாம். மோளை = குறைதல், இல்லாமை.

**மோளை காளை:**

மோளை= கொம்பு இல்லாதது.

காளை= கொம்பு உடையது.

மோழையும் காளையும் கடாக்களே. இருப்பினும் மோழைக்குக் கொம்பு இல்லை. காளைக்குக் கொம்பு உண்டு. “ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்”என்பதொரு பழமொழி. கொம்பு இல்லாததும் குத்த வருமாம்! ஏழையைப் பார்த்து! அவ்வளவு எளிமைப்பட்ட செயலாம்.

“மூத்தது மோழை இளையது காளை” என்னும் பழமொழி மூத்தவனிலும் இளையவன் எடுப்பை வெளிப்படுத்தும்.

**மோனை:**

முகனை > மோனை.

முகனை, முதன்மை அல்லது முதலாம் இடம். மோனை என்பது முதல் எழுத்து.

“எழுவாய் எழுத்தொன்றின் மோனை” - யா.கா. 16

“முதலெழுத் தொன்றல் மோனை”எனின் அவ்வடி யிலேயே மோனை அமையக் காணலாம்.

சீர்மோனை, அடிமோனை, வருக்கமோனை, இனமோனை என மோனை பல வகைப்படும்.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி” - அகரம், ஆதி சீர் மோனை, இன மோனையுமாம்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்" - சீர்முழுவதும் மோனை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு" - ஈரடிகளிலும் மோனை.

ஆத்திசூடி கொன்றை வேந்தன் என்பன தனித்தனிப் பாடல்களே யாயினும் வருக்க மோனை அமைந்தவை. 'அடுக்குமொழி' என்னும் சொல்வனப்பு எதுகை மோனைக் கொடையாம்.

✲✲✲

# ‘மௌ’ வரிசைச் சொற்கள்

**மௌ:**

*மௌ = மகர ஔகாரம்; நெடில் உயிர்மெய்.*

**மௌவல்:**

*மௌவல் = முல்லை.*

"மயிலடி இலைய மாக்குரல் நொச்சி
மனைநடு மௌவலொடு ஊழ்முகை அவிழ" - நற். 115

*அவ்வுதல், வௌவுதல், கௌவுதல் ஆயவை எல்லாம் மனத்தால் பற்றுதல், கையால் பற்றுதல், வாயால் பற்றுதல் என்னும் பொருளனவாதல் போல் மூக்கால் (முகர்தலால்) பற்றுதல் மௌவல் ஆகும்.*

*"முல்லையும் பூத்தியோ" என்னும் புறப்பாடலும் (242), "முல்லைக்குத் தேரும்" என்னும் பாரி பரிவும் எண்ணத்தக்கன (புறம். 200, 201).*

✲ ✲ ✲

# ‘ய’ ‘யா’ வரிசைச் சொற்கள்

**ய:**

யகர அகரமாகிய இது இடையின உயிர்மெய்யில் முதல் எழுத்தாகும்; குறில். தொல்காப்பியர் காலத்தில் சொல்லின் முதலெழுத்தாக வராமல் இருந்தது. அதனால்,

"ஆவோ டல்லது யகரம் முதலாது" - தொல். 65

என்றார். பாட்டு தொகை நூல்களில் யவனர் என்னும் சொல் ஆளப் பெற்றமையால் யவனர் வருகைக்கு முந்தியவர் தொல்காப்பியர் என்பதை உறுதி செய்ய உதவும் சான்று எழுத்தாகியது இது.

தமிழ் எண்ணில் பத்து என்பது 'ய'வாக இருந்தது. அவ்வெண்கள், "க, உ .........." என்பன. 'ய'கர ஒற்று ஈரொற்றாகும் எழுத்துகளுள் ஒன்று. மற்றவை ர, ழ என்பவை.

*எ-டு:*

வாய்க்கால், ஆய்ச்சி, பார்த்தேன், ஆர்க்காடு, வாழ்த்து, சூழ்ச்சி.

**யா:**

யகர ஆகாரம்; நெடில்; உயிர்மெய்; இடையினம்; ஓரெழுத்தொருமொழி.

"ஆவோ டல்லது யகரம் முதலாது" - தொல். 65

யகர வரிசையில் 'யா'என்னும் எழுத்தை அன்றி எவ்வெழுத்தும் சொல் முதலாக வாராது என்கிறார். சங்க இலக்கியத்திலும் மணிமேகலையிலும் யவனர், யவனத் தச்சர் என்பவை இடம்பெறுகின்றன. ஆதலால் அவற்றுக்குத் தொல்காப்பியம் முந்து நிலையைத் தெரிவிக்கும்.

'யா'= வினா, யா = மரம். யா வழியாகவே வினாச் சொற்கள் பலவும் (யாது, யாவை, யாவன், யாவர், யார், யாங்கு, யாங்கனம்,

யாங்ஙனம்) உருக்கொள்கின்றன. ஆங்கில எழுத்தாம் 'ய' வடிவ அமைப்பும் அதன்வழி வினாக்கிளைப்பும் யகரத்தொடும் ஒப்பிட்டுக் காணின் உலக முதன்மொழிக் கொள்கை எளிதில் விளக்கமாம்.

"யானையைக் காட்டும் உருவ எழுத்துகள் மொகஞ்சதரோ அரப்பா நாகரிகத்தில் காணப்படுகின்றன. சீனாவில் மிகப் பழங்காலத்தில் எழுதப்பட்ட உருவ எழுத்துகளில் யானையை நமது தமிழ் எழுத்தான 'யா'வைத் தலைகீழாக எழுதினாற் போல எழுதினர். அதில் நான்கு கால்களும் துதிக்கையும் வாலும் காட்டப்பட ஆறு கோடுகள் ஓர் உடலுடன் சேர்க்கப்பட்டு எழுதப்பட்டன. யானையைக் குறிக்கும் உருவ எழுத்துப் பின்னர்ச் சீன மொழியில் முதல் அமைச்சரைக் குறித்து வழங்கிற்று. தமிழிலும் 'யா' என்ற எழுத்து தலைகீழாக எழுதப்பட்டால் யானைக்கும் ஆண், ஆண்டவன் என்ற சொற்களுக்கும் தொடர்பிருப்பதாகக் கருதலாம். ஆதலின் யானையைக் குறிக்கும் எகிப்தியச் சொல்லாகிய (Abu) ஆப் (Aub) என்பதும் யானை என்ற தமிழ்ச் சொல்லும் மிகப் பழங்காலத்திலே தொடர்புடைய வரலாறுடையவை என்று கருதலாம். (சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம் 371-372)."

(உ.க.சொ.நு.வி. 216-217)

**யாங்கண்:**

யாங்கண் = எவ்விடம்.

"அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல்" - அகம். 7

**யாங்கனம்:**

யாங்கனம் > யாங்ஙனம். எங்கனம் > எங்ஙனம்.

விதிமுறை, ஙகர ஒற்றை யடுத்துக் ககரம் வருதலே யாங்கணம். விதி தழுவுமுறை யாங்ஙனம் என்பது.

யாங்கனம் என்பதே நற்றிணையிலும் (381) புறநானூற்றிலும் (8, 30, 39, 49) உள்ள ஆட்சி. தொகை பாட்டு ஆகியவற்றில் யாங்ஙனம் வந்திலது.

**யாணர்:**

*யாண், அழகு எனப்படும். யாணர் புதுவருவாய் உடையவர் என்னும் பொருளது. மிகு வருவாய் உடைய வணிகர் 'கலியாணர்' எனப் பெறுவர். வளத்தைத் திருவாகக் கண்டவுள்ளம் வருவாயை யாணராக - அழகாகக் கண்டது.*

"யாணுக் கவினாம்" - தொல். 864

"அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்" - பொருந. 1

**யாண்டு:**

*புவிக்கோள் கதிரோனைச் சுற்றிவரும் கால அளவை யாண்டு (ஆண்டு) என்றனர். யாண்டு என்பது இடப்பெயரும் காலப்பெயருமாம். இவ்வாறே,*

*முன், முன்பு, முன்னர் என்பனவும்*

*பின், பின்பு, பின்னர் என்பனவும்*

*ஞாங்கர், ஞாங்கு, ஞான்று என்பனவும்*

*மேல் கீழ் மேலை கீழை என்பனவும் பிறவும் ஆம்.*

*இவை, இடப்பெயரும் காலப்பெயரும் சுட்டுவனவாம். இடமும் காலமும் இணைவுடையவை என்பதும், ஒன்றன் நிலையை ஒன்று தீர்மானிக்கும் என்பதும் இற்றை அறிவியல். இவற்றின் முன்னோடியாய் இடமும் காலமும் முதற்பொருள் என்றும், ஒன்றை விட்டு ஒன்று இயலாதவை என்றும் உணர உணர்த்திய பெரியர் தொல்காப்பியராம்,*

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டன்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

*என்று தம் முன்னோர் வழிப்பெற்ற முதுதேட்டு என்று இதனைக் கூறுவது அறிக (950).*

*நாள் கோள் ஆட்சியை ஒப்ப மக்களை ஆளும் ஆட்சியை ஒப்பிட்டு ஆட்சி, ஆளுகை, ஆள்பவன், ஆண்டவன் முதலாய பெயர்கள் உருவாகின.*

*ஆளுகை என்பது உரிமையது ஆதலால், அவ்வுரிமை கிழமை எனப்பட்டது. ஆளின் தன்மை ஆளுமை என்பது போலத் திங்கள் முதலாம் கிழமைகள் ஆளுமை வழியால் உண்டாயின. நில உரிமை நிலக் கிழமை ஆயிற்று; நிலக்கிழார் பெருநிலக் கிழார் எனப்பட்டனர். எ-டு: கோவூர் கிழார் - ஆவூர் மூலங்கிழார்.*

*மண உரிமையர் கிழவன் கிழத்தி எனப்பட்டனர். தோட்டப் பயிர்க்கு நீர்வளம் அடிக்கடி தேவை. அதனால், உறைக்கிணறும், ஏற்றமும், பூட்டைப் பொறிகளும் ஏற்பட்டன. 'கிழார்' என்பது நீர் இறைக்கும் பூட்டைப் பொறியாயிற்று. "ஆம்பியும் கிழாரும்" என்பது சிலம்பு (10:110). இவற்றால் ஆளுமை இட அளவும், ஆளுமைக்கால அளவும் ஆண்டு ஆயின என்க.*

*யாண்டு > ஆண்டு. யாறு > ஆறு ஆனது போல.*

**யாண்டு நிலை:**

*"மன்னன் பல்லாண்டு பல்லாண்டு மன்னுக" என்று வாழ்த்துவதாக அமைந்தது யாண்டு நிலை என்பதாகும். பெரும்பாலும் நேரிசை வெண்பாவானும் சிறுபான்மை பிற எல்லாப் பாக்களாலும் பாடப்படும் என்பர்.*

"வையக மன்னவன் மன்னுக பல்யாண்
டெய்துக என்ப தியாண்டுநிலை யாகும்" - பன்னிரு. 328

**யாத்திரை:**

*யா + திரை = யாத்திரை.*

*'யா' என்பதொரு மரம்; அம்மரப் பட்டை நார் நாராகக் கிழிக்கப்பட்டுக், கட்டுக் கட்டுதற்குப் பயன்படுத்தப்படும். அதிலிருந்து கட்டுச்சோற்றுக்கு ஆயது. அதனைத் தோளில் போட்டுக் கொண்டு அலை அலையாக மக்கள் செல்வதால் யாத்திரை ஆயது. தோளில் கொண்ட அச்சோற்றுக் கட்டு 'தோட் கோப்பு' எனப்பட்டது.*

*யாத்திரை என்னும் சொல் 'செலவு' என்னும் பொருளது. இந்நாளில் திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்வதே யாத்திரை எனப்பெறும். பாரதத்துத் 'தீர்த்த யாத்திரைச் சருக்கம்' என ஒரு சருக்கம் உண்மையும் 'தலயாத்திரை' என வழக்குண்மையும்*

இதனைத் தெளிவிக்கும். திருக்கோயில் செலவு, யாத்திரை எனப் பெறுவது தொன்மையான தென்றே அறியக் கிடக்கிறது. கூடல் மாநகரில் இருந்து திருப்பரங்குன்றத்திற்குச் செவ்வேளை வழிபட வரும் திரளான மக்களை 'யாத்திரை' போவாராகக் குறிக்கின்றது பரிபாடல்.

"குன்றொடு கூடல் இடையெல்லாம் ஒன்றுபு

. . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . .

என்பது அது. ஆனால், போர் மேற் செல்லுதலையும் யாத்திரைச் சொல் குறிக்கும் என்பது தகடூர் யாத்திரையால் அறியப் பெறுவதே யாம். இஃது ஆராயத்தக்கது.

ஆசிரியர் தொல்காப்பியனார், போர் மேற்செல்லுதலைச் 'செலவு' என்றே குறிப்பார். "புடைகெடப் போகிய செலவு" (தொல். புறத். 3) என்பது அவர் குறிப்பு. 'செலவு' எனத்துறை வகுத்ததை அல்லாமல் 'அதரிடைச் செலவு' எனத்துறையும் விளக்கமும் காட்டினார் ஐயனாரிதனார். தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன், 'செலவழுங்குதலும்' உண்டு என்னும் தொன்னெறியும் செலவுப் பொருள் இன்னதெனக் காட்டும்.

"செங்கோன் தரைச்செலவு" என்று ஒரு நூல் இருந்ததாக அறியப் பெறுகிறது. இவ்வாறாகத் தகடூர்ச் செலவு என்பது பெயராய் அமையாமை மேலும் எண்ணத்தக்கதாகவே உள்ளது. இனிக் 'களப்போர்' குறித்த ஒரு நூல் 'களவழி' என்பதும் நோக்குதல் வேண்டும்.

தகடூர் யாத்திரைப் பாடல்களுள் பெரும்பாலானவற்றை நாம் இன்று அறிந்து கொள்ள உதவிய அருமை நூல் புறத்திரட்டாகும். அந்நூலில் தகடூர் யாத்திரை என்பது 'தகடூர் மாலை' என்னும் பெயராலும் குறிக்கப் பெறுகிறது. இக்குறிப்பு மிக வலுவுடையதாகும்.

புறப்பொருள் பற்றிய ஒரு பழமையான நூல் 'ஆசிரிய மாலை' என்பதாம். அதில் 17 பாடல்களைப் புறத்திரட்டு வழங்குகின்றது. புறப்பொருள் இலக்கணம் பற்றிய இடைக்கால இலக்கண நூல் 'புறப்பொருள் வெண்பா மாலை' என்பது எவரும்

*அறிந்தது. ஆதலால் தகடூரில் நிகழ்ந்த போர் பற்றிய நூல் 'தகடூர் மாலை' எனப் பெயர் கொண்டு இருந்தது என்பது ஏற்கத் தக்கதேயாம். இன்னும், வீர வெட்சி மாலை, உழிஞை மாலை, தானை மாலை, நொச்சி மாலை, தும்பை மாலை, காஞ்சி மாலை, வாகை மாலை, வென்றி மாலை முதலியனவாகப் புறப்பொருள் பற்றிய பிற்கால நூல்கள் சில எழுந்தமை இப்பெயரமைதிக்கு அரணாவதாம்.*

**யாப்பு:**

1. *யாப்பு = பொருந்துதல் தகுதி.*

"கோப்பெருந் தேவிக் கல்லதை இச்சிலம்பு
யாப்புற வில்லை" - சிலப். 16:121.

2. *கால்வாய், வாய்க்கால், பாத்தி, மண்வரப்பு எனக் கட்டுற்று அமைந்த நிலப்பகுப்பும் 'யாப்பு' எனப்பட்டது.*

"யாப்பினுள் அட்டிய நீர்" - திருக். 1093

*3.தமிழ்ப்பாட்டு இயற்கையோடு இயைந்தது. தமிழ் மொழியே இயற்கை ஒலியொடும் இயற்கைச் சொல்லொடும் இயற்கைப் பொருளொடும் கூடியதென்றால் அதன்பாடலும் அத்தகையதேதான் என்பதைக் கூற வேண்டியதில்லை.*

*தமிழில் ஒலிதோன்றும் நிலையில் - வாய்திறக்கும் நிலையில் - தோன்றுவது 'அ'. அதன் ஒலி நீண்டால் 'ஆ'. 'அ, ஆ' என்னும் இரண்டெழுத்துகளும் வாயைத் திறந்த அளவிலேயே பிறந்துவிடும் என்பதை, "அ ஆ அங்காப் புடைய" (நன்.76) என்று இலக்கணம் கூறுகின்றது. இவ்வொலியும் ஒலியுண்டாகும் எளிமையான முயற்சியும் எவர்க்கும் விளங்கும்.*

*'ஆ' என்றால் 'ஆன்' (பசு).*

*'ஆ' உணர்ச்சிக் குறிப்பு.*

*'ஆ ஆ' என்றாலும் உணர்வு வெளிப்பாடே.*

*'ஆ' என்பதற்கு ஆறு என்னும் பொருளும் உண்டு.*

*'ஆ' என்பதற்கு அந்த என்கிற பொருளும் உண்டு.*

இப்படி, எழுத்தே சொல்லாதல் தமிழில் மிகவுண்டு. 'யா' என்பதோர் எழுத்து. அது வினாக்குறியாக அமைதல் மிகுதி. யாது, யாவை, யாவன், யாவர், யார், யாங்கு, யாங்கனம், யாங்ஙனம் என்பவை வினாக்கள் என்பதை முன்னரே கண்டோம். யார் என்பது யாரையோ, யாரோ, யாவரோ என்பவை போல விரிவுறும். பிறவும் இவ்வாறே விரியும்.

இனி, 'யா' என்பதோர் மரம் உண்டு. அதன் பட்டையாகிய மேல்தோல், கட்டுதற்கு உரிய கயிறு போல் பயன்படுவது. அந்த 'யா' கட்டுவதற்குப் பயன்படுவது போல் பயன்படும் புளிச்சை, புளி, கருவேல் முதலியவற்றின் பட்டையும் வளாரும் 'ஆக்கை' என்று வழங்கப்படுதல் இன்றும் உண்டு.

'யா' என்னும் ஓரெழுத்துச் சொல்லுக்குக் கட்டுதல் பொருள் அமையவே, உடலுக்கு 'யாக்கை' எனப் பெயரிட்டனர்.

நரம்பு எலும்பு தசை தோல் இன்னவை ஒன்றோடு ஒன்று கட்டுற்று அமைந்தது என்பது பொருள். அவ்வாறே, எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை கட்டுற்று அமைந்த பாடலை 'யாப்பு' என்று வழங்கினர்.

'யா'ப்பு என்னும் சொல், கட்டுதல் பொருளால் அமைந்தது என்பதை அறிந்தோம். யாப்புக்குப் 'பா' (பாட்டு, பாடல்) என்பதும் ஒரு பெயரே. 'பா' என்பது விரிந்தது - விரிவானது - என்னும் பொருளதாம். இதனைத் தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய பேராசிரியர், "பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" எனப் பொருள் தந்து, தொலைவில் இருந்து கேட்டான் ஒருவன், இன்ன ஓசையும் பொருளும் உடையதென அறியும் வகையான் அமைந்தது என விளக்கமும் தந்தார் (செய்யுளியல் முகப்பு).

'பா' என்பதே பெருவழக்கு என்பது வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபா என்னும் பெயர்களாலே புலப்படும். 'பா' என்பதற்கு அகலம், விரிவு என்னும் பொருள்கள் உள்ளமை இருவகை வழக்குகளிலும் (மக்கள் வழக்கு நூல்வழக்கு) அறியலாம்.

யானையின் அடி - 'பா அடி' என்பது, இலக்கிய வழக்கு. பாவுதல் நாற்றங்கால் கடமையைச் சுட்டும். பாவு போடுதலும்

பாவாற்றுதலும் நெயவுத் தொழில் சார்ந்தவை. அகன்று செல்லும் நீர் பரவுதல் குறித்தே பாய்ச்சுதல், பாய்தல் என வந்தன. துள்ளல், தாவல் என்பனவும் பாய்ச்சல் எனப்படும்.

பாவு போடும் தெரு, அகல்நெடும் தெருவாக இருக்கக் காணலாம். தறி நெசவில் அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்னும் யாப்புச் சொற்கள் பலவும் இடம்பெறல் எவரும் அறிந்ததே.

பாவின் இன்னொரு பெயர் பனுவல் என்பது. 'பன்' என்பது பருத்தி. ஓர் ஊரில் பருத்தியே வேலியாக இருந்தமையால் அது 'பன்னல் வேலி' எனப்பட்டதாம். இது புறநானூற்றுச் செய்தி. பன் பருத்தி எனப்பட்டதால், 'பனுவல்' பருத்தி தந்த நூல் ஆயிற்று. ஆடை நூலைக் குறித்த அது பின்னே அறிவு நூலைக் குறிக்கவும் ஆயிற்று. நூல் என்பதன் மங்கலம் கருதி, அது திருமங்கல நாணையும் குறித்தது.

கையில் கொண்டிருந்த சுவடிக்கு நூற்பெயர் உண்டு. ஆதலால், அருளாளராம் - ஆசிரியராம் - அந்தணர் அடையாள மாகச் சுவடி நூல், நீர்க்கெண்டி (கரகம்), மும்முகக்கோல், இருக்கை (மணை) என்னும் நான்கும் கொள்ளப்பட்டன.

எவரையும் எதிர்பாராமல் இருக்க - பருக - ஓத - கொள்கை விளக்கம் புரிய அமைந்தவை இவை. 'காமம் வெகுளி மயக்கம்' என்பவை நீத்த அடையாளக் குறியே முக்கோல்; மணையாவது இருக்கைப் பலகை.

இவற்றை மாந்தப் பொதுமையாகக் கண்டமண் தமிழ்மண். இவற்றைச் சாதிமைக் கீழ்மைப் படுத்தியமை உரைகாரர் செயலும், தந்நலத்தார் ஏற்பாடுமாம்.

இனி யாப்பின் பெயர்களுள் ஒன்று செய்யுள் என்பது. செய் என்பது, செம்மைப் பொருளது. செய்யன் = சிவந்தவன்; செய்யது = சிவந்தது; செய்யகோல் = செங்கோல்; செயல் = சிறந்தது. செய்யுள் என்பது செம்மையாகச் செய்யப்பட்டது என்னும் பொருளதாம். பாடுபடும் நிலம் செய் எனப்பட்டது போலப் பாடும் பாவும் செய்யென வாயிற்று.

பண் என்பதும் செய்யப்பட்டது என்னும் பொருளதே. பண் என்னும் இசைப்பெயரும் பண்ணை, பண்ணையடித்தல்,

பண்ணையார், பண்ணாடி என்பனவும் அவ்வழிச் சொற்களே. பண் - பாண் - பாணன் - பாணி என்பன பாடல் வழிச்சொற்களே.

இனிச் செய்யுளுக்குத் தூக்கு என்பதும் ஒரு பெயர். தூக்குதல் என்பது ஆராய்தல் என்னும் பொருள்தரும். ஆதலால் ஆராய்ச்சிக்கு இடமாக அமைவதால் பாடல் தூக்கு எனப்பட்டது.

இனிக் கவிதை என்பது இந்நாளில் பெருக வழங்குவதாக உள்ளது. மற்றைச் சொற்களினும் பாடலைக் குறிக்கப் பின்னே வந்த சொல் இது. ‘கவி’ என்பது பழஞ்சொல். கூர்ந்து பார்க்கும் பார்வை ‘கவி கண் நோக்கு’ எனப்பட்டது. வளைந்த உடலுடைமையால் ‘குரங்கு’ என்னும் பெயர் பெற்ற உயிரி ‘கவி’ எனவும் வழங்கலாயிற்று.

கோதாவரியைப் பாடும் கம்பர் ‘சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி’ என்பதால் கவி என்பது ஆயிர ஆண்டளவுப் பழமையுடையது என்பதை அறியலாம். கவிதை என்பது அதன் பின்வளர்ச்சியாம்.

கவி என்றும், விதை என்றும், கதை என்றும், தைவிக என்றும் எழுத்து மாற்றிப் பொருள்கண்டு நயம் காட்டுவது, கேட்கச் சுவையாக இருக்குமே யன்றிச் சொல்லியல் முறையாகாது. அது ஒருவகை வேடிக்கையாகவே கருதப்படும்.

‘தென்னுண் தேனின் செஞ்சொற்கவி யின்பம்’ என்னும் கம்பர் வாக்கும்,

“கன்னல் பாகில் கோற்றேனில்
கனியில் கனிந்த கவிபாட”

என்னும் வரகுணபாண்டியன் வாக்கும் கவிச்சுவை கமழ்வன. கவி என்பது தமிழ்ச்சொல் என்பதை நிலைப்படுத்திக் கூறுவன. வேரும் பொருள் விளக்கமும் தமிழில் இருந்தால் அது வேற்றுச் சொல் ஆகாது என்பதை உணர வேண்டும்.

கவிதல், கவித்தல், கவிப்பு, கவிழ்த்தல், கவர்ச்சி, கௌவுதல் என்பன வெல்லாம் வளைதல், பற்றிக் கொள்ளுதல், கவர்தல், இழுத்தல், மூடுதல் முதலிய பொருளில் வருவனவே. மக்கள் வழக்கு, இலக்கிய வழக்கு என்னும் இருவகை வழக்குகளிலும்

இடம்பெற்றனவே யாம். ஆதலால் கவி என்பதும் தமிழடிச் சொல்லேயாம். அதன் முடிநிலை வட வழியது எனின் ‘கவிதை’ இருப்பிறப்பியாகும். காட்டு விலங்காண்டி என்பது காட்டுமிருகாண்டி (காட்டுமிராண்டி) ஆவது இருபிறப்பியாவது போல.

இனி, யாப்புக்குத் தொடர்பு என்பதும் ஒரு பெயர். எழுத்து அசை சீர் தளை அடி தொடை என ஒன்றை ஒன்று தொடர்தலால் தொடர்பு எனப்படுவதாயிற்று. தொடர் எனப்படாமல் தொடர்பு எனப்பட்டமை நோக்கத்தக்கதாம். சொல்தொடரின் சொற்றொடர்; பொருள் தொடரின், பொருட்டொடர். அவை தொடர்பு எனப்படா என்க.

**யாமம்:**

யாமம் = நடு இரவுப் பொழுது. யாமம் > சாமம் (ம.வ.).

“குறிஞ்சி கூதிர் யாமம்” - தொல். 952

“யாம நடுநாள்” - கலி. 122

நகரங் காப்பதற்கு யாமக் காவலர் விளக்கொடு திரிந்தனர். இதனை,

“தொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்தும் கறங்கும்
யாமங் காவலர் அவியா மாறே” - குறுந். 375

என்னும் செய்யுள் விளக்கும்.

பால் + நாள் = பானாள்; பாதி இரவு; “நள்ளிரவாகிய யாமம்”. குளிராலும் இருளாலும் கட்டுண்டு கிடக்கும் பொழுது.

**யாமை:**

யாமை = ஆமை.

முன்னை வடிவுகள் யாடு, யாறு, யானை என்பவை. அவற்றைப் போலவே யாமை என்பதும் அமைந்தது.

“பழன யாமைப் பாசறைப் புறத்துக்
கழனி காவலர் சுடுநந் துடைக்கும்” - நற். 280

"யாமைப் பார்ப்பின் அன்ன
காமம் காதலர் கையற விடினே" - குறுந். 152

* 'ஆமை' காண்க.

**யாழ்:**

*யா > யாழ் = கட்டுற்ற இசைக்கருவி. ஏழ் > யாழ் ஆயது என்பதுமாம்.*

*யாக்கை, யாப்பு, யாத்தல் என்பன வெல்லாம் கட்டுதல் பொருள் வழியாக வந்த சொற்கள். எலும்பு, நரம்பு, தோல் முதலியவற்றால் கட்டுதல் அமைந்தது யாக்கை. எழுத்து அசை சீர் முதலியவற்றால் கட்டப்படுவது யாப்பு.*

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

*என்னும் நன்னூல், யாப்புக்கும் யாக்கைக்கும் உள்ள கட்டுதல் ஒப்புமையைக் கூறும் (268). "தாதுக்கள், ஏழும் புணர்த்த தியாக்கை. எழுத்தாதி ஏழும் புணர்த்த தியாப்பு" என்னும் யாப்பருங்கல விருத்தி (1).*

*யாத்தல் என்பது ஆத்தல், ஆர்த்தல் எனத் திரிந்தும் கட்டுதல் பொருள் தரும்.*

"பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு" - திருக். 482

*யாழைப் பார்த்த அளவானே அஃது எவ்வகை யாழாக இருப்பினும் அதன் அடிப்படை கட்டாதல் தெளிவாம். முதல் யாழாம் 'வில்'லி யாழாயினும் சரி, ஆயிரம் நரம்பிற்றாம்*

**யாழ்வகை:**

*யாழ்வகை நான்கு என்பர். பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என்பன. இவை நாலும் பெரும் பான்மைய; சிறுபான்மையான் வருவன பிறவுமுள. இந்நால் வகை*

யாழிற்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும்; மகர யாழிற்குப் பத்தொன்பதும்; சகோட யாழிற்குப் பதினாலும்; செங்கோட்டியாழுக்கு ஏழும் கொள்ளப்படும்.

யாழ் உறுப்பு 51 என்பார் அடியார்க்கு நல்லார் (சிலப்.13:107). ‘யாழ் நூல்’ விபுலானந்த அடிகள் செய்த நூல். ‘பாணர் கைவழி’ வரகுணபாண்டியனார் செய்த நூல். சிறுபாணாற்றுப் படையும், பெரும்பாணாற்றுப்படையும் சீறியாழ், பேரியாழ் திறங் கூறுவன.

**யானை:**

யானை ஓர் உயிரி; ஐயறிவு உயிரி.

“மாவும் மாக்களும் ஐயறி வினவே”

என்னும் தொல்லோன் ஆணைப்படி ஐயறிவுடையது என்பது தெளிவாம்.

யானை கண்ட பார்வையிலாதவர் யானை முறம் என்றும், உரல் என்றும், துடைப்பம் என்றும் காதையும் காலையும் வாலையும் தடவிப் பார்த்த அளவே அளவாய்க் கூறியது உண்டு.

மேற்குத் தொடர்ச்சிமலை என்பது பொதுப்பெயர். அதற்கு இடந்தோறும் வழங்கும் பெயர்கள் பலப்பல இல்லையா? அவ்வாறே ஒரு பொருளைக் கண்டார் காட்சி கருத்து கற்பனை என்பவை கொண்டு ஒரு பொருட்குப் பல பெயர்கள் உண்டாயின. அவ்வவ் வகையில் அப் பெயர்கள் பொருந்தி அமைவனவே. ஓர் உறுப்புக்கே பலர் பார்வையில் பல பெயர்கள் கிளர்ந்தன. வண்ணம் ஒன்றானாலும் வண்ணப் பெயர்களும் எண்ணுவார் எண்ணம் போல ஆயின.

சூடாமணி நிகண்டு ஏழைந்துக்கு மேல் இரண்டு உயர்ந்த யானை என்று எண்ணி 37 பெயர்களைச் சுட்டியது. பிங்கல நிகண்டோ 41 பெயர்களைக் குறிக்கின்றது. மேலும் பெண் என்றும் கன்று என்றும் அவற்றின் பெயர்களையும் சுட்டுகின்றன. இவற்றில் அடங்காத பெயர்களையும் அகராதிகள் குறிக்கின்றன. வெள்ளிவிழாப் பேரகராதி 65 பெயர்களைக் குறிக்கின்றது. தனித்தமிழ்ப் பெயர்களை அன்றி வடமொழிப் பெயர்களையும்

இணைக்கின்றன. தனித்தமிழ் என்பது என்ன பிறமொழிக் கலப்பற்ற சொல்தானே! யானையின் பெயர்களைக் காண்போம்.

யானையின் பெயர்கள்:

**அத்தி**

அத்தம் = காடு. அத்தி = காட்டில் வாழ்வது.

அரத்தி > அத்தி. சிவந்த புள்ளிகளை யுடைமையால் அத்தி எனப்பட்டதுமாம். அரத்தி = சிவப்பு. சிந்துரம் என்பதும் அது.

**ஆம்பல்**

ஆம் + பல் = ஆம்பல். ஆகும் > ஆம்.

"மதகயம் ஆம்பல்" - பிங். 2412

ஆகி யமைந்த நெடும் பல்லை - கொம்பை - யுடைமையால் ஆம்பல் எனப்பட்டது.

**ஒ.நோ.:**

ஆம் + வண்ணம் = ஆம்வண்ணம் > ஆவண்ணம் > ஆவணம் = ஆகிய வகையது.

பன்றி என்பது நெடும் கோரைப் பல்லையுடைமையால் பெற்ற பெயர் என்பதை அறிக.

* 'பன்றி' காண்க.

**உம்பல்**

உ = உயரமும் பருத்தலும் காட்டும் அடியினது. உப்பல் > உம்பல்.

உம்பல், உப்பிப் பருத்தது யானை. உம்பலாம் யானை மிக்கிருந்த காடு உம்பற்காடு என்பது பழஞ்சேரலம் சேர்ந்தது. காய்ச்சலில் மெலிந்தான்; இப்போது உப்பிப் போனான்; "அந்த மெலிவும் ஆகாது; இந்த உப்பலும் ஆகாது" என்பது ம.வ.

**உவா**

பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை வருவது உவா. வளர்பிறை நிறைவு, வெள்ளுவா; நிறைமதி (அ) முழுமதி. தேய்பிறை நிறைவு, காருவா; இருண்மதி.

வெள்ளுவாவின் போது கடல் பொங்கும் என்பர். அது போல் வெள்ளுவாவின் போது யானையும் மதம் பெருகி உவப்புறும். ஆதலால் உவா எனப்பட்டது. காருவா நோயர்க்குக் கேடு என்பர்.

பழங்காலத்தில் திங்களுக்கு இரண்டு நாள்கள் பள்ளிக்கு விடுமுறை உண்டு. அவ்விடுமுறைக்கு உவா என்பது பெயர். அது 'வாவு' என வழுவழக்காயது.

**எறும்பி**

எறும்பு உருவால் சிறியது; ஆற்றலால் பெரியது. தன்னைப் போல் எட்டுப்பங்கு எடைச்சுமையை இழுத்துப் போக வல்லது என்பர். அத்தகைய வலிமை யானைக்கும் உண்டு என்பது 'பகடு' என்னும் சொல்லாலே விளங்கும். அவ்வாறே எறும்பி என்னும் பெயராலும் விளக்கமாம். எறுழ் என்பது காளையின் திமில்! அதன் வலிமையே வலிமை. அதன் வழிவந்தது திமிர். அடாவடித் தனமிக்கது. எறுழ் வலிமை எறும்பு, எறும்பி ஆயவற்றுக்கும் உண்டு.

எறும்பியூர், (எறும்பியீசுவரர் இறைவன் பெயர்), பொருளறிவாரா வகையில் திருவரம்பூர், திருவெறும்பூர் என வழங்குகின்றது. திருச்சிராப்பள்ளி தஞ்சை நெடுஞ்சாலையில் திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ளது அவ்வூர்.

**ஒருத்தல்**

கூட்டத்தை விட்டுத் தனியே திரியும் யானை ஒருத்தல் எனப்படும். கூட்ட யானைகளைக் காட்டிலும் அச்சும் அழிவும் மிக்கது ஒருத்தலாம். மதங்கொண்டது அது என்பதுமாம்.

**ஓங்கல்**

ஓங்கிய மலையின் பெயர் ஓங்கல். ஓங்கி உயர்ந்த விலங்கு ஆதலால் ஓங்கல் எனப்பட்டது.

**ஓடை**

யானையின் நெற்றியில் உள்ள பள்ளம் ஓடை எனப்படும். நீரோடும் ஓடைப் பள்ளம் போன்றது. ஆதலால் ஓடை எனப்பட்டது.

"ஓடையே ஓடையே ஓடையே ஓடையே" - யா.வி. மேற்.

**கடகம்**

கடம் = மதம். கடமா என்பதும் மதமா என்பதும் ஒப்பானவையே. கடம் ஆகிய யானைகள் கூடி நிற்கும் இடம் கடகம் எனப்படும். யானை மதநீர் கடம் கடநீர் எனப்படுதல் எண்ணத்தக்கது.

**கடிவை**

கடி + வை = கடிவை. கடி பலபொருள் ஒரு சொல். கடியென் கிளவி காப்பே கூர்மை.

பகையைக் கடிய அழிக்க - மதிலை அழிக்க - யானைப்படை எவ்வளவு பயன் செய்வது. காவல் அரணமாகத் திகழ்வது. காவலன் ஊர்தி யாகவும் யானை இருந்ததல்லவோ! கடிவிரைவு, கடுங்கோவம் என்பவை யானைக் கியல்புகள் அல்லவா.

**கயந்தலை**

கயம் + தலை = கயந்தலை. கயம் = மென்மை.

மெல்லிய தலையுடைய யானைக் கன்று கயந்தலையாகும்.

"கன்று கயந்தலை" என்பது மக்கள் வழக்கு. கயந்தலை போன்ற இளையவன். கயமுனி என்பதும் அது.

**கயம்**

ஆழ்ந்த நீர்நிலை கயம் ஆகும். இருட்டுக்கசம் என்பது ம.வ. கயம் கருமைப் பொருளதாம். ஆழ்ந்த நீர்நிலை நீலநிறம் ஆதலாலும், அந்நீர் நிலையாம் கயத்தில் நீராடல் விளையாடல் மகிழ்தல் உண்மையாலும் கயம் எனப்பட்டதாம்.

"தெண்ணீர்க் கயம்" - வெற்றிவே.

கயமாமுகன் = பிள்ளையார் பெயர்; அசுரன் ஒருவன் பெயருமாம்.

**கரடகம்**

கரடு என்பது கரும்பாறை; அந்நிறத்ததும் அந்நிற மதம் உடையதுமாம் யானை கரடகம் எனப்பட்டது. கரட்டான், கரடி என்பவை போல.

**கரி**

கர் > கரி = கரு நிறத்தது.

கருநிறமான பொருள் கரி, அடுப்புக்கரி, நிலக்கரி. அதே கருநிறத்தது யானை; பன்றியும் கருநிறத்ததாதலால் கரி எனப்படும்.

கரிப்பான், கரிசாலை, கரிசலாங்கண்ணி என்பதும் கரிய நிறச்சாறு உடையதே. கரியமால் = திருமால். கரிக்குருவி வலிமையால் வலியன் எனப்பட்டது. கரிய பவழம் செயற்கைப் பொருள். கரி என்பது நேரில் காட்டற்கரிய கருத்து அல்லது கருதுகோள் சான்று. "இந்திரனே சாலுங் கரி".

கரி என்றால் யானைத் தோற்றம் வெளிப்பட விளங்கும்.

**கரிணி**

யானைக்குக் கருநிறம் கருதியிட்ட பெயர் கரி என்பது. கரிணி என்பது ஆண்யானையை நீக்கிப் பெண்யானைக்குரிய பெயராயிற்று. ஆணும் பெண்ணும் கருமைதானே! ஆனால் கருக்கொள்ளுதல் பெண் யானைக்குரியது. ஆதலால் அது கருதிக் கருணி > கரிணி எனப்பட்டதாம்.

**களபம்**

கருநிறத்ததாதலின் களபம் எனப்பட்டது. களர் நிறம் கருமை. 'களபம்' கருநிறச் சாந்து ஆதலைக் கருதுக.

**களிறு**

களர் > களறு > களிறு. களர் = கருமை. கருநிற மண்ணையுடைய நிலம். "காலாழ் களர்" என்பது திருக்குறள் (500). களிறு நிலத்துத் திரிதலும் சேற்றில் பட்டுக் கருமை மேலும் கருமையாதலும், அவற்றைக் களிப்பாகக் கொண்டு உலாவலும் கொண்டு களிறு எனப்பெயர் பெற்றதாம்.

கள் = கருமை; களர், களிறு என்பனவும் கருமை வழிப் பெயர்களே. களரில் மாட்டுங்கால் தன் வலிமை இழத்தலையே,

"காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு"

என்றது திருக்குறள் (500).

**கள்வன்**

கள் = கருமை. கருநிறத்தது யானை ஆதலால் அந்நிறத்தால் கள்வன் எனப்பட்டது.

**கறையடி**

கறை = உரல்; அடி = கால். உரல் போலும் காலை உடைமையால் யானை கறையடி எனப்பட்டது.

கறை = அழுக்கு, சேறு. யானை சேற்றுப் பகுதியிலும், ஈரக்கசிவு நிலங்களிலும் நடந்து திரிவதால் எத்தனை முறை நீராடி உடல் அழுக்கைத் தீர்த்தாலும் கால் அழுக்கு அற்றுப் போவதில்லை. நீராடி வெளிவரும் போதே காலில் சேறு படியவே வரும். அதன் கால் பருமையால் உரலுக்கு ஒப்புமையாகக் கொண்டு சொல்லப்பட்ட பெயர் கறையடியாம்.

**குஞ்சரம்**

குஞ்சம்புல் இயற்கை; குஞ்சலம் செயற்கை. குஞ்சம் என்பது கலை வண்ணத்தால் உருவாகும் மென்கற்றைத் தொங்கலாகும்.

யானையின் வால் பரியது; தலைப்பில் கனத்தது. வரவரச் சிறுத்து இறுதியில் அமைந்த முடிக்கற்றை குஞ்சம் போல் இருத்தலால் ஒப்பு வகையால் குஞ்சரம் எனப்பட்டதாம். தேவ யானையைத் தேவகுஞ்சரி என்பார் அருணகிரியார்.

"தேவ குஞ்சரி மணவாளா" (இளைய பிள்ளையார். முருகன் என்பதும் அவன். தேவயானை கணவன் என்பதும் தொன்மம்.)

**கும்பி**

கும்புதல் = குவிதல், செறிதல், திரள்தல், உருளல். யானையின் வயிறு இவற்றுக்கெல்லாம் இடமாக இருப்பது

எவரும் அறிந்தது. யானைப் பசி என்பது பெரும்பசி. அப்பசி யானைத்தீப் பிணி எனப்பட்டுக் காயசண்டிகைக்கு உண்டாயதும் ஆதிரை இட்ட பிச்சைச் சோற்றை மணிமேகலை ஏற்றுக் காய சண்டிகையின் யானைத்தீப் பிணியைத் தீர்த்ததும் மணிமேகலைச் செய்தி.

கும்பி = வயிறு. "கும்பி கொதிக்கிறது" என்பது ம.வ. கும்பம் என்பதும் அது.

கும்பு + ஆ = கும்பா; ஆ = எதிர்மறை. கும்பா = குவிதலற்றதும் வாய்விரிந்துமாம் கலம்.

**குழவி**

யானையின் கன்றுக்குக் குழவி என்னும் பெயர் உண்டாகலின் அப்பெயரே வளர்ந்த யானைக்கும் பெயராயிற்று. இளையவர் எவ்வளவு மூத்தாலும் இளையவர் என்னும் பெயர் நிலைத்து விடுவதில்லையா, அது போல்.

**கைப்பீலி**

கையில் ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்துவிட்டால் அதனை விடாமல் வைத்துக் கொண்டிருப்பது. இல்லையேல் கையால் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பிடிக்குமெனப் பாகர் வழங்குவது. அது பெரிதும் தழை, சங்கிலி போன்றவை.

பீலி = இலை தழையாம்.

**கைம்மலை**

கையை யுடையதாலும் மலையன்ன பரிய தோற்றத்தாலும் கைம்மலை என்னும் பெயர் பெற்றதாம்.

**கைம்மா**

கையை யுடைய விலங்கு. கை, துதிக்கை, தும்பிக்கை, துளைக்கை, புழைக்கை, பூட்கை என்னும் பெயர்களை எண்ணுக.

அந்தகக் கவி வீரராகவர் யானைப் பரிசில் பெற்று வந்ததை,

"இம்பர்வான் எல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணா என்றாள்
கைம்மா என்றேன்; சும்மா கலங்கினாளே" - தனிப். அந்தகக்.

**கோட்டுமா**

*கோடு = கொம்பு; மா = விலங்கு. கோட்டுமா = கொம்பை யுடைய விலங்கு.*

"கூறை கோட்பட்டுக் கோட்டுமா ஊரவும்" - சிலப். 15:98

*"பன்றி, எருமை, யானை மூன்றும் கோட்டுமா எனப்படுத லுண்டு" அரும்; அடியார்க்.*

**சிந்துரம்**

*செந்துரம் > சிந்துரம். சிவந்த புள்ளிகளை உடைமையால் சிந்துரம் எனப்பட்டதாம். செந்துருக்கம் என்பது குங்குமம் (ம.வ.) "செந்துருக்கப் பொட்டு நன்றாக உள்ளது" என்பர்.*

**சுண்டாலி**

*சுண்டு + ஆலி = சுண்டாலி. சுண்டுதல் = சுருங்குதல். ஆலுதல் = அசைதல்.*

*யானையின் கை சுருங்கி வளையும். இப்பாலும் அப்பாலும் அசைந்து கொண்டே இருக்கும். இவ்வியற்கையை எண்ணி எண்ணி நுண்ணிதின் யானைக்கு இடப்பட்ட பெயர் சுண்டாலியாகும். ஆலியாடல் பழங்கலைகளுள் ஒன்று. இன்றும் கோயில் விழாக்களில் காணலாம். ஊர்வலங்களில் ஆலி ஆட்டம் இடம் பெறலும் உண்டு.*

*சுண்டு, சுண்டெலி, சுண்டு கயிறு, சுண்டைக்காய் என்பவற்றில் சிறிதாதல் சுழலல் வட்டமிடல் என்பவை அறியலாம். சுண்டு என்பதும் அது. சுருட்டி மடக்கும் வழியாகப் பெற்ற பெயர் சுண்டை என்பது.*

**சூகை**

*சூழ்கை > சூகை. சுழலும் கையை யுடைமையால் சூகை எனப்பட்டது.*

**தகர்**

*எளிமையாய் எதனையும் தகர்க்கும் வலிமை யுடைமையால் தகர் ஆகியது. ஆட்டுக் கடாவும் தகர் எனப்படும், போரிடலால். "குன்றேறி யானைப்போர் கண்டற்றால்" (திருக். 758).*

***தந்தா வளம்***

*தந்த வளம் > தந்தாவளம். தந்தமே வளம் என்பதை வெளிக்காட்டுவது இப்பெயர்.*

***தந்தி***

*தந்தத்தை உடையது தந்தி எனப்பட்டது. தந்தம் தானே தங்கத்திற்கும் மேற்பட்ட வளமாகக் கருதப்படுகிறது. தந்தத்தின் வேலைப்பாடு கண்டு சொக்கிப் போகாதவர் எவர்? சொன்ன விலையைத் தந்து அதனைப் பெற விரும்பாக் கலையார்வலர் எவர்? பழநாளில் தந்தம் போல் நீண்ட பல் இருந்தமையால் தானே பன்றி எனப்பெயர் பெற்றது என்பதை எண்ணல் வேண்டும்.*

***தாமம்***

*தம்மைச் சார்ந்த கூட்டத்தொடும் இருப்பதை விரும்பு தலால் தாமம் என்பதாம். பின்னைப் புனைவுத் தொன்மம் யானைக் கையில் மாலை கொண்டிருத்தல் கொண்ட பின்னைப் பெயருமாம்.*

***தாலவட்டம்***

*தாலம் + வட்டம் = தாலவட்டம். தாலம் = தொங்குதல். ஒ.நோ.: தாலி.*

*யானையின் வால் தொங்குதலாலும் சுழல்வதாலும் தாலவட்டம் எனப்பட்டதாம். வட்ட வடிவ விசிறி ஆலவட்டம் என்பது நோக்கத்தக்கது.*

***திண்டி***

*திண் > திண்டி. திண்ணிய உருவத்தை உடையதாதலால் திண்டி எனப்பட்டதாம். திண்ணம், திண்ணன், திண்டு, திண்ணை என்பவை வலுவும் திண்ணமும் உள்ளமையாதல் காண்க.*

***துடியடி***

*துடி என்னும் தோற்பறை போலும் அடியை யுடையது துடியடி; யானைக்கன்று “துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீர்”(கலித்.11).*

**தும்பி**

*தூம்பு > தும்பு > தும்பி. பறக்கும் தும்பியைப் பார்த்தால் யானைக்கு அப் பெயரிட்ட உண்மை புலப்படும்.*

*தேனை உறிஞ்சும் தூம்பு (சுரும்பு) இருப்பது போல் யானைக்குத் தூம்பமைந்த கை இருப்பதால் தும்பி எனப்பட்டது. வடிகாலுக்கு அமைப்பது தூம்பு இல்லையா? தூம்புடைமையால் தும்பியாயது.*

**தூங்கல்**

*துதிக்கையை இப்பாலும் அப்பாலும் அசைத்து ஆட்டிக் கொண்டும், தலையையும் இப்பாலும் அப்பாலும் திருப்பிக் கொண்டும் இருத்தலால் தூங்கல் எனப்பட்டது.*

*தொங்குதல் > தொங்கல் > தூங்கல். தொங்கட்டான் என்னும் குழந்தையர் காதணியும் சுவர்க்கடிகையாரத் தொங்கலும் எண்ணத்தக்கன. விரைந்து அசையாமல் மெல்லெனக் கையையும் தலையையும் அசைத்தலும்,*

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை"

*என்னும் குறளை (672) நினைக. தூங்குதல் மெல்லெனச் செய்தல்; மென்மை, மெதுவாம்.*

**தோல்**

*தொல் > தோல்.*

*உடலின் உள்ளுறுப்புகளுக் கெல்லாம் பாதுகாப்பகமாக முதற்கண் தோன்றியது தோலே ஆகும். தோல் என்பதே மெய்யாகும். மெய்யுணர்வு அதன் வழியாகவே வாய்க்கின்றது.*

*யானையின் தோல் பரியது; விரிந்தது; அது தசை நார் முதலியவற்றொடு ஒட்டி உரித்தற்கு அரிது என்பர். அத்தோலை உரித்துக் கரியுரி போர்த்த செயலின் அருமையைத் திருவிளையாடல் கூறும். சிற்பங்களும் ஓவியங்களும் பாவிகங்களும் காட்டும். அத்தோற் சிறப்பால் யானை தோல் எனப்பட்டது.*

**நாகம்**

யானையின் உயரம் நெடுமை பருமை ஆயவை நாகம் எனப் பெயரை வழங்கியதாம். நாகம் என்பது மலை.

**நால்வாய்**

நால் + வாய் = நால்வாய். நாலுதல் = தொங்குதல்.

தொங்கும் வாயை உடைமையால் நால்வாய் எனப்பட்ட தாம். 'நான்று கொண்டான்', 'ஞாலம்'என்னும் சொற்களைக் கருதுக.

ஒருவாய்க்கே உணவில்லாத எனக்கு நால்வாய் வழங்கினான் நாஞ்சில் வள்ளுவன்; கொடைநிலை அறியா மடவன் என்ற ஔவையாரின் புறப்பாடல் (140) நால்வாய்ச் சுவை காட்டும்.

**நூழில்**

மதில் போர் புரிதற்கு முற்பட ஏவுவதும், கோட்டை கதவு முதலியவற்றை இடிப்பதும் பகையைக் கொன்றழிப்பதும் யானை யாகலின் நூழில் எனப்பட்டது.

நூழிலாட்டு என்பது கொன்று குவித்தல். தன்மேல் பட்ட படையை எடுத்து அதனைப் பகைமேல் ஏவத் துணிதல் நூழிலாம்.

**பகடு**

பக > பகடு = பெரியது, வலியது.

பகடு என்பது காளை. அதன் வலிமையாலும் ஊக்கமிக்க செயலாலும் பகடு எனப்பட்டது. "பகடு நடந்தகூழ் பல்லா ரோடுண்க"(நாலடி. 2), "பகடன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து"(திருக்.624).

இழுத்துக் கொண்டு வர இயலாப் பெரிய பெரிய தடிகளையும் மலைகளில் இருந்து இழுத்துக் கொண்டு வந்து உரிய இடம் சேர்த்தற்குரிய வலிமை வாய்ந்தது யானை. களப்போரிலும் மதிலழிப்பிலும் தன் வல்லாண்மை காட்டுவது. மதிலை இடித்தலாலும் மன்னன் தலைகளை எற்றித் தள்ளலாலும்

கொம்பு முரிந்தும் நகம் சிதைந்தும் போயமையால் யானை தன் பிடி முன்பு செல்லாமை நாணிக் கிள்ளியின் புறங்கடை நின்றதாகக் கூறும் முத்தொள்ளாயிரம்.

### பயம்பு

ஆழமான குழி வெட்டி அதனை யானை விரும்பி யுண்ணும் இலை தழைகளால் பரப்பி மூடி மறைந்து யானையை வீழச் செய்து பிடித்தலால் பயம்பு என்பது தோண்டப்பட்ட குழிக்கும், அதில் வீழ்த்தப்பட்ட யானைக்கும் பெயராயிற்று.

### பிடி

கையால் பிடித்தல் பிடியாகும். பெண்யானையின் பெயர் பிடி. ஆண் யானையின் கையால் பிடித்து அகப்படுத்துதல் நோக்கியது இது.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை", "பிடியரிசி", "பிடி சோறு". பிடி இறுக்கமாதல் 'பிடிவாத' மாம். பற்றுதலும் பற்றுமையும் 'பிடிப்பு' எனப்படும்.

### புகர்முகம்

புகர் = புள்ளி. நெற்றியில் வெள்ளையும் சிவப்புமாகத் தோன்றும் புள்ளியே புகர் ஆகும். முகத்தில் அதனை உடைமையால் புகர்முகம் ஆயிற்றாம். புகர் என்பது போர் ஆகும். போர்க்காளை என்பது புகரமைந்த - புள்ளிகளமைந்த - காளையாம். செம்போர்க் காளை, கரும்போர்க் காளை (ம.வ.).

### புழைக்கை

புழை = துளை; துளையுடைய கை புழைக்கை எனப்பட்டது. தூம்பு போல்வதேயாம்.

### பூட்கை

பூட்டிய கை போல் உறுதியாகப் பற்றிப் பிடிக்கும் வலிய கை; மரத்தைப் பிடுங்கி எறியும் ஆற்றல் படைத்த கை அது. பூட்கை என்பதற்குக் கொள்கை - உறுதிப்பாடான குறிக்கோள் என்று பொருள் உண்டாக வாய்த்த பெயர் அது.

**பெருமா**

*பெருவிலங்கு; பரியது என்பார் வள்ளுவர். பரியது > பெரியது; பருமனானது. யானை நெருஞ்சி, யானைக்கால் நோய், இன்னவை யானை பெரியது என்னும் பொருளதாம் எனல் காண்க.*

**பொங்கடி**

*பொங்கு + அடி = பொங்கடி. பொங்கு > பொங்கர் = சோலை.*

*பொங்கல் மழை = புதுமழை. பொங்கரில் உறைவதும், தண்ணிய மழையில் நனையவும் விரும்புவதும் ஆகிய யானையின் இயற்கையை உணர்ந்தோர் அதற்குப் பொங்கடி எனப் பெயர் சூட்டினர். பொங்குதல், கிளர்தலும் மேலெழலும் மகிழ்தலும் குறித்தலின் அவற்றையுடைய யானையைக் குறித்தது என்பதுமாம்.*

*பொங்கல் மகிழ்ச்சிப் பொருளதாதல் வெளிப்படை.*

**போதகம்**

*போதம் > போதகம். போதம் = அறிவு.*

*கூரிய அறிவுடைமையால் போதகம் எனப்பட்டது. போதிக்காமலே போதம் உடையது மட்டுமன்றிப் போதித்தவாறு - ஆணையிட்டவாறு - இயங்கும் இயல்பினதாகலின் போதகம் எனப்பட்டதாம்.*

"போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்" - கம். ஆரணிய. 229

**மஞ்சு**

*மழை பொழியும் மஞ்சுக் கூட்டம் போலும் நிறத்ததாதலாலும் பரிய உருவத்தொடு மஞ்சு ஊர்வதென ஊர்தலாலும் மஞ்சு எனப்பட்டதாம்.*

*மைந்தாகம் என்பது மலையையும் யானையையும் குறித்தல் அறிக.*

**மதகயம்**

*மதம் உடையதும் கருநிறத்ததுமாகிய விலங்கு.*

*மதமா*

*மதங்கொள்ளும் விலங்கு மதமா.*

*மதமொய்*

*மதமும் மொய்ம்பும் (வலிமையும்) உடைமையால் மதமொய் என்னும் பெயர் கொண்டது.*

**மதாவளம்**

*மத + வளம் = மதவளம் > மதாவளம்.*

*மதமாவது வலிமைப் பொருளது. கேடு செய்யும் மதம் எனின் 'வளம்' ஆகியிராது. 'மத' என்பது இளமைப் பொருளது. மதலை, மதவு என்பவை இளமைப் பொருள.*

**மத்தகம்**

*மத்தளம் போன்ற வயிற்றை யுடைமையால் மத்தகம் எனப்பட்டது.*

*"மத்தள வயிறனை உத்தமி புதல்வனை"- திருப். கடவுள்.*

**மந்தமா**

*மந்தம் = அசைநடை. யானையின் இயல்பான நடை விரைவற்ற அசை நடையாகும். ஆதலால் அப்பெயர் பெற்றது. கல்வியில் திறம் குன்றியவன் 'மந்தன்' என்பது நன்னூல்.*

**மருண்மா**

*மருள் + மா = மருள்மா. மருள் = மயக்கம், இருள், கருமை. கருநிற விலங்கு என்பது மருண்மா. மா = யானை, குதிரை, மான், விலங்கின் பொதுப்பெயர்.*

"மாவும் மாக்களும் ஐயறி வினவே" - தொல். 1531

**மா**

*மா = பெரியது, கரியது.*

கரியதும் பெரியதுமாகிய விலங்கு யானை. ஆதலால் மா எனப்பட்டது.

**மாதங்கம்**

மா = மிகுதி. தங்கம் = பொன்.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
யானை இறந்தாலும் ஆயிரம் பொன்"

என வழங்கும் பழமொழியே யானை மாதங்கம் என்பதைக் காட்டும். தங்கம் வயிரம் முத்து முதலிய அரும்பொருள் ஒப்பவே யானைத் தந்தத்தின் விலைமானம் இருத்தலால் அத் தந்தச் சிறப்பாலேயே அதற்குப் பேரழிவு உண்டாகின்றது என்பது வெளிப்படை. தந்தம் இருத்தலால் அப்பாரிய உயரிய யானை கொள்ளைக் கூட்டத்தால் அழிக்கப்பட்டு எண்ணிக்கை குறைந்தமை காட்டுவளம் குன்றியதன் அடிப்படையாம். காட்டில் சந்தன மரமும் யானைத்தந்தமும் கொள்ளையர்க்கு மட்டுமன்றிக் கான் துறையர்க்கும் காக்கும் அரசுக்கும் பங்குள்ளமையால் காடுகள் பாலைவனமாகி வருதல் இயற்கை ஆர்வலரை வாட்டி எரிப்பதாம்.

யானையின் தந்தம் பல் எலும்பு முதலியவை எல்லாம் பொன்னே. ஆதலால் மாதங்கம் ஆயிற்றாம்.

**மாதிரம்**

எண் திக்கும் காக்கும் கடமையர் எண் யானைகள் மேல் ஏறிக் காப்பர் என்னும் தொன்ம வழிப்பட்டது மாதிரம் என்னும் பெயராம். மாதிரம் = திசை.

"மாதிரம் எவையும் நோக்கான்" - கம். உ.யுத் 1225

**மொய்**

மொய் = வலிமை, கூடுதல், சேர்தல். மொய்ம்பு என்பது வலிமையாம். அவ்வலிமைப் பெருக்கு மொய் எனத் தொகுத்து நின்று வலிய யானையைக் குறிப்பதாயிற்று. உருவம் கண்டே அச்சம் உண்டாக்கும் அது, மதமும் கொண்டால் அழிக்க வேண்டுமென்று துணிந்தால் கூரை கூரையாக இருக்குமா? வீடும் ஊரும் வயலும் காடும் வாழையும் கரும்பும் என்னாம்?

பாகன் தன் யானைக்குத் தன்வீட்டைக் காட்டான் என்பது பழமொழி. வீட்டை அறிந்தால் முதலாவதாக அழிக்கக் கிளர்வது அவன் வீட்டையே.

ஊரிலே தீப்பற்றிக் கொழுந்துவிட்டு எரிந்தால், எப்படி ஊர் அல்லல்படும்! அலங்கோலமாம்! அப்படியே ஊருள் யானை புகுந்தால்! யானை வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும். நூறு செறுவாயினும் அழிவு செய்துவிடும் என்பது புறநானூறு (184).

**வயமா**

வயம் = வெற்றி. போரில் வெற்றி தரும் விலங்கு.

**வல்விலங்கு**

விலங்கு = மலை. குறுக்காகக் கிடப்பது; விலங்கு = ஐயறிவுயிரி; குறுக்காக நடப்பது. விலங்கில் வலிமை மிக உடைமையால் வல்விலங்கு எனப்பட்டது.

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" - திருக். 599

என்பது வாய்மை. எனினும். அது மறைந்து தாக்கல், கொன்று தின்னும் கொலைத் தாக்குதல் என்பதையும் எண்ணுக. கொல்லும் வலிமையினும் தாங்கற்கு அரிய சுமையைத் தாங்கவும் இழுக்கவும் ஆகிய வலிமையே பெருமை மிக்கதாம். யானை தாக்க முனைந்து நேருக்கு நேர் நின்று போரிட்டால் புலியை வெல்லல் அரிதில்லையாம்.

புலியைக் குத்திக் கொன்ற காளையின் தோலையே போர் முரசுத் தோல் ஆக்குவர் என்பதை எண்ணினால், அக் காளைக்கு யானை வலிமை குறைந்ததாகுமா?

**வழுவை**

வழு வழுப்பு என்பது ஒரு தன்மை. தளம் வழுவழுப்பாக உள்ளது என்பர். நாவில் வெண் படிவு உண்டானால் நா வழுவழுக்கிறது என்பர். வழுவழுப்பால் பெயர் பெற்றது வாழை; துணிக்கெனவும் உடற்கெனவும் போடப்படும் சவர்க்காரம்

*வழலை. இவ்வாறு வழுவழுப்பான தந்தத்தை உடைமையால் யானை வழுவை எனப்பட்டதாம். யானையின் தந்தத்தைத் தீட்டு கல்லாகப் பயன்படுத்தினர்.*

** 'மிறை' காண்க.*

***வாரணம்***

*வார் > வாரணம்.*

*வாரி வாரி உண்ணுவது வாரணமாகும். எத்தனை ஆறுகள் புகுந்தாலும் மழை பொழிந்தாலும் தட்டின்றி வாங்கிக் கொள்ளும் கடல் வாரணம் எனப்படும்.*

"வாரணம் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மான"

*என்பது பழம்பாடல். இரண்டு சிறகுகளை யுடைய வாரணம் கோழி.*

"கொத்திக் கண்ட கோழியும்
நக்கிக் கண்ட நாயும் ஓயா"

*என்னும் பழமொழியால் கோழி வாரித் தின்னல் விளங்கும்.*

*எவ்வளவு கரும்பு பழம் சோற்றுத்திரள் அதிங்கம் முதலியன வாரி வாரிப் போட்டாலும் போதுமென நிறுத்தாமல் உண்பது வாரணமாம் யானை. அதனால்,*

*"அசைந்து வாங்கும் யானை அசையாமல் வாங்கும் வீடு" என்பது பழமொழி. இந்நாளில் யானையினும் வாங்குவது வீடு என்பது தெளிவு.*

"வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்" - கம். உயுத். 1219

***வாரி***

*வாரணமாம் யானைக்கு வேண்டும் உணவை வைத்து அதனைக் கட்டி வைக்கும் இடம் வாரியாகும். வாரணம் கடலாதல் போல் வாரி, வாரிதி என்பனவும் கடற்பொருள் தருவனவே.*

**விலாழி**

*யானையின் அகன்ற வாயில் இருந்து வழியும் உமிழ்நீர் விலாழி எனப்படும். விலா வாயின் இரண்டு பக்கங்களுமாம். கரும்பு தழை முதலியவை தின்று வழியும் நீர் விலாழி. "கோதுடைச் சிதறல்"என்பது அது.*

**வேழம்**

*வேழம் என்பது மூங்கில், கரும்பு. வேழம்பர் என்பார் ஊர் ஊர்தோறும் சென்று கழைக்கூத்துச் செய்யும் கலைவல்லார். யானை மூங்கில் முளையை விரும்பித் தின்னும். மூங்கிற் கதிரையும் (வெதிர்) விரும்பி உண்ணும். இவற்றால் வேழம் என்னும் பெயர் பெற்றது.*

*யானைப் பெருக்கம் இல்லாத நாட்டில் யானைப் பெயர்கள் இத்தனை தோன்ற இயலாதாம். ஆய் என்பான் பொதியில் மலையைப் பாடும் மோசிகீரனார் உன் நாட்டில் யானை ஒரு சூலுக்குப் பத்துக் கன்றுகளை ஈனுமோ என்றும், கருங்கற்களின் இடையே ஆன்கூட்டம் திரிவது போல ஆனைக் கூட்டம் திரியும் என்றும், வானம் இடைவெளி இல்லாமல் மின்பூத்ததானால் நின் யானைக் கூட்டத்திற்கு ஒப்பாம் என்றும் கூறியவற்றை எண்ணினால் யானைப் பெருக்கம் நன்கு விளங்கும்.*

*யானையைப் பற்றிப் பழைய நூல்களில் உள்ள செய்திகளை முற்றாகத் தொகுத்தால் பாரிய நூலாக விளங்கும் என்பது ஒருதலை.*

**யானை வஞ்சி:**

*'ஆனைத் தொழில்' காண்க. யானைத் தொழில் மாலை என்பதுவும் இது. வஞ்சிப்பாவால் பாடுதலால் யானை வஞ்சி எனப்பெற்றது.*

"இசைந்த நிலம்குலம் ஒத்த எழிலோ
டசைந்த பிராயத் தளவும் - இசைந்தமதம்
துன்னஅஞ்சி வீடுயர்கோன் மன்னன் தொடர்ந் தணைத்தல்
சொன்னவஞ்சி யானைத் தொழில்" - வெண். பாட். 33

✲ ✲ ✲

# ‘வ’ வரிசைச் சொற்கள்

**வ:**

*வகர அகரம். குறில். இடையின வகையில் நான்காம் எழுத்து. கால் என்னும் எண்ணின் குறி. "எட்டேகால்" எட்டு (அ), கால் (வ) (ஔவை. தனிப்.). 'அவ'*

*வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ என்பன சொல்முதலாக வரும் எழுத்துகள். சிவனிய மந்திர எழுத்தில் இரண்டாவது 'சிவயநம'.*

*'வா' என்னும் ஏவலின் குறுக்கம். வந்தான், வருகிறான், > த. தந்தான், தருகிறான், தருவான்.*

**வகிடு:**

*வகு > வகுத்தல் > வகிர்தல் > வகிடு.*

*தலை முடியைப் பகுத்துச் சீவுதல் ஆடவர் மகளிர் அனைவர்க்கும் உரிய பேணல் கடன். பெரிதும் ஊடு, ஓரம் என வகிடு காணலாம். முன்னர் மகளிர் ஐவகையில் முடியழகு செய்தமை அறிய வருதலால், வகிடும் பலவாகலாம். அமெரிக்கா ஆபிரிக்கா முதலிய நாட்டுக் கறுப்பர் இனமக்கள் ஊடு ஊடு முடியை மழித்துக் கொள்ளுதலை மேற்கொள்ளுதல் வகிடு வழக்கைக் காட்டுகின்றது.*

**வகுத்தல்:**

*1.வகுத்தல் = கணக்கு வகை நான்கனுள் ஒன்று. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பவை அந்நால் வகையாம்.*

*2. அரசியலின் பொருளியல் வகை நான்கனுள் ஒன்று.*

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" - திருக். 385

*3.வகுத்தல் = வகைப்படுத்துதல். தேங்காய் மாங்காய் முதலியவற்றை இன வாரியும் தரவாரியும் பிரித்தல் (ம.வ.).*

**வகுந்து:**

*வகுந்து = வழி.*

*அடர்ந்த முடியில் உச்சி எடுப்பது போல மரம் செடி கொடி தூறு கல் முதலியவை செறிந்த காட்டில் நடக்கவும் வண்டி செல்லவும் ஆகிய வகையில், வழி ஒழுங்குறுத்தல் வகுந்து எனப்படும்.*

“வரைசேர் வகுந்து” - மலைபடு. 242

“வகுந்து செல்வருத்தம்” - சிலப். 11:167,15:17

**வகுப்பு:**

***வகுப்பு:[1]***

*வகு > வகுத்தல் > வகுப்பு (பகுப்பு). பெரிதாம் ஒன்றனைப் பலவாகப் பிரிப்பது வகுப்பு ஆகும்.*

*பள்ளியில் வகுப்புப் பிரிவும் வகுப்பும் உண்டு. முதலாம் வகுப்பு; அவ்வகுப்பில் மாணவர் நிரம்ப இருப்பின் பல பிரிவுகள் செய்தல் உண்டு. கணக்குகளில் ஒருவகை வகுத்தல். ஒன்றைச் சமன்படப் பலவாகப் பகுத்தல் வகுத்தலாம். ‘வகுந்து விடுவேன்’ எனக் கிழித்தல் பொருளில் வழங்குவது பொதுமக்கள் வழக்கில் உண்டு.*

***வகுப்பு:[2]***

*வகுத்துக் கூறுவதாக அமைந்த பனுவல் வகுப்பு எனப்படுகின்றது. கலம்பகத்தில் வரும் புயவகுப்பு (தோள் வகுப்பு) தனி நூலாகக் கூறப்படலாயிற்று எனலாம்.*

*வகுப்பு சந்த நடையது; நெடிய அகவலாய் இயல்வது. அருணகிரியாரின் வேல்வகுப்பு, புயவகுப்பு என்பவை இவ்வகையில் சிறப்பு வாய்ந்தவை. வகுப்புப் பாடுதலில் தண்டபாணி அடிகள் தனிப்பெருமையுடன் இலங்குகின்றார்.*

*அவர் பாடிய வகுப்புகள் தனிப்பெரும் நூலாம் அளவின. அவர் பாடிய திருவாயிரங்களுள் வகுப்புக்குச் சீரிய இடமுண்டு.*

**வகை:**

*வகு > வகை.*

*ஒன்று பலவாக வகுக்கப்படுதல் வகை ஆகும். சோறுவகை, கறிவகை, பயறுவகை, பறவை வகை எனக் காண்க.*

*ஓர் ஒருமையைப் பலவாக்குதல் வகை ஆகின்றது. வகைக்கு அளவில்லை. ஆதலால், வகை தொகை இன்றி என இணைச்சொல் உண்டாயது. ஒரு கணக்கைச் செய்முறை, வகை எனப்படும். படிப்படியாகக் கணக்கின் முடிவு காட்டல் அது. பணம் தேவை; ஆனால் அதனைத் தேடும் வகைதான் தெரியவில்லை என்பதில் வகை 'வழி'யாகின்றது.*

*"வகுத்தான் வகுத்த வகை" எனவும், "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்" எனவும் அரசியல் நெறி ஆயது (திருக். 377, 385).*

**வகை தொகை:**

*வகை= வரவு வந்த அல்லது செலவிட்ட வழி.*

*தொகை= வரவு வந்த அல்லது செலவிட்ட தொகை.*

*வகை தொகை விளக்கமாக இருக்க வேண்டும் என்பதை எவரும் விரும்புவது இயற்கை. கணக்கு எழுதும் அன்று இன்னது என்பது தெளிவாக இருக்கும். ஆனால் ஆண்டுகள் சில கடந்தபின் நினைவில் இருக்குமோ? கணக்கு வகை தொகை செம்மையாக இருந்தால் என்றும் கண்டு கொள்ளலாமே. செய்வன திருந்தச் செய்ய விழைவார் வகைதொகை சீராக வைத்திருப்பார்.*

**வகைமை:**

***வகைமை:[1]***

*வகு > வகை > வகைமை = வகைப்படுத்துதலாம் தன்மை.*

*காய்வகை, கனிவகை, அரிசிவகை, பருப்பு வகை, துணிவகை, மணிவகை, உயிர்வகை, பயிர்வகை என வகைப்படுத்துதல். வகைப்படுத்தியவை பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு; காப்பியம், தொன்மம், சிற்றிலக்கியம், தாலாட்டு, பழமொழி என்பன போலாம். வல்லினம், மெல்லினம், இடையினம்; உயிர், உயிர்மெய்; நெடில் குறில்; அளபெடை, தொகுத்தல் விரித்தல் எனப்பகுக்கப் பட்டவை.*

***எ-டு:***

"இலக்கிய வகைமை அகராதி"

***வகைமை:***[2]

*வகைமை = தன்மை.*

"பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்" - திருக். 709

**வக்கட்டை:**

*மெலிந்தவர், ஒல்லி (ஒல்கி)யானவர் என்பதை ஒச்சட்டை என்பர். ஒல்லி என்பதை வக்கட்டை என்பது குமரி மாவட்ட மூக்குப்பீரி வட்டார வழக்காகும். இது, உயிரினத் திரிபும் வல்லினத் திரிபும் கூடியதாகும்.*

**வக்கா:**

*வக்கா என்பது பறவைப் பெயர்களுள் ஒன்று. அதனைக் குறவஞ்சி நூல்களால் அறியலாம். வக்கா என்பது கிளி என்று திருமங்கல வட்டார வழக்கால் அறிய வாய்க்கின்றது. அக்கா, அக்கா என்று சொல்லிப் பழக்குவதால் வக்கா ஆகியிருக்கக் கூடும்.*

**வக்கு வகை:**

*வக்கு= வழி; வாய்ப்பு.*

*வகை= பிறர் உதவியாம் வகை.*

*'வக்கு வகை' என்பது 'வழி வகை' எனவும்படும். தம் பொருளால் வாழ்வு நடத்துதலும், பிறர் உதவியால் வாழ்வு நடத்துதலும் என இருவகை வாழ்வும் உண்டு. ஒருவர்க்கே*

ஒவ்வொரு காலத்தில் இவ்விருவகை வாழ்வும் இணைதலும் உண்டு. இவ்விரண்டு வகையாலும் நிரம்பாத வறிய வாழ்வு உடையவரை ‘வக்கு வகை’ இல்லாதவர் என இகழ்வது வழக்கம். வக்கற்றவன் வகையற்றவன் என்பவை வக்கு வகைகளின் விரிவாம்.

**வங்கணம்:**

உரிமையுடையவர் அல்லாரொடு பால்வழித் தொடர்பு வைத்திருத்தலை வங்கணம் என்பது முகவை வட்டார வழக்காகும். அங்கணம், கழிசடை என்பவை போன்றதொரு வசை வழக்காக ஏற்பட்டிருக்கக்கூடும்.

**வங்கம்:**

வங்கு + அம் = வங்கம். வங்கு = வளைவு.

1. வங்கம் = கப்பல்; வளைவாக அமைக்கப்பட்டது.

“வாலிதை எடுத்த வளிதரு வங்கம்” - மதுரைக். 536

“வளிவழக் கறுத்த வங்கம் போல” - புறம். 368.

2. வங்கம் = கடல். நிலத்தைச் சுற்றி வளைந்த கடல்.

“ஓங்கிரும் பரப்பின், வங்க ஈட்டத்து” - சிலப். 14:106-107

3. வங்கம், நாடுமாம். வங்காளம்.

**வங்கு:**

தோலின் மேல்பகுதி கண்ணாடி மினுக்கம் போல் தோன்றும் மெல்லிய தோல் நோயை. வங்கு என்பது முகவை மாவட்ட வழக்கு. “வங்கு பிடித்தவன் போல ஓயாமல் சொறிகிறாயே” என்பது பேச்சு வழக்கு. சொறிநோய் பற்றுதலை வங்கு என்பர். சொண்டு, சொறி போல்வது வங்கு.

**வசி:**

**வசி:**[1]

கூர்மை, வயப்படுத்துதல், வாள் என்னும் பொருளில் வழங்கும் வசி என்னும் சொல், பரதவர் வழக்கில் சோற்றுத்தட்டு, தட்டு என்னும் பொருளில் வழங்குகின்றது. உழைப்பெல்லாம் ஊணுக்கே என்னும் பழமொழியை நோக்கினால், வசி என்பதற்குச் சோற்றுத் தட்டு என்பதன் பொருள் விளக்கமாகும்.

***வசி:***[2]

*வசி = மழை.*

“வசியும் வளனும் சுரக்க” - சிலப். 5:73

**வசை:**

*இசை x வசை. வயை > வசை = நெஞ்சை விட்டு அகலாமல் வைக்கப் பட்டிருப்பது.*

*“வைஇய மொழி”எனப்படுவது அது. மறவாமல் மனத்து வைக்கப்படும் பழிச்சொல்.*

“தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு” - திருக். 129

“பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று” - திருக். 152

*என்பது சிறப்பியல்.*

**வஞ்சம்:**

*வஞ்சி > வஞ்சு > வஞ்சம்.*

*வஞ்சிக்கொடி; வளைவும் திருகலும் ஓடலும் சுருளலும் ஆகிய இயற்கையது வஞ்சி. அத்தன்மை கரவு சூழ்ச்சி ஏமாற்று மறைப்பு முதலியவற்றைக் கொண்ட மனக்கோணல் அல்லது வளைவுக்கு ஒப்பாக்கப்பட்டது.*

“வஞ்சமுண்டு மயற்பகை யுற்றோர்” - சிலப். 5:122

***பொருள்:*** *“வஞ்சமுண்டு = வஞ்சனைப்பட்டு” அரும்.*

*வஞ்சித்தல் என்பதும் அது. “வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்”(திருக். 276)*

**வஞ்சிப்பா:**

*வஞ்சி ஒரு கொடியாம். மெல்லியதாய் வளைவுடையதாய் நெடிதுயர்ந்து செல்வதாய் அமைந்தது வஞ்சி. அப்பெயரால் அமைந்தது வஞ்சித்தளை. அது கனிமுன் நிரை, கனிமுன் நேர் என*

*இருவகையவாய், ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை எனப் பெயர்பெறும்.*

"தன தனந்தன தன தனந்தன" என்பது,

"முரசியம்பின முருடதிர்ந்தன
முறையெழுந்தன பணிலவெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தது
அகலுண்மங்கல வணியெழுந்தது" - சிலப். 1:46-47

*என்ற நடை, கொடியசைந்து நடையிடல் போல்வதாம். யானை தன் துதிக்கையை இப்புறமும் அப்புறமும் அசைத்து நடையிடுவ தொப்ப ததனால், தூங்கல் நடையது வஞ்சி என்பர். தூங்கல் என்பது யானையாம். குறளடி வஞ்சி என்னும் இருசீர் வஞ்சி யானையின் இருபால் கையசைவு போல்வதாம்.*

**வஞ்சி மாலை:**

*எப்பொருளைப் பற்றியாயினும் வஞ்சிப்பாவால் பாடுதல் வஞ்சி மாலை எனப்படும். வஞ்சி மாலை வரலாற்று வஞ்சி, அமர்க்கள வஞ்சி போன்றது என்னும் நவநீதப் பாட்டியலுரை (48).*

**வடமொழி:**

*சமற்கிருதம் என்பது வடக்கில் இருந்து இவண் வந்தமையால். வடமொழி எனப்பட்டது. தமிழகத்தை ஒட்டிய வடக்கில் பேசப்பட்ட மொழி வடுகு எனப்பட்டது. வடமொழி தொல்காப்பியர் காலத்தேயே இவண் வந்துவிட்டதால் அதனைத் தம் நூலில் பதிவு செய்தார்; வடமொழிச் சொல்லை ஆள நேரின் தமிழியல்புக்குத் தக ஆள வேண்டும் என்றும் ஆணையிட்டார்.*

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" - தொல். 880

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" - தொல். 884

அவர் காலத்திற்குப் பின்னே தோன்றிய சங்கச் சான்றோர் பலரும் தொல்காப்பிய நெறியைப் போற்றினர். வடமொழி, ஆட்சியரைப் பற்றிக் கொண்டமையால் செல்வாக்குப் பெற்றது; மக்கள் சடங்கு வழிபாடு முதலியவை வடமொழி வழிப்படுத்தப்பட்டன.

சரிக்குச் சரியாகத் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாளம் என்னும் அம்மை வார்த்த உரைநடை நாலாயிரப் பிரபந்தத்திற்கு எழுந்தது. மணி = தமிழ்; பிரவாளம் = வடமொழி. இதனை 'ஆபாச நடை' என்பார் பரிதிமால் கலைஞர். ஆயினும் தொடக்கநாள் முதல் வடமொழி - தென்மொழிப் போராட்டம் தொடர்ந்தே வந்தது. உரையாசிரியர்கள் தமிழ்நெறியை வடவர் நெறிப்படுத்தும் வகையில் உரைகள் வரைந்தனர். நன்னூலாரும் பின்னூலாரும் இலக்கணத்தில் வடமொழிக்கு இடம் தந்தனர். இலக்கியத்திலும் சொற்கலப்பு உண்டாயிற்று. ஆயினும் வேற்று எழுத்து, தமிழகர வரிசையில் புகாமலும் தமிழில் அவ்வடமொழி எழுத்துப் புகாமலும் காத்தே வந்தனர். 19ஆம் நூற்றாண்டு தொட்டே கிரந்த எழுத்துப் புகலாயிற்று. அந்நிலையிலேயே தனித்தமிழ் இயக்கத் தேவை கட்டாயமாயிற்று. அதனால் பாவாணர், "தனித்தமிழ் வித்தை ஊன்றியவர் கால்டுவெலார்; அதை முளைக்கச் செய்தவர் பரிதிமால் கலைஞர்; செடியாக்கியவர் நிறைமலையாம் மறைமலையடிகள்; மரமாக வளர்த்து வருபவன் யானே" என்றார். வன்படியாகக் கலப்பு மொழி கொண்டவரும் தம்மை யறியாமல் இதுகால் நல்ல தமிழ் எழுதுவதைக் காண முடிகின்றது. ஆனால் பேச்சுத் தமிழ் பன்மொழிக் கலவையாய் ஆகி வருதல் கண்கூடாய பெருங்கேடாம்.

"மொழித்தூய்மை காக்கும் வல்லாண்மை மிக்க அரசுத் தலைமை ஒன்று தோன்றினாலன்று இந்தச் சோற்றாலடைத்த பிண்டங்கள் திருந்தா" என்று வருந்தினார் பாவாணர்.

**வடலி:**

இளம்பனை என்றும் குறும்பனை என்றும் வடலி என்னும் சொல்லுக்குப் பொருள் கொள்ளல் நெல்லை வழக்காகும். குறும்பனை நாடு குமரிக் கண்டப் பழமையது. பனை வடலி

*என்னும் நெல்லை மாவட்ட ஊர்ப்பெயரை எண்ணலாம். ஆங்குள்ள குறும்பனைகளைக் கண்டு பொருள் தெளியலாம்.*

**வடி:**

*1.வடி = வடித்தல்; ஆக்கிய சோற்றிலிருந்து கஞ்சியை வடித்தல். வடிசோறு, வடிபருப்பு.*

*2.வடி = கூர்மையாக்கல். "அந்த அரிவாளை வடித்துக் கொடு"என்பது ம.வ.*

"வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" புறம். 312

*3.வடி = கூர்மை.* ***"வடி கயிறு"*** *சிலப். 22:54*

**வடிம்பு:**

*1 .வடிம்பு = கூரையின் தாழ் ஓரத்தில் கட்டப்படும் கற்றை. "வடிம்பு வைத்துக் கூரை கட்டு" என்பது மக்கள் வழக்கு.*

*2. வடிம்பு = காலடி."வடிம்பலம்ப நின்ற பாண்டியன்" சங்கக்கால மன்னன் ஆவான்.*

**வடிப்பம்:**

*வடிப்பம் = அழகு, கூர்மை.*

*வடிவு = அழகு; வடிக்கப்பட்ட சிற்பம் வடிப்பமாம்.கண்டார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து உள் நிறுத்தத் தக்க வடிவு வடிப்பம் எனப்படும். அவ்வடிவு வடிவைக் குறியாமல் வடிவின் அமைதியாய் அழகைக் குறிப்பது வழக்காயிற்றாம்.சிலர் பெயரே 'வடிவு'என வழங்குதல் அறிக. வடிவான் மருட்டுதல் என்பது வடிவழகால் மயக்குதல் என்பதாம். வடிக்கப்பட்ட 'வேல்' அழகாக விளங்குவதுடன் கூர்மையும் கொண்டிருப்பதால் அதற்குக் கூர்மைப்பொருளும் உண்டாயிற்றாம்.*

**வடிவு:**

*வடிவாவது தோற்றம். தோற்றச் சிறப்பு அழகேயாகலின் வடிவு அழகெனப் பெற்றதாம்.வடித்து எடுக்கப் பெற்ற சிற்பத்தின் அழகை என்னென்பது! கல்லைக் கனியாக்க வல்ல கலைத்திறம் வடிவே யன்றோ!*

**வடு:**

*1.வடு = தழும்பு. புண்ணுற்ற வடிவு மறைவின்றி என்றும் வடிந்து - படிந்து - விடுவது வடுவாகும்.*

“தழும்பன் என்பான் பாடு புகழாளன்” - புறம். 348

“மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்” - புறம். 180

*2.வடு = பழி.*

“தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு” - திருக். 129

**வடுகர்:**

*தமிழகத்தின் வட எல்லையில் வாழ்ந்தவர் வடகர்; வடுகர். வடுகர் என்னும் சொல் சங்கச் சான்றோர் நாளிலேயே வந்துவிட்டது. அவர்கள் மொழி ‘வடுகு’எனப் பெற்றது. ‘வடமொழி’ என்பதற்கு வேறுபடுத்தற்கு ‘வடுகு’ என வழங்கினர்.*

*“சுற்றுதல் எறிதல் உடைத்தல் முதலான வடுகிற்குரிய கால்களும்” சிலப். 3:16, அடியார்க்.*

**வடை:**

*‘வடை’யின் சுவை தமிழகம் நன்கறிந்தது. ‘வடை’ என்னும் சொல்லின் ஆய்வும் சுவையாகவே அமைந்தது.*

*ஒரு கோயிலில் ஒரு தமிழன்பர் வழிபாட்டுக்குச் சென்றார். வடமொழி தானே கடவுளுக்குட் தெரியும்! தமிழ்நாட்டுக் கடவுள்களுக்குத் தமிழ் தெரியாது என்றல்லவோ அக்கடவுள் தலையில் கையடித்து உறுதி சொல்கின்றனர்! அதனால் வடமொழி மந்திரம் ஓதினார் பூசகர்.*

*தமிழன்பர், “வடவாடை வீசுகின்றதே” என்றார். “ஆமாம் வடைதான் படையலிட்டோம்” (நெய்வேத்தியம் செய்தோம்) என்றார் பூசகர்; வடவாடை (வடமொழி வாடை) ‘வட’, ‘வாடை’ யாவது நல்ல அதிரடி அன்றோ!*

ஓர் உணவு விடுதிக்குச் சென்ற ஒருவர் வடை வாங்கினார்; வடையைப் பிளந்தார்; பிளந்ததும், "ஊசி இருக்கிறது" என்று முகத்தைச் சுழித்தார். பக்கத்தில் இருந்தவர், "ஊசி மட்டுமா இருக்கிறது; நூலும் இருக்கிறது" என்றார். அடுத்திருந்தவர் வெளியே கையேந்திக் கொண்டிருந்த ஒருத்தியைக் காட்டித் 'தையலுக்கு ஆகும்' என்றார். ஊசியும் நூலும் இருந்தால் தையலுக்கு ஆகத்தானே செய்யும்! வடை பழையதானால் ஊசிப் போகும். ஆனால் தமிழ் இரட்டுறல் எவ்வளவு பழையதானாலும் ஊசிப் போகாது.

வடையுள் ஒன்று ஆமை வடை; அதன் அமைப்பைப் பார்த்தவர் ஆமையுடன் ஒப்புமை கண்டு பெயரிட்டனர். 'ஆம வடை' எனப்பட்டாலும் கூட அதன் உவமையை வெளிப்படுத்தி விடுகிறது.

வடையுள் இன்னொன்று 'தவல் வடை'. தவலுக்கும் அந்த வடைக்கும் தொடர்பில்லை. தவலைக்கும் கூடத் தொடர் பில்லை. அதன் வடிவமைப்பு 'தவளை' போலத் திருகி வளைந்து இருப்பதைக் கண்டவர் 'தவளை வடை' என்றார். தவளையே 'தவக்களையாக வடிவெடுக்க அதற்குத் 'தவக்களை (தவத்தின் அழகு) எனப் பொருள் விரிக்கவும் அமையும் போது தவளை வடை, தவல் வடை யாவது வியப்பில்லையே!

வடையுள் இன்னொன்று பக்கா வடை. பகு > பகுப்பு > பக்கு என்பவை பிதிர்த்து விடுதல், பிரிந்து விடுதல், பிளத்தல் ஆகிய பொருள்களில் வரும். பிசைந்த மாவை எடுத்துப் பிதிர்த்து விட்டு வேக வைத்த வடை 'பக்கு வடை' எனப்பட்டு, 'பக்கா வடையாம்', 'பக்கோடா', 'பகோடா' என வழங்குகின்றததாம்! 'பகோடா'' படோ' என ஆனாலும் வியப்பில்லையே!

'வடமொழி' என்பதை விளக்க வேண்டியதில்லை. அப்படியே 'தென்மொழி' என்பதையும் விளக்க வேண்டிய தில்லை. ஒருவர் 'வடு அல்லாத மொழி' வடமொழி என்று ஒரு கயிறு உருட்டுகிறார்; அவருக்கு, அவர்தம் பேராசிரியர் இந்த உருட்டும் வித்தையைக் காட்டினாராம்! இனி வடநாடு, வடவேங்கடம், வடபெண்ணை இவையெல்லாம் 'வடு அல்லாதவை' எனப் பூரிக்கலாம்.

தயிர் வடை, பருப்பு (சாம்பார்) வடை, மிளகு நீர் (இரச) வடை, கீரை வடை, வெந்தய வடை, மிளகு வடை, கற்கண்டு வடை எனப் பலப்பல வடைகள் வழக்கில் இருப்பவை. அவ்வப் பொருட் சேர்மானத்தை விளக்குதல் வெளிப்படை. ‘வடை’ என்னும் சொல்லைச் சிலர் ஆய்ந்தனர். அவர்கள் கண்ணில் ‘உளுந்து வடை’பட்டது. அவ்வடையின் ஊடே ஓட்டை இருப்பதைக் கண்டதும் “ஆ! ஆ! வடையின் கரணியம் கண்டு விட்டோம்” என்று மகிழ்ந்தனர். ஊடே ‘வடு’ இருப்பதால் (ஓட்டை இருப்பதால்) வடு உள்ளது வடையாயிற்று என்றனர்! வடு என்பதற்கு ஓட்டை அல்லது துளை என்னும் பொருள் அவர் கண்டுவிட்டதை வாளா விட்டுவிடலாமா? அகராதியிலேயே இணைத்துவிட வேண்டியதுதான்!

வடை என்பதன் பொருளை ஆராய்ந்து வெளியிட்டார் பாவாணர். வட்டையில் மாவை வைத்து வட்டமாகத் தட்டிப் போட்டு வேக வைப்பது தானே வடை! வட்டை என்பதன் இடையே இருந்த புள்ளி எழுத்து மறைந்துவிட ‘வடை’யாயிற்று என்பது அவர் கூறும் செய்தி.

உளுந்து வடை, ஆமை வடை ஆகியவை வட்டையில் வைத்துத் தட்டிப் போடுவதையும் வட்டமாக இருப்பதையும் பார்த்தால் தெளிவாகும்!

‘பெட்டை’ ‘பெடை’ என்று வழங்குகின்றதே! ‘பூண்டு’ என்பது ‘பூடு’ என்று வழங்குகின்றதே! இவற்றைக் கொண்டு ‘வட்டை’ ‘வடை’ யாவதைத் தெளியலாமே! வட்டை என்பது வடை என மாறியதற்குக் கரணியம் உண்டு. வண்டிக்கு வட்டைக் கட்டையுண்டு. உண்கலமாக வட்டை வட்டில் என்பவையுண்டு. கருப்புக் கட்டி வட்டு உண்டு! வட்டு எறிதல் ஆட்டமும் உண்டு! வட்டம் வட்டி ஆகியவை உண்டு! இன்னும் இதன் திரிபுகள் பல உண்டு! பொருளின் தெளிவுக்காகச் சொல் திரிபடைதல் என்னும் சொல்லியல் முறைப்படி ‘வட்டை’ ‘வடை’ என ஆயிற்றாம்.

இனித் தவளை வடையும், பக்கு வடையும் வட்டமாக இல்லையே; அவற்றை வடை என்னலாமா? என நினைக்கலாம்!

வடை போட்டு முடித்துக் குறைந்த அளவு மாவு இருக்கும் போது பிதிர்த்து விட்டும், எப்படியோ தட்டிப் போட்டும் வேக வைத்த வடைகளே ‘பக்கு வடை’ ‘தவளை வடை’ என

*அறிந்தார்க்கு அப்பெயர்ப் பொருத்தம் விளங்குவதே! பொழுதைச் சுருக்கி விரைந்து வேலையை முடிக்க வந்த வடைகள் இவை. ஆனால், பின்னர்த் தனிக்கொடி பிடித்துக் கொண்டு ஆட்சி நடத்துகின்றன.*

**வட்டம்:**

***வட்டம்:***[1]

*வட்டம் என்பது ஒரு வடிவப் பெயர். "வட்டம் சுற்றி வழியே போ" என்பது வழிநடைக்கும் வாழ்வு நடைக்கும் பொருந்திய பழமொழி. வட்டம் என்பதற்குரிய வடிவப் பொருள் விளங்க, 'வட்டமிடுதல்' என்னும் வழக்குத் தொடர் வழங்குகின்றது. 'பருந்து வட்டமிடுதல்' நாம் பாராததா? வட்டமிடுதலைக் கண்ட அளவில் கோழி தன் குஞ்சுகளைக் கூவி யழைத்துச் சிறகுக்குள் ஒடுக்கிக் காப்பது நாம் நோக்காததா?*

*இன்று இல்லையானாலும், நாம் என்றோ 'வட்டத்திரி' ஆடியிருப்போம். வட்டப்பாலை, வட்டணை என்பவை நம் பழங்கலைச் சொற்கள்.*

*வட்டத் தலைப்பா, வட்டத்தாமரை, வட்டத்துத்தி, வட்டச்சீட்டு, வட்டக்குடில் என்பவை வட்டத்தொடர்புப் பெயர்கள். வட்டாரம் என்பது சுற்றுப்புறமாக அல்லது சூழலாக அமைந்த நிலப்பகுதியைக் குறிப்பது. இந்நாளில் பெருவழக்காக உள்ள வட்டம், மாவட்டம் என்பவற்றின் முற்பட்ட வழக்குச் சொல். வட்டமரம் என்பது ஆலமரம் வட்டமாக விரிதலைக் கருதிய பெயர் அது. 'வடமரம்' என்பது இடைக்குறையாய் ஆலமரத்தைக் குறிப்பதே.*

*குளம், கேடயம், சக்கரம், திரிகை, கடல், நீர்ச்சால், பரிவேடம், கடகம், விசிறி முதலியவை வட்ட வடிவமுடை யவையாதலால் இவை 'வட்டம்' என்னும் பெயரால் வழங்கப் படுதலை அகர முதலிகளிலும், இலக்கியங்களிலும் காணலாம். மண்ணில் அமைக்கும் பீடத்திற்கும், விண்ணில் தோன்றும் பரிவேடத்திற்கும் வட்டப்பெயர் உண்மை, வடிவு கருதியதே. குழந்தை விளையாட்டுக் கருவியாம் கிலுகிலுப்பையும், வீரர் சுழற்றி யடிக்கும் கருவியாம் வளைதடியும் 'வட்டம்' எனப்படுவனவே.*

வட்டமாக வளைந்துள்ள நிலத்திற்கு வட்டகை என்பது பெயர். கறி வைக்கும் கிண்ணமும் சோறு வைக்கும் தட்டும் வட்டகைப் பெயர் பெறுதல் உண்டு. வட்டை என்பதும் அது. வடிவு நோக்கிச் சிறுவட்டை, பெருவட்டை எனவும் வழங்கும். வட்டை, 'வட்டா'எனத் திரிதல் தவறான வடிவாகும். வட்டத்தட்டு, வட்டக் கலங்களையே அது குறிக்கின்றது.

வட்டி என்பது கூடை, பூந்தட்டு, கடகம் என்பவற்றைக் குறிக்கும். வட்டில் என்பது வட்டவடிமான உண்கலம், கிண்ணம், கூடை கணைப்புட்டில் முதலியவற்றைக் குறிக்கும்.

வட்டித்தல் என்பது வளைந்து வருதல், திரும்பத் திரும்ப வருதல், சுற்றிச் சுழன்று வருதல், பரிமாறுதல் என்னும் பொருள் தருவது. 'வட்டி'யை - அதன் வரவை - வட்டித்தல் தெளிவாக விளக்குகிறது அல்லவா! 'முதலும் வட்டியும் வாங்குவேன்' என்பதற்குப் பதில் 'வட்டியும் முதலும் வாங்குவேன்'என்பது தெளிவாக்கி விடுகின்றதே.

'வட்டிவாசி'என்பது இணைச்சொல். இன்ன காலத்திற்கு இத்தொகைக்கு இவ்வளவு என்று பேசி வாங்குவது வட்டி; அது சில காலம் கொடுக்கப்படாமல் இருந்தால் அவ்வட்டிக்கு வட்டி போடுவது வழக்கம். அதனைக் குறிப்பதே 'வாசி'. வட்டியும்; வட்டிக்கு வட்டி வாங்குதலும் குறிப்பது 'வட்டிவாசி' என்க!

வட்டிகை என்பதும் கூடை, வட்டம் ஆகியவற்றைக் குறிக்கும். சூதாட்டத்தில் வைக்கும் பணையப் பொருளுக்கும் வட்டிகைப் பொருள் உண்டு.

வட்டு - வட்ட வடிவமான பல பொருள்களைக் குறிக்கும். கருப்புக் கட்டியை 'வட்டு'எனல் பெருவழக்கு. வட்டுக் கருப்புக் கட்டி எனல், சில்லுக் கருப்புக் கட்டி உள்ளமையால் வந்த ஒரு பெயர். கரும்பை ஆட்டிக் காய்ச்சிக் கட்டி எடுத்தலால், கருப்பட்டி என்பதும் (கரும்பு, அட்டி) கருப்புக் கட்டி என்பதும் தகவே. அதனை முன்னோர் 'அட்டு'என்றனர். 'பனாட்டு'(பனை அட்டு); 'கட்டி'என்றனர். வட்டு என்றும் வழங்கினர். 'வேம்பார் வட்டு''பெரிய வட்டு''சில்லு வட்டு''சிறுவட்டு' என்பன வெல்லாம் இடமும் வடிவும் குறித்து வருவன. சூதாடும் காய் 'வட்டுக்காய்'; அது வட்ட வடிவினது; அதனால் சூதாட்டப் பணம் 'வட்டிகை'ஆயது.

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்" - திருக். 411

என்றார் திருவள்ளுவர். வட்டுக்காய், உருளாயம் எனவும் சொல்லப்படும். அதன் வடிவு விளக்கப் பெயரே அது. சுற்றிச் சுற்றி வருதலால் 'சூழ்து' என்பதே இடைகெட்டுச் 'சூது' ஆயிற்று.

உருட்டித் திரட்டிச் செய்வதும், உருண்டு திரண்டதும் வட்டு எனப்படுதலாய் உருட்டித் திரட்டிக் கட்டும் உடை 'வட்டுடை' என்க! பண்டைப் போர் வீரர் உடை 'வட்டுடை' என வழங்கப்பட்டது. வட்ட வடிவில் அமைந்த கைப்பைக்கு 'வட்டுவம்' என்பது பெயர். வண்டிச் சக்கரத்தில் வளைவாய் அமைந்து பட்டைக்கு அகப்பட இருக்கும் கட்டைக்கு வட்டக் கட்டை என்பது பெயர்.

'வட்டம்' என்பதன் சுழற்சி, 'எத்தனை வட்டம் சொல்கிறது? எத்தனை வட்டம் கேட்கிறது? போன வட்டம் என்ன சொன்னாய்? என முறை அல்லது தடவை எனப்பொருள் தருவதாக வளர்ந்தது. வட்டம் 'வாட்டி'யும் ஆயிற்று. 'போனவாட்டி' என்பதில்லையா? வட்டு, 'வண்டு' ஆதலையும் காணலாம்.

**வட்டம்:[2]**

வட்டம் என்பது வட்டப்பொருள் தருதல் பொதுவழக்கு. அது வட்ட வடிவுடைய தோசைப் பொருளில் வழங்குதல் கண்டமனூர் வட்டார வழக்காகும். வடிவு நோக்கிய பெயர் அது. வட்டம் என்பது வட்டை என்னும் பொருளில் கருவூர் வட்டார வழக்காக உள்ளது.

**வட்டம் வளசல்:**

வட்டம் = தன் சுற்றத்தார் வீடுகள்.

வளசல் = தன் உறவினர் வீடுகள்.

முற்காலத்தில் பங்காளிகள் ஒரு வட்டமாகவும், அவர்கள் உறவினர்கள் அடுத்தடுத்து வட்டம் வட்டமாகவும் அமைந்திருக்க வாய்த்தது. ஆதலால், தம்மை அடுத்தாரை வட்டமாகவும், அவரை அடுத்திருப்பாரை வளசல் ஆகவும் கருதினர். நகர

*வாழ்க்கையில் வட்டம் வளசல்களுக்கு இடமில்லையாம். வட்டம் வட்டகை எனவும் வளசல் வளைவு எனவும் வழங்கும்.*

**வட்டி:**

***வட்டி:***[1]

*வட்டு + இ = வட்டி = வட்டை, மீள மீள வரும் தொகை, தட்டு.*

*வட்ட வடிவு அமைந்த தட்டம் வட்டி, வட்டை எனப்பட்டன. மீண்டும் மீண்டும் வட்டமிட்டு வரும் பறவை போல வரும் தொகை 'வட்டி' எனப்பட்டது. அடுத்தடுத்துப் பெய்யும் மழையை வட்டித்தல் என்பது இலக்கிய வழக்கு.*

*வட்டிகை என்பதும் வட்டப் பொருளதே. வட்டு, வட்டிகை, வட்டம், வண்டு என்பவை காண்க.*

***வட்டி:***[2]

*வட்டி என்பது முதற்பொருளுக்கு ஊதியமாகக் கிடைக்கும் தொகையைக் குறிப்பது பொதுவழக்கு. அது பெட்டி என்னும் பொருள் தருவது அகத்தீசுவர வட்டார வழக்காகும். முதற்கண் வட்டப் பெட்டியைக் குறித்து, பின்னர்ப் பெட்டி என்னும் பொதுப் பொருளுக்கு ஆகியிருக்கும்.*

**வட்டில்:**

*வட்டு + இல் = வட்டில். இல், சொல்லீறு.*

*வட்ட அமைப்புடையது; மாழையால் செய்யப்பட்டது வட்டில். உண்கல வகையுள் ஒன்று வட்டில். பொழுதுகாண் கருவி நாழிகை வட்டில்.*

**வட்டி வாசி:**

*வட்டி = குறித்த தொகையைக் குறித்த காலத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஈடாகத் தரும் தொகை வட்டி.*

*வாசி = வட்டித் தொகை அதற்குரிய கெடுவைத் தாண்டிக் கொடுக்கப்படுமானால் அத் தொகைக்குரிய வட்டித் தொகை வாசி.*

வாசி என்பது வட்டிக்கு வட்டியாம். கூட்டு வட்டியும் வாசியே. வட்டி பாவத்தொழிலாகக் கருதப்பட்ட காலநிலை யுண்டு. இன்று நாடே வட்டிக்கு வட்டி எனத் தவிக்கிறது. ஒவ்வொருவரும் நாட்டின் கடனாளிகளே! வட்டி தருவோரே!

**வட்டு:**

***வட்டு:[1]***

வட்டு என்பது கமலை வண்டி என்னும் பொருளில் உழவர் வழக்காக வழங்கும். நூல்குண்டு என்னும் பொருளில் கொத்தர் வழக்காக உள்ளது. கருப்புக் கட்டி வட்டு என்பது பொதுவழக்கு. குமரி மாவட்டத்தில் வட்டு என்பது மாத்திரை என்னும் பொருளில் வழங்குகின்றது. இதுவும் வடிவு கருதிய வழக்கே. கிறுக்கு என்னும் பொருளில் இரணியல் வட்டாரத்தில் வழங்குதல், சுற்றிச் சுற்றி வருதல் கருதியது.

***வட்டு:[2]***

வள் + து = வட்டு = வட்ட வடிவில் அமைந்தது, வட்டமாய் அமர்ந்து ஆடும் ஆட்டம். வள் என்பது வளைவு குறித்துவரும் அடிச்சொல்.

சூதுக்காயை வட்டு என்பதும், அதனைக் கொண்டு ஆடுதலை வட்டாடுதல் என்பதும் இலக்கிய வழக்கும் மக்கள் வழக்குமாம்.

"வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கி" - மணிமே. 16:7

**வட்டுடை:**

வட்டு + உடை = வட்டுடை.

வட்டமாகத் தோற்றுமாறு மடித்துக் கட்டிய உடை. வட்டு= வட்டம்.

"வட்டுடை எழுதுவரிக் கோலத்து" - மணிமே. 3:22

பொருள்: "வட்டுடை - முழந்தாள் அளவாக உடுக்கும் உடை விசேடம்" உ.வே.சா.

**வணக்கம்:**

***வணக்கம்:***[1]

*வணக்கம் என்பது வளைவுப் பொருளது. தாளை வணங்குதல் (திருக். 9) என்னும் இடத்தில் வளைவுப் பொருள் வெளிப்படத் தோன்றவில்லை. தலை தாழ்ந்து கை கூப்பி நிற்கும் நிலை வளைவாதல் தெளிவு. ஆனால் வணங்குதல் வளைவுப் பொருளது என்பதை,*

"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்" - திருக். 827

*என்பதில் வரும் சொல்வணக்கம் வில்வணக்கம் இரண்டும் நன்கு தெளிவிக்கின்றன. இது, வேர்வழிக் கலைச்சொல்லாகும்.*

***வணக்கம்:***[2]

*வணக்கப் பொருளமைந்த பாடல்களால் ஆகிய நூல்வகை வணக்கம் எனப்படுகின்றது. வணக்கம் இறைவனையும் இறைமை சார்ந்த அடியார், ஆசிரியர் ஆகியோரையும் முன்னிலைப் பொருளாகக் கொண்டு விளங்குகின்றது.*

*வணக்க நூல்களுள் முன்னோடியும் புகழ் மிக்கவையுமாக விளங்குவன மௌன குரு வணக்கம், பரசிவ வணக்கம் என்பன.*

**வணக்குதல்:**

*வணக்குதல் வாட்டுதல், உலரச் செய்தல் என்னும் பொருளது. வதக்குதல் என்பது அப்பொருள் தரும் மக்கள் வழக்குச் சொல். பொரியல் கறியை ஆக்கும் வகையை வணக்குதல் என்பது பழனி வட்டார வழக்கு. நீர்ப்பதன் சுண்ட வறட்டுதல் வணக்குதல் என்க.*

**வண்டவாளம்:**

*வண்டவாளம் = சூழ்ச்சிச் செயல்கள். வண்டு = வளைவு.*

*"உன் வண்டவாளத்தைத் தண்டவாளத்தில் ஏற்றுகிறேனா; இல்லையா பார்?" என்பது எரிச்சல் வெளிப்பாடு. இதில் வண்டவாளம் என்பது தகுதி இல்லாத செயல்கள். தண்ட*

வாளத்தில் ஏற்றல் என்பது ஊரறியப் பரப்புதல். தண்ட வாளத்தில் என்பது தொடர்வண்டியில் செய்தித்தாள் அனுப்புவது போல அனுப்புவதாம். இன்றும் அஞ்சல்கள் உள்நாட்டளவில் தொடர்வண்டியில் போதலே நடைமுறை. பேருந்து வாராக் காலத்தில் தொடர் வண்டி வழியாகவே செய்தித்தாள்கள் அனுப்பப்பட்டன. அந்நாளைய வழக்குச் சொல் ஈதாம். வண் - வண்ட என்பவை வளமான செய்திகள். இவை தகுதி கெட்ட செய்திகள். வாளம் = நெடுமை. வாலம் என்பதும் அதுவே.

**வண்டி:**

வண்டு + இ = வண்டி. வட்ட வடிவால் பெற்ற பெயர்.

வட்ட வடிவமைந்த உருளைகளின் வடிவப் பொதுப் பெயர் இது. வட்ட வடிவ ஆழி (சக்கரம்) உடைமையால் கட்டை வண்டி, மிதிவண்டி, உந்துவண்டி, தொடர்வண்டி எனப்பெயர் பெற்றது. கம்மாலை எனப்படும் ஏற்றத்திற்கு வண்டியுண்டு. வண்டியளவு என்பது நிரம்ப என்னும் பொருளது. "வண்டிக் கணக்கான நூல்கள்" என்பார் வள்ளலார்.

**வண்டு:**

காட்டு வேலைக்குக் கஞ்சி கொண்டு போவர், அக்கலயத் திற்கு வண்டு கட்டிச் செல்வது வழக்கம். கலயத்தின் வாயை ஒரு துணியால் மூடிபோல் வளைத்துக் கட்டுதலே, வண்டு கட்டுதலாகும். இனிப்போ, நெய்யோ, எண்ணெயோ கலத்தில் இருந்தால், எறும்போ ஈயோ போய்விடாமல் இருக்க வண்டு கட்டி வைத்தல் நாட்டுப்புற வழக்கே.

தலையில் சுமை வைத்துச் செல்பவர் சுமை தலையில் அழுத்தாமல் இருப்பதற்குச் சுமையடை வைப்பது கண்கூடு. துணியைப் புரிபோல் சுருட்டி வட்டமாக்கும் அதனை 'வண்டு' என்பதும் உண்டு. அவ்வாறே, வைக்கோலைக் கட்டுவதற்கு விடப்படும் புரியை வட்டமாய் உருட்டித் திரட்டி வைக்கும் பந்துக்கு 'வண்டு' என்னும் பெயரும் உண்டு. தண்ணீர்ப்பானை முதலியவற்றிற்கு அணையாக வைக்கப்படும் புரிமணையை வண்டு என வழங்குதலும் உண்டு. இவையெல்லாம் 'வண்டு' என்பதன் வளைவு வடிவச் சான்றுகள்.

பூக்கள்தோறும் வளைந்தும் சுழன்றும் சுற்றியும் சூழ்ந்தும் வரும் தேனீ முதலிய பூச்சிகளை 'வண்டு'என்பது அவற்றின் வளைவியல் கொண்டேயாம். மகளிர் அணியாம் வளையலை 'வண்டு'எனல் இலக்கியப் பேராட்சி.வளைவுடையதும் வளையல் செய்தற்குப் பயன்படுவதுமாம் சங்கு, 'வண்டு'என்றும் வழங்கப்படும்.

மகளிர் விளையாடும் விளையாடல்களுள் ஒன்று, 'வண்டல் இழைத்தல்'என்பது. அவர்கள் சிறுவீடு கட்டிச் சிறுபாவை செய்து விளையாடும் விளையாட்டே வண்டல் இழைத்தலாம். ஆற்றில் உருட்டியும் சுருட்டியும் கொண்டு வரப்பட்டுத் திட்டாக ஒதுங்கும் மண் 'வண்டல்'; அவ் வண்டல் கொண்டு செய்யப்படுவது வண்டற் பாவை! இந்நாளிலும் களிமண்ணால் பானை சட்டி குடம் முதலிய கலங்கள் வனைதலும் காணக் கூடியனவே. இவ் வண்டல்மண்ணும் வண்டல் பாவை வடிவும், வண்டல் இழைத்தல் ஆட்டமும் வளைவு தந்த வளமேயாம். வண்டல் மண், 'வண்டலம்'எனப்படுதலும் இலக்கிய ஆட்சி.

வட்டு, வட்டி, வட்டை என்பன வளை வடிவாக வந்தது போல், வண்டி, வண்டில், வண்டை முதலியனவும் வழி வழி வந்த சொற்களே!

வண்டி என்பது 'சக்கரம்'(ஆழி, உருளை) ஆகும். அச்சக்கரமே வண்டியின் கால்! அதன் உருளலே வண்டிச் செலவு. ஆதலால், சக்கரம் என்னும் பொருள்தரும் வண்டி என்பதே கட்டை வண்டி, உந்து வண்டி, தொடர்வண்டி என்பனவற்றில் வரும் வண்டிப் பொருள் மூலம்.

சக்கரத்தைக் கண்டுபிடித்த கண்டு பிடிப்பே, மாந்தன் போக்கு வரவு வளர்ச்சிச் சிறப்புக்கெல்லாம் தொடக்கம்! அச் சக்கரமே, உழவர் தொழிலுக்கும் அடிப்படை, கமலை வண்டி, உருளை, கட்டைவண்டி என்பன இல்லாமல் உழவர் தொழில் நடைபெறுமா? முழுமையும் மாறிப் பொறியாக வளர்ந்து விட்டாலும் உழுபொறி, இறைவைப் பொறி, இழுவைப் பொறி இன்னவெல்லாம் வண்டியில்லாமல் நடப்பனவா? ஓடுவனவா? குழந்தையின் வண்டி ஆனால் என்ன? வண்டி இல்லையேல் இயக்கமில்லையே! 'வண்டில்'எனினும் வண்டிப் பொருளே தரும்.

'விட்டில்'என்பது 'விட்டி'என்பது போல்! வண்டு இல்; இல் சொல்லீறு. ஒ.நோ.: வட்டில் - வட்டி.

வண்டை என்பது வளைவு வடிவச்செடி யொன்றின் பெயர். வண்டை என்பது ஊர்ப் பெயராகவும் வழங்கும். "வண்டை வளம்பதி", "வண்டையர் கோன் தொண்டைமான்"என்பவை கலிங்கத்துப் பரணி. வண்டை என்பதன் விரி வண்டலூர் என்பது. சென்னை திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை - தொடர் வண்டிச் சாலை வழியில் உள்ளதோர் ஊர். வண்டல் வழியாகப் பெற்ற பெயர் இது. இன்றும் வண்டியூர், வண்டிப்பாளையம், வண்டிப் பாக்கம் முதலியனவும் வண்டி வழி வந்த ஊர்ப் பெயர்களே!

வண்டியின் வளைவு, வணக்கத்திற்கும் உதவியது. வணக்கல் என்பது வளைத்தல் பொருளது. 'வளையாத் தலை வணங்காமுடி' முன்னே 'வணங்காமுடி' என்பது மன்னர் சிறப்பு. சீப்புக்குப் படியாத் தலை, இந்நாள் வணங்காமுடிச் சிறப்பு.

'வணர்தல்'என்பதும் வளைவே. யாழின் வளைவு எவரறியார்? அதன் கோட்டை 'வணர்கோடு'என்பர்.

கொடிபோல் இடையொடு தழுவி. ஓராடல் மகள் யாழை எடுத்துச் செல்கிறாள். அதன் வனப்பை, "வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ"என்றார் மோசிகீரனார் என்னும் சங்கப் புலவர் (புறம். 155). வட்டி, வண்டிகளில் உள்ள வளைவு, 'வளை' வில் இல்லாமலா போய்விடும்?

வள் என்னும் வேரில் இருந்து 'வட்டு''வண்டு'என்பன தோன்றி வளைவுப் பொருள் தந்ததை அறிந்தோம். 'வளை' என்பதன் வழியாக வரும் சொற்களில் வளைவுப் பொருள் உண்மை மிக வெளிப்படை.

வள் > வளை; வளைவமைந்தது 'வளை'எனப்படுகிறது. கைவளை, கால்வளை, விரல்வளை என்பன காப்பு, ஆழி (மோதிரம், கங்கணம், கடகம்) என்பவற்றைக் குறிப்பன.

எலியின் குடியிருப்பு, நண்டின் பொந்து ஆகியவை வளை எனப்படும். நுழைவிடத்தில் இருந்து நேரே செல்லாமல் வளைந்து வளைந்து செல்வதால் உண்டாகிய பெயர் அது. எலிவளை, நண்டுவளை என்பன பெருவழக்கு. "எலிவளை ஆனாலும் தனிவளை"என்பதொரு பழமொழி. இவ்வளை 'சின்னஞ் சிறு

வீடு' என்னும் பொருளது. எலிவளை போலச் சிறியதாக இருந்தால் கூடத் தனக்கெனத் தனிவீடாக இருக்க வேண்டும் என்னும் கருத்தினது.

மூங்கில், எப்படி வளைக்கவும் வாய்ந்தது; வளையவும் கூடியது; அதனால் அதற்கு 'வளை' என்பதும் பெயராயிற்று. "வளைக்க வளைகின்ற வேய் (மூங்கில்) மன்னர் மாமுடியின் மேலாம்; வளையாத வேய் கூத்தர் கால் மிதிபடக் கீழாம்" என்னும் பாடல் அறிந்ததே.

மூங்கில் கழிகளையே, கூரைவீட்டுச் சுவர்ச்சரமாக அமைத்தனர்; ஊடும் முகடும் கொண்டனர். அதனால், அம்மூங்கில் பெயராகிய 'வளை' என்பது அவற்றுக்கு அமைந்துவிட்டது. இப்பொழுது, எந்த மரத்தைச் சரமாக அமைத்தாலும் அவ் 'வளை' என்னும் பெயரே நின்றுவிட்டது.

வளை என்பதற்குச் சக்கரம் என்னும் பொருள் உண்டு. ஆழிப்படை (சக்கராயுதம்) என்பதும் அது. வளை என்பது படைக்கருவியாதல். 'வளை எறிந்த திருவிளையாட' லால் விளங்கும்.

சங்கு வளைவுடையது. அதனால் வளை என்பது சங்கைக் குறித்தது. சங்கு வளையலும் வளையே; புற்றுக்கும் வளை என்பதொரு பெயர். எலிவளை, நண்டு வளை என்பவற்றின் பின் வளர்ச்சியாக எழுந்தது அது. வளைக்க என்னும் ஏவலும் 'வளை' யாதல் அறிக; வளைந்துள்ள அகழுக்கு ஒரு பெயர் வளை என்பதாம். வளை போழ்தல் சங்கறுத்தல்.

வளைவு, வளைதல், வளைசல் (வளசல்) வளைப்பு; வளையம், வளையல், வளைகுடா, வளைமணி; வளைவிற் பொறி, வளைதடி, வளைகம் (தூண்டில்), வளைதல் (கோணல்), வளையாபதி இன்னவை எல்லாம் 'வளை' தல் வழி வந்த சொற்பெருக்கங்கள். 'வளைகாப்பு' ஒரு மங்கலச் சடங்காக ஊன்றியமை பெருவழக்காறு.

வளைவு என்பதற்குப் பணிவு, வணக்கம் என்னும் பொருள்கள் உண்டாதல் வளைந்து நிற்றலும் குனிதலும் பற்றி வந்தவை. வளையும் இயல்புடைய 'நாணல்' என்பதன் பெயர், முகம் கவிழ்ந்து நாணி நிற்கும் தன்மைக்கும் - நாணத்திற்கும் -

பெயராதல் அறிக. அவ்வாறே, வில்லின் இரு நுனைகளையும் வளைத்து இறுக்கும் கயிற்றுக்கு நாண் என்னும் பெயராதலும், இடுப்பைச் சுற்றிக் கட்டும் கயிற்றை அரைஞாண் என்றும், அரைநாண் என்றும் வழங்குதலும் ஒப்பிட்டறிக!

வளைதல் சுற்றிச் சுழலுதலுக்கும் நீர் வளைந்து நீத்தடித்தலுக்கும் பகையை வளைத்துக் கொள்ளலுக்கும் வளைதலுக்கும் ஆதல் காணக் கூடியவே. வீட்டைச் சுற்றியுள்ள ஒரு குடி, சுற்றமும் சூழலும் வளைசல் என்பதும், வீட்டைச் சுற்றிக் கட்டிய வேலி, வளைவு, வளைசல், வளைப்பு எனப்படுதலும் நடைமுறையில் உள்ளவை. வளைகுடா, விரிகுடாவுக்கு எதிரிடை, கடல்நீர் குடைந்து சென்ற நிலப்பகுதி வளைகுடா. விரி பகுதி, விரிகுடா, வங்காள விரிகுடா என்பது பெருவழக்கு. வளைதடி என்பதும் வளரி என்பதும் வளைகோல் என்பதும் ஒன்றே! வளைவாகச் சென்று தாக்கும் தன்மையது அது. வளைவிற் பொறியைச் சிலம்பு குறிக்கின்றது. அது மதிலகத் தமைந்த பொறிகளுள் ஒன்று (சிலப்.15:207).

வளைப்பு என்பதும் மதிலையும், காவலையும், வளைத்துத் தடுத்தலையும் குறிக்கும். சூழ்ந்து கொண்டிருத்தலும் வளைப்பேயாம். வளையம் என்பது வட்ட வடிவமைப்பைக் குறிப்பதுடன் எல்லை, குளம், வட்டம், வளையல் என்பவற்றையும் குறிக்கும்.

வளைசல் (வளசல்) என்பது இடத்தைக் குறிப்பதுடன் உற்றார் உறவுப் பொருளும் தரும். "எங்கள் வளைசலில் அப்படி எல்லாம் நடவாது" எங்கள் வளைசல்காரரெல்லாம் ஒன்று சொன்னால் சொன்னதுதான்" என்பவை வளைசல் பெருமை.

கடல் சூழ்ந்த நிலப்பகுதியை 'வளாகம்' எனல் பண்டை வழக்கு. "தெண்கடல் வளாகம்" என்பது புறநானூறு (189). வளாகம் என்பது மடவார் வளாகம் (மடார் வளாகம்) என ஊர்ப்பகுதிப் பெயராக வழங்கி வருகின்றது. எ-டு: திருவில்லிபுத்தூர், மடவார் வளாகம். இதுகால் 'வளாகம்' என்பது வீட்டுச் சுற்றுச்சுவர்க்கு வழக்காகி நிற்கின்றது.

காற்று என்னும் பொருள்தரும் சொல் 'வளி' என்பது வளைந்து எழுதலால் அமைந்த பொருட்பெயர் அது. சூறாவளி சூறைவளி என்பதும், சூறாவளிக் காற்று என்பதும் அறிக! "வளி

திரி தரு திசை" என்பது புறப்பாடல் (30). இலக்கண விளக்கச் சூறாவளி என்பது சிவஞான முனிவர் இயற்றிய இலக்கண விளக்க மறுப்பு அல்லது கண்டன நூல்.

வளாவுதல் என்பது வெந்நீரில் தண்ணீர் விட்டு அளவாகக் கலத்தலைக் குறிக்கும். 'வளாகம்'' வளா' என்னும் அளவில் நிற்றல் 'குளவளா' என்னும் குறளால் விளங்கும் (523) வளையின் வளைவு இவ்வளவுதானா? தொகுக்கத் தொகுக்க விரிவதைத் தொகுப்ப தெப்படி?

**வண்ணங் கொடுத்தல்:**

வண்ணங் கொடுத்தல் = பொய்யை மெய்யாக்கல்.

பூசுதல் போல்வது வண்ணங் கொடுத்தல். வண்ணங் குலைந்த பொருள்களை வண்ணமேற்றிப் புதிதுபோல் காட்டி ஏமாற்றி வருதல் இந்நாளில் பெருக்கமாம். வண்ணங் கொடுத்தலால் நல்ல எண்ணங் கொடுத்து ஏமாறச் செய்வது ஒரு கலைத் தொழிலாகவே போகிவிட்டது. அது குற்றச் செயல் என்னும் எண்ணமே இல்லாத நிலையில் பெருக்கத்தை அன்றிச் சுருக்கத்தை அடையாதே. புலவர் வண்ணங் கொடுக்கும் வண்ணிப்பு பொழுது போக்காக அமையும். இவ்வண்ணங் கொடுப்பு, பொருள் போக்காக மட்டுமா அமைகின்றது? உயிர்ப்போக்காகவும் கூட அமைந்து விடல் உண்டு. வண்ணங் கொடுத்தல் 'பாலீசு செய்தல்' என்னும் ஆங்கில வழிப்பட்டதாம்.

**வண்ணமும் எண்ணமும்:**

'வண்ணம்' பாடுதலில் சிறந்த ஒருவர் வண்ணச் சரபம் என வழங்கப்பட்டார். அவர் தண்டபாணி அடிகள் இன்னொரு புலவர் 'வண்ணக்களஞ்சியம்' என வழங்கப்பட்டார்.

இவர்கள் கடந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். வண்ணம் பாடுதலில் இணையற்று விளங்கிய ஒருவர் அருணகிரியார். அவர் நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

கம்பர் பாடிய வண்ணம் தொண்ணூற்றாறு என்பர். வண்ணத்தின் தனிச்சிறப்பு ஒலியொப்பு; மற்றொன்று அளவொப்பு.

*வண்ணத்தின் வரவு இவர்கள் காலத்தது அன்று! யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் ஆகியவை காலத்ததன்று; தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்ட வரவினது.*

*தொல்காப்பியர் தமிழ் வண்ணங்களை இருபதெனத் தெளிவாக வகுத்துக் காட்டி இலக்கணமும் தந்தார். அவர்க்கு முற்படவே அவ்வண்ணம் உண்டு என்பதையும் செவ்வண்ணம் சுட்டினார். அவ்வண்ணங்களுள் இரண்டு; வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்பன.*

*வல்லெழுத்து மெல்லெழுத்து என்பன உயிர் மெய் யெழுத்தை அல்லவாம். மெய்யெழுத்தை அல்லது ஒற்றெழுத்தை என்க!*

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"

*இப்பாடல் முப்பாலில் மூன்றாம் பாலின் முதற்பாடல். தலைவியைக் கண்ட தலைவன் ஐயுற்று எண்ணுகின்ற மயக்க மனநிலை. அதற்கு ஏற்ப மூன்று இடைவெளியாக மூன்றசை நிலைகள் (கொல்) வல்லொற்று ஒன்றும் வாராமையுடன் மெல்லொற்று மிகவுடைமை; அணங்கு; கணங்குழை; என்; நெஞ்சு.*

*இப்பாடலுக்கு அடுத்தது, அவன் பார்த்தான்; அவளும் பார்த்தாள்! இருவரும் பார்த்த பார்வை போராட்டமாயின. போராட்டத் தாக்குதல் பாட்டின் எழுத்திலேயே படிந்து கிடக்கப் படிப்பர் அறியப் பாடுகிறார் வள்ளுவர் (1082).*

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைகொண் டன்ன துடைத்து"

*எத்தனை வல்லொற்று; மூன்று நோக்கு; ஒரு தாக்கு; ஓர் உடைத்து.*

*முதற்பாடலுக்கும் அடுத்த பாடலுக்கும் ஏன் இந்த ஒலி வேறுபாடு? எண்ண வேறுபாடு என்பதை வண்ண வேறுபாடாகக் காட்டுகிற உத்தியன்றோ இது!*

*பொருளறிந்து - உணர்வறிந்து - சொல்லின் ஒலி வடிவு காட்டுதல் தேர்ந்த புலவர்க் கெல்லாம் நேர்ந்த வழக்கு. ஆனால் பொதுமக்கள் வழக்கு? புலவர் வழக்குக்குக் கொடைஞர்*

பொதுமக்கள் என்பதை எண்ணுவார் எவரும் திண்ணமாய் அறிவர். நாட்டுப் பாடல்களிலே காணமுடியா உணர்வும் சுவையுமோ ஏட்டுப் புலவர்களிடம் இருந்தன!

பாட்டிலே வண்ணமென்ன வண்ணம்? முறையுரிமைப் பெயரிலேயே வண்ணம் காட்டி வனப்புத் தீட்டியதைப் பெற்றோர் பெயரே காட்டி நிற்கின்றனவே!

'அம்மை' 'அம்மா' 'அம்மே' 'அம்மோ' என்பவை இயல்வடிவும் விளிவடிவுமாய் வழங்கும் தாயின் பெயர். ஈதொன்றுதானா?

'அன்னை' 'அன்னா' 'அன்னே' 'அன்னோ' ' அஞ்ஞை' 'அ ஞ்ஞா' 'அஞ்ஞே' 'அஞ்ஞோ' என்பனவும் தாய்க்குரிய இயல் வடிவும், விளி வடிவுமாக வழங்கும் பெயர்கள். 'அஞ்ஞை' இந்நாள் வழக்கென எண்ணம் வருகிறதா? "அஞ்ஞை நீ ஏங்கி அழல்" என்பது சிலப்பதிகாரம் (9:24).

தந்தைக்கு வழங்கும் பெயர்கள்; 'அப்பன்' 'அப்பா' 'அப்பே' 'அப்போ' 'அச்சன்' 'அச்சா' 'அச்சே' 'அச்சோ' 'அத்தன்' 'அத்தா' 'அத்தே' அத்தோ' இவை தந்தைக்கு இயல்வடிவும் விளிவடிவுமாய் வழங்கும் பெயர்கள். இப் பெயர்களுள் சில அருகிய வழக்கின. இலக்கிய ஆட்சியில் மட்டும் உள்ளனவும் உள. ஆயின், நம் ஆய்வுக்கு அருகிய வழக்கும் பெருகிய வழக்கும் தடையாவதில்லை. 'அச்சன்..... அச்சோ' தமிழ் வழக்கா என ஐயமா? மாணிக்கவாசகர் அச்சோப் பதிகம் சான்றில்லையா?

முன்னவை மூன்றும் அம்மையைப் பற்றியவை; மெல்லினத்தியல்பவை. பின்னவை மூன்றும் அப்பனைப் பற்றியவை; வல்லினத்தியல்பவை. அம்மை அப்பனை இப்படித் திட்டமிட்டு வைத்தாற் போல் மெல்லினமாகவும், வல்லினமாக வும் அமைப்பானேன்? பெண்மை ஆண்மை இயல்களை ஒலியலகால் - வண்ண வகையால் - சொல்ல எண்ணம் கிளர்ந்த தெனலாமோ?

முறைப்பெயர், முறைப்பெயர் விரிவு ஆகியவற்றில் சுட்டப்பட்டவைதாமே இவை! முறைப்பெயரை இவ்வாறு விரித்துக் காட்டுவானேன்? முறைப்பெயரே ஓரினத்தின்

உயிர்நிலை, ஒழுங்குநிலை, வாழ்வியல் நிலை, வளநிலைப் பெயர்கள்! அவற்றை இழந்து நிற்கும் தமிழக நிலைகருதிப் பன்னப்படுகின்றதாம்.

**வண்ணம்:**

**வண்ணம்:[1]**

வள் > வண் + அம் = வண்ணம். வள் = வளம்.

**ஒ.நோ.:**

தெள் > தெண் + நீர் = தெண்ணீர்; எள் > எண் + நெய் = எண்ணெய்.

இயற்கை வளமாம், இலை, பட்டை,, வேர்,, காய், பூ முதலியவற்றால் அமைந்தவை வண்ணங்களாம். வெண்மை, பச்சை, நீலம், மஞ்சள், கருமை, சிவப்பு, இளஞ்சிவப்பு, இளம்பச்சை, இளநீலம், இளமஞ்சள், வெளிர்கருமை, அடர்பச்சை, அடர்மஞ்சள், அடர்கருமை, கருநீலம் என்பவை இயற்கை வண்ணங்கள்தாமே! ஒன்றை ஒன்றொடு கலக்கப் புதுப்புது வண்ணங்கள் கிட்டுகின்றன அல்லவா!

**வண்ணம்:[2]**

வண்ணமாவது வண்ணித்துப் பாடப்படும் பாடல். அஃது இசைப்பாடல். வண்ணம் தொல்காப்பியனாரால் சுட்டப் படுகிறது. அதன் வகைகளும் பாஅ வண்ணம், தாஅ வண்ணம் என எண்ணப்படுகின்றது.

ஒலிநயம் கருதிய அமைப்பு வண்ணம் என்பது வெளிப்படத் திகழ்கின்றது. கலிப்பாவின் உறுப்பான 'வண்ணகமும்' இவ்வகைப்பட்டதே. கம்பர் பாடல்களிலும் வண்ணம் உண்டு. கம்பன் பாடிய வண்ணம் 96 என்பதொரு வழக்கு.

ஆயிரத்துக்கு மேலும் வண்ணம் இசைத்த வளமார்ந்த பாவலர் அருணகிரியார். அவர்க்கு முன்னே வண்ண இசையில் கொடி கட்டிப் பறந்தவர் ஆளுடைய பிள்ளையாராம் தமிழ் ஞானசம்பந்தர்; பின்னே வண்ண இசையில் பேருலாப் போந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்; பட்டினத்தாரின் உடற்கூற்று வண்ணம் நாடறிந்தது.

*இசுலாமியப் புலவர்கள் சிலரும் வண்ணம் பாடுதலில் இணையற்றுத் திகழ்ந்தனர் என்பதற்குச் சான்று பாட்சாப் புலவர் இயற்றிய 'வண்ணங்கள்', 'வண்ணக்குழிப்புகள்' என்னும் நூல்.*

*அகப்பொருள் நுவல்வதாய் எழுந்த வண்ணம், மெய்ப் பொருள் கிளப்பதாகவும் திகழும். சில வண்ணங்களின் சந்தச் சுவைக்கு ஒவ்வாப் பொருளிழிவு அதன் பெருமையைக் குன்றச் செய்து விடுவதாகவும் உள்ளது.*

***வண்ணம்:[3]***

*ஒருவர் உடல் பருத்துத் தோற்றப் பொலிவு அடைதலை வண்ணம் என்பது விளவங்கோடு வட்டார வழக்காகும். கோட்டுப் படத்திற்கும் வண்ணந்தீட்டிய படத்திற்கும் உள்ள நிலையை ஒப்பிட்டுக் காணலாம்.*

"புனையா ஓவியம்" என்பார் சாத்தனார் (மணிமே. 16:131).

**வண்ணவிருத்தம்:**

*ஓரடிக்குப் பதினாறு கலை வகுத்து, இப்படி நாலடிக்கும் அறுபத்து நாலு கலை வகுத்து, வண்ண விருத்தமாகப் பாடப்படுவது வண்ண விருத்தம் (நவநீத. 31).*

"எட்டுக் கலையாய் இடையிட் டெதுகையாக்
கட்டுக் கலைக்குமுக் கண்ணியாத் - திட்டத்தில்
தொங்கலும் எட்டாய்த் தொடைமூன்று நான்காறாய்ப்
பங்குபெறும் வண்ணப் பரப்பு"

- இலக்கண சூடாமணி- நவநீத. 31 மேற்

**வண்மை:**

***வண்மை:[1]***

*அழகு.*

*பல்வகை வண்ணங்களும் கெழுமிய தன்மை வண்மையாம். வண்ணத்தின் வனப்புக் கொஞ்சுவதால்தானே, உடுக்கும் உடைகளில் எண்ணரிய வண்ணங்கள். வண்ணப் பூக்களைத் தேடி ஈக்களே மொய்க்குமானால் மாந்தரைச் சுட்டுவானேன்? விளம்பர உத்திகள் வண்ண உத்திகளாகப் பளிச்சிடுகின்றன அல்லவோ!*

**வண்மை:**[2]

*வண்மை = கொடை. வளமைத் தன்மையாம் கொடையும் பாடுபுகழால் அழகுறல் புறப்பாடலில் காண்க.*

"முன்ன முகத்தின் உணர்ந்தவர்
இன்மை தீர்க்கும் வண்மை யானே" - புறம். 3

**வதி:**

*வதி = சேற்றுவழி.*

*மக்கள் நடக்கும் பாதையில் சேறும் சகதியுமாய்க் கிடக்கும் வழி 'வதி' எனப்படும். அந்த வழி, வதியாகக் கிடக்கிறது. இந்த வழியில் போ என்பது குமுளூர் (இலால்குடி வட்டம்) வழக்கு. கால் > வதி.*

**வதியழிதல்:**

*பொருள்களின் விளைவோ, உருவாக்கமோ மிகுமானால் விலை சம்பல் (குறைதல்) ஆகிவிடும். அதனால் பொருளைக் குறைந்த விலையில் வாங்குவதுடன், மிக நல்லதாகப் பார்த்தே வாங்குவது வழக்கம். அந்நிலையில் குறையுடையவை அங்கும் இங்கும் கொட்டப்பட்டுக் கிடக்கும். வதியழிதல், வழியில் - நடையில் - கிடந்து மிதிபடுதலாகும். பொருள் மிகுதி காட்டும் இச்சொல் தென்தமிழக வழக்குச் சொல்லாகும்.*

**வதியும் சேறும்:**

*வதி = வழியிலும் வாழ்விடங்களிலும் பட்ட சேறு.*

*சேறு = நிலங்களில் நீரோடு கலந்து கட்டியாக இருக்கும் மண்.*

*வதி = சேற்று வழி; வதிவிடம். நிலத்துச் சேறு நீரோடு கலந்த அளவில் இருக்கும். வதிச்சேறோ ஊரவரும் ஆடும் மாடும் மிதித்து மிதித்துக் கூழும் குழம்புமாய்க் கிடக்கும்.*

** 'வதியழிதல்' காண்க.*

**வதுவை:**

வதிவு > வதுவை.

தனித்தனி வெவ்வேறு இடங்களில் பிறந்து ஒருமித்த உள்ளமுடையவராகிய காதலன் காதலியர், ஓரிற்பட்டு வாழ்தற்குச் செய்யப்படும் சடங்கு வதுவையாகும். ஒருங்கு வதியக் குமுகாயம் வழங்கும் ஒப்புகையே திருமணம் என்பதை விளக்கும் சொல் வதுவையாகும்.

“மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளி ரன்ன துணையொடு வதியும்” - ஐங். 94

“நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிக” - ஐங். 399

**வத்தல் வதக்கல்:**

வத்தல் (வற்றல்)= வற்றி உலர்ந்து போனது.

வதக்கல்= சற்றே வற்றி சற்றே ஈரப்பதம் உடையது.

உலரப் போட்ட மிளகாய் வற்றல் நன்றாக உலர்ந்தும் உலராமலும் இருந்தால் ‘வத்தலும் வதக்கலுமாக’ இருக்கின்ற தென்பர்.

நீர்ப்பதன் முழுவதும் போக்காமல் ஓரளவு போக்குதலை ‘வதக்குதல்’ என்பது வழக்கம். ஈர உள்ளி அல்லது ஈர வெண்காயம் வதக்குதல் அறிக. மொறுமொறுப்பின்றி ஈரப் பதனுடையதைத் தின்பார் ‘வதக்கு வதக்கு’ என்றிருப்பதாகக் கூறுவதும் எண்ணத்தக்கது.

**வத்தை:**

வத்தை = சிறுபடகு.

வத்தை என்பது பரதவர் (மீனவர்) வழக்குச் சொல். மிதவை வகையுள் ஒன்று அது. வற்றிக் காய்ந்த வற்றல் வத்தல் என வழங்கப்படுவது போல, உலர்ந்த கட்டைகளை இணைத்து மிதவையாகச் செய்யப்பட்டது வத்தை எனப்பெயர் கொண்டு, பின்னர் மிதவை என்னும் பொருளில் படகுக்கு ஆகியிருக்கும்.

**வந்தட்டி:**

*வந்து + அட்டி = வந்தட்டி.*

*எங்கிருந்தோ வந்து புகலற்று நெருங்கி இருப்பவன். "அவன் வந்தட்டி ஆள்; எங்கே போவான்? ஏன் அவனை வெருட்டு கிறாய்?" என்பது மக்கள் வழக்கு.*

**வந்தேறி:**

*வந்தேறி = அயல் நாட்டில் இருந்து வந்தவர்.*

*வந்து ஏறுபவர் வந்தேறி எனப்படுவர். வருதல் நாடு தாண்டி நாடு வருதல். ஒரு நாட்டார் மற்றொரு நாட்டிற்கு உரிமை பெறாமல் வருவதும், வந்து நிலைமக்களாகத் தங்கி விடுவதும் 'வந்தேறி' எனப்படுகின்றதாம். நிலைமக்களாக இருப்பவரையும் வந்தேறிகளாக அலைமக்கள் ஆக்கிவிடுவர் என்பதற்கு ஈழ நாட்டு நிலை எடுத்துக்காட்டாம். வந்தேறிகள் நிலைமக்கள் ஆவதற்கு அமெரிக்க, ஆப்பிரிக்க, ஆத்திரேலிய நாட்டு ஆட்சியுடையாளர் சான்றாவர். வருதல் இருத்தல் ஆகியது. வந்தேறுதல் எனப்படுவது குடியேறுதல், குடியேற்றம் போன்ற வழக்காம். "வந்தவள் வலுத்தாள்; இருந்தவள் கெட்டாள்" என்பது பழமொழி.*

**வம்பு:**

*வாராத ஒன்று வந்தது போல் தோன்றும் தோற்றம். வம்பு ஆகும். வந்தது போல் காட்டி ஏமாற்றுதல் கொடுமை - வன்பு - ஆதலால் வன்பு > வம்பு என அதன் பொருள் விளக்கம் காட்ட இனம்மாறி நின்றது (னகரம் மகரமாகியது).*

"வம்பு விரிகளத்திற் கவின்பெறப் பொலிந்த" - குறிஞ். 198

"வம்புப் பெய்யுமால் மழையே; வம்பன்று
வாரா ரோநம் காத லோரே" - குறுந். 382

**வம்மை வழமை:**

*வம்மை (வண்மை)= கொடை.*

*வழமை= வழக்கம்.*

வழிவழியாகக் கொடுத்து வந்த கொடைமுறை 'வம்மை' என்பதாம். உழவர் குடியில் இவரிவர்க்கு இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன செய்ய வேண்டும் என்னும் கொடை முறையும், வழக்கமுறையும் உண்டு. அது வம்மை வழமை எனப்படும். மங்கலம், அல் மங்கலம், பூப்பு, புதுமனை என நிகழ்வுகள் வருங்கால் 'வம்மை வழமைகள்' முந்து நிற்கக் காணலாம்.

**வயக்குதல்:**

வயக்குதல் = வயமாக்குதல் = விளங்குதல். வயக்குதல் > வசக்குதல் (ம.வ.).

"வயக்குறு மண்டிலம்" - கலி. 25

"மாட்டை வேலைக்கு வயக்க - வசக்க - வேண்டும்" ம.வ. விளங்குதல், வேலையை விளங்கச் செய்யும் வகையில் பழக்குதல்.

**வயங்குதல்:**

வயங்குதல் = விளங்குதல். வயப்படுத்துதல் > வசப்படுத்துதல் ம.வ.

வயப்படுத்துவது யாது அது வயங்குதலாம். வயப்படுத்துதல் அழகாலும் பண்பாலும் அறிவாலும் திறத்தாலும் வயப்படுத்தலாம். தன்னதாக்கல் அது. அல்லது அதுவே ஆகச் செய்தல்.

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே" - பட்டினப். 218-220

"வயங்கு வெள்ளருவி" - நற். 32

**வயத்தது:**

வயம் > வசம்.

என் இடத்து உள்ளது என் வயத்தது ஆகும். என் கைவயம் உள்ள பொருள், என் கைவசம் உள்ள பொருள் எனப்பட்டது. ஒன்று கைவயப்பட வேண்டும் எனின் அதற்குரிய உழைப்பும்

அக்கறையும் வென்றெடுத்தலும் வேண்டும். ஆகலின் வயம் என்பதற்கு வெற்றி என்னும் பொருளும் உண்டாயிற்று.

**வயந்தமாலை:**

வயந்தம் > வசந்தம் = வயப்படுத்தும் தென்றற் காற்று.

தென்றலை வருணித்து அந்தாதியாகப் பாடப்படுவது வயந்த (வசந்த) மாலையாகும்.

"வசந்த வருணனை வசந்த மாலை" - இலக். பாட். 76

"தென்றலைப் புகழ்ந்து செப்புதல் வசந்த
மாலை யெனப்பெயர் வைக்கப் படுமே" - முத்துவீ. 1063

**வயந்தன்:**

வயம் = வெற்றி; வீரம்.

"வயப்புலி" "வயநாய்" கூற்றையும் உதைத்தானாகக் கொள்ளப்படும் ஆற்றலனையும் வெல்லத் துணிந்தவன்; அவன் காமன். கமம் நிறைந்து ஒளி செய்யும் நிலையில் காமம் ஆகும். வயந்தன், துணை வயந்தை; வசந்தனும் வசந்தையும் ஆயது வடமொழி வழக்கு. வயந்தகாலம் காதலர் வெற்றித் தளிர்ப்புக்கு உரியகாலம். அது வசந்தம் எனப்பட்டது. இளவேனில் என்பதும் அது.

**வயலை:**

வயலைக்கொடி, பசலைக் கொடியென வழங்கும்.

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்"என்பது இலக்கிய வழக்கு. பசலைக்கொடி, பசலைக்கீரை என்பவை மக்கள் வழக்கு. வயலை, வசலையாய் ஊர்ப்பெயர் கொண்டுளது. மேல் வசலை, கீழ் வசலை (செங்கை மாவட்டம்).

**வயல்:**

வை அல் > வையல் > வயல். வை = நெல்.

நெல் விளையும் இடம், வயல்.

*எ-டு:*

*பை + இர் = பயிர்; மை + இர் = மயிர்.*

**வயல்பயறு:**

*நெல்விளை நிலத்திலே 'சிறுபயறு' ஈரப்பதத்திலே தெளிக்கப்படும். வயல் அப்பதத்திலே முளைத்து விளைவு தரும் அப்பயறு வயல் பயறு என நெல்லை வட்டார வழக்காக உள்ளது. ஏனெனில் பயறு வகை புன்செய்ப் பயிராக வருவது. இப் பயறு வயலில் வருவதால் இப்பெயர் பெற்றது.*

**வயா:**

*வயிறு வாய்த்தல் (கருக்கொள்ளல்) வயா எனப்படும். வயா > வயவு; புறா > புறவு ஆவது போல. மயக்கம் வாந்தி, புளிவேட்கை என்பவை வயாக்குறிகளாகும். கருக் கொள்ளுதல் 'வயா' எனக் கருங்குளம் வட்டாரத்தில் வழங்கப்படுகிறது.*

"வயாஅநோய்" - ஐங்குறு. 51

**வயிரம்:**

*வயிர் + அம் = வயிரம். வயிர் = கூர்மை.*

*ஒன்பான் மணிகளுள் ஒன்றாய வயிரம் வலியது. பிறிதொன்றால் அறுக்க இயலா வலிமையுடையது. வயிரத்தை வயிரத்தாலேயே - வயிர ஊசியாலேயே - அறுப்பர். மரங்களில் உள்ளே வயிரப்பகுதி உண்டு. அதனை அகக்காழ் என்பர். வலிய கொட்டுப்பிடிக்கு வயிர்ப்பான கட்டையே பயன்படுத்தப்படும். வயிரப்பகுதி கரியது; கருமைக்கு வலிமைப் பொருளும் உண்டு.*

"கருங்கைக் கொல்லன்" - புறம். 36

***பொருள்:** "வலிய கையை உடைய கொல்லு வேலைக்காரர்".*

**வயிறு:**

*வைக்கத்தக்க முடிவான இடம் வயிறு. வை இறு = வயிறு.*

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்" - திருக். 1001

“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி” - திருக். 226

தம் நுகர்வுக்கும் பிறர் நுகர்வுக்கும் கட்டாயம் வேண்டுவது உணவு. ஆதலால் அவ்வுணவை வைக்கும் இடம் வயிறு எனப்பட்டதாம். வயின் = இடம்; வயம் = ஒப்படைப்பு என்பனவும் எண்ணுக. வை அகம் (வைக்கப்பட்டுள்ள இடம்) வையகம்.

**வயிற்றைக் கட்டுதல்:**

வயிற்றைக் கட்டுதல் = உணவைக் குறைத்தல்.

வயிற்றுப்பாடு பெரிது; மூவேளை உண்டாலும் இடையிடை வேண்டியும் கிடப்பது. ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாதவர் நிலைமை என்னாம்? அத்தகையவர்க்கும் வேறு வேறு கட்டாயச் செலவுகள் இருந்தால் என்ன செய்வர்? அந்நிலையில் வயிற்றொடு போராடிப் பசியைக் கட்டாயத்தால் கட்டிப் போட்டே காலந்தள்ள நேரும். இதுவே, வயிற்றைக் கட்டுதலாம். வயிற்றில் ஈரத் துணியைப் போடுதல் என்பதும் இத்தகு வழக்கே. வாயைக் கட்டுதற்கும் இதற்கும் சிறிய வேறுபாடு உண்டு. வாயைக் கட்டுதல், பலவாக இருந்தும் வேண்டா என ஒதுக்குதல்; இல்லாமையால் பசித்துக் கிடத்தல் வயிற்றைக் கட்டுதல்.

**வரகு:**

கூல வகைகளுள் ஒன்று வரகு. அப்பெயர்ப் பொருளமைதியை மக்கள் வழங்கும் ஒரு பழமொழி விளக்குகிறது.

“அடுப்பை மூட்டிவிட்டு வரகு விதைத்தால் அரிசி உலைக்கு வந்துவிடும்” என்பது. அவ்வளவு குறுங்காலப்பயிர் ஆதலால் விரைந்து விளைதலை நோக்கி வரகு என்றனர். வரகு = விரைந்து வருவது.

**வரணம்:**

“வரணம் என்பது ஆரியர் வந்தபின் நிறம்பற்றியும் பிறப்புப் பற்றியும் ஏற்படுத்தப்பட்ட பிரிவினையாதலால், அது “யாதும் ஊரே யாவரும் கேளிர்”, “குலமும் ஒன்றே குடியும் ஒன்றே”,

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் தமிழ்க் கொள்கைக்கு ஏற்காது" (தி.ம.102).*

**வரம்:**

*வரக்கூடிய (அ) வரத்தக்க - பேறு வரமாகும்.*

"காதலி னுவந்து வரம்கொடுத் தன்றே ஒருமுகம்" - திருமுரு. 94

"அவன் வாங்கி வந்த வரம் அவ்வளவுதான்" ம.வ.

**வரம்பு:**

*வரம்பு > வரப்பு (வலித்தல்).*

**ஒ.நோ.:**

*பரம்பு > பரப்பு; பரப்புச்சட்டம், பரப்பளவு.*

*1. வரம்பு = எழுதுதாளில் விடுபாட்டு இடம், கோடு.*

*2. வரம்பு > வரந்தை = கிணற்றில் உள்வாய் நடை; பாம்போடி, தாளில் ஓரக்கோடு.*

*3. வரம்பு = எல்லை, எல்லையிட்டு ஆட்சி செய்தவன்.*

*எ-டு: "இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்".*

"வான வரம்பனை நீயோ பெரும" - புறம்.2

*4. வரம்பு = வரும் அளவு, அளவு.*

"வரம்பறியாமை வந்து ஈண்டி" - பட்டினப்.132

"வரம்பிலாக் காலம் வாழ்க" வாழ்த்துவகை.

**வரலாற்று வஞ்சி:**

*ஒருவன் வனப்பு, ஆற்றல், கல்வித்திறம், குடிப்பிறப்பு, குணநலம் முதலியவற்றை வஞ்சிப்பாவால் வாழ்த்திப் பாடுவது வரலாற்று வஞ்சியாகும் (நவநீத. 48 குறிப்புரை).*

"விழுமிய குலமுறை பிறப்புமேம் பாட்டின்
பலசிறப் பிசையையும் வஞ்சிப் பாவால்
வழுத்தல் வரலாற்று வஞ்சியாம் என்ப" - முத்துவீ. 1072

"வரலாற்று வஞ்சி,

ஞாலமேல் தானை நடப்பது சொல்லல்" என்பார் இலக்கண விளக்கப் பாட்டியலார் (109).

**வரவு:**

*வரவு = வருதல், வருவாய் ஆகிய வருமானம்.*

"வதுவை அயர்தல் வேண்டுவல் ஆங்குப்
புதுவை போலும்நின் வரவுமிவள்
வதுவை நாள் ஒடுக்கமும் காண்குவல் யானே" - கலித். 52

"தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை" - திருக். 1043

*தொல்வரவு = தொடர் தொடராகப் பழநாள் முதல் வரும் வளமை;*

*தோல் = வழிவழி வரும் பெருமை.*

**வரி:**

*அரி என்பது அரிசி என்னும் பொருள் தருவது போல், வரி என்பது வரிசை எனப் பொருள் தருதல் குயவர் வழக்காக உள்ளது. உழவர் வழக்கிலும் வரிசைப் பொருள் வரிக்கு உண்டு. படைப்புப் போடும் போது 'வரி'வைப்பர். வரி மாறாமல் படைப்புப் போடுவர்.*

**வரிகயிறு:**

*வரி கயிறு = இறுக்கிக் கட்ட உதவும் கயிறு. வரிதல் = கட்டுதல்.*

*வண்டி, சரக்குந்துகளில் சுமையை இறுக்கிக்கட்ட உதவும் கயிறு. பார வண்டிக்காரர் வரிகயிறு இல்லாமல் செல்லார்.*

**வரிசை:**

***வரிசை:[1]***

*வரிசை = ஒழுக்கம்.*

'எறும்பு வரிசை'ஓர் ஒழுங்கு முறையாக உலகமெல்லாம் பரவியிருத்தல் அறியக் கூடியது; ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும் எறும்பு வரிசை, 'எறும்பின் ஒழுக்கு'எனச் சங்க நாளிலேயே சொல்லப்பட்டது. ஆயினும், பொருள் தட்டுப்பாடு, போக்குவரவு நெருக்கடி, காட்சிச் சாலை ஆகியவற்றால் அண்மைக் காலத்தே தான் வழக்கில் கொணரப்பட்டதாம் 'கியூ முறை'(Q System). அம்முறை எறும்புச்சாரி முறையே. நீர் ஒழுக்கு, எறும்பொழுக்கு, ஒழுக்கம் என்பவை எல்லாம் ஒழுங்கு முறைப்பட்டதாம். 'உன் வரிசை தெரியுமே'என்பதில் வரிசை ஒழுக்கமாதல் அறிக. வரிசை கெட்டவன், ஒழுக்கமற்றவன் என்பதாம்.

**வரிசை:**[2]

வரிசை = தகுதி. வரிசை யறிதல் = தகுதி அறிதல்.

"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்" - சிறுபாண். 217

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்" - திருக். 528

**வரிச்சு:**

பிளக்கப்பட்ட மூங்கில்; தென்னை மட்டை. வேலி, படல் முதலியன கட்ட வரிச்சு உதவும்.

**வரிதல்:**

வரிதல் = எழுதுதல், கட்டுதல்.

வரி என்பது கோடு. வரிதல் எழுதுதல் பொருளது. "என்ன வரிகிறாய்?" "வரிந்து தள்ளுகிறாயே எதை?"என்பவற்றில் வரிதல் எழுதுதல் பொருளாதல் அறிக.

வரிந்து கட்டு என்றால் இறுக்கிக் கட்டு, இறுக்கு என்பவை பொருள். வேட்டியை வரிந்து கட்டல் வரிதல் எனப்படும். வரிதல் இறுக்கிக் கட்டுதல் என்னும் பொருளதே. 'கட்டாயம்'என்பது கண்டிப்பாகச் செலுத்த வேண்டிய வரி என்பதே. அதில் இருந்தே, தீரா நிலையிலும் நிறைவேற்றியாக வேண்டிய செயல் 'கட்டாயம்'எனப்பட்டதாம். அரசிறை எனப்படும் 'வரி'யைத்

*தவிர்த்தலாகாது என்பதை விளக்குவது கட்டாயச் சொல்லாம். கட்டு + ஆயம் = கட்டாயம்.*

*ஆயம் = வரி.*

**வருகை (விசயம்):**

*விசயம் என்னும் பெயரில் உள்ள நூல்கள் பெருநூல்களின் சுருக்க நூல்களாக இயல்கின்றன.*

*இவ்வகையில் தண்டபாணி அடிகள் இயற்றிய 'கௌமார விசயம்' குறிப்பிடத்தக்கது. அது 16 உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை அவதாரம், தரிசனம், விளையாடல், கருணை வென்றி, உபதேசம், ஈகை, அபிமானம், ஐயமறுத்தல், திருவாய் மலர்தல், சத்தியம், செவிகொடு வினவல், வல்லபம் வேண்டல், புகழ் வேண்டல், திருவடி வேண்டல், காப்புக் கூறல் என்பன. கௌமார விசயம் என்பது 'திருமுருகன் தோற்றரவு' என்பதாம்.*

**வருக்க எழுத்துகள்:**

*அ க ச த ந ப ம என்னும் ஏழு வரிசையிலும் வரிசைக்குப் பன்னிரண்டாக எழுத்துகள் 84. வகர வரிசையில் (வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ) 8, யகர வரிசையில் (ய, யா, யு, யூ, யே, யௌ) 6, ஞகர வரிசையில் (ஞ, ஞா, ஞி, ஞெ) 4 ஆக 102 எழுத்துகள். தமிழ்மொழியில் முதலெழுத்தாக வாராதவையும் முதலெழுத்தாகக் காட்டிப் பாடிய நூல்வகை இது. ஔவையார் ஆத்திசூடி, பாரதியார் ஆத்திசூடி ஆயவற்றில் மொழி முதல் வாரா எழுத்துகளும் வரப்பாடியதுண்டு. கட்டற்ற இந்நிலை, மொழிக்கேடெனல் தெளிவாம்.*

** 'வருக்க மாலை', 'வருக்கக் கோவை' காண்க.*

**வருக்கக் குறள்:**

*மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள் எல்லாம், பாடல் முதலெழுத்துகளாக முறையே வரக் குறள் வெண்பாவால் பாடுவது வருக்கக் குறள் எனப்படும். தண்டபாணி அடிகள் வருக்கக் குறள் யாத்துளார். அதில் 249 பாடல்கள் உள.*

**வருக்கக் கோவை:**

*அகர முதலாக மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள் எல்லாம், பாடல் முதலெழுத்தாக வரக் கட்டளைக் கலித்துறையாகப் பாடுவது வருக்கக் கோவை யாகும்.*

“அகர முதலா கியவாம் அக்கர
வருக்க மொழிக்கு முதல்வரு மெழுத்து
முறையே கட்டளைக் கலித்துறை யாக
வழுத்துவ ததுவே வருக்கக் கோவை” - முத்துவீ. 1044

*கோவைப்பா, கட்டளைக்கலித்துறைப் பாவாம்.*

**வருக்கச் சந்த வெண்பா:**

*அகர முதலாக மொழிமுதல் வரும் எழுத்துகள் எல்லாம் முறையே பாடல் முதலெழுத்தாய் வரச் சந்த வெண்பாவால் பாடப்பெறும் நூல் வருக்கச் சந்த வெண்பா எனப் பெயர் பெறும்.*

*சரவணப் பெருமாள் கவிராயர் இயற்றிய ‘கந்த வருக்கச் சந்த வெண்பா’ இதற்கு எடுத்துக்காட்டாகும். இந்நூல் 102 பாக்களை யுடையது.*

**வருக்க மாலை:**

*மொழிக்கு முதலாக வரும் வருக்க எழுத்துகளுக்கெல்லாம் ஒவ்வொரு கவி கூறுதல் வருக்க மாலையாகும்.*

“வருக்கத் தினைச்சொலல் வருக்க மாலை” - இலக். பாட். 66

“மொழிக்குமுத லாகிய எழுத்துக் கெல்லாம்
வருக்கம் உரைப்பது வருக்க மாலை” - பன்னிரு. 283

*இனி, உயிரானும் க ச த ந ப ம வ என்னும் உயிரோடு கூடிய மெய் ஏழானுமாக எட்டு ஆசிரியப்பா வந்தால் அவை வருக்க மாலை எனவும் கூறுவாரும் உளர் என்பார் இலக்கண விளக்கப் பாட்டியலார் (66).*

*வருக்கக் கோவை கட்டளைக் கலித்துறையாக வரும் என்பது போன்ற வரம்பு வருக்க மாலைக்கு இல்லை என்க. எப்பாவானும் எவ்வினத்தானும் வருமெனக் கொள்க.*

**வருக்கை:**

*வரிக்கை > வருக்கை = வரிவரியாக அமைந்தது.*

"வருக்கை வளமலை" - திணைமா. 14

"பலா எழுந்த பால் வருக்கை" - திணைமா. 29

"வாழைப் பழமோ வருக்கைப் பலாப்பழமோ" - தாலாட்டு.

**வருடை:**

*ஆட்டின் வகையுள் ஒன்று வருடை. அது மலையில் (வரையில்) வாழ்வதாலும் செங்குத்தான மலையில் ஏறுதலாலும் வருடை எனப்பட்டது. வருடுதல், குழல் யாழ் ஆயவற்றை விரலால் தடவுதலையும் குழந்தைகளைத் தழுவி வருடுதலையும் நோக்கின் புலப்படும்.*

"வரையாடு வருடை"

*(வருடை அகம். 378, ஐங். 287, குறுந். 187, பட்டினப். 139, சிந்தா. 1899)*

**வருணிப்பு (வண்ணிப்பு):**

*புனைந்துரை வகையால் விரித்துப் பாடுதல் வண்ணிப்பு ஆகும். வண்ணப் பாடல் வேறு; வண்ணிப்பு வேறு; வண்ணிப்பு எளிய நடையும் தெளிசொல்லும் உடையதாகச் செல்லும். 'அழகர் வருணிப்பு (வர்ணிப்பு) என்பதொரு நூல் சோலை மலை அழகர் சிறப்புகளை விளக்குவதாம்.*

**வருத்தம்:**

*வருத்துவது வருத்தம்.*

*உடல்நலிவும் மெலிவும் உள்ளத்தில் உளைவும் ஒடுக்கமும் வரச் செய்யும் கவலை வருத்தமாம்.*

"தாழ்கண் அசும்பில், படுகடுங் களிற்றின் வருத்தம்" - அகம். 8

"உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி" - புறம். 150

**வரை:**

*ஓர் இடத்தை அல்லது ஒரு நிலப்பகுதியை வரையறை செய்வதற்கு வாய்ப்பாக இருந்தது மலை. ஆதலால் அதற்கு வரை என்பது பெயராயிற்று. அதன் வழிவந்ததே அதுவரை, இதுவரை, எதுவரை என எல்லை காட்டும் வழக்குகள்.*

*வரையில் செழிக்க வளர்ந்த மூங்கில் பண்ணையின் செறிவும் அடர்த்தியும் உயர்வும் அதன் வரிவரிக் கழையும் மக்களைக் கவர அவ்வரிகளைக் கொண்டு அம்மூங்கிலுக்கு 'வரை' எனப் பெயரிட்டனர்.*

*வரையாவது வரி கோடு எனப் பொருளுற்றது. மூவரி அணில், வால் வரிக்காய், வரிப்பாடல் என்பன கிளர்ந்தன. வால் வரி = வெள்வரி > வெள்ளரி.*

*கையில் உள்ள - விரலில் உள்ள - வரிகள் பதிவுத்துறை, உளவுத்துறை முதலியவற்றுக்குச் சான்றுப் பொருளாய்ப் பயன்செய்வது. ஓவியம் வரைகலை எனப் பெயர் பெற்றது. கட்டமை ஒழுக்கத்தில் வாழ்ந்து குடிநலம் காக்கச் செய்யப்படும் வாழ்வியல் திருமணம் 'வரைவு' எனப்பட்டது.*

**வரைப்பு:**

*வரை > வரைப்பு. வரை = மலை; வரைப்பு = வரைபோலும் மாளிகை.*

"துறைவிட் டன்ன தூமயிர் எகினம்
துணையொடு வதியும் காப்புடை வரைப்பு" - அகம். 34

*வரைப்பு = ஓர் எல்லைக்கு உட்பட்ட இடம். வரைப்பு > வரப்பு ம.வ.*

**வரையுறுபா (சித்திரகவி):**

"சித்திரகவி யாறும்பின் தேற்றும் அட்ட நாகபந்தம்
ஒத்த கவியுமற்று முள்ளவெலாம் - வைத்துரைத்தல்
அத்ரவிழிப் பெண்ணே அணங்கே மடமானே
சித்ரகவிப் பாட்டென்றே செப்பு"

*(அத்ர (வ) = அம்பு; சித்திர > சித்ர)*

*எனவரும் பிரபந்தத் திரட்டு (50) சித்திர கவி வகைகளைக் கூறும். அது கூறும் சித்திர கவிகள் கோமூத்திரி, இரட்டை நாகபந்தம், முரசபந்தம், சக்கரம், சுழி குளம், சருப்பதோபத்திரம், அட்டநாக பந்தம் என்பனவாம் (51-60).*

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**வர்த்தி வைத்தல்:**

வர்த்தி வைத்தல் = மூட்டிவிடல், இல்லாததும் பொல்லாததும் சொல்லல். வருத்தி = இருள்போக்கி ஒளிவரச் செய்வது. வருத்தி > வர்த்தி.

*வர்த்தி, மெழுகுவர்த்தி, தீவர்த்தி முதலியவை. ஒன்றைப் பற்ற வைத்து அவ்வொன்றால் பலப்பலவற்றைப் பற்ற வைத்தல் வர்த்தி வைத்தல். அது போல் ஒரு செய்தி ஆங்காங்கு சென்று பலப்பலர்க்கும் சொல்லப்பட்டு, அவ்வவரை எரியச் செய்தல் வர்த்தி வைத்தலாக வழங்குகின்றதாம். மெழுகுதிரி, விளக்கு ஆகியவை சுடரொளி பரப்பி இருட்பகை ஒழிப்பது போல்வதே இவ்வர்த்தி! அமைதியாகவும், ஒன்று பட்டும் இருந்தவரை உள்ளெரிவுக் காளாக்கி உருக்குலைக்கும் தீமை உடையதாம் இவ்வர்த்தி வைத்தல். "வர்த்தி வைக்க வில்லையானால் உனக்கு வயிறு எரியுமே" என்பது வழக்கு. பிறரை எரிய வைக்காவிட்டால் தனக்கு எரிவு எனின், வர்த்தியான் எத்தகையன்?*

**வலக்காரம்:**

*வல் + அம் = வலம்; வலம் + காரம் = வலக்காரம் = கட்டாயம்.*

*"வலக்காரமாக வந்தே ஆக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றான்; என்ன செய்வது? கூடப் போனேன்" ம.வ.*

**வலக்கை:**

*வலப்புறக் கை வலக்கை என்பது பொதுவழக்கு. அதற்கு உண்மை என்னும் பொருள் குற்றால வட்டார வழக்கில் உள்ளது. வலக்கையை அடித்து உண்மை கூறுதல் வழியாக 'உண்மை' என்னும் பொருள் 'வலக்கை'க்கு ஏற்பட்டுள்ளது. உண்மை கூறுதல் = சத்தியம் செய்தல்.*

**வலசை:**

*ஒரு மொத்தமாக குடியேறிப் போதலை வலசை போதல் என்பது பொதுவழக்கு. பறவைகள் நூற்றுக்கணக்கில் வண்ணமாலை போல் பறந்து போதலை வலசை போதல் என்பர். வலசை என்னும் பெயருடைய ஊர்கள் எல்லாம் மக்கள் ஒரு காலத்தில் வேறிடத்திருந்து வந்து ஒன்றாகக் குடியேறியுள்ள ஊர்களாகும். வலசை வருதல் என்பதற்குக் குடியேறுதல் என்னும் பொருள் செட்டிநாட்டு வழக்கில் உள்ளது.*

**வலயம்:**

*வல், வலம், வலை என்பவை வள், வளம், வளை என்றும் ஆகும். வலயம், வளயம் எனவும் வழங்கும். ஈழத்து "வவுனியாவுக்கு முன் 50 கி.மீ. காப்பு வலையம் உள்ளது" என்கிறது ஈழச் செய்தித்தாள். 'கடல் வலயம்' என்பதும் ஈழ வழக்கில் உள்ளது.*

** 'நிலவலயம்' 'நிலவளயம்' என்பவை காண்க.*

**வலி:**

*உட்கார்ந்தே இருந்தவர் நடக்கப் பழகுகிறார்; தொடர்ந்து நடக்கிறார்; அந்நடையால் வலி உண்டாகின்றது; மூட்டு வலிக்கிறது; கால் சோர்கிறது; அவரே ஓட்டமும் பயில்கிறார்; ஓடி ஓடி இளைக்கிறார்; வியர்க்கிறது! நாடித் துடிப்பு ஏறுகிறது; உடலெங்கும் உளைகிறது; வலி உண்டாகிறது; தடவிக் கொடுக்கிறார். வெந்நீர் ஒற்றடம் வைக்கிறார்! வலி நீக்கி மருந்துண்டானால் தடவுகிறார்! ஆனால், நடையை விடவில்லை! ஓட்டத்தையும் விடவில்லை; என்ன நிகழ்கின்றது? முன்னைப் போல் சோர்வு இல்லை; இளைப்பு இல்லை; வலியும் இல்லை! இயல்பான பழக்கமாகிவிட்டன! நடையும் ஓட்டமும், எப்படி இயல்பாயின?*

*'வலி'யைத் தாங்கித் தாங்கி, 'வலிமை' உண்டாகிவிட்டது! 'வலி' இல்லாமல் வலி ஏற்படாமல் - வலிமை உண்டாவதில்லை! இது தமிழ்ச்சொல்லின் வேர் வழியாகக் கிட்டும் விளக்கம்; சொல், சொல்தானா? வாழ்வா?*

*மண்வெட்டி, கோடரி, கடப்பாறை, சம்மட்டி ஆகிய வற்றைப் பயன்படுத்தத் தொடங்கிய நாளில், சிறிது நேரத்தில் அவர் கை வலித்தது; கையில் கொப்புளம் கண்டது; அக்கொப்புளம் உடைந்தது; புண்ணானது; ஆறியது; மீண்டும் மீண்டும் இதே தொடர்! என்ன ஆனது? தொடக்கத்தே இருந்த வலி போனது; வலிமை ஆனது! எட்டு மணி நேரம் பத்துமணி நேரம் என இக்கருவிகளைக் கொண்டு கடுமையான வேலை செய்ய முடிகின்றது! வலி கண்டு கண்டு கை காய்த்துப் போனது! காய்த்த பின்னே பழுப்பது இல்லை! நீர்க்கோப்பது இல்லை!*

உடைவது இல்லை! ஆம்! மனமும் உடைவது இல்லை! கையில் 'வலி'போய், மனத்திலும் 'வலி'போய் 'வலிமை' உண்டாகி விட்டது. அக்கருவிப் பணி, இனி வேலை இல்லை! விளையாட்டு!

வலியை வலிமை யாக்கும் வழி, வலிக்க வலிக்க விடாப் பயிற்சியே! அதனால்தான் 'வல்'என்பது வலிக்கும் மூலம்! வலிமைக்கும் மூலம்! 'வலன்'ஆகிய வெற்றிக்கும் மூலம்! வல்லுநர்க்கும் மூலம்! வல்விரைவுக்கும் மூலம்! கடல் மேலே அலை! அலை மேலே மிதவை! மேலே போகிறதா? ஆழ்பள்ளத்தில் வீழ்கிறதா? நொடிக்கு நொடி மலையேறிப் பள்ளத்துள் பாய்கிறதே மிதவை! அஞ்சுகிறானா பரதவன்? காற்றால் அலையும் அலையால் மிதவையும் என்னென்ன அலைக்கழிப்பு! அவன் உடல் அலைகின்றது! ஆடுகின்றது! ஆனால், அவன் உள்ளம் அலைகின்றதா? அலைந்தால் அலையின் தலையில் 'மிதிமிதி'என்று மிதித்து வெற்றி கொள்வானா? அவன் படகோட்டுதலுக்கு என்ன பெயர்? படகு வலித்தல் என்பது பெயர்! படகு 'வலிப்பு'அவனுக்கு எத்தனை 'வலிப்பை'உண்டாக்கி உண்டாக்கி வலிமையாக்கி விட்டது.

இயற்கை யன்னை, தன்னை யடைந்த இயற்கைச் செல்வங்களைத் தன்னை நம்பி வாழ்வதற்கு வந்த உழைப்புச் செல்வர்களை வலிமையாளராக்காமல் விடுவது இல்லை! அவ்வலிமையாளர் ஆக்குதற்குப் பயிற்சியாக வலி தாராமல் இருப்பதும் இல்லை!

நம் கைகள் இரண்டனுள் ஒன்றற்கு என்ன பெயர்? மிக மிகப் பயன்படுத்திப் பழக்கி விட்டோமே! அக்கைக்கு என்ன பெயர்? வலக்கை என்பது பெயர்.

'வலம்'என்பதன் பொருள் வலிமை; அதற்கு வலிமை எப்படி உண்டாகியது? வலிக்க வலிக்கப் பழக்கப்படுத்திப் பழக்கப்படுத்தி, விடாமல் வலிக்கச் செய்ததால் 'வலம்'பெற்றுவிட்டது! வலம் என்பதற்கு வலப்பக்கம், வலிமை இவைதான் பொருளா? இல்லை, பொருள் வளர்ந்தது! "வெற்றி" என்னும் பொருளும் வந்துவிட்டது! அப்பொருள் வரவு உண்டாகியது இன்றா நேற்றா? சங்கச் சான்றோர் காலத்திலேயே பெருவழக்குச் சொல்லாகிவிட்டது.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" - திருக். 471

*ஒரே ஒரு குறளில் எத்தனை வலிகள்? இவ்வலிகள் அனைத்தும் வலிகளா? வலிமைகளா? "ஊழிற் பெருவலி"யையும் தருகிறாரே வாழ நூல் செய்த வள்ளுவப் பெருந்தகை! வள்ளுவர் அறநூலுக்கு 'வரைபடம்'போட்டுத் தந்த ஆசிரியர் தொல்காப்பியர் 'வய வலியாகும்'என்று பொருள் விளக்கம் புரிகின்றாரே! எள்ளில் இருந்து எண்ணெய்! இலக்கியத்தில் இருந்து இலக்கணம்! தொல்காப்பியம் இலக்கணம். அதற்கு முன்னரே 'வலி'இலக்கியமாக இருந்தது என்பது விளங்க வில்லையா?*

*ஆமாம்! இலக்கண ஆட்சி மட்டும்தானா? பொதுமக்கள் ஆட்சி இல்லையா? பொதுமக்கள் ஆட்சியில் இல்லாததா வலக்கை, வலியன், வலியான், வல்லூறு என வழங்கப்பட்டு வருகின்றதே ஒரு பறவை! அதுதான் வால்நீண்ட கரிக்குருவி! கரிச்சான், கரும்பிள்ளை, கரும்புள் என்பனவெல்லாம்!*

*சிறுத்த கிளியை புறாவைக் காகத்தை மட்டுமல்ல பருத்த பருந்தையும் படுத்தும் பாட்டைப் பார்த்தவர் அதன் வலிமையை அறிவார்! அதன் பெயர்ப் பொருத்தமும் அறிவார்! அதற்குப் பெயர் அதுவேயா வைத்துக் கொண்டது? அதன் இயல்பறிந்து தானே மக்கள் பெயர் வைத்தனர்.*

*வண்ணத்தில் தோய்ந்தவனிடம் வண்ணம் பட்டது! வலிமையில் தோய்ந்தவனிடம் வலிமை தோய்ந்தது! எண்ணத்தின் சாயல்தானே பெயரீடு! வல்லாரை ஒரு வகைக்கீரை! சிந்த மருத்துவ நூல்களைப் பார்த்தால் வல்லாரைச் சிறப்பு புலப்படும்!*

*வல்லியம் புலி = வேங்கைப்புலி! கனவிலே கூட கரிமாவை அச்சுறுத்தி வேங்கை மரத்தையே வேங்கைப் புலியெனத் தாக்க வைக்கும் வல்லியம் அது! சங்க இலக்கியத்தில் எத்தனை சான்றுகள்!*

*படிக்க 'வலி'உண்டாகி விட்டதா? (தலைவலி) வரட்டும்! வரட்டும்! வலி வந்தால் தானே வலிமை வரும்!*

**வலித்தல்:**

1. வலி > வலித்து > வலித்தல் = வலி உண்டாதல். ‘காக்கை வலி’.
2. வலித்தல் = மெல்லெழுத்து வல்லெழுத்தாகத் திரிதல். வரம்பு > வரப்பு.
3. வலித்தல் = படகு ஓட்டல். வலுவாகத் துடுப்பை இழுத்துத் தள்ளலால் வலுத்தல் > வலித்தல் ஆயிற்றாம்.

**வலை:**

வல் > வலை.

கொசுவலை பயன்படுத்துகிறோம். அதற்கு முற்பட்டது மீனைப் பிடிக்கும் வலை வழக்கம். ஏரி,குளம், ஆறு, கால் என்பவற்றில் மட்டும் வலை போட்டு மீன் பிடித்தல் இல்லை. பெருவலை இட்டுக் கடற்பரப்பில் மீன்பிடித்தல் வழக்கம், கட்டுமரப் படகுகளில் செல்லும் வழக்கும் பண்டு தொட்டு இன்று வரை வழக்கில் உள்ளவை.

வலைக்குள் உள்ளது உயிரி; பறவை வலை, மீன்வலை எதுவாயினும் உயிரிகளைப் பற்றிக் கொள்வது. உயிரி உயிர் தப்பு நோக்கில் வலிய முயற்சி செய்யும். தன்னைப் பற்றிய வலையை அறுத்து வெளியேறவே முயலும். அம்முயற்யிசில் அது வெற்றி கொள்ள இயலாவாறு கெட்டியானதாக - வலுவானதாக நூலோ கயிறோ இருத்தல் வேண்டும். அது குறித்தே வலிமைப் பொருளில் ‘வலை’ ஆயது. காட்சிப் பொருளாய இது, கருத்துப் பொருளில் ‘வலை போட்டுத் தேடுதல்’ ‘வலை போட்டு அரித்தல்’ என வழக்கில் ஊன்றியது.

சிலந்தி வலை, மெல்லிய இழையால் ஆயது. ஆயினும் என்ன? உள்வந்த பூச்சியாம் உயிரி அறுத்து வெளியேற விடாத வலியது. ஆதலால்தானே சிலந்தி உயிர் வாழ்கிறது! அதுவும் வலைதானே!

**வலையான்:**

வலைபோட்டு மீன்பிடிப்பவன் வலையான் எனப்படுதல். பொதுவழக்கு. வலை பின்னும் சிலந்தியை வலையான் என்பது

குமரி மாவட்ட வழக்காகும். 'சிலந்தி வலை'என்பது அவ் வலைக்குப் பெயர்தானே. சிலந்திக் கூட்டைச் சிலம்பி என்பார் ஔவையார் "தேன்சிலம்பி"(தனிப்பாடல்).

**வலை வீசுதல்:**

வலை வீசுதல் = அகப்படுத்துதல்.

வலை வீசுதல் என்பது மீன்பிடிப்பதற்காகச் செய்யப் படுவது. வலை வீசுதல், வலைபோடல், தூண்டில் போடல் என்பனவும் மீனை அகப்படுத்துவதற்கு அல்லது சிக்க வைப்பதற்குச் செய்யும் செயலேயாம். அதேபோல் ஒருவர்தாம் விரும்பிய ஒருவரை அகப்படுத்துவதற்குச் செய்யும் முயற்சி, சூழ்ச்சி, பேச்சு, கண்ணோக்கு என்பவை வலை வீசுதலாக வழக்கில் சொல்லப்படும். வலை விரித்தல் என்பதும் அகப்படுத்தி எடுத்துக் கொள்ளும் முயற்சியையே குறிக்கும். நேரிய வழியால் அகப்படுத்துதலை வலை வீசுதல் என்னும் வழக்கம் இல்லை.

**வல்லளை:**

எலி வளை, நண்டு வளை என்பவை வழக்குச் சொற்கள். வளை என்பதை வல்லளை என்பது மதுரை மாவட்ட அலங்கா நல்லூர் வட்டார வழக்காகும். அளை என்பது வளை, புற்று என்னும் பொருளும் தரும் சொல்லேயாம்.

**வல்லாரை:**

வல் + ஆர் + ஐ = வல்லாரை = வலிமை செறிந்தது.

வன்மையும் நினைவு வளமும் தரும் கீரை வகையுள் ஒன்று வல்லாரை. ஒரு காலில் நாலிலை கொண்ட தோற்றத்தது. மருத்துவப் பயன்மிக்கது. நீர்வள மிக்க நன்செய் வரப்புகளில் வளமாக வளர்வது. "ஒருகால் நாலிலைப் பந்தலடி"என்று வினாவியதற்கு, "ஆரையடா சொன்னாய் அடா"என ஒற்றை 'அடி'க்கு இரட்டை 'அடா'ப் போட்டுக் கம்பரை அடக்கினார் ஔவையார் என்பது புனைவு. இருவரும் ஒரு காலத்தார் அல்லர்; புகழேந்தியார் ஒட்டக்கூத்தர் என்பாரும் சேர்த்து நால்வர் பற்றிய புனைவுகள் பிற்காலத்தவை என்பது கால ஆய்வாளர் முடிபு.

*விநோதரச மஞ்சரி, புலவர் புராணம் என்பவை முன்னவர் பெயரால் பின்னவர் பின்னியவை என்க.*

**வல்லி:**

*வல் + இ = வல்லி.*

*வல் இல் > வல்லில் > வல்லி.*

**ஒ.நோ.:**

*உள் + இல் = உள்ளில் > உள்ளி.*

*செடி, மரம் போலும் வலிமையற்றது. படர்கொடி ஆதலால் வல்லி எனப்பட்டது.*

"கொடிபோல் நுசுப்பின் வள்ளி"- திருமுரு. 101
பொருள்: "வல்லிபோலும் இடையினை யுடைய வள்ளி" நச்.

**வவ்வுதல்:**

*வவ்வுதல் = கைப்பற்றுதல்.*

**ஒ.நோ.:**

*கௌவுதல் = வாயாற் பற்றுதல்.*

"யானை,
சிறுதினைப் பெரும்புனம் வவ்வும் நாட" - அகம். 148

** 'வௌவால்' காண்க.*

**வழக்கம்:**

*வழக்கு > வழக்கம். வழங்குதல் = கொடுத்தல், நடத்தல்.*

*பல்கால் பழகியது பழக்கம்; அதன் முதிர்வு பலரிடமும் ஆகிப்படிதல் வழக்கம்; அதுவே பலராலும் பற்றப்பட்டு ஒழுக்கமாகிவிடும்.*

*பழக்கத்திற்கும் ஒழுக்கத்திற்கும் இடைப்பட்ட நிலை வழக்கமாகும். பழக்கம் வழக்கம் ஒழுக்கம் என்பவை வரன்முறைப்பாடு.*

"வல்லெழுத்து மிகினும் மான மில்லை
ஒல்வழி அறிதல் வழக்கத் தான" - தொல். 246

வழக்கம் = வழக்கு. இயல்பு வழக்கு, செய்யுள் வழக்கு.

"வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்" - தொல். பாயி

இந்நாளில் உரிமையியல் வழக்கு, குற்றவியல் வழக்கு என்பவை கோடிக்கணக்கில் முறைமன்றங்களில் குவிகின்றன.

**வழங்குதல்:**

வழியே செல்லுதல் - நடத்தல் - வழங்குதல் ஆகும். வழி வழியே கொடை வழங்குதலும் வழங்குதல் ஆகும்.

"கொடுவரி வழங்கும் கோடுயர் நெடுவரை" - புறம். 135

"கொடையும் பிறவிக் குணம்" - ஔவை. தனிப்.

பிறவிக்குணம் என்பது வழிவழியாக வருதல்.

**வழமை:**

வழமை = வழக்கு வழிப்பட்ட நடைமுறை. ஒருவர் ஒன்றைப் பழகுகிறார். அப்பழக்கம் அவரொடு தொடர்ந்து பிறரையும் பற்றிய நிலையில் வழக்கம் ஆகிறது. அவ்வழக்கம் வழமை என்பதாம். நடைமுறை ஒழுக்கம் என்பதே வழமையாகி விடுகின்றது. எழுதாச் சட்டமாக மக்கள் வாழ்வில் நிலைபெற்று நாட்டு நடப்பும் ஆகின்றது. "வழமையை விடலாமா?" என்பது மக்கள் வழக்கு.

"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான" - தொல். 1592

**வழலை:**

ஒருவகைப் பாம்பு; கட்டுவிரியன் போல வெண்மையும் கருமையும் அமைந்தது. வெண்மை கலந்த வரிகளையுடைய வாடிய மரலின் குருத்தொடு (நுகும்பொடு) ஒப்பிடப் பட்டுள்ளது. மரலின் குருத்து பாம்பு போலவே தோற்றம் தருவது.

"வேனில் ஓதிப் பாடுநடை வழலை
வரிமரல் நுகும்பின் வாடி"

என்று உவமைப்படுத்துகிறது நற்றிணை (92).

வழவழப்பமைந்தது வழலை என்க. சவர்க்காரம் எனப் பொதுமக்கள் கூறப்படும் சோப்பை (Soap) வழலை என்பது குமரி மாவட்ட வழக்கு. அதுகொண்டு புத்தாக்கச் சொல் ஆக்கினார் பாவாணர்.

செவி தராமலும், செயலில் ஊன்றாமலும் இருப்பவரை 'வழலை' என்பது மக்கள் வழக்கமாம்.

**வழிக்காசு:**

போக்குவரவுக் காசு, வழிச்செலவுக் காசு என்பதை ஏலக்காய்த் தோட்டத்தார் வழிக்காசு என்கின்றனர். 'பயணப்படி' என்பதை 'வழிக்காசு' 'வழிச்செலவு' என்று வழங்கலாமே!

**வழிக்கு வராமை:**

வழிக்கு வராமை = ஒருவர் செயலில் குறுக்கிடாமை.

வழிக்கு வருதல், நெறிப்படல், ஒழுங்குறல் என்னும் பொருள. அவ்வழிக்கு வராதவனைப் பார்த்து, "எங்கள் வழிக்கு நீ வராதே" என ஒதுக்கி விடுவது வழக்கம் ஆகும். இவண் வழிக்கு வருதல் என்பது அவர்கள் செயல்களில் பங்கு கொள்ளல், ஊடாடுதல் என்பனவாம். "வழியே ஏகுக; வழியே மீளுக" என்பது வழியறிந்தோர் வழி.

இவ்வழி கெட்டோர் வழி, வழியை அழிப்பதே, எப்படி இணையும் இருவர் வழியும்? ஆதலால், "வழிக்கு வராதே" என விலக்குதலே தற்காப்பாம்.

**வழிநடைச் சிந்து:**

இரண்டடிகளாய் ஓரெதுகையுடையதாய் ஒவ்வோர் அடியும் மூன்று சீர்களும் தனிச்சொல்லும் பின்னும் நான்கு சீர்களும் உடையதாய் அமைந்துள்ள சிந்து நடையில் வருவது வழிநடைச் சிந்து ஆகும்.

அடியார் கூட்டம் தம் ஊரில் இருந்து தாம் வழிபட விரும்பும் இறைவன் திருக்கோயில் கொண்டுள்ள இடம் வரைக்கும் உள்ள வழிகளையும் வனப்புகளையும் ஊர்களையும் கூறுவது வழிநடைச் சிந்தாம்.

வழிநடைச் செலவு வகையில் முற்பட இருந்ததாகக் கூறப்படும் நூல், 'செங்கோன் தரைச்செலவு' அந்நூலை யடுத்துப் பாடப்பட்டதாகக் கிடைத்துள்ள ஒரு நூல் 'தகடூர் யாத்திரை'. இவை பழையவை; புறத்துறை பற்றியவை. ஆற்றுப்படைகளோ பத்துப்பாட்டில் செம்பாதி ஆயவை. அவை அக்கால வழிகாட்டி நூல்கள்.

திருப்பரங்கிரி வழிநடைச் சிந்து என்னும் நூல், ஓடாத்தூர் என்னும் ஊரில் இருந்து திருப்பரங்குன்றம் வரைக்கும் வந்து மீண்டும் ஓடாத்தூர் செல்லுதலைக் குறிப்பது. ஒரு தலைவன் தன் தலைவியை விளித்துக் கூறிக் கொண்டு போவதாகப் பல்வேறு சந்த நடையில் நடக்கின்றது. அதனைப் பாடியவர் ஓடாத்தூர் இராமசாமிப் புலவர் என்பார்.

சில வழிநடைச் சிந்துகள் வழிநடைக் காவடிச்சிந்து எனவும் படுதல் உண்டு. காவடிச் சிந்தும் வழிநடைச் சிந்தும் யாப்பாலும் பொருளாலும் 'இரட்டைப் பிறவி' எனலாம்.

**வழிபடு தன்மை:**

வழிபடு தன்மையாவது, மதித்தொழுகும் இயல்பு. ஒருபொருளின் மேல் உள்ள மதிப்பும், ஒருவர் மேல் உள்ள மதிப்பும் இதனையும் போற்றிப் பேணிக் கொள்ள உதவும். அவ்வகையில், மனைவியால் மதித்துப் போற்றிக் கொள்ளத் தக்காருள் முழுமையானவனும் முதன்மையானவனும் கணவனே!

மனைவியாம் பெண்மகள், தன் பிறந்தகத்தை விடுத்து எவனை நம்பிப் புகுந்தகத்துப் புகுந்தாள்? கணவனின் பெற்றோரை நம்பி என்றோ, அவன் உடன்பிறப்பை நம்பி என்றோ, அவன் உற்றாரை நம்பி என்றோ, மூளைத் திரிபுடைய ஒருத்தி கூட உரையாள்.

மங்கல மகளிரே மணவிழாவை முன்னின்று நடத்திய பழைய நற்கால நிலையில், அவர்கள் மணமகளாம்

மனைக்கிழத்திக்குக் கூறிய அறிவுரை மூன்றனுள் தலையாய ஒன்று "பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு" என்பதே (அகம். 86). "கணவனால் விரும்பப்படும் நல்ல மனைவியாக விளங்கு" என்பது இதன் பொருளாம்.

அன்பு ஒற்றை வழிப்பாதை அன்று; இரட்டை வழிப்பாதை; போக்கும் வரவும் உடைய இரட்டை வழி போல், கொடுத்தும் கொண்டும் சிறப்பது அன்பு. ஆதலால்தான் கணவனை வழிபட்டுப் போற்றும் தன்மையால் அவன் தன்னைப் போற்றும் பேற்றைப் பெறுகிறாள்.

இல்லறமே நல்லறமாகக் கொள்வார் மனைக்குத் துறவோரும் முனிவரரும் விருந்தினராய் வருதல் வழக்கு. அவர்களைப் போற்றல் இல்லறத்தார் கடமை என ஏற்றதும் தமிழ்வழக்கு. ஆதலால், அம்முனிவரை ஓம்புதலைத்,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" - திருக். 42

என்றும்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" - திருக். 43

என்றும் வள்ளுவர் உரைத்தார்.

தம் இல்லத்திற்கு வரும் நல்லோரை வணங்கி வழிபட்டு விருந்தோம்புதலில் தன் குழந்தைப் பருவத்தில் பெரும்பங்கு கொண்டிருத்தவள் இந்நாளை மனைவி. அவள், தன் இளந்தைப் பருவத்தில் தன் பெற்றோரொடும் இருந்து துறவரை வழிபட்ட இயல்பைப் புகுந்த வீட்டில் கொள்ளுதல் ஆகாது. தன் கணவனையே அத்துறவரை வழிபட்டது போல் வழிபட்டு, வேண்டும் கடமை புரிதல் வேண்டும் என்னும் வாழ்வியல் முறையொழுங்கு காட்டுவதே, "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" (திருக். 55) என்னும் உரையாகும். "புரிவு தெரியு முன்னை நிலை வேறு; அதன் பின்னை நிலை வேறு; அவ்வந் நிலையறிந்து பெண்மகள் நடத்தல் நலம்" என்னும் நயங்காட்டும் தற்காப்புச் செய்தி இது. தெய்வத்திற்கு முனிவர், துறவர் என்னும் பொருள் உண்மை பழைய நூல்களில் பலவாக உண்டு.

திருக்குறளில் வரும் "தென்புலத்தார் தெய்வம்" என்பதில் உள்ள தெய்வம் தெய்வத் தன்மை வாய்ந்தவரே! இல்லையானால் அவர்க்கு விருந்தோம்புவது எப்படி?

இவ்வாறு, கணவனை வழிபட்டுப் போற்றும் மனைவி அவனாலேயே தெய்வமாகக் கருதப்படுவாள்! அப்படிக் கருதியதற்குச் சான்று உண்டா? சான்று தேடிப் போக வேண்டா என்பதற்குத்தானே வள்ளுவர் அடுத்த அடியிலேயே அதனை அடித்துக் கூறினார்.

"பெய்யெனப் பெய்யும் மழை"

என்பது அது. சிறப்பொடு பூசனை உலகில் நிகழ மழையே அடிப்படை என்றால் (திருக்.18) பெய்யென்ற அளவில் பெய்யும் மழையாகக் குடும்பத்திற்கு வளஞ்சுரக்கும் வள்ளியள் மனைவி; ஆதலால் அவள் சிறப்பொடு பூசனை செய்யப்படுதற்கு உரியவள் அல்லளா!

**வழிமொழிதல்:**

சொல்லியதை அப்படியே உள்வாங்கி ஏற்றுச் சொல்லுதல் வழிமொழிதல் ஆகும். முன்னை நாளில் தூது வழிமொழிதல் எனப்பட்டது. அத் தூதே வழிமொழிதல் என இக்காலம் பெருக வழங்கும் கலைச்சொல்லைத் தந்தது.

"தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றும்
வாய்மை வழியுரைப்பான் பண்பு" - திருக். 688

வழிமொழிதல், முன்மொழிதலை வழிமொழிதலாகத் தொடர்தல் கூட்டந்தோறும் கேட்கக் கூடியது. வழிமொழிதல் இலக்கிய வகைகளுள் ஒன்று.

**வழிமொழித் திருவிராகம்:**

இராகம் = இசை.

இப்பெயரால் திருப்பிரமபுரப் பதிகமொன்று தேவாரத்தில் உள்ளது. ஞானசம்பந்தர் பாடியது. இது யாப்பியலால் பெற்ற பெயர் என்பது வெளிப்படுகின்றது.

"சுரருலகு நரர்கள்பயில் தரணிதல முரணிய அரணமதில் முப்

புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய
பரமனிடமாம்

வரமருள வரன்முறையினிரைநிறைகொள் வருசுருதி
சிரவுரையினாற்

பிரமனுயர் அரனெழில்கொள் சரணவிணை பரவவளர்
பிரமபுரமே"

*'பிரமபுரம்' என்பதற்கு ஏற்ப எதுகை ரகர வழிமொழிதலாதல் அறிக.*

*இவ்வாறே வேணுபுரம் என்பதற்கு,*

"தாணுமிகு வாணிசைகொள் தாணுவியர் பேணுமதி காணுமளவிற்
கோணுநுதல் நீணயணி கோணில்பிடி மாணிமது நாணும்வகையே
ஏணுகரி பூணழிய வாணியல்கொள் மாணிபதி சேணமரர்கோன்
வேணுவினை யேணிநகர் காணிறிவி காணநடு வேணுபுரமே"

*என வந்துளதும், புகலி முதலிய பிறவூர்ப் பெயர்களும் வழியெதுகை படவே வந்துளதும் அறிக. இதனால் சீர்காழிப் பன்னிரு பெயர்களும் வந்த வரலாற்றினை அவ்வழியே மொழிதலின் வழிமொழி எனப் பெயர் பெற்றது என்பது தேவாரப் பதிப்பில் திருத்தம் பெற வேண்டும் என்பது புலப்படும் (தேவாரம் - தலமுறைப் பதிப்பு, திருப்பனந்தாள் 1961 பதிப்பு; குறிப்புரை).*

**வழு:**

*வழு = சொல்லிய சொற்படி நில்லாமல் வழுவுதல் வழுவாகும். பொதுவகையில் குற்றம் எனப்படும். எனினும், அவ்வழு வாழ்வையே கெடுத்தலும் கண்கூடாக அமைந்துவிடுதல் கண்ட அருளாளர் அதனைத் தவிர்க்கக் கொண்ட ஆக்கச் செயலே,*

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" - தொல். 1091

*என்பது.*

பாசியுள்ள இடத்திலும் வழுவழுப்பான இடத்திலும் வழுக்குதல் உண்டாம். உடலுக்கு ஏற்படும் வழுவினும் உயிருக்கு ஏற்படும் வழு கொடுமை யாதலறிக.

வழுக்கல் இழுக்கலுமாம்.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்" - திருக். 415

**வழுக்குதல்:**

வழக்கம் = நடத்தல்; வழுக்குதல் = நடை தவறல்.

வழுக்கி விழுதல் என்பதும் அது. 'வழுக்கி விழுந்தவள்' எனப் பெண்ணைப் பழிக்கும் ஆணுலகம் - ஏன் பெண்ணுலகமும் கூட, ஆணை வழுக்கி விழுந்தவனாகச் சொல்வது இல்லை? வழுக்கி விழுந்தவர்கள் கடைத்தேற வென்றே அரும்பாடு பட்டார் முத்துலக்குமி அம்மையார். காந்தியடிகள் தம் தொண்டில் ஒரு பகுதி வழுக்கி விழுந்தவர் கடைத்தேற்றத்திற்கு உரிமை கொண்டது.

ஒருவர் வழுக்கினால், இன்னொருவரும் வழுக்குதலுக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமே! அவரைத் தப்பவிட்ட வழுக்குதலே வழுக்குதலாம். "அவள் வழுக்கி விழுந்தவளாமே" எனப் பார்வை பார்ப்பது பரிவாக இருந்தால் நலம்! எரிவாக இருந்தால்? எய்தவன் இருக்க அம்பை நோவதாம் பழியே. வழுக்கி விழுதல், வழிதவறல், கைவிடல் என்பனவும் இச்சார்புடையனவே.

"வழுவாய்க்குக் கழுவாய்" - புறம். 34

**வழுக்கை:**

வழுக்கை = வழுக்கிக் கொண்டு செல்லல்.

வழுக்கும் இடமும், வழுக்கும் பொருளும் வழுக்கையாம். முன்னது வரப்பு வழுக்கல்; பின்னது இளநீரில் வழுக்கை. தலை வழுக்கை வழுக்கையுமாம் மழுக்கையுமாம். முழுக்க வழித்தது மழுக்கை; மயிர் உதிர்ந்து முளைக்காதது வழுக்கை. வழுக்கைக் கல் போல, பொருள் போல அமைந்தது என உவமைப் பொருளதாம். இங்குக் காணும் வழுக்கை அப்பொருள் நீங்கிய நுண்பொருள்

வழுக்கையாம். ஒன்றைச் சொன்னால் 'ஆம்'என ஏற்காமல், 'அன்று'எனவும் மறுக்காமல் வழுக்கிக் கொண்டு போய்விடலாம். "அவனே வழுக்கை; அவன் எப்படி எள்ளுக்காய் பிளந்தது போலத் தீர்த்து வைக்கப் போகிறான்"என்னும் தெளிவு வழுக்கைப் பொருள் விளக்கும்.

**வளசு:**

வளைவு என்னும் வடிவப் பெயரால் ஏற்பட்ட பெயர் வளையல். அதனை 'வளசு'என்பது பரதவர் வழக்காக உள்ளது. இளையது > இளைசு > இளசு ஆவது போல வளைவானது வளைசு > வளசு ஆயது.

**வளத்தக்க வாழ்வு:**

கணவன் வருவாய்க்குத் தக்க வாழ்வு என்பது வெளிப்படு பொருள். வருவாய்க்கு மேல் செலவிடும் எவரையும் போற்றாதது வள்ளுவம். "வருவாய் எவ்வளவு சிறிதாக இருப்பினும் சரி; இருக்கட்டும். ஆனால், அவ்வருவாய்க்கு மேற்படாமல் வாழக் கற்றுக்கொள்"என்பது அது (திருக். 478).

குடி, சூது, ஒழுக்கக் கேடு, நம்பிக்கை என்பவற்றால் பொருளைக் கெடுக்கும் ஆண்களால் நடுத்தெருவில் நிற்கும் குடும்பங்கள் எண்ணற்றன. அது போல், கல்லாமை, கண்மூடி வழக்கம், போலி மதிப்பு என்பவற்றாலும் வழிவழியாக அடிமைப்படுத்தி வந்துள்ள கொடுமையாலும், குடும்பப் பொருட் கேட்டுக்கு ஆளாகும் பெண்களும் நிரம்ப உளர். இவ்வாறு, இருவகைக் கேடும் ஒருங்கமையக் கெடும் குடும்பங்களும் கூட உண்டு. ஆனால், அவற்றின் இடையே ஆற்றுப் பெருக்கு அற்றாலும், ஊற்றுப் பெருக்கால் உதவுவார் போல உள்ள, மனைவியரும் இல்லாமல் இல்லை.

அவர்கள் சிக்கனமும் செம்மையும் வருவது நோக்கிச் செய்யும் செய்கையும் பெருவாழ்த்துக்குரியன.

ஒரு குடும்ப அளவில், வளத்தக்க வாழ்வு என்பது பெரிதும் மனைவியைப் பொறுத்ததே. என்னதான் கணவன் இயற்றலும் ஈட்டலும் புரிந்தாலும், காத்தலும் வகுத்தலும் உடையாள் அவன் மனைவியே! அரசுக்குரிய இந்நான்கு பொருளியல் கொள்கை

களும், அறிவறிந்த குடும்பங்களில் இயற்கையான நடைமுறையாக இருப்பதால்தான், அக்குடும்பங்கள் எந்நிலையிலும் தன்னைக் காத்துக் கொண்டு தலைநிமிர்ந்து நிற்கின்றன.

இனி, 'வளத்தக்க வாழ்வு' என்பது. வருவாய் அளவில் மட்டும் பொருள்பட்டு நிற்கும் சுருக்கம் உடையது அன்று. வளம் அப்பொருள் வளமேயன்றி, மனவளம், கலைவளம், கொடை வளம், அறிவு வளம், தொண்டு வளம், தொழில்வளம், பதவி வளம், நட்பு வளம் என இவையும் பிறவும் ஆகிய வளங்களை யெல்லாம் குறிக்கும் வளமுடையதாகும். அதற்குத் தகத் தன்னை அமைத்துக் கொண்டு இயையும் வாழ்வே, எடுத்துக்காட்டாம் வாழ்வாகும்.

**வளமடல்:**

* 'மடல்' காண்க.

**வளமை:**

வளமை = வளம் அமைந்த தன்மை.

அவர் வளமையானவர் என்பதில் பொருள்வளம் மட்டுமன்றிக் கொடை வளமும் உடையார் என்பதும் பொதிந் திருக்கும். அதனை,

"ஈதல் இசைபட வாழ்தல்" - திருக். 231

என்பதாலும்,

"வள்ளியோர்ப் படர்ந்து" - புறம். 47

என்பதாலும் அறியலாம்.

**வளம்:**

வள் > வளம்.

வளம் பலபொருள் ஒரு சொல். வளமான வாழ்வே வண்மைக்கு அடிப்படை.

அழகு, செல்வம், செவ்வை, பக்கம், பதவி, பல்வகைப் பொருள்கள், மாட்சிமை, வலிமை, வழி, நன்மை, தகுதி,

*கொழுமை முதலாம் பொருள்களை வளமைக்கு அகர முதலிகள் வழங்குகின்றன.*

*வளம்பட வேண்டாதார் யார்? என வினாவி, "யாரும் இல்லை" என விடையும் தருகிறது நாலடியார் (103).*

*வளம் செறிந்த இடமும் காட்சியும் உருவும் வளமாகவே சொல்லப்படுகின்றன. வளனற்ற ஒன்றே ஓவியத்தும் காவியத்தும் வளமுடையதானால், உண்மை வளமுடையது எத்தகு அழகு பெறவல்லது! உலகமே, 'அளப்பரும் வளப்பெரும் காட்சி' என்றால் வளமை அழகே யன்றோ!*

**வளரி:**

*வளரியாவது வளைதடி. வளைதடியாம் அதனை ஏவினால் குறித்த தொலைவு சென்று வளைந்து ஏவியவன் கையினைச் சேர்வது அது. வளைந்து சுழன்று ஏவிய இடத்திற்கு வருதலால் அதனை 'வளரி' என்பர். சுரிகை, சுருள்வாள் என்பவை சுழன்று சீவும் வாள்வகை.*

*வளார் என்பது மரத்தின் உறுப்புகளுள் ஒன்று. வளார் வகையில் தலை நிற்பது புளிய வளார்! வளைக்கும் வகையெல்லாம் வளைவது அது. கருவேலும் அத்தகையதே! வளைதலால் வளரி ஆனது போல் வளாரும் வளைதலால் பெற்ற பெயரேயாம்.*

**வளர்த்தம்மை:**

பெற்றோர் இருக்கும் போதும் அவரைப் பெற்றோர் இருப்பார் எனின், அவர் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதே பெரும்பாலான குடும்ப வழக்கம். இவ் வழக்கை விளக்குவது போல வளர்த்தம்மை என்னும் சொல்லாட்சி விளங்குகின்றது. வளர்த்தம்மை என்பது தாயைப் பெற்ற அல்லது தந்தையைப் பெற்ற பாட்டியாவார். இது தென்காசி வட்டார வழக்காகும்.

**வளவு:**

*மனை அல்லது நிலம் என்பவற்றின் எல்லை காட்டும் வகையில் வேலியிடுதல் வழக்கம். உயிர்வேலி எனினும் கல், மண்*

முதலிய சுவர் வேலியாயினும் இடுவர். வேலி என்னும் பொருளில் வளவு (வளைவு) என்பது நெல்லை மாவட்ட வழக்காக உள்ளது. 'வளவு' ஊர்களின் பின்னொட்டுப் பெயராகவும் உண்டு. எ-டு: மேலவளவு, கீழவளவு.

**வளன்:**

வளம் என்பதன் போலி வளன் ஆகும். அறம் அறன் எனப்படுவது போல. வளமிக உடையவன் வளன் எனப்படலும், அது பெயராதலும் உண்டு. மேலைநாட்டு அறிஞர் வீரமாமுனிவர் யோசேப்பு என்பார் பெயர்ப்பொருளை ஆய்ந்து வளன் எனப் பெயரிட்டார். வளன் சனித்த படலம் என்பது தேம்பாவணி சார்ந்தது.

**வளார்:**

வள் > வளார் = வளைந்து தந்து கட்டுதற்கு வளமாக அமைந்தது வளார்.

வளைதல் அமைந்தது வளார். வளைத்துக் கட்டுப்போட உதவும் வளார் புளிய வளார், கருவேல் வளார் எனப்பலவாம். தென்னை மடல், பனைமடல் ஆகியவற்றின் மேற்றோல் வளார் ஆகும். கட்டு கயிறு போலவே அமையும். ஆக்கை என்பதும் அது.

"வீசும் புளியாக்கை" ம.வ.

ஆர்க்கை > ஆக்கை. ஆர்க்கை = கட்டுதல்.

**வளி:**

வள் > வளி = காற்று, உயிர்.

வளங்களில் எல்லாம் உயர்ந்த வளம் வளி ஆகும். புல்முதல் அனைத்துப் பயிரும் உயிரும் வாழ உயிரும் உரமும் வளமும் வாழ்வுமாக இருப்பது வளியே. ஆதலால் அவ்வளம் கருதி வளி எனப்பட்டதாம்.

ஐம்பெரும் பூதங்களில் வெளிக்கும் ஒளிக்கும் இடைநிற்பது வளியாம். உலகியக்கும் வளம் வளியே என்க. மூச்சிலா வாழ்வு முடிந்த வாழ்வுதானே!

*கோடி குவித்தாலும் மூச்சு ஓடும் வரைக்கும் தானே கோடி ஈச்சுரர்! பின்னர் என்ன? பிணம் - சவம் - கட்டை!*

“குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு” - திருக். 338

**வளிமறை:**

*வளி = காற்று; மறை = மறைப்பு.*

*காற்று மிகுந்து வரும் போது அதனைத் தடுக்க அமைந்தவை வீடுகள். சுவரும் கதவும் காற்றுப் புகாதிருக்க நிலைத்தடையாகவும், வேண்டும் போது தடுக்கும் தடையாகவும் அமைந்தவை. ஆதலால் வளிமறை என்பது வீடு என்னும் பொருள் தருவதாயிற்று.*

“கல்குயின் றன்னயென் நல்கூர் வளிமறை” - புறம். 196

*பொருள்: “கல்லாற் செய்தாற் போன்ற எனது நல்குரவின் மிகுதியான் வளிமறையாகிய மனையிடத்து” ப.உ.*

**வளை:**

*வள் > வளை.*

1. *வளையும் மூங்கில்.*
2. *மூங்கிலால் கூரைவீட்டுக்குப் போடப்படும் வளை.*
3. *தவளை, எலி, பாம்பு முதலியவை தங்குதற்காகத் துளைக்கப்பட்ட துளையாம் வளை.*
4. *‘வளைக’, ‘வளைக்க’ என்னும் ஏவல்.*
5. *தொகுப்பாக அமைந்த வளாகம். வளை, வளைசல்.*

“வளைக்க வளைகின்ற வேய்” - தனிப்.

**வளிவாய்:**

*காற்று வருவதற்கு மனைகளில் அமைக்கப்படும் அமைப்பு ‘வளிவாய்’ எனச் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றது. ‘வளிவாய்ப் பொருந்தி’ இருந்து மகிழ்தல் இன்றும் வழக்கே. வளிவாய் = பலகணி (சன்னல்).*

**வளைகாப்புப் போடல்:**

வளைகாப்புப் போடல் = மகப்பேற்றுக்கு அழைக்கும் விழா.

வளையலும் காப்பும் போடுதல் பிறந்த குழந்தைப் பருவந் தொட்டே நடக்கத் தொடங்குவது. அதனைக் குறியாமல் 'வளைகாப்புப் போடல்' கருக்கொண்ட மகளை ஏழாம் மாதத் திலோ, ஒன்பதாம் மாதத்திலோ தாய் வீட்டுக்கு மகப்பேற்றுக்காக அழைக்கும் போது விழாவாக நிகழ்த்தப்படுகின்றது. அன்று பலவகைச் சோறுகள், பண்டங்கள் ஆக்கிப் படைத்தலும், அவ்விழாவுக்கு வந்த மங்கல மகளிர், கன்னியர், குழந்தைகள் ஆகிய அனைவரும் வளையல் போடுதலும் வழக்காம். வளையல் மகளிர் அணி; காப்பு ஆடவர் அணி. ஆனால் வளைகாப்பிலுள்ள காப்பு அணி குறியாமல், காவல் பொருள் தருவதாம். காப்புக் கட்டல் என்னும் ஊர் வழக்கை அறிக. வளையாகிய காப்பு என்பதுமாம். ஊர் விழாக்களுக்குக் காப்புக் கட்டுதல் பழவழக்கு.

**வளைதல்:**

வளைதல் = பயன்கருதிச் சுற்றி வருதல்.

தனக்கு ஆக வேண்டிய ஒன்றைக் கருதிப் பன்முறை வந்து பார்த்தலும் பேசுதலும் வளைதல் என்றும் வளைய வருதல் என்றும் சொல்லப்படும்.

வீட்டைச் சுற்றுதலும் ஆளைச் சுற்றுதலும் வளைதல்; அவ்வளைதலும் பல்கால் வருதல், தற்பயன் கருதியதேயன்றிப் பிறிதன்றாம்.

வாலைக் குழைக்கும் நாய் வளைய வரும்; வாயைக் குழைக்கும் இவரும் வளைய வருவர். இத்தகையவரே, "சுடக்குப் போட்டால் வருவார்" என்று சொல்லப்படும் இழிவுடையவராம். அன்பால் தாய், சேயையும்; சேய், தாயையும் வளைய வருதல் ஈதன்றாம். "வளைய வருகிறானே என்ன புது நாடகம்" என்பது வளைய வருதலை விளக்கும்.

**வளையம்:**

வளையம் என்பது வளைவான பொருளைக் குறித்தல் பொதுவழக்கு. வளையம் (வட்டம்) சுற்றிவருதல் எண்ணிக்

கணக்கிடுதல் போட்டி வகைகளுள் ஒன்று. அதன் வழியே வளையம் என்பதற்கு முறை, தடவை என்னும் பொருள்கள் உள்ளமை குமரி மாவட்ட வழக்காகக் காண்கிறது.

**வள்ளடை:**

வள்ளடை = நகை, பணம் முதலியன திருடுதல்.

தான் வளம் பெறுவதற்குப் பிறர்க்குரியதை அடைதல் வள்ளடை என்பது. இத் திருச்சிராப்பள்ளி வட்டார வழக்கு. ‘பயல்கள் வள்ளடைக்குப் போயிருக்கானுக” என்பது மக்கள் வழக்கு. வளத்தை அடைவதற்குச் செல்லுதல் - திருடச் செல்லுதல் - வள்ளடை.

**வள்ளம்:**

முகத்தலளவைப் பெயர்களுள் ஒன்று. திண்ணைப் பள்ளி ஆசிரியர்க்கு மாணவர் ஒவ்வொருவரும் இரண்டு வள்ளம் (நான்கு பெரிய படி) கம்பு சோளம் நெல் முதலிய தவசங்களைக் கொடுக்க வேண்டும். (தாய் தந்த வாழ்க்கைத் தேன் பக். 39).

**வள்ளல்:**

வள்ளல் = கருமி.

இல்லை என்னாமல் எல்லை இன்றி வழங்குவது வள்ளன்மை எனப்படும். நீயே என் கொடைப்பொருள் என ஒரு கோடு போட்டால் அக்கோட்டைக் கடந்து வரமாட்டானாம் பாரி. “வாரேன் என்னான் அவர் வரையன்னே” என்பது புறப்பாடல் (108). அத்தகைய வள்ளன்மையைக் குறியாமல் அதற்கு எதிரிடைப் பொருளையும் வள்ளல் என்பது தருதல் வழக்கில் உண்டு. “நீ பெரிய வள்ளல், தெரியாதா?” என்பதில் வள்ளல் என்பது கருமி என்னும் எள்ளற் பொருளாம். “உன் வள்ளல் தனம் ஊரறியும்” என்பது எள்ளல் என எளிதில் புரியுமே. “நீ பிறந்ததால்தானே பாரி செத்தான்” என்பது இனிக் கொடையால் புகழ்பெற முடியாதென இறந்தான் என்பதைக் குறித்துப் புகழ்வது போலப் பழிப்பதாம்.

**வள்ளி:**

***வள்ளி:[1]***

*வள்ளி = வளமிக்கது; கிழங்கு வகைகளுள் ஒன்று.*

“கொழுங் கொடியில் விழுந்த வள்ளிக்
கிழங்கு கல்லி எடுப்போம்”

*என்பது குற்றாலக் குறவஞ்சி.*

*பச்சையாகத் தின்னவும், அவித்துத் தின்னவும், வாட்டித் தின்னவும், பொரியல் அவியல் கூட்டு என ஆக்கி உண்ணவும் பயன்படுவது வள்ளிக் கிழங்கு. அக்கொடி இருந்த குழியில் கிடந்த பிள்ளை வள்ளி எனப் பெயர் பெற்றமை தொன்மச் செய்தி. ‘வள்ளி’ என்பது தொல்காப்பியச் சொல்லாட்சி.*

***வள்ளி:[2]***

*கொடிநிலை, கந்தழி, வள்ளி எனக்கடவுள் வாழ்த்தொடு வருவனவற்றைத் தொல்காப்பியர் சுட்டுவார். அவர்கூறும் வள்ளி பேராய்வுப் பொருளாயது. உரையாசிரியர் உரை, நச்சினார்க் கினியர் உரை என்பவற்றுடன் ஆய்வுரைகளும் கிளர்ந்தன. அவற்றில் ஒன்று, வள்ளி என்பது அறன்வலியுறுத்தல் என்பார் அறிஞர் மு.இராகவர்.*

**வள்ளிசு:**

*“அவன் வள்ளிசாக அள்ளிக் கொண்டு போய்விட்டான்” என்பர். வள்ளிசு என்பது மொத்தமாக, ஒன்று விடாமல் என்னும் பொருளது. வளமாக - ஏராளமாக- என்பதன் வழிவந்த வழக்காகும். இது நெல்லை, முகவை வழக்கு.*

**வள்ளூரம்:**

*வள் + உரம் = வள்ளூரம்.*

*வளப்பமும் வலிமையும் அமைந்த தோல். வல்லுரம் > வள்ளூரம்.*

*வல் > வல்சி = ஊன்தசை; அதை மூடி யிருப்பது. வள்பு ஆகிய தோல்.*

*தோல் மத்தளம் முரசு பறை முதலியவற்றில் கட்டுற்றுப் படுகின்ற தட்டா, தடவா, அடிப்பா, அறைவா அனைத்தும் படும்பாட்டை அதுவும் அறியாது. அறிவுடையாராலும் அளந்து கூறவும் முடியாது.*

**வள்ளுவர்:**

*அரசர் பிறந்த மங்கலநாள், மணநாள், வெற்றிநாள் என்பவற்றுக்கு யானைமேல் இருந்து முரசறையும் பெருமகன் வள்ளுவ முதுமகன் எனப்படுவான். நாஞ்சில் வள்ளுவன் என்பான் ஔவையாரால் பாடுபுகழ் பெற்ற வள்ளன்மையன்; வள்ளுவன் பொற்றை எனப்படும் நாஞ்சில் நாட்டு வளமான குறிஞ்சிப் பகுதி அவன் ஆட்சி நடத்திய பகுதியாகலாம். அவனால் அப்பெயர் கொண்டதுமாகலாம். பாரி பேகன் முதலியோர் வாழ்ந்தவை எல்லாம் மலையொடு தொடர்புடையவை. வள்ளுவர் குடியில் பிறந்தவர் வள்ளுவர்; திருக்குறள் இயற்றிய வாய்மையர்; முப்பால் அறவர். குடிப்பெயரால் வள்ளுவர் எனப்பட்டார். அவர் முரசறைவாராய் இருந்திரார். அவர் அழியாப் பொருள்களை உலகெல்லாம் கூட்டுண்ணத் தக்க அறத்தை முப்பாலாக்கி முரசு முழங்கிய பெருமையர். அவர்தம் பொருளியல் திறமும் தேர்ச்சியும் கண்டு அரசின் உள்படு கருமத் தலைவர் என்பார் நாவலர் பாரதியார். அவர் வினையின் நீங்கி விளங்கிய அறிவர்; முழுதுறும் அறவாழ்வர்; அறத்தால் பொருள்தேடி பொருளால் உலகெலாம் வாழையடி வாழையாய் முழுநிறை மதிபோல் வாழக் காமத்துப்பால் வைத்த கணியர். வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வ வாழ்வர்.*

**வள்ளைப்பாட்டு:**

*உலக்கைப் பாட்டு, வள்ளைப்பாட்டே. சுண்ணம் இடித்தல் என்பதும் வள்ளைப்பாட்டே.*

"பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள்"

*கண் குவளை அல்ல; கொலைக் கொடியவை என்பது சிலம்பு (7:20). குறுவாள் = குற்றுவாள்.*

*பரணியில் பேய்கள் கூழடுதற்கு அரிசி குற்றுதல் விரிவாக வரும். சிந்தாமணிச் சுண்ணமிடிப்பு தேர்ச்சி மிக்கது.*

*களிற்றுக்கோடு உலக்கை; சேம்பின் இலை சுளகு; மூங்கில் நெல்லைச் சந்தன உரலில் பெய்து இடித்தல் ஆகியன பற்றிக் கலித்தொகை ஒலிக்கும் (41).*

*சுண்ணமிடிக்கும் ஆர்ப்பென்ன மெலியதா?*

"ஆடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை, ஆர்ப்ப ஆர்ப்ப
நாமுமவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி ஆக்கு மங்கை
பங்கன் எங்கள் பராபர னுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடகப் பொற்சுண்ண மிடித்து நாமே" - திருவா.

**வறுமை:**

*எல்லா வளமும் வாய்ப்பும் அற்றுப் போய்விட்ட நிலை வறுமையாம். உண்டி உடை உறையுள் என்னும் இன்றியமையாப் பொருள்களும் இல்லா நிலை வறுமை என்க.*

*வளம் என்பவை எல்லாம் வற்றிக் காய்ந்து போய்விட்ட நிலை வறுமை எனப்பட்டதாம்.*

*வறுமை என்பது போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என்பது பேராசிரியர் விளக்கம், உள்ளத்து வறுமையே வறுமை. உள்ளத்து நிறைவே செல்வம். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்பது குமரகுருபரர் வாக்கு. இடும்பைக்கு இடும்பை படுக்க வல்லாரை, வறுமையை வறுமைப்பட வைப்பாரை சாந்துயரும் ஏந்துமின்பெனக் கொள்வாரைத் தாமே வள்ளுவர்,*

"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது" - திருக். 235

*என்றார்.*

**வறை:**

தண்பதம் இன்றி வற்றிப் போனது வறை. நன்கு வெதுப்பி வறுக்கப்பட்ட பொரியல் வறையல் எனப்படும். வறுக்கும் ஓடு வறையோடு எனப்படும். பொரி யரிசி வறுக்கப் பயன்பட்டது பழநாளில் மண்பானை உடைந்த வறையோடே. வறையோட்டின் அடிப்பகுதி கோழிமுட்டை வைத்து அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் ஈனில் ஆகத் திகழ்ந்தது. இக்கால் எல்லாம் பொறிகளே ஆயினும் இன்றும் சிற்றூர்கள் வறையோட்டு அடையும் குஞ்சு பொரித்தலும் இயற்கை வகையால் நிகழ்தல் கண்கூடு.

**வற்கடம்:**

மண்ணின் மேலேயுள்ள நீர்ப்பதனை அன்றி, அகத்தேயுள்ள ஊற்றுநீர் முதலாம் நிலத்தடி நீர் அற்றுப்போக வலியதும் கெட்டிப் பட்டதும் ஆம் பாறை நிலம் போல ஆக்கும் வெப்பு மல்கிய வறள் நிலை வற்கடமாம். "பன்னீரியாண்டு வற்கடம் சென்றுழி" என்னும் இறையனார் களவியல். வல் + கடம் = வற்கடம்.

**வற்றல்:**

***வற்றல்:***[1]

வற்றல் = மெலிவு.

ஈரப்பசை வற்றிப் போதலால் வற்றல் ஆகும். மிளகாய் வற்றல், மிதுக்கு வற்றல், கொத்தவரை வற்றல் எனப் பலவகை. வற்றலைக் கொண்டு வைக்கும் குழம்பும் வற்றற் குழம்பு எனப்பட்டது. பின்னர் காய்கறிகளைப் போட்டு வற்றக் காய்ச்சப்பட்ட குழம்பும் வற்றக்குழம்பு ஆயிற்று. காயப் போடுமுன் இருந்த அளவிலும் எடையிலும் காய்ந்த பின் உள்ள அளவும் எடையும் குறைந்து போதலால் வற்றலுக்கு 'மெலிவு' என்னும் பொருள் உண்டாயிற்று. மெலிந்தவனை வற்றல் என்பது வழக்கு. மெலியவரை வற்றுகிறார் என்பதும் வழக்கே. "அது ஒரு வற்றல்! என்ன சாப்பிட்டாலும் அதன் உடம்பு அதுதான்" என்பது உடலாய்வுக் குறிப்பு.

**வற்றல்:[2]**

*உலர்ந்து போன மிளகாய், சுண்டை, மெதுக்கு, வெண்டை, அவரை வற்றல்கள் பொதுவழக்கானவை. மெலிந்து எலும்பும் தோலுமாக இருப்பவரை வற்றல் என்பது முகவை நெல்லை வழக்கு. ஈரம் வற்றிப் போனது - பசையாகிய வலிமை அற்றுப் போயது - வற்றல் என்க.*

**வனப்பு:**

*வன்னிலம் எனப் பெறுவன முல்லையும் குறிஞ்சியுமாம். காடும் மலையும் கவின் கொள்ளைகள்; கைபுனைந்தியற்றாக் கவின் பெருவனப்பின; ஆகலின் வனத்தினின்று வனப்புச் சொல் அழகுக்கு வாய்த்ததாம். குறஞ்சிக் கபிலனும் முல்லைப் பூதனும் வனப்பில் தோய்ந்து வளமுறப் பாடியவை தனி வனப்பினவாம்.*

**வனைதல்:**

*வளைதல் > வனைதல்.*

*சக்கரத்தில்மேல் மண்ணை வைத்துச் சுழற்றிக் குயவர் குடம், பானை, சட்டி முதலியவை செய்தல் வனைதல் எனப்படும். அவர்கள் செய்யும் கலங்கள் வளைகலம் என்பனவாம்.*

**வன்பு துன்பு (வம்பு தும்பு):**

*வன்பு= வல்லாண்மையால் துயரூட்டல்.*

*துன்பு= வல்லாண்மை யின்றியும் சொல்லாலும் கரவாலும் துயரூட்டல்.*

*“வன்பு துன்புக்கு போகாதே; வன்பு துன்புகளில் மாட்டிக் கொள்ளாதே” என்பவை அறிவுரைகளாம். வன்படியாக என்பது வம்படியாக என வழங்குவது போல வன்பு ‘வம்பு’ எனவும் துன்பு ‘தும்பு’ எனவும் வழங்குகின்றனவாம். வன்பர் வம்பர் எனவே வழங்குகின்றனர். இனி, வம்பு பொய்யும் வஞ்சகமும் கலந்ததாம், அதனையோ, துன்புறுத்தலையோ, கொள்ளாதே என்றுமாம்.*

✲ ✲ ✲

# ‘வா’ வரிசைச் சொற்கள்

**வா:**

*வகர ஆகாரம்; உயிர்மெய்; இடையினம். வா என்னும் ஏவல். வாவா என அடுக்கும், 'வா வா வா' என மூவடுக்கும் உண்டு.*

*ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா!*

*உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவாவா!- பாரதியார்*

*வாழ்வு > வா. வாழ்வரசி > வாவரசி; இடை கடைத்தொகை.*

**ஒ.நோ.:**

*வீழ்வு > வீவு.*

*வாய் > வா + தாரி = 'வாதாரி'. தாரி = தருபவன்(ள்). வாதாரி, ஓயாமல் பேசுபவன்(ள்).*

**வாகு:**

*வாகு = அழகு.*

*அழகில் தோய்ந்த 'வாகு', 'வாய்த்தது' என்னும் பொருள் உடையதாம். 'கை வாகில் வை' என்பர். வாய்க்கில், வாக்கில், வாகில் என வந்ததாம். ஒழுங்கு என்னும் பொருள் வாகுக்குண்மை அகரமுதலிகள் சுட்டும். ஒழுங்குற அமைந்தது அழகெனக் குறித்ததாம்.*

**வாகை:**

*வாகு > வாகை = வாகை மரம், வாகைப்பூ.*

1. *வாகை = வெற்றி, வாகைத்திணை.*
2. *வாகை = ஊர்; வாகையூர், வாகைக்குளம்.*
3. *வாகை = அணி; வாகுவலயம் (வெற்றி யடையாளம்).*
4. *வாகை = ஓங்கு தாங்காக விரைவில் வளரும் மரம்.*
5. *வாகை = வாகான ஆள்; ஓங்கு தாங்கான ஆள்.*

**வாகை மாலை:**

பகைவரை வென்று புகழ்படைத்து வாகை மாலை சூடுவதை ஆசிரியப்பாவாற் கூறுவது வாகை மாலையாகும்.

"வாகை மாலையே வட்காரை வென்று
வாகைத்தார் சூடும் வயமது வழுத்தலே" - பிர. தீபம். 49

இந்நாள் விளையாட்டு முதலியவற்றில் பெறும் வெற்றியை யும் 'வாகை சூடுதல்' என்னும் வழக்கிருத்தல் அறிக. இனி, இருமடியாக 'வெற்றி வாகை' சூடினான் என்பதும் அறிக.

**வாக்கு:**

வாய்க்கு > வாக்கு.

வாயை இடமாகக் கொண்டு பிறப்பது சொல் வாக்கு எனப்பட்டது. "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்" என்பதனை முதலாக உடைய ஆட்சி மூதுரை, 'வாக்குண்டாம்' எனப்பட்டது. நாவுக்கரசர் வாக்கின்வேந்தர், வாகீசர் எனப்பட்டார். ஈயர் > ஈசர் > ஈயும் வண்மையர். யகரம் சகரம் ஆதல் போலி.

"உம்வாக்கை நம்பால் எழுத்தை நம்புவதற்கு என்ன தேவை?" ம.வ.

**வாங்கரிவாள்:**

வாங்கு + அரிவாள் = வாங்கரிவாள். வாங்கு = வளைவு.

வளைந்த அரிவாள். ஆடு மேய்ப்பவர் எப்பொழுதும் வாங்கரிவாளுடன் ஆடோட்டிக் கொண்டு போவர்.

**வாங்கி:**

'வாங்கி' என்பது எச்சம் போல் தெரிந்தாலும் வாங்குதல், வளைதல் பொருளில் வாராமல் நிலையின் மேல் போடப்பட்ட பலகையைக் குறிப்பதாகத் திருச்செங்கோடு வட்டார வழக்கில் உள்ளது. கம்பால் அமைந்த அதனைக் கம்பை என்பது முகவை வழக்கு. தாங்குதலாக அமைதலால் தாங்கி என்பது நெல்லை வழக்கு. வாங்குதல், தாங்குதல், இரண்டும் பொருள் வைக்கும் தட்டு என்னும் பொருளில் வழங்குவனவாம்.

**வாங்கியிருத்தல்:**

*நெருங்கலாக அமர்ந்திருக்கும் போது அந் நெருக்கத்தைத் தளர்த்தும் வகையால் அகன்று அல்லது தள்ளி யிருக்கச் சொல்வது வழக்கம். அகத்தீசுவர வட்டாரத்தில் தள்ளி இருத்தலை வாங்கியிருத்தல் என்பர். வாங்கி இருத்தல் உள்வாங்கி (அ) பக்கம்வாங்கி இடம் விட்டு இருக்கச் செய்தலாம்.*

**வாங்கு:**

*வங்கு > வாங்கு. வங்கு = வளைவு.*

"உலைவாங்கு மிதிதோல்" - குறுந். 172

**வாங்குதல்:**

*ஒன்றை விலைகொடுத்தோ கொடாமலோ பெறுதல் வாங்குதலாம். அது பொது வழக்கு.*

*காற்று வாங்குதல், மூச்சு வாங்குதல், யானை கவளம் வாங்குதல் போல்வன வாங்குதலாம். ஆதலால், இழுத்தல், ஏற்றுக் கொள்ளல் பொருள், வாங்குதலுக்கு உண்டு எனச் சூடாமணி நிகண்டு சொல்லும்.*

**வாசம்:**

*வாயம் > வாசம் = மணம்.*

*மலர் வாய் திறப்பதால் உள்ளிருந்த மணம் வெளிப்படுதல் வாயம் எனப்பட்டு வாசம் ஆகியது.*

**ஒ.நோ.:**

*வாயில் > வாயல் > வாசல்: தலைவாசல்.*

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்" - திருக். 1274

"சுரும்புண் மலர்ந்த வாசம் கீழ்ப்பட" - குறுந். 309

**வாசவர்:**

*வாசம் > வாசவர்.*

*நறுமணப் பண்டங்களை விற்பவர்.*

"பாசவர் வாசவர்" - சிலப். 5:26

***பொருள்:*** *"பஞ்சவாசம் விற்பார். அவை, 'தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம் கப்பூரம் சாதியோ டைந்து' என இவை" அடியார்க்.*

**வாஞ்சனை:**

*வாஞ்சனை, (வாஞ்சை) என்பது அன்பு, பற்று என்னும் பொருளில் வழங்கும் சொல். "அவனுக்கு என்மேல் வாஞ்சனை மிகுதி. அவன் அப்படிச் சொல்லியிருக்க மாட்டான்" என வாஞ்சனையை மதித்துக் கூறுவர். இது நெல்லை வழக்கு.*

**வாடகை:**

*வாழ் + தகை = வாடகை.*

*ஒரு பொருளைப் பயன்படுத்துதற்காகவோ, குடியிருத்தற் காகவோ செலுத்தும் தொகை.*

*சொந்த வீடு இல்லை என்றால் தம் நிலைக்குத் தக வாழுவதற்கு வாடகை வீடு பிடிப்பது வழக்கம். வாழ்வதற்குத் தக்கதாக அதனைப் பார்த்தலால் வாடகை என்று வழங்கப் பட்டது.*

வாடகை என்பது முதற்கண் குடிக்கூலியாக மட்டுமே இருந்தது. வீட்டிற்கு அமைந்த வாடகை பின்னே நில வாடகை, வண்டி வாடகை, வாடகை நிலம், வாடகைக் கலங்கள் எனப் பெருகியது. வாடகை நாள் வாடகை, மாதவாடகை என்பவை அன்றி மணியளவு வாடகையும் உண்டு.

**வாடல் வதவல்:**

வாடல்= வாடிப் போனவை.

வதவல்= காய்ந்தும் காயாதும் இருப்பவை.

இலை, காய், கறி, கனி முதலிய நீர்ப்பதப் பொருள்கள் வெப்பத்தாலும் வெப்பக் காற்றாலும் வாட்டமுறும். வாட்டமுற்றவை வாடலாம். செடி கொடிகள் நீர் வறட்சியாலும் வாடலுண்டு. ஆனால் வதவல் வேறு வகையினது. உலரப் போட்டும் முற்றிலும் உலராமல் அள்ளி வைத்துவிட, அதிலுள்ள ஈரம் அகலாமல் தங்கிவிடுதலாம். வதவலாக இருப்பது தான் கெட்டுப் போவதன்றித் தன்னை அடுத்ததையும் தன் பதத்தால் வதவலாக்கிக் கெடுக்கும். வாடிப் போனது வாடல்; வாட வேண்டும் அளவு வாடாதது வதவல். “வாட வெற்றிலை வதங்க வெற்றிலை வாய்க்கு நல்லால்ல” என்பது நாட்டுப் புறப்பாட்டு.

**வாடாத மாலை:**

மையலால் தவம் புரிய விருப்பமிக்க கன்னியர் எழுவரும் மாலை தருவதாகப் பாடுதல் வாடாத மாலை எனப்படும்.

“மாலால் தவம்புரிந்து மாதுலகேழ் கன்னிமார்
மாலைதரல் வாடாத மாலையாம்” - பிர. திர. 25

**வாடாப்பூ:**

வாடாப்பூ = பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப் பட்டவை ஆகும்.

வாடும் பூக்களே அனைத்தும். அலர்ந்து செதும்பாய்ச் செத்தையாய்ப் போகவே செய்யும். வாடா மல்லிகை என்பது மணமற்றது; இதழ்களால் மட்டுமே ஆயது; தேன் மணம் என்பவை இல்லது.

*வாடா விளக்கு என்பது நிறைவிளக்கு என்று மக்களால் இன்றுவரை வழங்கப்படுவது. ஒளியேற்றப்படாதது அது. சங்கச் சான்றோர் நாளில் வாடாப்பூ வழங்கப்பட்ட செய்தி மிகப்பல. அது பொற்பூ, பொன்னரி மாலை; வெள்ளி நாரால் தொடுக்கப்பட்டது. புலவர் பாணர் கூத்தர் போர்விருது பொருட்பேறு மிக்கார் முதலோர்க்கு வழங்கப்பட்டது.*

"வாடாப் பூவின் பொய்கை" - நற். 16

"வாடா மாலை துயல்வர" - நற். 90

"வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே" - புறம். 319

**வாடி:**

*மரக்கடைகள் பல மரவாடி எனப்பெயர் தாங்கியுள்ளன. அந்த மரக்கடைகள் மரங்கள் சட்டங்கள் விற்பனை செய்வதுடன், மர அறுவை வேலையும் நடைபெறுவதாக இருக்கும்.*

*மர அறுவை செய்யச் சரிவான மரப்பாலம் போல் அமைப்பு இருக்கக் காணலாம். அச்சரிவான அறுவை மரப்பாலமே வாடி என்பதாம். வீடு கட்டும் போதும் தளம் போடும் போதும் நீர்வாட்டம் பார்ப்பர். நீர் வழியுமாறு அல்லது வடியுமாறு சற்றே தளம் சரிவாக இருந்தால்தான் கழுவி விடும் நீர் வழியும். அதற்கு நீர்வாட்டம் பார்ப்பதைக் கொண்டு, சரிவாக நீர்வடிய வாய்த்த வாய்ப்பே வாடியாய், பின்னர்ச் சரிவாக அமைக்கப்பட்ட மர அறுவைக்குரிய பாலத்திற்குப் பெயராய் அமைந்ததாம்.*

*இவ்விரண்டற்கும் முற்பட்டது இயற்கை இயங்கியல் வழியமைந்த வடி நிலமாம். சற்றே சரிவாக - மேட்டுப்பகுதியைச் சார்ந்த சரிவாக - அமைந்துள்ள இடத்தில் உண்டாக்கப்பட்ட ஊரை, அம்மண்ணமைப்புக் கொண்டு நீர்வடிவு கண்டு 'வாடி' (வடி > வாடி) என வழங்கினர். துறையூரை அடுத்து இரண்டு வாடிப் பெயர்கள் அமைந்த ஊர்கள் உள்ளன. மேலவாடி, கீழவாடி என்பன அவை.*

*வாடிப்பட்டி என்பது ஒவ்வொரு வட்டாரத்திலும் உண்டு. பழங்கால ஏறு தழுவுதல் இந்நாள் மஞ்சு வெருட்டாய் - சல்லிகட்டாய் - மாடு பிடியாய் வழங்குகின்றது. அங்கேயும் வாடி*

வாயில் வழியேதான் காளைகள் விடப்படுகின்றன. அவ் ‘வாடி’என்பது என்ன?

வட்டமாய் அமர்ந்து பார்க்க அமைக்கப்பட்ட இருக்கைப் பலகைகள் உயரத்திலிருந்து சரிவாக இறங்குவதைக் காணலாம். அதுவே வாடியாம். அதனால் அவ்வழி ‘வாடி வாயில்’ எனப்பட்டது.

செடி கொடி மரம் முதலியன வாடிப் போகிறதே. அவ் வாடுதல் எப்படி? செடி கொடி முதலியவற்றுக்குச் செல்லும் நீர் வாட்டம் வேரிலிருந்து கிடைக்கவில்லை. இருந்த நீரும் காற்றாலும் வெயிலாலும் (நீர் வாட்டம்) அற்றுப் போயிற்று. அதனால் வாடிப் போயிற்றாம். இனி, வாட்டுதல் என்பது நீரற்றுப் போகச் செய்தலும் பசையற்றுப் போகச் செய்தலுமாம்.

‘வாடி’எனப் பெண்பாலரை அழைக்கின்றரே! அவ்வாடி என்பது என்ன எனின் ‘வா அடி’’வாடி’என்பது காண்க.

**வாடியம்:**

திண்டுக்கல் வட்டாரத்தில் வாடியம் என்னும் சொல் சம்பளம் என்னும் பொருளில் வழங்குகின்றது. வாடிக்கையாக (வாரந்தோறும், நாள்தோறும், மாதந்தோறும்) வாங்கும் சம்பளத்தைக் குறித்தது இது.

**வாடு:**

1 .வாடு = வாட்டி உலர்ந்த மீனும், உலர்ந்த ஊனும் வாடு என வழங்கும்.

2. வாடு = வாடிக்கிட என்னும் ஏவலாணை மொழி.

3. வாடு = மெலிவு. வாடுபுடைத்தழீஇ. புடை = பக்கம், இடுப்பு.

“வாடூன் கொழுங்குறை” - புறம். 328

“வாடு பூஞ்சினை” - குறுந். 343

**வாடை:**

***வாடை:*** [1]

*வடக்கில் இருந்து அடிக்கும் குளிர்காற்று வாடைக் காற்றாகும்.*

"வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇ" - சத்திமுற். தனிப்.

*வாடை வருத்துதல் பிரிந்த மகளிர்க்குப் பெருந்துயர் செய்வதாம். வடக்கில் இருந்து அடிக்கும் வாடைக்காற்று வடந்தை எனவும் படும்.*

*ஒ.நோ.: தென்காற்று > தென்றல்.*

***வாடை:*** [2]

*வாடை = மணம்.*

*காற்றைக் குறிப்பதை அன்றி மணத்தையும் குறிக்கும். "என்ன ஏற்றிக் கொண்டு போகின்றான்; வாடை குடலைக் குமட்டுகிறது" என்பர். வாடை என்பது மது, கள், சாராயம் என்பது, மதுரை இழுவை வண்டியர் வழக்காகும். அவர்கள் பொருளில் நறுமணம்.*

**வாடைக் கொண்டல்:**

*வடகிழக்கில் இருந்துவரும் காற்றை வாடைக் கொண்டல் என்பது இராமேசுவர வட்டார வழக்கு. வடக்குக் காற்று வாடை; கிழக்குக் காற்று கொண்டல். ஆதலால் வடகிழக்குக் காற்று வாடைக் கொண்டல் எனப்பட்டது மிகப் பொருந்திய பெயரீடாம்.*

**வாட்ட சாட்டம்:**

*வாட்டம்= வளமான உயரம்.*

*சாட்டம்= வளமான கனம்.*

*வாட்டம் = வாளம், வாளிப்பு எனவும் வழங்கும். வாளமான உடல், வாளிப்பான தோற்றம் என்பர்.*

*சட்டம் என்பதும் சட்டகம் என்பதும் உடல். 'எற்புச் சட்டகம்' என்பதும் உண்டு. இவண் சாட்டம் உடற்கட்டினைக் குறித்து நின்றது. ஒழுங்கமைந்த நெடுமை வாட்டமும், ஒழுங்கு அமைந்த கனம் சாட்டமுமாம். 'நீர் வாட்டம்' பார்த்தல் அறிக.*

**வாட்டம்:**

***வாட்டம்:*[1]**

*வாடிப்போதல் எனப்படும் வாட்டம் வேறு. இது, நீர் வழியும் சரிவு எனப்படும் வாட்டமாகும். மனையில் தளம் போடும் போது, தளத்தைக் கழுவி விடும் நீர், தானே வடிந்து வெளியேறும் வகையில் சாய்தளமாக அமைப்பது வாட்டம் எனப்படும். நீர்வாட்டம் என்பர். இது கொத்தர் வழக்கு.*

***வாட்டம்:*[2]**

*வாட்டம் வாடுதல், நீரோட்டம், சரிவு என்று பலவகைப் பொதுப் பொருள் தரும் சொல். அது பசி என்னும் பொருளில் கருங்கல் வட்டார வழக்கில் உள்ளது. பசி தானே வாட்டத்தை உண்டாக்குவது. நீரில்லாப் பயிர் வாடுதலும் அதுதானே.*

**வாட்டி:**

*வாட்டுதல் பொருளிலோ வதைத்தல் பொருளிலோ வாராமல் தடவை, முறை என்னும் பொருளில் சேரன்மா தேவி வட்டாரத்தில் வழங்குகின்றது. "எத்தனை வாட்டி சொல்லியும் அவன் கேட்கவில்லை" என்பர். வட்டம் சுற்றும் எண்ணிக்கை வழி வந்த சொல் இது. வளையம் என்பது போல.*

**வாட்டு:**

*வாட்டப்பட்ட தொடுகறி வகையாகிய பொரியல் ஔவையாரால் வாட்டு என வழங்கப்பட்டது. அது,*

"வரகரிச் சோறும் வழுதுணைங்காய் வாட்டும்" - தனிப்.

*என்பது.*

*வெயிலில் நன்கு உலர்த்தப்பட்டதும் கருநிறம் உற்றதுமாம். மீன் உலர்வு, கருவாடு எனப்படுதல் ம.வ.*

வாட்டு, ஏவல். சருக்கரை வள்ளிக்கிழங்கு மொச்சைக்காய், நிலக்கடலை, பலாக்கொட்டை முதலியவற்றைத் தீயில் வாட்டித் தின்னல் இன்றும் சிற்றூர் வழக்கு. அவ்வாறே கம்பங்கதிர் சோளக்கதிர் வாட்டித் தின்னலும் வழக்கே.

"மனைவாழ் அளகின் வாட்டொடு பெறுகுவிர்" - பெரும்பாண். 256

**வாணம்:**

வாழ் + நம் = வாணம்.

வாழ்வுக்கு வாய்ப்பாக வீடு கட்டும் போது சுவர் எழுப்புவதற்கு, நிலத்தை அகழ்ந்து மணல், சல்லி, சாந்து முதலியவை இட்டுக் கெட்டிப்படுத்துவர். அதற்கு வாணம் தோண்டுதல், வாணம் போடுதல் என்பர். கடைகால் இடுதல், கால்கோள் செய்தல் என்பனவும் இதுவாம்.

**வாணன்:**

வாழ் + நன் = வாணன்.

தஞ்சைவாணன் கோவைப்பாடல் கொண்டவன். பாடியவர் பொய்யா மொழியார்.

வாணன் = ஒரு பெருவள்ளல் (தனிப்.).

இக்காலத்தில் தமிழ்வாணர் என்னும் பெயரினர் பலர். மலைவாணர் என்பார் கானவர்.

"தென்புல மருங்கில் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்" - மதுரைக். 203-204

**வாணிகம்:**

வாழ் > வாண் + இகம் = வாணிகம்.

உலக நல வாழ்வுக்கு உரியதை நடுவுநிலைக் கோல் கொண்டு, கொண்டும் கொடுத்தும் வாழ்பவரும் உலகைப் பண்டமாற்றால் வாழச் செய்பவரும் வாணிகர் எனப்பட்டனர். அவர் செயல் அறச் செயலின் சான்றாக விளங்கியது.

கள்ளம், கலப்படம், கடத்தல் என்பவை இல்லாதது வாணிகம். இந்நாளில் அதுவே வாணிகம் ஆய்விட்டது.

"அறவிலை வாணிகன் ஆய் அலன்" - புறம். 134

அறத்தை விலைக்கு விற்பாரிடையே ஓரிரு வாய்மை வாணிகர் இருந்தால் அவர் மெய்யறவோராம்.

**வாண்டு:**

வண்டு > வாண்டு.

பெற்றோரையும் உற்றார் உறவினரையும் சுற்றிச் சுற்றிச் சுழலும் வண்டெனத் திரியும் குழந்தையரை, வாண்டு என்பது வழக்கு. பெரிதும் பார்ப்பனர் வழக்கு. பெரும்பாலும் 'வாண்டுப்பயல்' என்பதால் பால் பொதுமை விலக்கியதுமாம்.

**வாது:**

மரத்தின் தாழ் கிளையை வாது என்பது திருப்பரங்குன்ற வட்டார வழக்காகும். வளைந்து தாழ்ந்த கிளையை 'வாது' என வழங்கினர். அக் கிளையை வளைத்து ஆட்டைத் தின்னச் செய்தல் கண்டு, ஆயன் வெட்டு அறா வெட்டு என்பது பழமொழி. கிளை அற்றுப் போகாமல் வெட்டித் தாழ விடுதலால் வாது என்பது பொருந்துகின்றது. வாது = வளைந்தது, வளைக்கப் பட்டது என்பவற்றின் வழியதாகலாம்.

**வாதுவன்:**

வாகுகன் > வாதுவன் = குதிரை செலுத்துவோன்; வாகுகன் என்பான் வாதுவன் ஆனான். வாகு = பக்கம், நல்லது, வெற்றி.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு" - திருக். 422

என்பது போல் வழியின் வாகு, குதிரையின் வாகு, ஏறியிருப்போர் வாகு என்பவை அறிந்து இயக்க வல்லான் வாகுவன் என்னும் வாதுவனாம். நளன் வாகுவனாக இருந்தமை அறிக.

"காமக் குதிரையை
வாதுவன் வாழிய நீ" - கலித். 96

**வாதோரண மஞ்சரி:**

*யானையை வயப்படுத்தி அடக்கினவருக்கும், எதிர்த்த யானையை வெட்டி அடக்கினவருக்கும், பற்றிப் பிடித்துச் சேர்த்தவருக்கும், அவர்தம் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப் பாவால் தொகுத்துப் பாடுவது வாதோரண மஞ்சரியாகும்.*

"யானை வயப்படுத்தி அடக்கின வருக்கும்
எதிர்பொரும் யானையை ஈர வெட்டி
அடக்கின வருக்கும் அதட்டிப் பிடித்துச்
சேர்த்த வருக்கும் வீரச் சிறப்பை
வஞ்சியாற் பாடுவ ததுவா தோரண
மஞ்சரி எனப்பெயர் வைக்கப் படுமே" - முத்துவீ. 1079

* *'யானைத் தொழில்' காண்க.*

**வாமம்:**

*செல்வம், ஒளி, மார்பு முதலிய பொருள் தரும் வாமம் அழகும் சுட்டும். வாமன், வாமி என்பவை தெய்வக் குறிப் புடையவை. தாமரைக்கண்ணன், கண்ணன் எனக் கண்ணழகால் குறிக்கப் பெறுவான். அவனை வாமலோசனன் எனவும் திருமகளை வாமலோசனை எனவும் வடமொழியாக்கிக் காட்டல் இரு பிறப்பியாம்.*

**வாம்:**

*வாவும் > வாம்.*

*வாவும் = தாவும். தாவித் தாவிச் செல்லும் பரி 'வாஅம் பரி''வாம்பரி' என வழங்கப்படும்.*

*வாவும் பறவை வெளவாலாதல் அறிக.*

"வாம்பரிய திண்தேர்" - மதுரைக். 51

**வாயடை:**

*வாய் + அடை = வாயடை = வாயின்கண் வைக்கப்பட்டு உட்கொள்ளும் உணவு வாயடை எனப்பட்டது.*

*ஒ.நோ.: கையடை = கையில் ஒப்படைப்பது.*

“வாயடை அமிர்தம்” - பரிபா. 2:69

**பொருள்:** *“வாயின்கண் அடுக்கப்படுதலின் உணவிற்கு ‘வாயடை’ என்று பெயராயிற்று” ப.உ.*

**வாயாடி:**

*வாயாடி = ஓயாப் பேசி.*

*வாயாடுதல் உண்ணுதலுக்கும் ஆம். ஆயினும் அதனைக் குறியாமல், பேசுதல் பொருளில் வழங்குவது வழக்குச் சொல்லாம். ஓயாமல் பேசுபவரை வாயாடி என்பதும், பெரிய வாயாடி என்பதும் வழக்கம். குழந்தை நிலையில் வாயாடி என்பது பெருமையாகப் பெற்றோராலும் மற்றோராலும் புகழப்படும். ஆனால், சற்றே வயதாகிவிட்டால் குறையாகவும் பழியாகவும் ஆய்விடும். குழந்தைப் பருவத்திற்கு ஒரு தனிச்சிறப்பு, செய்யும் குறைகளுக்கும் தனி மதிப்பு. ‘வாயாடல்’ என்பதினும் இழிவும் கொடுமையும் உடையது கையாடல். கையாடலால் தலை யெடுத்து வாழ்ந்தவரும் உண்டு. தலைமறைவானவரும் உண்டு. முற்றாகத் தலைமறைந்தவரும் இல்லாமல் இல்லை.*

**வாயில்:**

*இல் வாய் > வாயில்.*

*சொன் மாறி நின்றும் பொருள் மாறாமை இலக்கணச் சொல் போல்வதாகிய இலக்கணையாம். இல் முன் என்பது முன்றில் என்றும், முற்றம் (முன் அகம்) என்றும் ஆகியமை கருதுக.*

“வாயில் வந்து கோயில் காட்ட” - சிலப். 20:46

“வாயி லோயே வாயி லோயே” - புறம். 206

**வாயும் வயிறும்:**

*வாய்= பாலுண்ணும் குழந்தை.*

*வயிறு= வயிற்றிலுள்ள குழந்தை.*

கைக்குழந்தையுடன் இருக்கும் ஒருத்தி வயிறு வாய்த்திருந்தால் அவள் வாயும் வயிறுமாக இருக்கிறாள் என்பர். அவள் மேல் இரக்கம் காட்டி அவளுக்கு வேண்டும் உதவிகளும் செய்வர். வாய்க் குழந்தைக்கு உணவூட்டுவாளும் அவள்; வயிற்றுக் குழந்தைக்கு உணவாவாளும் அவள். இரு குழந்தைகளுக்கும் உடலில் ஊட்டம் வேண்டுமே. 'ஊட்டுவதற்கு' உதவ வேண்டும் என்னும் பரிவு தந்த பரிசு 'வாயும் வயிறு'மாம்.

**வாயுறை வாழ்த்து:**

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"

என்பது தொல்காப்பியர் கூறும் வாயுறை வாழ்த்தின் இலக்கணம்.

வாயுறை வாழ்த்து, பனுவல் நிலையை அடையுங்கால் அதன் அமைதியை,

"வாயுறை வாழ்த்தே வன்சொல் பொறுத்து
வாழியென வெண்பா ஆசிரியம் வகுத்தலே"

என்கிறது பிரபந்த தீபம்.

வாயுறை வாழ்த்து மருட்பாவில் வருமெனத் தொல் காப்பியர் சுட்டுவார். பிரபந்த தீபத்தார் வெண்பாவானும் ஆசிரியத்தானும் வருமென்றார். இரண்டு பாத்தன்மையும் ஒரு பாடலில் இடம்பெறின் மருட்பாவாம். அவை தனித்தனி வரின் வெண்பா என்றும் அகவல் என்றும் பெயர் பெறுமாம். ஆகலின் மூவகை யாப்பும் பொருந்தும் என்க.

**வாயைக் கட்டுதல்:**

வாயைக் கட்டுதல் = பல்சுவைப் பண்டங்களைக் குறைத்தல்; மானம் கருதாது அடங்கி இருத்தல்.

வயிற்றைக் கட்டுதல், சோற்றுப் பஞ்சத்தின் பாற்பட்டது. வாயைக் கட்டுதல் சோற்றளவுக்கு வாய்ப்பு இருந்தாலும், சுவை சுவையான பண்டங்கள் குடிநீர்கள் ஆயவற்றைக் கருதாமல்

அடங்கி வாழ்வதாம். வயிறு வயிற்றுப் பசியையும், வாய், நாச்சுவையையும் குறிப்பன எனலாம்.

இனித் தங்கள் சூழ்நிலை, குடும்பநிலை கருதி மானக்கேடான சொல்லை ஒருவர் சொல்லும் போதும் அடக்கிக் கொண்டு இருந்துவிடல் உண்டு. மறுமொழி கூற உணர்ச்சி யுண்டாகியும் அடக்கிக் கொள்ளுதல் வாயைக் கட்டுதல் எனப்படுவதாம். "வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி இருந்தாலும் நினைத்துப் பார்க்கிறீர்களா?" என்பதோர் ஏசலுரை. 'நாயின் வாயைக் கட்டுதல்' என்பது 'குரைக்காமல் ஆக்கல்' என்னும் கருவினையாகச் சொல்லப்படுவது உண்டு.

**வாயைப் பிடுங்குதல்:**

வாயைப் பிடுங்குதல் = சொல்லை வருவித்தல்.

பல்லைப் பிடுங்குதல் தெளிவாக உள்ளது. வாயைப் பிடுங்குதல் எப்படி? வாய் என்பது வாய்ச்சொல்லைக் குறிக்கிறது. என்னென்னவோ சொல்லி வாயை மூடியிருப்பவரிடமிருந்தும் சில செய்திகளை வாங்கிவிடக் கூடிய திறமையாளர்கள் உளர். வாயை வலிந்து பிடுங்குவது எதற்காக? அதனைப் பலபேரிடம் பரப்புதலுக்கும், அச்சொல்லைக் கொண்டே சொல்லியவர்களை மடக்கித் தாம் இன்பப் படுவதற்குமாம். "சும்மா இருந்த என் வாயைப் பிடுங்கி என்னையே குத்திக் காட்டுகிறாய். உன்னை வெற்றிலை வைத்து அழைத்துக் கேள் என்றேனா?" என்று குத்திக் காட்டுதல், குத்துண்டவர் செய்வதாம்.

**வாயோடு:**

உரலில் ஒன்றைப் போட்டு உலக்கையால் குத்தும் போது, உள்ளிடுபொருள் வெளியே வந்து சிந்தாமல் இருப்பதற்காக உரலின் மேல்வாயில் வட்டத்தகடு போடுவது வழக்கம். அதற்கு வாயோடு என்பது திருப்பாச்சேத்தி வட்டார வழக்காகும். உறைப்பெட்டி என்பது பொதுவழக்கு.

**வாய்:**

1. வாய் = வழி; வழியாம் உறுப்பு வாய். உணவு நீர் ஆயவை வாய் வழியே இயலல் கண்கூடு.

2. வாய் = கண்வாய், கால்வாய், கடைவாய், மனைவாய் எனப் பல்வேறு இடப்பெயர்கள் தழுவிய வாய்கள்.

3. வாய் = வாய்க்க என வாழ்த்து. "வாய்த்தால் நமக்கு; வாய்க்காவிட்டால் பிள்ளையார்க்கு" என்பது ம.வ.

4. வாய் = ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருபுகளுள் ஒன்று.

"வாயார் பெருநகை" - புறம். 212

"வாய் அவிழ்த்தனன்" - சிலப். 16:116

**வாய்க்கரிசி போடல்:**

வாய்க்கரிசி போடல் = தின்னல்.

இறந்தவர்க்குச் செய்யும் கடமைகளுள் ஒன்று வாய்க்கரிசி போடல் என்பது. இறந்தவர் பயன்படுத்திய பொருள்களைக் கடைசி முறையாகப் படைப்பது என்னும் வகையில் நேர்ந்த வழக்கு அது. ஆனால், உழையாமல் உண்பவர்க்கோ, வெறுப் புடன் சோறு படைக்கப் படுபவர்க்கோ தரும் சோற்றைச் சோறு எனச் சொல்வதில்லை. "வெறுப்பினால் உனக்கு வாய்க்கரிசி போடுகிறேன்" என்பர்.

**வாய்க்கால்:**

வாய்க்கால் என்பது ஏரி, குளம், கண்வாய் முதலியவற்றில் இருந்து விளை நிலத்துக்கு நீரைக் கொண்டு செல்லும் வழி; வாய்க்கால் என்பதில் உள்ள முன்சொல் இடப்பொருள் தருவது. கண்வாய் என்பதைக் குறிப்பது. அதில் இருந்து பிரிந்து நடக்கும் நீர்வழி வாய்க்கால் ஆயது. கால்வாய் வழிவந்த நீர் கண்வாயில் தேங்கி, கண்வாயில் தேங்கிய நீர் தேவைக்குத் தக வெளியேற விடுவதாம் வழி வாய்க்கால் என்பது தெளிக.

கால்வாயில் சில நாள் நீர் வரும்; வாய்க்காலில் பலநாள், சில திங்கள் நீர் செல்லுதல். ஆதலால் கால்வாய் பெரிதாகவும், வாய்க்கால் சிறிதாகவும் இருக்கும். வருவாயையும் செலவையும் குறிப்பிடும் திருவள்ளுவர் கால்வாய் போல் பணவரவு வரினும், வாய்க்கால் போல் செலவு செய்தல் வேண்டும் என்பதை,

"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை" - 478

என்றார்.

ஆகாறு= வரும் வழி, வருவாய், கால்வாய்.

போகாறு= செல்லும் வழி, செலவு, வாய்க்கால்.

**வாய்க்கிடல்:**

வாய்க்கிடல் என்பது இறந்தோர் வாய்க்கு அரிசி போடல் என்னும் வழக்கம் பற்றியது. உழையாமல் ஊர் சுற்றித் திரிந்து துன்புறுத்தும் தடி மாக்களைப் பெற்ற தாயும் மன நோவால், "உனக்கு வாய்க்கரிசி போட வேண்டுமே"என்று சொல்வதில் 'வாய்க்கிடல்' உண்ணுதல் பொருட்டதாம்.

**வாய் திறத்தல்:**

வாய் திறத்தல் = பேசல்.

"என்னதான் சொன்னாலும் வாயைத் திறந்தால்தானே" என்பது பேசினால் தானே என்னும் பொருளதாம். 'வாயைத் திற' என மருந்து ஊட்டவோ, உணவு ஊட்டவோ கட்டளை யிடுவதல்லாமல், பேசக் கட்டளை இடுவதாய் அமைந்தது 'வாயைத் திற' என்பதாம். காவல் நிலையங்களில் உண்மையை வருவிக்க என்னென்னவோ பாடுபடுத்துவர். ஆயினும் சிலர் வாயைத் திறப்பதே இல்லை. "வாயைத் திறக்க மறுக்கிறான்; உயிரைக் கூட விட்டுவிடுவான்; ஒரு சொல்லை விடமாட்டான் போலிருக்கிறது" என்பதில் வாய் திறத்தல் என்பது பேசுதல் பொருளில் வருதல் அறிக.

**வாய்த்தலை:**

ஆற்றில் இருந்து கால்வாய் பிரியும் இடம் வாய்த்தலை எனப்படும். தலைவாய் என்றால் பொருள் வேறாகி விடுதலால் வாய்த்தலை என மாறி நின்றது.

வாய்த்தலை என்றும், பேட்டைவாய்த்தலை என்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள காவிரிக்கரை ஊர்கள்.

**வாய்த்தல்:**

எடுத்த செயல் அல்லது முயற்சி வெற்றியாக முடிதல் வாய்த்தலாகும். செயலை "வாய்ப்பச் செயல்" என்பார் வள்ளுவர் (திருக். 948).

"தேற்றான் உற்ற சூள்வாய்த் தல்லே" - ஐங். 37

**வாய்தூய்மை:**

வாய்த்தூய்மை = பொய்புரட்டுப் பேசாமை.

பல் விளக்கல், கழுவுதல் ஆகியவை வெளிப்படையான வாய்த்தூய்மையாம். நாளைக்கு மூன்று வேளை பல் விளக்குவாரும். பத்துமுறை, வாய் கொப்பளிப்பாரும் கூட 'வாய்த் தூய்மை' யற்றவராகச் சொல்லப்படுதல் உண்டு. அது வாயழுக்கு, நாற்றம் ஆகியவற்றைக் குறியாமல் பொய்ந்நாற்றம் குறிப்பதாம்.

"வாயும் கையும் தூய்மையாக இருந்தால் எங்கும் பிழைத்துக் கொள்ளலாம்" என்னும் வழக்கில் வாய்த்தூய்மை, பொய் கூறா மையும், கைத்தூய்மை களவு செய்யாமையுமாதல் அறிக. 'வாய் சுத்தம் இல்லாதவன்' என ஒருவனை எளிமையாகத் தள்ளிவிட இடமாவது இக்குறையாம்.

**வாய்பாடு:**

நூலை எடுத்து ஓதி அல்லது பல்கால் கேட்டு நெஞ்சக் களனில் நிறைந்த செய்தியை வாயுற மொழிதல் வாய்பாடு எனப்பட்டது. கணக்குக்கு அடிப்படை பெருக்கல் கூட்டல் கழித்தல் வகுத்தல் என்பவை. இவற்றுள் பெருக்கல் வாய்பாடு முதல் வகுப்புக்கு முன்னாம் குட்டிப் பாலர் வகுப்பிலேயே பெரியமாணவர் சொல்வதைக் கேட்டுச் சொல்லியே மனப்பாடம் ஆகிவிடும். அதனைப் பின்னர் சுவடி எடாமலே சொல்வர். அதற்கு 'வாய்பாடு' சொல்லல் என்பது பெயர்.

எண் சுவடி வாய்பாடு என அந்நாளில் சிறுசிறு சுவடிகள் இருந்தன. பின்னே கணக்குக்குரிய சூத்திரங்கள் வாய்பாடு எனப்பட்டது. வாய்பாடு 'நாப்பாடம்' எனப்பட்டதுமுண்டு.

**வாய்பூசல்:**

உணவு முடித்தபின் அதன் பொருக்கு, துகள் ஆயவை ஒட்டியிரா வகையில் வாய்கழுவுதல் - கொப்பளித்தல் - விரல்விட்டு வழித்தல் என்பவை உண்டு. முகம் கழுவுதலை, முகம் பூசுதல் என்பது கற்றோர் வழக்கு. அவ்வாறே வாய் கழுவுதலை வாய்பூசுதல் என்பதும் வழக்கு.

உண்டபின் முகத்தைத் துடைக்கும் பூனையைப் பூசை என்பது முகம் பூசுவதால் கொண்ட பெயராம்.

"முகத்துறுப்பு
ஒத்த வகையால் விரல்உறுத்தி வாய்பூசல்
மிக்கவர் கண்ட நெறி" -ஆசாரக். 27

**வாய்ப்பாடு:**

வாய் + பாடு = வாய்ப்பாடு.

வாய்க்குட் போட்டு உண்ணப்படுவது வாய்ப்பாடு ஆகும். வாய்க்குட் படுவது வாய்ப்பாடு. வாய் பாடு, வாய்ப்பாடு இரண்டன் வேறுபாடும் அறிக.

"அவனுக்கு வாய்ப்பாடு பேய்ப்பாடு" ம.வ. பேய்ப்பாடு என்பது குண்டோதரன் (குண்டம்குழி, பெரும்பானை; உதரன், வயிறன்) கதை வழியது.

"கல்வி அகலமும் கட்டுரை வாய்பாடும்" - பழ. 264

**வாய்ப்பாறு:**

புலப்பம் எடுத்தல், புலம்புதல் என்பவை ஆற்றாமை சொல்லி அழுதலாம். புலப்பம் எடுத்தலை வாய்ப்பாறு என்பது நெல்லை வழக்காகும். வாய்விட்டு ஆற்றிக் கொள்வது வாய்ப்பாறு ஆயது.

**வாய்மடை:**

கண்வாயில் இருந்து வாய்க்காலுக்கு நீர் செல்லும் வழி வாய்மடை எனப்படும். வாய்மடையில் தண்ணீர் ஏறத்தக்க அளவுக்கு இல்லையானால் அணைபோட்டு இறைபெட்டி

*கொண்டு நீரை இறைத்து வாய்மடை வழியே வாய்க்காலுக்குச் செலுத்துவர். நீர்வளமான காலத்தில் வயலின் நீர்ப் பெருக்கை வடிக்கும் வகையில் வாய்மடை உண்டு. அதற்குத் தத்துவாய்மடை என்பது பெயர். தத்துவாய் மடைநீர் வாய்க்காலுக்குச் சென்று மற்றை வயலுக்குப் பாயவும் செய்யும்.*

**வாய்மொழி:**

*வாய்மை + மொழி = வாய்மொழி.*

*சொல்லியது சொல்லிய வண்ணம் நிறைவேறும் சொல்லைச் சொல்ல வல்லார் மொழி வாய்மொழியாகும். இவண் சொல்லியது மாறாது நிறைவேறல் பொருளது. வாயுறை என்பதும் இது. வாய்க்கமைந்த மருந்து அல்லது அமிழ்து.*

** 'வாயுறை வாழ்த்து' காண்க.*

**வாய்மை:**

*உண்பதற்குரிய உறுப்பாம் வாயும் நாவும் அதற்கு மட்டுமே உரியவை என்றால், மாந்தர்க்கும் மாக்களுக்கும் மற்றை மற்றை உயிரிகளுக்கும் வேற்றுமை இல்லாமல் ஒழியும். வாய் என்பது வாய்மை உரைத்தற்கே அமைந்தது என்பதால்தான், வாயின் தன்மை வாய்மை எனப்பட்டதாம். உள்ளதாம் தன்மை உண்மை எனவும், மெய்யதாம் தன்மை மெய்ம்மை எனவும், வாயதாம் தன்மை வாய்மை எனவும் வழங்கப்பட்டனவாம்.*

"உள்ளத்தால் பொய்யா தொழுகின்" (திருக். 294)

*என்பதில் இம்மூன்றும் அமைதல் காண்க.*

*வாய்மையின் இலக்கணத்தை,*

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்" - திருக். 291

*என்றார் திருவள்ளுவர். அவரே,*

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" - திருக். 292

என்றும் கூறினார். வாய்ம்மை மொழியும்வாய், வாழ்த்தும் வாயாகவும் விளங்க வேண்டும் என்பதால், "வாழ்த்த வாயும்" என்றார் நாவரசர்.

**வாரங்கால்:**

வார்கால், வடிகால், சாய்க்கடை என்பன நீர்ப்போக்கிகள். வடிகாலை வாரங்கால் என்பது முகவை வட்டார வழக்கு. வார்தல் என்பது ஒழுகுதல் பொருளது.

**வாரணம்:**

1.வார் + அணம் = வாரணம் = யானை; வார் = நீளம். அணம் = மேல்வாய். நெடிய மேல்வாயை உடையது வாரணம்.

2.வார் + அண் + அம் = வாரணம் = கடல். வார் = வாருதல், அள்ளுதல். அண் = நெருங்குதல்; அம் = பெருமைப் பொருள் ஒட்டு. நிலத்தில் இருந்து அள்ளிக் கொண்டு வரும் நீரின் பெருக்கு.

"வாரணம் கொண்டது அந்தோ!
வழிவழிப் பெயரும் மாள!" - பழம்பாடல்

**வாராடை:**

தென்னை, பனை, தாழை முதலியவற்றின் நாரைக் கிழிக்கப் பயன்படுத்தும் கத்தியை வாராடை என்பது குமரி மாவட்ட வழக்காகும். வார்தல் நெடுகக் கிழித்தலாம்.

**வாராவதி:**

பாலம் என்னும் பொருள் தரும் சொல்லாக வாராவதி என்பது செங்கை, சென்னை வழக்குகளில் உள்ளது. ஓடை ஆறு முதலியவை 'வருவழி' வாராவதி என மக்கள் வழக்கில் ஏற்பட்டிருக்கலாம். பாலம் என்பது இப்பாலும் (இப்பக்கத்தையும்) அப்பாலும் (அப்பக்கத்தையும்) இணைப்பது என்னும் பொருளது. அது தமிழகப் பொது வழக்குச் சொல்.

**வாரி:**

***வாரி:[1]***

*வாரிக் கொண்டு - அள்ளிக் கொண்டு - வருவது வாரி. "புயலென்னும் வாரி" என அதன் முகத்தலைத் தெளிவிக்கும் திருவள்ளுவர் (திருக்.14), "வாரி பெருக்கி" வளப்படுத்துதலையும் குறிப்பிடுவார் (திருக். 512). இவ்வாரி வருவாய் ஆகும். வாரி என்பதற்குள்ள பல பொருள்களுள் ஒன்று கடல்; ஆறுகளைத் தன்னிடத்துக் கொள்வதால் பெற்ற பெயர்.*

*வாரி என்பது 'அம்' என்னும் ஈறு பெற்று 'வாரியம்' என்னும் பெயரைச் சோழர் காலத்திலேயே தந்தது. 'குடிநீர் வாரியம்' என இந்நாளில் மீள் வழக்கும் கொண்டது. இவற்றின் மூலம் வாரியாகும்.*

***வாரி:[2]***

*வாரி என்பது நெடுங்கம்பு, கடல், வருவாய் எனப் பொதுப்பொருள் பல கொண்ட சொல். இச்சொல் திண்டுக்கல் வட்டாரத்தில் வாய்க்காலையும் கமலைத் தடத்தையும் குறித்து வழங்குகின்றது. நெடுங்கம்பு வாரி எனப்படுதல் வண்டியில் பாரமேற்றப் பயன்படுத்தும் வாரிக்கம்பு ஆகும்.*

**வாரியன்:**

*வாரியன் என்பது ஊர்க்குச் செய்திகளைச் சொல்லும் வினையாளன் பெயராகத் திருப்பூர் வட்டாரத்தில் வழங்கு கின்றது. எடுத்துக் கொண்டு வந்து பரப்புதல் வழியால் வந்த பொருள்.*

**வாருங்கோள்:**

*'வாருங்கள்' என்பது 'வாருங்கோள்' என எள்ளலாகத் தமிழகத்தில் வழங்குதல் உண்டு. இயல்பு வழக்காக 'வாருங் கோள்' என ஈழத்தில் வழங்குகின்றது. கந்தர் அலங்காரத்தில் 'இருங்கோள்' (16) என்னும் ஆட்சி உண்டு.*

**வார்தல்:**

*வார் > வார்தல். 'தல்' சொல்லீறு.*

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள" - தொல். 800

"கார்மழை பொழியவும் கழனிவாய் நதி
வார்புனல் பெருகவும்" - கம். அயோத் 84

**வாலம்:**

*சிறியதாய் நீண்டது வால்; வால் போன்ற இடம் வாலி; வாலை உடையதும் வாலி; துணி நெடிதாகக் கிழிதல் வாலமாகக் கிழிதல். வாலம், வாளமாகும். தண்டவாளம் அது. வாள் என்பது நீண்ட கத்தி போல்வது; சுருள்வாள் சுரிகையாம்.*

**வாலறிவு:**

*வாலறிவு என்பது தூய அறிவு. வால் = தூய்மை.*

*பால் எனினும் வால் எனினும் தூய்மை குறிப்பனவே. இயல்பான அறிவினும் மேம்பட்ட மெய்யுணர்வே வாலறிவு ஆகும். ஆதலால், மெய்யுணர்வுக்கு அல்லது மெய்ப்பொருள் அறிவுக்கு வள்ளுவர் தந்த கொடைச் சொல் 'வாலறிவு' என்பதாகும்.*

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" - திருக். 2

**வாலாட்டல்:**

*வாலாட்டல் = தலைப்படுதல்; செருக்குதல்.*

*"என்னிடம் வாலாட்டினால் ஒட்ட வெட்டி விடுவேன்" என்பது வழக்குச் சொல். வால் இல்லாதவன் வாலாட்டுவானா? இல்லாத வாலை வெட்டுவதுதான் எப்படி? வாலாட்டுதல் நாய் வேலை; வால் நீட்டல் நரி வேலை. குரங்கும் வாலை யாட்டும்.*

*இங்கே வால் நாய், நரி வால்களை நீக்கிக் குரங்கு வாலைக் குறித்ததாம். குரங்கின் இயல்பு குறும்பு. அதன் வாலாட்டம்*

என்பது குறும்பு செய்தலே. என்னிடம் குறும்பு செய்தால் அதனை அறுக்க எனக்குத் தெரியும் என்பதே வாலாட்டினால் ஒட்டத் தரிப்பேன் என்பதாம். "பெரிய வால்"என்று ஒருவரைச் சுட்டினால் அவர் செருக்கானவர் என்பது குறிப்பு. "என்னிடம் வாலாட்டாதே"என்றால் என் செயலில் தலையிடாதே என்பது பொருளாம். தலையும் வாலும் மாறிக் கிடக்கும் நிலை இது.

**வாலும் தோலும்:**

வால்= கமலை வடத்தொடு கூடிய கயிறு அல்லது வால் கயிறு.

தோல்= வால் கயிற்றுடன் கூடிய தோல் அல்லது வால் தோல்.

வால் முன்னே வரும்; தோல் பின்னே வரும், வால் பத்தலை அடைந்ததும் தோல் நீரைக் கொட்டும். வால் வரவும் தோல் வரவும் நிகழ்ச்சி ஒன்றையொன்று தழுவி இணைந்து நிகழும். அது போல் இணைந்து பேசிச் செயல்படுவாரை 'வாலும் தோலும்'என்பது உண்டு. ஒருவருக்கு ஒருவர் ஏற்றுப் பேச வந்தால் நீ என்ன அவனுக்கு "வாலா? தோலா?"என வினாவுவதும் வழக்கம்.

**வாலோடி:**

ஒருநிலம் அகலம் இன்றி நெடு நெடு என நீண்டு குறுகிக் கொண்டு போனால் அதனை வாலோடி என்பது தென்தமிழக உழவர் வழக்கு. வால் நெடுமை. வாலி என்பதும் வால் போன்ற கதிரையும் நிலத்தையும் குறிக்கும். எ-டு: குதிரை வாலி, தெற்கு வாலி.

**வால்:**

வால் = குரங்குத்தனம்.

விலங்குகளின் பொது உறுப்பு வால். ஊர்வனவற்றுள்ளும் பல, வால் உடையன. வால் என்பது நீண்டிருப்பதால், நெடுமைப் பொருளும் உண்டாயிற்று. 'வாலி' நீண்டு ஒடுங்கிய நிலம். 'வாலம்'நெடுங்கிழிவு.

இனி இவ்வால் வாலைக் குறியாமல், வாலுடைய, எல்லா வற்றையும் குறியாமல் குரங்கு வாலையே குறித்து நின்று, பின்னர் அதன் குறும்புச் செயலைக் குறிப்பதாக வளர்ந்தது. அந்நிலையில் வால் என்பது 'குரங்குத்தனம்' எனப்பட்டதாம். "நீ செய்கிற வால்தனத்திற்கு எல்லை இல்லை" என்றும், "உனக்கு வால் மட்டும் தானே இல்லை" என்றும் வருவன அறிக.

* 'வாலாட்டல்' காண்க.

**வாவல்:**

வாவுவது = வாவல், வௌவால். வாவுதல் = தாவுதல்.

"உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்" - நற். 87

மாஅத்த = மாமரத்தில்.

**வாவி:**

வாய்வி > வாவி.

வாய்விரிந்த நீர்நிலை 'வாவி' எனப்பட்டது. வாய் உடைமையால் 'கண்வாய்' எனப்பட்டது. வாவியில் கண்வாய் இல்லை. திறந்த வெளிப்பரப்பான ஏரி குளம் போன்றதும் இல்லை. குறுகிய இடப்பரப்பில் தேங்கிய நீர் நிலை வாவியாம்.

எப்பக்கமும் இறங்கும் படித்துறையும் நீராடு வாய்ப்பும் அமைந்த தெப்பம், வாவியாம். வாவி ஊர் சார்ந்தது இல்லை. மலை காடு சார்ந்தது. பின்னே எந்திர வாவிகள் அமைந்தமை அறிய வருகின்றது.

"வாவிநீர் நிறையவும்" - கம்ப. அயோ. 84

"வாவிநீர் தென்றல் மதியிரவி பெய்யுமழை" - தனிப்.

**வாழாக்குடி:**

வாழாக்குடி = மணந்து தனித்தவள்.

திருமணம் நிகழ்ந்திருக்கும், வாழ்க்கைக்குச் சென்றவள் கணவனுக்கும் அவளுக்கும் ஒவ்வாமையால் வாழ்வை இழந்து பெற்றோருடனோ, தனித்தோ குடித்தனம் செய்வாள். அவள்

வாழாக்குடி எனப்படுவாள். கணவனை இழந்தவள் வாழாக்குடி யல்லள், அவள் கைம்பெண், 'அறுதாலி' எனப்படுவாள். கண வனால் விலக்கி வைக்கப்பட்டோ தானே விலகியோ தனித்து வாழ்பவளே வாழாக் குடியாம். இங்கும் வாழ்க்கை பொதுமை நிலையில் நீங்கி, இல்வாழ்க்கைப் பொருளுக்கு ஆவது வழக்காம். "அவள் வாழாக் குடியாள்; அவளிடமா குழந்தையைத் தரு கிறாய்" என்பது வாழாக்குடிப் பெண்களுக்குத் தரும் பரிசு.

**வாழி பாடல்:**

உள்ள பொருள் எல்லாம் இழந்து போதலைக் குறிக்கும் வட்டார வழக்குச் சொற்களுள் ஒன்று வாழி பாடல் என்பது. வாழிபாடிவிட்டால் கூட்டமெல்லாம் போய்விடும். அதுபோல் எல்லாம் போயது என்னும் பொருளது. கூத்தாடும் இடத்தில் கூடிய கூட்டம், ஆட்டம் முடிந்ததும் ஒருங்கே போவது போல என்னும் குறளின் பொருளை விளக்கும் வழக்குச் சொல் வாழி பாடலாம். இது, ஏரல் வட்டார வழக்காகும்.

**வாழை:**

வழவழப்பான பட்டையையுடைய புல்வகை வாழை. வழவழப்புத் தன்மையால் பெற்ற பெயர் அது. வாழ்வுப் பெருமை காட்டுவது வாழை என்பது, "பொருந்தப் பொய்த்தல்" என்பார் பாவாணர். ஒன்றன் பெயர், அதன் இயற்கை இயல் சார்ந்தே அமைக்கப்படுதல் மக்கள் இயல். முள் உடையது முள்ளி; வெப்பக் காலத்தில் தளிர் விட்டுக்குளிர் பரப்புவது வெப்பு > வேப்பு > வேம்பு.

**வாழைக்கொலை அரிவாள்:**

கீழிருந்தே வாழைக் குலைகளை வெட்டுவதற்கும் வாழை மரங்களை அரிந்து சாய்ப்பதற்கும் இந்த அரிவாள் பயன்பட்ட தால் இதற்கு வாழைக் கொலை அரிவாள் என்று பெயர் உண்டு. (மகாகவி பாற்கரதாசரின் நாட்குறிப்புகள், ஆடுதுறை அரிவாள் பக்.13)

வாழைக் கொல்லை அரிவாள் என்பதன் சிதைவே அது.

**வாழ்க்கைத்துணை:**

*வாழ்க்கை என்பது துணையொடு கூடியது என்பதும், அது நல்லதாக அமைய வேண்டும் என்பதும் துணை என்பது துணைவனையோ துணைவியையோ குறியாமல் ஒருவர்க்கு ஒருவர் துணை என்னும் பொதுக் குறிப்பினது என்பதும் இப்பெயரீட்டால் தெளிவாகும்.*

*வாழ்க்கைத் துணை என்பது மனைவியே என்றும், வள்ளுவர் அவ்வாறு கூறுவதால் கணவனுக்கு ஓரளவால் மனைவி தாழ்ந்தவள் என்று குறிப்பிட்டு விட்டார் என்றும் கூறுவார் உளர். அவர் வாழ்வியலையோ, வள்ளுவத்தையோ தெளியக் காணாதவர்.*

*வள்ளுவர் எண்ணம் அதுவே எனின், வாழ்க்கைத்துணை என்னும் இடத்தில் வாழ்க்கைத் துணைவி என்றே கூறியிருப்பார். துணை என்பது ஆள் சுட்டாமல் துணையாம் தன்மை குறிப்பது. அவளுக்கு அவன் துணையாம் பொழுதும் நிலையும் உண்டு. அவ்வாறே அவனுக்கு அவள் துணையாம் பொழுதும் நிலையும் உண்டு. ஆதலால், ஒருவருக்கு ஒருவர் துணையே யன்றி 'இவருக்கு இவரே துணை' என்றார் அல்லர்.*

*இல்வாழ்க்கை முன்னிரண்டு குறள்களும், "இல்வாழ்வான் என்பான் துணை" எனல் காண்க (41, 42). "என் துணை நீங்கி" எனத் தலைமகள், தலைமகனைக் கூறுதலும் அறிக (1234).*

**வாழ்க்கைப்படல்:**

*வாழ்க்கைப்படல் = மணம் செய்தல், மனைவியாதல்.*

*திருமணத்தை 'வாழ்க்கை' என்பது புதுவழக்கு. 'வாழ்க்கைத் துணைநலம்' என்பதைத் திருக்குறள் கூறும். அதன் வழி வந்த படைப்பு இது. "உனக்கு வாழ்க்கைப்படுகிறேன்" என்று முதிய பெண்கள் சிறு குழந்தைகளிடம் விளையாட்டாகக் கேட்பதும் உண்டு. "உனக்கு வாழ்க்கைப்பட்டு வந்து என்ன கண்டேன்" என்று ஏக்கம் தெரிவிப்பாரும் உண்டு. வாழ்க்கைப் படுதல் என்பது மனைவியாதல் என்னும் பொருளதாம். கணவன், 'உனக்கு வாழ்க்கைப்படுகிறேன்' என்னும் வழக்கு இல்லை. உன்னைக் கட்டிக் கொள்கிறேன் என்பதே வழக்கு. வாழ்க்கை என்பது*

பொதுமை நீங்கி, மண வாழ்வைக் குறிப்பதால் வழக்குச் சொல்லாயிற்றாம்.

**வாழ்த்து:**

வாழ்த்திப் பாடப்படும் பொருள் வகையால் பெற்ற பெயர் வாழ்த்து ஆகும்.

வாழ்த்து, வாயுறை வாழ்த்து, இயன்மொழி வாழ்த்து, கடவுள் வாழ்த்து எனப் பலவகைப்படும். இக்காலையில் நாட்டு வாழ்த்து, மொழிவாழ்த்து என்பனவும் இணைக்கத் தக்கன. ஆங்கிலர் ஆட்சிக் காலத்தில் 'அரச வாழ்த்து' என நாள் வழி வாழ்த்தாகக் கல்வி நிலையந்தோறும் பாடப்பட்டதுண்டு.

புறநானூற்றில், இயன்மொழி வாழ்த்துப் பாடல்கள் பல உள. அவை, புலவர்களால் புரவலனை நேரில் கண்டு பாடப் பட்டவை. அவ்வாழ்த்தியலே பின்னர்த் தனி நூலுருக் கொள்ளச் செய்தது எனலாம். 'போற்றி', 'அடிபோற்றி', 'போற்றி போற்றி', 'வாழி' என வாழ்த்து வகை வருதல் கடவுள் வாழ்த்தாக இயலுதல் பரக்கக் காணக் கூடியவாம்.

"நமசிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க" எனத் தொடங் கும் சிவபுராணம் வாழ்த்தில் தொடங்கிப் போற்றியில் நடக் கின்றது. போற்றித் திருவகவல் பெயரே பொருளமைதியைச் சுட்டும்.

இறைவன் திருப்பெயர் சொல்லி வாழ்த்துரைக்கும் 'வாழித் திருநாமம்' எனப்படும் நூல்கள் இவ்வாழ்த்து வகையில் எழுந் தனவே.

**வாளி:**

***வாளி:***[1]

ஒளியுடையதும் வாள் போல் கொல்கருவி யாவதுமாம் அம்பு 'வாளி' எனப்பட்டது. வாளும் அம்பும் தீட்டித் தீட்டிக் கூர்மைப்படுத்தலால் கூர்மையுடன் ஒளியும் உடையதாதல் செங்கதிரும் செந்தாமரையும் போலப் பிரிவிலா ஒருமை பெற்றதாம்.

வளமாக வளர்ந்தது வாளிப்பு எனப்படல் ம.வ. “வாளிப்பான பிள்ளை”. உழவர் பொலிபோட்டுத் தூய்மைப் படுத்திய தவசத்தைக் கூட்டி அள்ளிக் குவித்தலை வாளிப்பு என்பர். மாசு போக்கிய மணியின் ஒளி சிறத்தலின் வாளிப்பு ஆயிற்று.

“செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்” - நற். 164

**வாளி:**[2]

தென்னை, பனை ஆயவற்றின் ஓலையின் ஊடுள்ள ஈர்க்கை வாளி என்பது விளவங்கோடு வட்டார வழக்காகும். மூக்கு, காது ஆகியவற்றைக் குத்தி அதன் துளை தூர்ந்து (மூடிப்) போகாமல் இருப்பதற்கு ஈர்க்குத் துணுக்கை இடும் வழக்கத்தில் இருந்து வாளி என்பது வந்திருக்கும். வாளி என்பது காதிலும் மூக்கிலும் போடும் அணி, வளையம்.

**வாளை:**

வாள் போலும் தோற்றமுடைய மீன், வாளையாகும். “வாளைமீன் உருவில் ஒரு வாள் போலத் தோன்றும்; வாளை மீனின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள நீண்ட ஒழுங்கான செதிலின் அமைப்பு வாளின் தீட்டப்பட்ட கரிய பாகத்தைப் போலத் தோன்றுதலால் வாளை என வழங்கியது மிகப் பொருத்தமே” என்பார் பி.எல்.சாமி (சங்க நூல்களில் மீன்கள், பக் 76).

**வாள்:**

1. வாள் = ஒரு கருவியின் பெயர். வாளின் ஒளியுடைமையால் வாள் என்பதற்கு ஒளி என்னும் பொருளும் உண்டாயிற்று.
2. வாள் = வெட்டும் வாள், அறுக்கும் வாள், அரியும் வாள், இடைவாள் (சுரிகை), வளரியாம் வாள் என வகை பலவாம்.
3. வாள் = ஒலிக்குறிப்பு. ‘வாள் வாள்’ எனக் கத்தாதே.

**வாள்வரி:**

*வால் > வாள் + வரி = வாள்வரி = புலி. வால் = ஒளி. வரி = கோடு.*

"வாலறிவன் நற்றாள்" - திருக். 2

*வெண்ணிறக் கோடுகள் அமைந்த புலியை வாள்வரி என வழங்கினர். வால்வரி என்பதற்கும் வெள்வரி என்பதே பொருள். அதனை வால்வரிக்காய் வெள்வரிக்காய் (வெள்ளரிக்காய்) எனப் பயன்படுத்தினர். இதனைச் சிலம்பு விளக்கும்.*

"வாள்வரிக்காய் = வெள் வரிக்காய்" சிலப். அரும். 16:25.

"வால்வரிக்காய்" என்பது பாடம்.

**வாள் விருத்தம்:**

*வாட்படையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் இயற்று வது வாள் விருத்தம் எனப்பெறும் (நவநீதப். 41).*

**வானக்குடை:**

*போகர் என்னும் சித்தர் வானக்குடை செய்யும் வகையையும், வானில் இருந்து குதிக்கும் வகையையும் பழகும் முறையையும் தெளிவாகப் போகர் ஏழாயிரம் என்னும் நூலில் பல பாடல்களில் விரியக் கூறியுள்ளார். இவையெல்லாம் அறிவியல் ஆகாவா?*

*வானக்குடை செய்யும் வகை, குதிக்கும் வகை, பயிற்சி என்பவற்றைப் போகர் கூறுமாறு:*

பார்க்கவே வாகான பர்வம் தன்னில்
　　பரிவுடனே குதிப்பதற்குக் கண்டு சொல்வேன்;
பார்க்கவே வட்டமாய்க் குடைதான் ஒன்று
　　பாங்கான குடைநிகளம் அகலம் கேளீர்;
ஏர்க்கவே ஆறடியாம் வட்ட வீடு
　　எழிலான பட்டுடை தன்னால் செய்து
தீர்க்கவே பிரம்பதுவும் முப்பத் திரண்டு
　　　திறமான சக்கரமும் ஒன்றை மாட்டே.

மாட்டியஅச் சக்கரத்தில் இரும்புக் கம்பி
மார்க்கமாய்த் தாள்முறுக்கி ஆணி மாட்டி
நீட்டமுடன் கம்பிக்குத் துணிதான் போர்த்து
நெடிதான சூத்திரமாய்க் கயிறு சேர்த்து
வாட்டமுடன் தாள்விரித்துக் குடையை ஏந்தி
வாகாகத் தான்குதிக்கில் வாயு பூந்து
தேட்டமுடன் காற்றதுவும் கூண்டைத் தூக்கும்
தீவிரமாய் மனிதனும்தான் கீழ்நோக்க லாமே.

நோக்கலாம் குடைதனையே கையில் ஏந்தி
நொடிக்குள்ளே மலைவிட்டுக் குதிக்கும் போது
தூக்குமே குடைதானும் மனித னைத்தான்
துப்புரவாய் மனிதனங்கே துணிவு கொண்டு
தேக்குடனே பூமிதனில் இறங்கும் போது
தேசமெலாம் கண்ணுக்குள் அணுவு போலும்
நோக்குடனே தெரியுமென்று போகர் நானும்
நேராகப் பாடிவைத்தேன் நேர்மை பாரே.

பாரேதான் இன்னுமொரு சூட்சம் சொல்வேன்
பாருலகில் இந்தவித்தை பழக்கம் செய்ய
சீரேதான் ஆற்றருகே தன்னிற் சென்று
சிறப்பான சலமதுவும் நிற்கும் போது
நீரேதான் பாலமதில் நின்று கொண்டு
நேர்த்தியான குடைதனையே கையில் ஏந்தி
தீரேதான் சலமதனில் குதிப்பா யானால்
திறமான தேகமது பழுது றாதே.

*இவ்வாறு பலமுறையும் பயின்று பனைமரத்தின் மேலும் கோபுரத்தின் மேலும் தொடர்ந்து பயிற்சி செய்து குன்றின் மேலேறிக் குதிக்கும் வகையைக் காட்டுகிறார். இதனைச் சீனநாடு சென்று வேந்தனும் காணக் காட்டிப் பெற்ற பெருமையையும் குறிப்பிடுகிறார்.*

**வானம்:**

வால் > வான் + அம் = வானம். வால் = வெண்மை, தூய்மை.

வானம் வெண்மையானது, தூய்மையானது. வானத்தில் தூசி அழுக்கு முதலியவை இல்லாமையால் தூய்மையை இயற்கையாகக் கொண்டது. அதனை உணர்ந்த அறிவர் வானம் என்றனர். வாலறிவு = தூய அறிவு. எ-டு: "வாலறிவன்" (திருக். 2). வாலியோன் = வெண்ணிறத்தவனாம் பலராமன்.

வானம் உயரப் பொருளும் தரும். எ-டு: வான் குருவிக்கூடு, வான்கோழி, வானவர்நாடு (சேரநாடு).

வானத்தில் இருந்து பெய்யும் மழை, 'வானம்' ஆகும். வானம் வழங்காது எனின் உலகில் தானம் தவம் இரண்டும் தங்கா என்பார் வள்ளுவர். வானம், 'வான்' என்றும் நிற்கும். 'வான் நின்று உலகம் வழங்கி வருதலால்' என்பதும் வள்ளுவமே. வானம் பார்த்து நிற்கும் நிலம் (வானம் பார்த்த நிலம்) வானம் பாரியாம்.

**வானவர், வானம்:**

வான் என்பது உயரம். கோழி போல்வதோர் உயிரி இவண் இறக்குமதி ஆனதைக் கண்ட அறிவறிந்த தமிழர் அதன் உயரம் கருதி அதனை 'வான்கோழி' என்றனர். ஔவையார் பாடலிலே, "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" இடம்பெற்றது. அவர்தம் தனிப்பாடல் ஒன்றில், "வான்குருவியின் கூடு" இடம் பெற்றது. 'வானம் பாடி' என்பதொரு பறவை அறியாததன்று; வானவர் என்பார் சேரர், அவர் நாடு மலை நாடு. ஆதலால் அவ்வுயர்வு கருதி அப்பெயருற்றார். வானளாவிய காடும் வானம் பார்த்த நிலமும் வானப்பொருள் காட்டுகின்றனவே.

புகையும் புழுதியும் தூசியும் தும்பும் காற்றில் மேலே எழக் கண்ட மாந்தர். இறந்தோர் உயிரும் மேலே போவதெனக் கொண்டனர். உயர்ந்து செல்லும் ஆவியாகி விட்ட அவரை, 'வானவர்' என்றனர்; மேலோர் என்றும் கூறினர். விசும்புளார் என்பவரும் அவர்.

புலமையாளர், மதித்து வணங்கப்படுதல் உலகு தழுவிய ஒரு நெறி. அவ்வகையில் புலமை மிக்கார் 'புலவர்' எனப்பட்டதுடன், அவர் இறந்த பின்னரும் புகழ்நிலை பேற்றினால். அவர் அழியா

*வாழ்வுற்றனர். அதனால் புலவர் என்பதற்குத் 'தேவர்' (திருக். 234) என்னும் பொருளுண்டாயிற்று.*

**வானவில்:**

*வான் மழை பெய்யும் போது அம்மழைத் துளியின் மேல் கதிரொளி படுமானால் வானவில் எழுவண்ணத்தில் தோன்றலைக் காணலாம். செம்மை நிறம் மேலே ஊதா நிறம் கீழே இடைப்பட ஐந்து நிறங்கள் தோன்றும்.*

"வானவில் தோணுதடா - அது
வையம் புகழக் காணுதடா
செம்மை நிறம் மேலே - உயர்
ஊதாநிறம் கீழே
கொம்மை நிறம் ஐந்தும் - அதன்
குறுக்கே நிறம் ஆகும்"- இ.கு.

*வானவில்லைத் திருவில் என்பது முந்தையர் வழக்கம்.*

"திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்" - புறம். 20

**வானி:**

*வான் = உயரம். உயரமான இடத்தில் இருந்து வரும் நீர் வானியாம்.*

*பூவானி என்பது, காவிரியும் பூவானியும் கூடும் இடத் தமைந்த ஊர். அது பவானி என வழங்குகின்றது. ஈராறுகளும் கூடும் இடம் கூடுதுறையாகும்.*

**வானிலை:**

*வானிலை = வெப்பு, தட்பு, மழை, புயல் நிலை இவற்றின் அறிவிப்பு வானிலை.*

**வானிவாடு:**

*கிழக்கில் இருந்து மேற்காகச் செல்லும் கடல் நீரோட்டத் தை வானிவாடு என்பது திருச்செந்தூர் வட்டார வழக்கு ஆகும்.*

வானி என்பது உயரம்; வாடு என்பது தணிவு. மேட்டில் இருந்து பள்ளம் பாயும் நீரோட்டத்தை வானிவாடு என்பது இலக்கிய வாணனை விஞ்சிய படைப்பாளர் பொதுமக்கள் என்பது காட்டுவதாம்.

**வான்:**

வால் > வான் = உயரம்; வெண்மை - தூய்மை - உடைமையால் வால், வான் ஆயது. வெளி என்பது அது. வெள் > வெளி. வெண்மையானது.

வான்குருவிக் கூடு, வான்கோழி என்பவற்றையும் உயரத்தில் இருந்துவரும் ஆறு வானி ஆறு எனவும், மலைநாடாம் சேர நாட்டு வேந்தர் வானவர் என்றும், அவர்நாடு வானவர் நாடு என்றும் வழங்கப்பட்டமை அறிக.

"வானவரம்பனை நீயோ பெரும!" - புறம். 2

**வான்வளம்:**

வான்வளம் = மழை. மழை > மழைத்தல் = மகிழ்வித்தல்.

வான்மழை, அருவி, ஆறு, ஓடை, ஊற்று, ஏரி, குளம், கால்வாய், வாய்க்கால், கடல் எனப் பலப்பல இடப்பெயரொடு கூடி ஆவியாய் முகிலாய்க் கொண்டலாய் மீண்டும் காராய், மாரியாய்ப் பொழிதல் ஆகிய சுழல் நிலை மீள மீள வருதலே உலகியக்கமும் உயிரியக்கமும் ஆகும் விந்தை. வாய்க்கால் நீரில் கைவைத்த நடராசன் வாயிலாக மனோன்மணியத்தில் பேரா சிரியர் சுந்தரனார் கூறுமாறு:

இச்சிறு வாய்க்கால்,
செய்தொழில் எத்தனை விசித்திரம் 'ஐயோ'!
அலைகடல் மலையா, மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால்!
பாரிதோ! பரற்களை நெறுநெறென் றுரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு

*இன்னதென் றில்லை யாவையும் ஈர்த்துத்*
*தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்*
*காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்*
*சாலத் தகுமிவை யெனவோர்ந் துருட்டிக்*
*கொண்டு சென்று இட்டுமற் றையோ!*
*அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்*
*சென்றுபின் பெருமலைச் சிகர முதலாக்*
*குன்றுவீழ் அருவியாய்த் தூங்கியும் குகைமுகம்*
*இழிந்தும் பூமியின் குடர்பல நுழைந்தும்*
*கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்*
*ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்*
*ஆறாய் நடந்தும் மடுவாய்க் கிடந்தும்*
*மதகிடைச் சாடியும் வாய்க்கால் ஓடியும்*
*பற்பல படியான் பட்டங் கீட்டியது*
*அற்பமே ஆயினும் ஆதர வாய்க்கொள்;*
*இன்னமும் ஈதோ ஏகுவன்" எனவிடை*
*பின்னரும் பெற்றும் பெயர்த்தும் எழிலியாய்*
*வந்திவண் அடைந்துமற் றிராப்பகல் மறந்து*
*நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர்?*
*(நீரைக் கையால் தடுத்து)*
*நிரந்தரம்! ஐயோ! நொந்தனை! நில்!நில்!*
*இரைந்ததென்? அழுவையோ? ஆயின் ஏகுதி!*
*நீரே! நீரே! என்னையுன் நிலைமை!*
*யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்!*
*நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்*
*உனைப்போல் உளவேல் பினைப்பே றென்னை?-*
*மனோன். அங்கம் 3,*
*களம் 2, நடராசன் - தனிமொழி*

✻✻✻

# ‘வி’ ‘வீ’ வரிசைச் சொற்கள்

**வி:**

*வகர இகரம்; இடையின உயிர்மெய்; குறில்.*

**விக்குள்:**

*விக்கல் என்பது ம.வ.*

"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" - திருக். 335

*விக்குதல் > விக்கல்.*

*'விக்' என்னும் ஒலிக்குறிப்பு வழிப்பட்டது இச்சொல். விக்கல் உடல் வெப்பால் ஏற்படுவது என்று நாவறட்சி போக நீரைக்குடித்தல் ம.வ.*

*விக்கலே நோயாகப் பலமுறை விடாது வருவதுண்டு.*

**விசி:**

*விசி = இறுக்கிக் கட்டுதல்.*

"விசி வீங்கு இன்னியம்" - பெரும்பாண். 56

***பொருள்:*** *"வாராற் பிணித்தல் இறுகின இனிய முழவம்" நச்.*

*விசுக்கு எனல் ஒலிக்குறிப்பு. விசுக்கெனப் போய்விட்டான் என்பது ம.வ. அவ்வாறு கழன்று போகாமல் இறுக்கிக் கட்டுதல் விசியாகும். 'விசிப்பலகை' என்பது ஆடாமல் அசையாமல் செய்யப்பட்ட அமர்விருக்கை.*

**விசும்பு:**

*விசும்புதல் = மேல் எழும்புதல்; விம்மி ஏங்கல் என்பது ம.வ.*

இவ்வழக்கால் விசும்பு என்பது மேலே என்பதும் ஒலி உடையதென்பதும் விளக்கமாம். பழந்தமிழ்ச் சொல்லை மக்கள் வழக்கால் நிறுவ வாய்க்கும் சொற்களுள் விசும்பும் ஒன்று.

"பவ்வ மீமிசைப் பகற்கதிர் பரப்பி
வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்கு" - பொருநர். 135-136

**விசை:**

விசை = விரைவு; விசையா ஓடி வா; விரைவாக ஓடி வா. "பந்து விசையாகப் போகிறது".

"உனக்கு எத்தனை விசை சொல்வது" என்பதில் எத்தனை முறை என்னும் பொருள் உள்ளது. அந்த விசையைத் தட்டு அல்லது போடு என்பது விரைந்தோடும் பொறியைக் குறிக்கிறது.

**விசைப்பு:**

முஞ்சிறை வட்டாரத்தில் விசைப்பு என்பது 'பசி'யைக் குறிக்கிறது. பசி படுத்தாத பாடுதான் என்ன? விருதுநகர் வட்டாரத்தில் விசைப்பு என்பது சீற்றம் என்னும் பொருளில் வழங்குகின்றது. "நான் சொன்னதைக் கேளாமல் விசைத்துக் கொண்டு போய்விட்டான்" என்பது வழக்குத்தொடர்.

**விச்சி:**

வித்தி > விச்சி.

விதைத்து என்பது வித்தி எனப்படும். அது விச்சி என வழங்குதல் "பருவி விச்சி மலைச்சாரல் பட்டை கொண்டு பகடாடி" (தே. சுந். திருவை. 3).

பருவி = பருத்தி.

**விஞ்சை:**

"உஞ்சைப் பதியும் விஞ்சத்து அடவியும்" - சிலப். 6:29
விஞ்சத்து அடவி = விந்திய மலைக்காடு.

மணிமேகலையிலும் சிலம்பிலும் கந்தருவர் என்னும் பொருளில் இடம்பெறுகின்றது. யாழிசை வல்லார் அவர். அதன்

*வழியே விஞ்சை என்பது வித்தை என்னும் பொருளில் வித்தியா தரர் எனப்பட்டார் (வ).*

*வித்தை > விச்சை > விஞ்சை.*

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை

. . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . ."

**விடக்கு:**

*விட்டுப் பிரியாமல் ஒட்டிக் கொண்டிருக்கும் ஊன் விடக்கு ஆகும். விடற்கு உரியது விடக்கு என்பதுமாம்.*

"விடலரிய துப்புடைய வேட்கையை நீக்கி
படர்வை நன்னெறிக்கண் நின்றார் - இடருடைத்தாய்ப்
பெற்ற விடக்கு நுகர்தல் கடல்நீந்திக்
கன்றடியுள் ஆழ்ந்து விடல்" - பழ. 26

*கன்றடியுள் = கன்றின் கால்பதிந்த இடத்து நீருள்.*

**விடங்கம், விடங்கு:**

*ஆண்மையும் ஆற்றலும் கெழுமியதில் அழகும் திகழுமா கலின் இவை அழகெனப் பெற்றனவாம். விடபம், விடை, இடபம் எனப் பெறும் காளையின் தோற்றமும் ஆற்றலும் அறிவோர் அதன் அழகையும் உணரக் கூடும். "ஏறுபோல் பீடு நடை" என்பதும் அதன் திமில் சிறப்பும் கருதுக.*

**விடம்:**

*உயிரை விடச் செய்வது எது? அது விடம்.*

"எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட
ஏழாம் வேகம்" - பெரிய. திருநா.

*சித்த மருத்துவத்தில் 'விட வாகடம்' என்பது தனிப் பிரிவினது.*

விடத்தின் டகரத்தைப் போக்கி விஷமாக்கிவிட்டனர். அது தமிழைக் கெடுத்த கெடுப்பு என்பதை அறியாத தமிழர் விஷத்தை, விசமாக்கினர். தமிழ் மரபு கருதியவர் விடம் என்றனர். விடத்தைத் தீர்த்த மருத்துவர்களை விடதாரி, விடகாரி என்றும் வழங்கினர்.

"வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல்" - மூதுரை 15

**விடர்:**

பாறை வெடிப்பால் பிளவு பட்ட இடம் 'விடர்' என்பதாம். 'விடர்' என்பது ஒழுக்கத்தை விட்டவர் என்னும் பொருளில் வழங்கும். "விடரும் தூர்த்தரும்" என்பது இணைமொழி.

விடராம் கல்வெடிப்பு 'விடரளை' எனவும், விடர்முகை எனவும் படும்.

"இருங்கல் விடரளை" - ஐங். 214

"சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும்" - ஐங். 395

கல்வெடிப்பால் வரிவிட்ட இடம் விடர்.

**விடலை:**

கோயில்களில் வழிபாட்டுக்குக் கொண்டு செல்லும் தேங்காயை வெட்டியோ தட்டியோ உடைப்பர்.

சிலர் தேங்காயை விடலை விடுவர். விடலை என்பது தேங்காயைக் கையில் எடுத்து ஓங்கிக் கல்மேல் எறிந்து உடைப்பதாம். 50, 100 என விடலை விட நேர்ந்து உடைப்பர். கல்லில் விழுந்த காய் சில்லுச் சில்லாக உடையும். விட்டு எறிந்து உடைக்கும் இது, விடலை எனப்படும்.

இளமைப்பருவம் கடந்து பால் உணர்வு உண்டாகிய ஆடவர், பெண்டிர் விடலைப் பிள்ளை எனப்படுவர். அவ்வாறே பாலுணர்வு வரப்பட்ட சில விலங்குகளை விடலை எனல் மக்கள் வழக்கு. எ-டு: விடலைக்குட்டி.

தார் போடப் பூக்கும் வாழையை 'விடலி' வாழை என்பர். இவை இளமைப் பருவம் விட்டு மேலே வளர்ந்தவை என்பதாம்.

*நடைக்காவு வட்டாரத்தில் விடலை என்பது இளநீர் என்னும் பொருளில் வழங்குகின்றது. இளம்பருவம் குறித்ததாகும்.*

**விடல்:**

*விடுதல் > விடல்.*

*நம்மிடம் உள்ள ஒன்றை நம்மை விட்டுப் போகவிடுதல் விடல் ஆகும்.*

"தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்" - தொல். 801

*கைவிடல், போகவிடல், வழிவிடல், நீர்விடல், வளரவிடல், தள்ளிவிடல், தவறவிடல், மறந்துவிடல், ஏமாந்துவிடல், ஒதுங்கவிடல், ஒதுக்கிவிடல், பிதுக்கிவிடல், பேசவிடல், தீரவிடல், தீர்த்துவிடல், தாழ்ந்துவிடல், உயர்ந்துவிடல் எனப்பல்வேறு விடல்கள் மக்கள் இயல்பான வழக்கில் உள.*

"நலத்தை நம்பி விடல்ஒல் லாளே" - நற். 180

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு" - திருக். 342

"நாம் தூது மொழிந்தனம் விடல்வேண்டா நம்மினும்
தாம்பிரிந் துறைதல் ஆற்றலர்" - கலித். 27

**விடவு:**

*நீர் ஓடும் பகுதி, ஓடு என்றும், ஓடை என்றும் வழங்கும். சிறிய நீர் ஓடை முஞ்சிறை வட்டாரத்தில் விடவு என வழங்குகின்றது. பயிரிடப்படாத விடுநிலத்தில் மேய்ச்சல் நிலத்தில் ஓடும் சிற்றோடை 'விடவு' எனப்பட்டிருக்கும்.*

**விடாய்:**

1. *விடு + ஆ + ஆய் = விடாய் = விடாதிருப்பாய்.*

"மனைப்பாசம் கைவிடாய்" - நாலடி. 130.

"விடா தீமோ" - கலித். 136

2. *விடாய் = நீர்வேட்கை; வேட்கை ம.வ.*

3. விடாய் = விடமாட்டாய். "எத்தனை முறை சொன்னாலும் நீ களவை விடாய்" ம.வ.

4. விடாய் = களைப்பு. "எனக்கு விடாயாக உள்ளது; சிறிது அமர்ந்து நடக்கலாம்" ம.வ.

விடியல்:

விடிவு > விடியல். இருளின் விடிவு - முடிவு - விடியல் ஆகும். கதிரெழும் பொழுதுக்கு முன்னை இருந்த இருள் அகலல் விடிதல் ஆகும்.

வறுமை நோய் துயர்களில் சிக்குண்டார் "எமக்கு விடிகாலம் எப்பொழுது வருமோ தெரியவில்லை" என்பர். விடிகாலம் விடியல் ஆகும்.

"காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுது" - குறுந். 32

**விடியா மூஞ்சி:**

விடியா மூஞ்சி = கிளர்ச்சியில்லா முகம்.

விடியாமை, பொழுது புறப்படாமை. பொழுது புறப்படாப் பொழுதில் இருள் கப்பிக் கிடக்கும். அப்பொழுதில் முகமும் இருள் படிந்து கிடக்கும். விடியாப் பொழுதில் பார்க்கும் முகத்தைப் போல, விடிந்து வெளிச்சமான பொழுதிலும் ஒருவர் முகம் இருந்தால் அவனை 'விடியா மூஞ்சி' என்பர். இங்கு விடிதல் என்பது சுறுசுறுப்பு, மலர்ச்சி, கிளர்ச்சி ஆகிய பொருள்களைக் குறிப்பதாம். "அழு மூஞ்சிக்குத் திருமணமாம் அன்று பிடித்ததாம் அடைமழை; விடியா மூஞ்சிக்குத் திருமணமாம் விளக் கணைந்ததாம் அந்நேரம்" என்பது வழங்குமொழி.

**விடிலி:**

பதனீர் காய்ச்சிக் கட்டியாக்கும் சாலையை 'விடிலி' என்பது மூக்குப்பீரி வட்டார வழக்காகும். வடிக்கப்பட்ட பதனீரை விட்டுக் காய்ச்சப்படும் இடம் 'விடிலி' எனப்பட்டிருக்கலாம் என நினைக்கவைக்கின்றது.

**விடிவு:**

*விடியும் காலைப்பொழுது விடிகாலை எனப்படும். இருள் விடுதலை அடையும் பொழுது விடிவு எனப்பட்டது. அந்த விடிவு உயிரிகளுக்கெல்லாம் இருள் அச்சம் முதலியவற்றில் இருந்து விடிவு - விடுதலை - தந்தது. களிப்பும் எழுச்சியும் கவிந்து குலாவின. அவ்விடிவு இடரில் இருந்து விடுதலை பெற்றதாயிற்று. அவ்விடிவு வறுமை, நோய் முதலாம் துயர்களிலிருந்து விடிவு ஏற்படும் கருத்துப் பொருளாயிற்று.*

*எனக்கு விடிவு காலம் இல்லையா? விடிவு எப்பொழுதுதான் ஏற்படப் போகிறதோ? ஒரு வெளிச்சமும் தெரியவில்லையே என மக்கள் வழக்கு உண்டாயிற்று.*

**விடிவு காலம்:**

*விடிவு காலம் = நற்காலம்.*

*விடிகாலம், விடிபொழுது, வைகறை, காலை என்பன கதிரோன் எழுந்து இருள் அகல ஒளிபரவும் பொழுதாம். அவ்விடிகாலம் மகிழ்ச்சி, சுறுசுறுப்பு ஏற்படும் பொழுது. இருள் நீங்கி ஒளி சூழும். அப்பொழுதை விரும்புவது இயற்கை. அதுபோல் வறுமையும் நோயும், அல்லலும் வாட்ட வாழும் ஒருவர் அவற்றை நீங்கும் பொழுதை விடிபொழுது போல எண்ணுகிறார். "இனிக் கவலைப்பட ஒன்றுமில்லை. கவலைக்கு விடிவு காலம் வந்துவிட்டது" என்று சொல்லி மகிழ்கிறார். வெயிலில் வாடுபவர்க்கு நிழலை நோக்கிக் கிடைத்தால் விடிவுதானே!*

**விடு:**

1. *விடு = ஏவல். "விடு, நான் போக வேண்டும்" என்பது ம.வ.*
2. *விடு = கைவிடு. "இப்பழக்கத்தை விடு" என்பது ம.வ.*

**விடுகவி:**

*'விடுகதை' உரைநடை வழிப்பட்டது. 'விடுகவி' பாடல் வழிப்பட்டது.*

ஆசிரியர் தொல்காப்பியர் எழுவகை யாப்புகளைக் குறிக்குங்கால் (செய். 78) "நொடியொடு புணர்ந்த பிசி"என்ப தொன்றனைச் சுட்டுகின்றார். "பிசியாவது உவமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் விடுகதைப் பாட்டு வகை"என்பர்.

பிசி இருவகைப்பட்டு இயலுதலை,

"ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே" - தொல். செய். 176

எனத் தெளிவிப்பார் ஆசிரியர். இதற்குப், "பிறைகவ்வி மலை நடக் கும்"என்பது ஒப்பொடு புணர்ந்த உவமம்; இஃது யானை யென்றாவது.

"முத்துப்போற் பூத்து முதிரிற் வண்ண
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு - வித்துதிர்த்து"

என்பதும் அது. இது கமுகின் மேற்று.

"நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீராடில்
ஊராடு நீரிற்காக் கை"

என்பது தோன்றுவது கிளந்த துணிவினான் வந்தது. இது 'நெருப்பென்றாவது'என்பார் பேராசிரியர்.

விடுகதை என வழக்கில் உள்ளனவும் எதுகை மோனை முதலிய தொடை நயம் உடையனவாகவே உலாவுதல் எவரும் அறிந்தது. எனினும் புலமக்களால் யாப்பியல் தவறாமல் செய்யப்படுவது இவ்விடுகவியாம். தண்டபாணியடிகள் பாடிய 'விடுகவி'இருபது பாடல்களை யுடையது ஒன்றும், பத்துப் பாடல்களை யுடையதொன்றும் ஆக இரண்டுள. தனிப்பாடல் களிலும் விடுகவிப் பாடல்கள் உண்டு.

**விடுதலை:**

ஒரு நெருக்கடியில் இருந்து விடுபடுதல் விடுதலை ஆகும். சிறையில் இருந்து விடுதலை, கெட்ட பழக்கத்திலிருந்து விடுதலை, அயலான் பிடியிலிருந்தும் பிணையில் இருந்தும் விடுதலை எனப் பலவாம்.

கூட்டில் இருந்து உயிர்பிரிதலும், பொருந்தா மணவாழ்வில் இருந்து விலகுதலும் விடுதலையே. விடுதலை விரும்பியும் முயன்றும் பெறுவதாம்.

**விடுதல்:**

விடு > விடுதல் = விடுவது.

"அன்னையும் அருந்துயர் உழந்தனள், அதனால்
எய்யாது விடுதலோ கொடிதே" - ஐங்குறு. 242

கைவிடுதல், போகவிடுதல் ம.வ.

**விடுத்தான்:**

திண்டுக்கல் வட்டாரத்தில் விடுத்தான் என்பது குழந்தையைக் குறிக்கும் பெயராக வழங்குகின்றது. விடுத்தான் என்பதால் முதற்கண் ஆணைக் குறித்துத் தோன்றிப் பின்னர்ப் பொதுமை பெற்றிருக்கும். பெற்றோர்களுக்குச் செய்யும் கடமைகளைச் செய்து விடுக்கும் பிள்ளை என்னும் கருத்தில் எழுந்தது போலும். கொள்ளிக்குப் பிள்ளை என்பது, பிள்ளைக்கோ பெற்றோர்க்கோ பெருமை தாராச் செய்தி. மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிய மக்களைக் கருமக் கூண்டில் அடைத்த வழக்கு வழியது இது.

**விடுநிலம்:**

பயிரிடப்படாது விடப்பட்ட பொதுநிலம் விடுநிலம் ஆகும். ஆடு மாடு மேய்தல் நிலம், நீர்தேங்கவிட்டுப் பொதுப்பயன் செய்யும் நிலமும் விடுநிலமாம்.

நத்தம் புறம்போக்கு என்பவை விடுநிலமாம்.

"களிறுநீ றாடிய விடுநில மருங்கின்
வம்பப் பெரும்பெயல் வரைந்து சொரிந்து" - புறம். 325

**விடுமுறை:**

வேலையில் இருந்தும் கல்வியில் இருந்தும் ஓய்வுதரும் நாள் விடுமுறை எனப்படும்.

*முறை என்பதால் திட்டப்படுத்தப்பட்டது அது என்பதாம். காரியும் ஞாயிறும் விடுமுறை; ஞாயிறு விடுமுறை. கோடை விடுமுறை; விடுதலை நாள், பொங்கல், விளக்கொளி, ஆண்டுப் பிறப்பு, கிறித்து நாள், மொகரம் என விடுமுறைகள் பல நடைமுறையில் உள்ளவை.*

**விடுவிடு:**

1. *விடுவிடு = கட்டளை. "விடு விடு".*
2. *விடுவிடு = அடுக்கு. "விடும்விடும்"*
3. *விடுவிடு = விரைவுக்குறிப்பு. "அவர் இருக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டு விடுவிடு எனப் போய்விட்டார்" ம.வ.*

**விடை:**

*பறவை, விலங்குகளின் பெட்டையை விடை எனல் மரபு. விடைக்கோழி, விடைக்கத்து.*

*'ஆவிடை' (ஆவுடை) அம்மை பெயர். ஆண் பெண் பறவை, விலங்கு முதலாம் உயிரிகள் இணை தேடுதலும் இணை சேர்ந்து இன்புறுதலும் உயிரியற்கை. இவ்வின்ப உருவகம் விடை என்பதற்கு மறுமொழி (பதில்) என்னும் பொருள் தந்தது.*

*தேர்வுகள் வாய்த்தேர்வு, எழுத்துத் தேர்வு, பயிற்சித் தேர்வு என எவையாயினும் வினாவுதலும் (கடா எழுப்பலும்) விடை தரலும் ஆயின.*

*கடாவிடை இணைவே உலகியற்கையும் உலகியக்கப் பேறும் ஆதல் அருமை மிக்கதாம்.*

**விட்டகுறை தொட்ட குறை:**

*விட்ட குறை = முன்னைப் பிறவியில் செய்யாமல் விட்டவினை.*

*தொட்டகுறை = இப்பிறவியில் எடுத்து முடிக்காமல் விட்டவினை.*

ஒருவன் பிறவியைத் தீர்மானிப்பது, ‘விட்ட குறை தொட்டகுறை’ என்பது இந்திய நாட்டுக் கொள்கை. குறை நீக்கமே வீடுபேறு என்று சொல்லப்படும். சிலர் இளமையிலேயே பெருநிலைப் பேற்றாளராகத் திகழ்வர். அன்னவரை “விட்டகுறை தொட்டகுறையால் வந்தவர். குறை முடிந்து நிறைவாகி விட்ட பெருநிலை இது” எனப் பாராட்டுவர்.

**விட்டம்:**

வட்டத்தின் குறுக்கு விட்டம்.

ஒரு பெரிய கட்டடத்தின் உத்தரத்தில் இருந்து இருபாலும் செல்லும் கட்டை விட்டம் எனப்படல் உண்டு.

**விட்டில்:**

விடு > விட்டு + இல் = விட்டில்.

இவைவெளிப்பட விட்டுத் தாவுதலால், அவ்வியல் கண்டோர் அவ்வுயிர்க்கு ‘விட்டில்’ பெயர் தந்தனர். “கூடு விட்டு ஆவி போதல்” “வேலையை விட்டு விலகல்” என்பவற்றில், விட்டு என்பது விடுபாடு அகலுதல் விலகுதல் பொருள் தருதல் அறிக! புழுப்பூச்சி போல் ஊர்ந்து செல்லாமல் இடைவெளிப்படத் தாவிச் செல்வதால் ‘விட்டில்’ எனப்பட்டது.

**விட்டெறிதல்:**

சினம் வந்தால் கல்லை எடுத்து விட்டெறிதல் நடைமுறைக் காட்சி. கடன் தந்தவரை அலைக்கழித்தால் “என் தொகையை விட்டெறிந்தால் நான் ஏன் உங்களைத் தொடர்கிறேன்” என்பதும், “கையில் இருந்தால் உம் தொகையை விட்டெறிந்திருக்க மாட்டேனா” என்பதும் எரிச்சலில் பேசும் விட்டெறிதல்.

**விட்டேற்றாளர்:**

விட்டேறு > விட்டேற்று + ஆளர் = விட்டேற்றாளர்.

கல்லை விட்டெறிந்தாற் போலச் சுடுசொல்லை விட்டெறிந்து துன்புறுத்துபவர்.

“விடரும் தூர்த்தரும் விட்டேற் றாளரும்” - மணிமே. 14:61

“இகழ்ந்து கடுஞ்சொல் சொல்பவர்” குறிப். உ.வே.சா.

*கட்டுப்பாட்டில் இல்லாமல் திரிபவரை ‘விட்டேத்தி’ என்பது ம.வ. “அவனுக்கென்ன விட்டேத்தி”; “விட்டேத்தியாத் திரிகிறான்” என்பர்.*

**விண்:**

1. *விண் = ஒலிக்குறிப்பு. “நரம்பு விண்விண் எனத் தெறிக்கிறது” ம.வ.*
2. *விண் = வெளி அல்லது பாழ் அல்லது விசும்பு. ஒலி மட்டுமே யுடைய முதற்பூதம். “ஒன்றென” (பரிபா. 3:77)*
3. *விண் =உயரம், மிகுதி. விண்ணளாவிய மலை; விண்ணளாவிய புகழ்.*

“வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே” - பாரதி.

4. *விண் = மழை.*

“விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி” - திருக். 13

“விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே” - குறுந். 144

**விண்டு:**

*காற்று, திருமால், மலை, மூங்கில், முகில் ஆகிய பொருள்களை அகரமுதலிகள் தரும். பிளந்துவிட்டது என்பதை விண்டுவிட்டது என்பது ம.வ.*

“தென்புல மருங்கின விண்டு நிறைய” - மதுரைக். 202

“விண்டு வன்ன வெண்ணெல் போர்வில்” - ஐங்குறு. 158

“விண்டோய் சிமைய விறல்வரை” - புறம். 151

*மலை என்பதன் தழுவல் பொருளாகவே மால், மூங்கில், முகில், காற்று என்பவை விரிந்தன எனக் கொள்ளலாம்.*

**விண்ணப்பம்:**

*வேண்டுகை என்னும் பொருள் விண்ணப்பமாகும். இறைவன் திரு முன்னிலையில் நின்று வேண்டும் வகையால் அமைந்துள்ளது விண்ணப்பப் பாடல்கள்.*

*நீத்தல் விண்ணப்பம் மணிமொழியார் அருளியது. பிள்ளைப் பெருவிண்ணப்பம், பிள்ளைச் சிறுவிண்ணப்பம் முதலாகப் பல விண்ணப்பங்கள் வள்ளலார் அருளியவை. இவை விருத்த யாப்பால் அமைந்தவை.*

*நீத்தல் விண்ணப்பம் ஐம்பது பாடல்களால் முடிமுதல் தொடையால் நடையிடுகின்றது.*

*விண்ணப்பம் பல்வகைப் பாக்களால் பத்தடுக்கிப் பாடப் பெறும் என்பது மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றிய பழனிக் கோயில் விண்ணப்பம் என்னும் நூலால் அறியப் பெறும். அதில், கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, சந்தக் கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கலிநிலைத் துறை, வஞ்சித்துறை ஆகியவை இடம்பெற்றன. அந்நூல் 120 பாடல்களைக் கொண்டுள்ளது.*

*விண்ணப்பப் பொருளமையக் கலிவெண்பாவால் பாடுவது 'விண்ணப்பக் கலிவெண்பா' எனப் பெறும். வள்ளலார் அருளிய விண்ணப்பக் கலிவெண்பா இவ்வகையைச் சார்ந்தது. 417 கண்ணிகளால் அமைந்த அந்நூல் 290-291 ஆம் கண்ணிகளில்,*

"நீறுடையாய் ஆறுடைய நீண்முடியாய் நேடரிய
வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம் - மாறுபட
எள்ளல் அடியேன் எனக்குள் ஒளியாமல்
உள்ள படியே உரைக்கின்றேன்"

*என்று தொடங்கித் தம் விண்ணப்பத்தை விழுமியதாய் உரைத்து,*

"நீ தயவு
சூழ்ந்திடுக என்னையு நின் தொண்டருடன் சேர்த்தருள்க
வாழ்ந்திடுக நின்தாள் மலர்"

*என்று நிறைகின்றது.*

**விண்ணம்:**

*விட்டு வெளியேறும் கழிவை (மலத்தை) விண்ணம் என்பது முகவை வட்டார வழக்காகச் சொல்லப்படுகிறது. விட்டு வெளியேறும் அதனை விட்டை என்பர். பிற விலங்குகளின் கழிவுக்கு அச்சொல் வழங்கலால் இது மனிதர்க்கு மாற்றுச் சொல் போலும்.*

**விண்ணவர்:**

*விண்ணவர் = வானோர்.*

*விண்ணவர், விண்ணவர் கோமான், விண்ணவர் தலைவன், விண்ணகம் என்பவை தொல்காப்பியம் பாட்டு தொகை நூல்களுக்குப் பிற்பட்ட சிலம்பு, மேகலை முதலாய நூல்களின் ஆட்சிகள்.*

"விண்ணவர் கோமான் விழுநூல்" - சிலப். 5:240

**விதந்துரை:**

*விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்ட உரை விதந் துரை யாகும். நூலாசிரியர்கள் நூல் செய்தியைத் தருவதுடன் சில சொற்களை - அவை இல்லாமலும் பொருள் குறை இல்லை எனத் தக்க சொற்களை - விதைச் சொல்லாக இட்டுச் செல்வர். இதனை இலக்கணர் 'விதப்புக்கிளவி' என்பர்.*

*விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும் என்று இலக் கணமும் கூறினர். விடுபாடு நிரப்பவும் வேண்டுவ சேர்க்கவும் புதுவது புகலவும் அவ்விதப்புச் சொல் பயன்படுத்தப்படுதல் இலக்கண உரைகள் எவற்றிலும் காணலாம்.*

**விதவை:**

*இக்காலத்தில் கைம்மை என்பது விதவை என வழங்கப்படு கின்றது. பழங்காலத்தில் விதவை என்பது கூழ்.*

"விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை" - புறம். 326

***பொருள்:*** *"விழுக்காகிய தசையைப் பெய்து சமைக்கப்பட்ட தயிரோடு கூடிய கூழ்" உரை, ஒளவை.சு.து.*

*மிதவை > விதவை எனத் திரிந்திருக்கலாம்.*

"ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை" - புறம். 215

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை" - அகம். 86

**விதிமுறைக் கொள்கை:**

*விதியும் முறையும் கொள்கையும் என்னும் இத்தொடர் இரட்டை மீமிசையாம்.*

"தலைக்கோல் எய்தித் தலையரங் கேறி

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

*புதுமுறையன்று, முதுமுறை ஈதென மூவடுக்குக் கொண்டார். அத்தவனக்காடு என்பது போல. அத்தமும் வனமும் காடும் ஒரு பொருளவே.*

**விதிர்ப்பு:**

"அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்" - தொல். 799

**ஒ.நோ.:**

"அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" - தொல். 794

*'விதிர் விதிர்த்தல்' என்னும் அடுக்கும் கருதுக.*

"என்போல் பெருவிதிர்ப் புறுக நின்னை
இன்னா துற்ற அறனில் கூற்றே" - புறம். 255

*விதிர்த்தல், உதறுதல் சிதறுதல் பொருளிலும் வரும்.*

"நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்" - புறம். 188

**விதுப்பு:**

*விதுப்பு = விரைவு; காணற்கு விரைதல்.*

*கண்விதுப்பழிதல் திருக்குறளில் ஓர் அதிகாரம் (118).*

*தலைமகளின் கண்கள் தலைமகனை விரைந்து காணும் விருப்பத்தால் வருந்துதல்; விதுப்பு காண்டற்கு விரைதல்.*

"கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து" - திருக். 1173

"ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓரேர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் நோகே யானே" - குறுந். 131

**விதை:**

*முளைத்து வளர்ந்து பயன்செய்தற்கு விதைக்கப்படுவது விதையாகும். தவசங்கள் பயறு வகைகள் பழவகைகள் முதலியவை வேளாண் பயிர்கள். இயற்கையாக வளரும் புல்பூண்டு போலன்றித் தேர்ந்து பாதுகாத்து விளைநிலத்து விதைப்பது வித்து அல்லது விதையாகும். விரை என்பதும் இது.*

"முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுள" - குறுந். 155

**வித்தகர்:**

*வித்தின் தன்மை அமைந்தவர் வித்தகர். சதுரப் பாடுடையவர் என்பார் பரிமே.*

*"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்*

*வித்தகர்க் கல்லால் அரிது"- திருக். 235*

*தக்கார் ஒருவர் தக்கார் பலரை ஆக்கி விடுவதால் வித்தின் தன்மை அமைந்தார் - வித்தகர் - எனப்பட்டார்.*

**வித்து:**

*வித்து = வித்துதற்கு - விதைத்தற்கு - உரிய விதை.*

*முளைத்துக் கிளைத்துப் பயன்தர மூலமானது வித்து. வித்து கெட்டித்தன்மை அமைந்தது. அதன் நீர்மத் தன்மை விளங்குமாப் போல விலங்கு மாந்தர் கருவணு விந்து எனப்பட்டது.*

"வித்தட்டு உண்டனை" - புறம். 227

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம்'' - திருக். 85

**வித்துமூலை:**

வித்து = விதை. வித்து மூலை = விதைக்கத் தொடங்கும் மூலை. மழைக்குறி தோன்றும் வடகிழக்கு மூலையை வித்துமூலை என்பது உசிலம்பட்டி வட்டார வழக்கு. அடுப்பு மூலை தென்கிழக்கு ஆகும்.

**விந்து:**

* 'வித்து' காண்க.

**விந்தை:**

விந்து > விந்தை = வியப்பு.

நுண்ணிதில் நுண்ணிதாம் விந்து தோற்றுவித்த உயிரிகளின் தோற்றமும் எழிலும் இயலும் செயலும் அப்பனித்துளியினும் பல்நுண் துளியின் வளர்ச்சியா இது, என்பது நுணுகிக் கண்டார்க்கு விந்தையாகத் தோன்றிற்று. பின்னை, காணற்கரிய காட்சியும் செயற்கரிய செயலும் விந்தை எனப்பட்டன.

**விப்பு வெடிப்பு:**

விப்பு = நீர் இல்லாமல் நிலத்தில் விழும் விரிவு.

வெடிப்பு = மண் கல் முதலியவை பிளந்து காணல்.

விப்பு வெடிப்பு என்பவை இரண்டும் பிளந்தவையே. ஆனால் விப்பு சிறியது; மெல்லியது; கோடு போல்வது.

வெடிப்போ, ஆழம், அகலம், நீளம் எல்லாமும் அகன்ற பிளப்பு. விப்பின் நிலையை அதன் விரிவு, விரிசல் என்னும் பெயர்கள் விளக்கும். வெடிப்பை வெடி வைத்துத் தகர்க்கும் தகர்ப்பு விளக்கும்.

**விம்மல்:**

விம்முதல் > விம்மல் = மனம் வெதும்புதல், பொறுமுதல்.

"தேனொடு
தீம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி" - நற். 179

*"விம்மி விம்மி அழுது குழந்தை உறங்கிவிட்டது; இப்படியா போட்டுவிட்டுப் போவது?" என்பது ம.வ.*

**விம்மிதம்:**

*விம்மிதம் = மனம் விம்மி உண்டாம் பெருமிதம்; வியப்பு.*

*விம்மலுக்கு மாறானது விம்மிதம்.*

"ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையும் தௌவையும் விம்மிதம் எய்தி" - சிலப். 16:46-52

**வியங்கொளல்:**

*வியங்கொளல் = அகலல்.*

*வியல் > வியம் + கொளல் = வியங்கொளல். இருந்த இடத்தைவிட்டு அகலல்; அகன்று செல்லுதல்.*

"வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்" - சிலப். 9:78-79

**வியப்பு:**

*வியல் > வியம் > வியப்பு.*

"வியல்என் கிளவி அகலப் பொருட்டே" - தொல். 847

*ஒன்றனைக் கண்டு அல்லது கேட்டு அல்லது நினைந்து உள்ளம் விரிவுறல் வியப்பு ஆகும்.*

"சால்பும் வியப்பும் இயல்பும்" - குறிஞ்சிப். 15

"வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே" - புறம். 217

**வியம்:**

*விள்ளுதல் = விரிதல். விள் (விய்) - வியம் = விரிவு, வியம் - வியன் - வியல் = அகலம். "வியலென் கிளவி யகலப் பொருட்டே" (தொல். சொல். ).*

*வியம் - வியத் (வ). (தி.ம.:755)*

**வியர்வை:**

*வெம்மை > வெயர் > வியர் > வியர்வை.*

*உடலின் வெப்பத்தைச் சீரளவில் வைக்க உதவுவது வியர்வை. வியர்வை வேர்வை எனவும்படும்.*

*மலச்சிக்கல், காய்ச்சல், வாதம், குளிர்சுரம் ஆகிய நோயர்க்கும் இறப்பு நிலை எட்டியவர்க்கும் வியர்வை உண்டாம் என்பர்.*

*உடலை வியர்க்கச் செய்ய ஒற்றடம் வைத்தல் ஆவிபிடித்தல் உண்டு. நீராவிக் குளிப்பும் உள்ளது. வெப்பைச் சீராக்கச் செய்வன இவை.*

**வியல்:**

*வியல் = அகலம்.*

"வியல் என்னும் கிளவி அகலப் பொருட்டே" - தொல். 847

"களன் அகற்றிய வியலாங்கண்" - புறம். 26

*பொருள்: "போர்க்களத்தை இடமகலச் செய்ய அவ்வாறு களமகலச் செய்த பரந்த இடத்தின்கண்" ப.உ.*

"ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்பாக" - மதுரைக். 1-2

***பொருள்:*** *"அகலத்தை உடைத்தாகிய நீர்ப்பரப்பின் கண்ணே ஓங்குதிரை ஒலிக்குங் கடல் எல்லையாக" நச்.*

**வியனுலகம்:**

*வியன் + உலகம் = வியனுலகம். வியல் > வியன் = விரிவுடைய.*

*உலகம் மண்பரப்பும் நீர்ப்பும் கூடியது. 'விரிநீர் உலகம்', 'கடல்சூழ் உலகம்' என்று கூறப்படும். ஆனால் இவ்வுலகுக்கு அப்பாலும் அப்பாலுக்கு அப்பாலும் உலகங்கள் எத்தனையோ உள்ளனவே! இவற்றை உணர்ந்தோர் உலகை அண்டம் என்றும், உலகப் பரப்புகளை எல்லாம் பேரண்டம் என்றும் கூறுவர். திருவள்ளுவர் பேரண்டப் பரப்புக்குக் கலைச்சொல் ஒன்றை வழங்குவார் போல் 'வியன் உலகம்' என்றார் (திருக்.13,19).*

**விரகர்:**

*விரகர் = அறிவினர்.*

"விரகர் ஒருவர் புகழ்ந்திடவே வேண்டும்" - தனிப்.

*விரவர் > விரகர். பலரொடும் கலந்து பலர் பாராட்டுக்கும் உரியராய் விளங்கும் புலமையர் விரகர் ஆவர். உயர்மக்களொடு விரவி - கலந்து - ஒழுகும் இயல்பினர் தாம் விரகர் எனல் சிறப்பினதாம்*

*உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார், பல கற்றாலும் கல்லார்தாமே (திருக்.140).*

**விரல்:**

*சுருங்கல், விரிதல், அகலல், குவிதல் எனப்பல நிலைகளைக் கொண்டிருந்தாலும் விரிந்து சுருங்கல் வழியாக உண்டாகிய பெயர் விரல் ஆகும்.*

"விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி" - அகம். 54

**விரல் வைத்தல்:**

*விரல் வைத்தல் = தலையிடுதல், தொடுதல், எச்சரித்தல்.*

*"என்னைத் தொடு பார்க்கலாம்" என ஓட்டப்பந்தயம் ஓடுவது விளையாட்டு. "என்னைத் தொடு பார்க்கலாம்; உயிரோடு திரும்பி விடுவாயோ?" என்பது வினையாட்டு. சீற்ற மிக்க பொழுதில், 'விரலை வை' என்றோ, தொடு என்றோ சொன்னால்,*

"நீ தொலைந்தாய்" என்னும் எச்சரிக்கையாம். எச்சரிக்கைப் படுத்துதற்கு ஒரு விரலை நீட்டுதலும், நீட்டி ஆட்டுதலும் காணுங்கால், விரல் வைத்தல் என்பதன் பொருள் விளக்கமாம். உதட்டின் மேல் விரல் வைத்தால் பேசாதே என்னும் எச்சரிக்கையாம்.

**விரவுதல்:**

கலத்தல், ஒன்றனோடு ஒன்றையோ பலவற்றையோ கலத்தல், விரவுதல் ஆகும். விரவல் என்பதும் அது. கல், மண், கன்மா, நீர் ஆயவற்றை விரவலைக் கலவை எனல் வழக்கு.

'மிக்சர்' என்னும் பண்டம் விரவலாம்.

"தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்" - தொல். 526

விரவுதல் > விராவுதல் என்றும் ஆகும்.

"விராமலர்க் கூந்தல்" - மணிமே. 10:32

**விரற்கடை:**

விரல் + கடை = விரற்கடை. கடை = இடம், அளவு.

விரற்கடை விரலளவு.

"என்னைத் தலைகவிழ வைத்துவிட்டாய். நீ என்மகன் இல்லை; உனக்கு என் நிலத்தில் ஒரு விரற்கடை கூட இல்லை; என் முகத்தில் விழியாதே" ம.வ.

**விரி:**

விர் > விரி.

சுருங்கியோ குவிந்தோ இருந்த ஒன்று நீண்டும் அகன்றும் விரிவது விரியாகும்.

"விரிக்கும் வழி விரித்தல்" - தொல். 886

"விரிகதிர்ச் செல்வன்" - மணிமே. 12:76

**விரிசோலை:**

பனை ஓலையை நெடுகலாக விட்டு மழைக்குப் பயன் படுத்தும் கொங்காணியாகச் செய்வது நாட்டுப்புற வழக்கம். விரிசோலை என்பது கொங்காணியைக் குறிக்கும் நெல்லை மாவட்ட வழக்குச் சொல்லாம்.

**விரிச்சி:**

விரிச்சி என்பது நற்சொல்லாகும். உருவிலி (அசரீரி) என்பதுவும் அது. விரிச்சியின் இலக்கணத்தை.

"வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
ஈண்டிருள் மாலைச் சொல்லோர்ந் தன்று"

என்று கூறும் புறப்பொருள் வெண்பா மாலை.

மாலை இருளில் வீரர் தெருவில் நிற்கின்றனர். அப் பொழு தில் ஒருவன், "குடக்கள் நீ கொண்டுவா"என்றான். அவ் வொலியைக் கேட்டதும், "வெற்றி பெற்றோம்"என்று உவகை கூர்ந்தனர். இது புறப்பொருள் வெண்பாமாலை தரும் விரிச்சி.

"எழுவணி சீறூர் இருள்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவிற்
குடக்கள்நீ கொண்டுவா என்றான் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும்" - பு.வெ.மா. 4

இனி முல்லைப்பாட்டிலே "இன்னே வருகுவர் தாயர்" என்பவன் மொழியை,"நன்னர் நன்மொழி"என்பதுவும் அதுவாம். கேட்டு நிற்பவர் மறிவெட்டுதலும், வெட்சி மலரும் தினையும் தூவுதலும் ஆகிய வழக்குண்மையையும் விரிச்சி இருட்போதில் கேட்டலையும் இப்பாடலில் எடுத்தோதினார்.

நெல்லெறிந்தும், முல்லை அலரிப் பூக்களைத் தூவியும் விரிச்சி கேட்பார் என்பதை,

"நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்" - புறம். 180

என்றும்,

“நெல்லொடு,
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப” - முல்லைப். 8-11

என்றும் வருவனவற்றால் அறியலாம்.

வினைமேற் கொண்ட வெட்சி மறவன் ஒருவன் தன்வீறு விளக்கமுறும் வண்ணம்,

“விரிச்சி ஓர்தல் வேண்டா
எயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே”

என்றான்.

விரிச்சியூர் என ஓர் உண்டு. அங்கே நன்னாகனார் என்னும் சங்கச் சான்றோர் ஒருவர் இருந்தமையும் இவண் கருதத்தக்கதாம்.

**விரிவாலை:**

பெட்டவாய்த்தலை வட்டாரத்தில் மறைவு தட்டியை விரிவாலை என்பது வழக்கம். விரித்துக் கட்டப்பட்ட சுற்று என்பது பொருள். ஆலை என்பது சுற்றாலை, செக்காலை என்பதால் சுற்றுதல் பொருள் தருதல் விளங்கும். கரும்பாலையும் சுற்றாலையாகவே இருந்தது. திருச்சுற்றுடையதே ‘ஆலயம்’ என்க.

**விருதா:**

விருதா என்பது வீண் என்னும் பொருள்தரும் பொது வழக்குச் சொல். ஈனாத மலட்டு மாட்டை ‘விருதா’ என்பது நெல்லை வழக்கு. கன்று என்னும் பயனோ, பால்முதலாம் பயனோ இல்லாமையால் பெற்ற பெயர் அது.

**விருதிவீடு:**

மணமகளார் வீட்டை விருதிவீடு என்பது திருச்செந்தூர் வட்டார வழக்காகும். விருந்தாளியாக வைத்து மாப் பிள்ளையையும் அவர் வீட்டில் இருந்து வருவாரையும் போற்றுதல் வழக்கு வழிப்பட்ட ஆட்சி இது.

**விருது:**

*விரி > விரு > விருது.*

*ஒருவருக்கு அமைந்துள்ள திறத்தை விரிக்கும் வகையில் சிறப்புச் செய்தலும் பாராட்டலும் சான்று வழங்கலும் பணமுடிப்பளித்தலும் விருது ஆகும்.*

*பழநாளில் எட்டி, ஏனாதி, காவிதி முதலாக அரசால் விருதுகள் வழங்கப்பட்டன. இக்கால் மக்களாலும் அரசாலும் பல்வகை விருதுகள் வழங்கப் படுகின்றன. தனியார் அமைப் புகளும் விருதுகள் வழங்குகின்றன.*

***எ-டு:***

*திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது.*

**விருத்தி:**

*விரிவு > விருத்தி.*

*நூல்களுக்குப் பேருரை அல்லது விரிவுரை எழுதுவது. விருத்தி எனவும் விருத்தியுரை எனவும் விரிவுரை எனவும் வழங்கும்.*

***எ-டு:***

*தொல்காப்பியப் பாயிர விருத்தி; நன்னூல் விருத்தி.*

** ‘நூல்’ காண்க.*

**விருத்துக் கொள்ளல்:**

*கை கால் மரத்துப் போதல், மரமரத்தல் என்பவை குருதி ஓட்டம் தடைப்பட்டு உணர்வு குன்றிய நிலையாகும். மரத்துப் போனது நீங்கும் நிலையில், குருதி பாய்ந்து செல்லுதல் விருவிருப்பாக இருக்கும். அதனை விருத்துக் கொள்ளல் என்பது பெட்டவாய்த்தலை வழக்காகும்.*

**விருந்து வைத்தல்:**

*விருந்து வைத்தல் = திருமணம் முடித்தல்.*

திருமண நிகழ்ச்சியில் முதன்மையானது தாலி கட்டல். திருமணச் சிறப்பில் முதன்மையானது விருந்து. ஆதலால் திருமணமாக வேண்டிய அகவையினரைக் காணுங்கால் "எப்பொழுது விருந்து வைக்கப் போகிறீர்?" என வினவுவது வழக்கம். திருமணம் பல்கால் தட்டிப் போகின்றவரை இப்படிக் கேட்டுக் கேட்டுச் சலிப்புற்றுக் கேட்பவர்களைக் காணுமுன்னே தலைமறைந்து ஒதுங்கி விடுவதும் உண்டு. விழாக்கள் என்றாலே விருந்துதானே பேசப்படுகின்றன. சாப்பாட்டுப் பேச்சே பலர்க்குச் சலிப்பில்லாப் பேச்சாக இருத்தல் கண்கூடு. அவர்கள் சாப்பாடு பற்றிப் பேசுங்கால் அதில் மூழ்கி மூழ்கி முத்தெடுத்தல் போலவே சுவைத்துப் பேசுவதும் ஒரு சுவையேயாம்.

**விருந்தோம்பல்:**

விருந்தோம்பல் பண்பு உலகில் சிறப்புப் பெறுவானேன்? 'விருந்து' என்பது உறவினர்க்குச் செய்யப்படுவது அன்று. தொடர்பு இல்லாத, புதியவர்க்கும் பெரியவர்க்கும் துறவியர்க்கும் செய்யப்படுவதாகும். அவ்விருந்து நன்மக்கள் - பெருமக்கள் - சார்பு உண்டாக்கும். அவர்கள் நல்லுரையும், தொடர்பின் நிறைவும், வழிகாட்டுதலும், குடிவழிக்கு நீளப் பயன்தரும்.

பெரியவர்கள் வருவதால், பெரியவர்களுடன் குழந்தைகளுக்கும் அறிமுகமாகித் தொண்டு செய்யவும், நல்லொழுக்கமும் நல்லறிவும் பெற்றுக் கொள்ளவும் ஆகிய சூழல், தேடிப் போகாமல் தானே தேடி வந்து நிற்கும்.

குடும்பங்களில் உண்டாகியிருந்த சிறிய மனத் தாங்கல்கள், பெரியவர்களைப் பேணும் வாய்ப்பு நேரும் போது அகன்று ஒழியும்.

குடும்பத்தோடு வாழ்பவர்கள், ஊரில் வாழும் பெருமக்களைப் பேணுமுகத்தால், அவர்கள் செய்யும் பொதுநலப் பணிக்குத் துணையாம் பேற்றைப் பெற்றுப் பிறவிப் பயனையும் இல்வாழ்க்கைப் பயனையும் பெற்றவர் ஆகின்றனர்.

உழையாச் சோம்பர்க்கும், வெட்டியாகத் திரிவார்க்கும் தரும் உணவு விருந்தாகாது. போலித் துறவியர்க்கும் ஏமாற்றும் வஞ்சக வேடத்தவர்க்கும் 'புண்ணியம் கிடைக்கும்' என்னும்

*பொய்ம் மயக்கத்தால் கொடுப்பதும் விருந்தாகாது. அவை, 'பசிக்கு உணவு' என்றும் அளவிலே பயன்பெற்றவர் நலமாக மட்டுமே அமையும். படைத்தவர் நலமாக அமையும் விருந்து, வள்ளுவர் கூறிய துறவியர், தொண்டர், பேரறிவாளர், முனிவர் முதலியோர்க்குச் செய்யும் விருந்தேயாம்.*

**விருப்பு:**

*விரி > விரு > விருப்பு.*

*விரிந்த அன்பும் விரிந்த ஆர்வமும் விருப்பு ஆகும்.*

"கடுஞ்சுரை நல்லான் நடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பின்" - குறுந். 132

"அரும்பெறல் உலகத் தான்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே" - புறம். 213

**விருவிட்டான் பயறு:**

*திண்டுக்கல் வட்டாரத்தில் விருவிட்டான் பயறு என ஒன்று சொல்லப்படுகிறது. அது மற்றை வட்டாரங்களில் கல்லுப்பயறு எனப்படுவதாகும். விருவிட்டான் என்பதொரு முட்செடி. வெட்டிய உடனே எரிக்கத் தக்கதாக வறண்ட செடி அது. இப்பயறு தன் கெட்டித் தன்மையால் விருவிட்டான் செடி போல - நீர்ப்பசை யற்றதாகக் கூறப்பட்டதாகலாம்.*

**விரை:**

1. *விரை = விரிந்து பரவும் மணம்.*

"நறுவிரை நன்புகை" - நற். 315

2. *விரை = விரைந்து செல்லுதல்.*

"விரைபரிக் குதிரையர்" - சிலப். 26:199

3. *விரை = விதை. அவருக்கு ஐந்து குறுக்கம் (எக்டேர்) விரைப்பாடு உள்ளது.*

4. *விரை = ஏவல். விரைந்து செல் ம.வ.*

**விரைப்பு :**

***விதைப்பு:***

*விரைவாகச் செல்லுதல் விரைப்பு, சினத்தால் செல்வாரும் மெல்லெனச் செல்லார். ஆதலால், விரைப்பு என்பது சினந்து செல்லுதலையும் சுட்டும். விதை தெளிப்பவர் மெதுவாக நடவார்; விதை என்பது விரை எனவும் வழங்கும் ஆதலால் விரைப்பு என்பது விதைப்பு எனவும் பொருள் தரும். விரை = விதை, விரைவு.*

*'விறைப்பு' என்பது தொய்வில்லாமல் என்னும் பொருளது. துணியையோ கயிற்றையோ துவளாமல் பிடிப்பதை விறைப்பாகப் பிடித்தல் என்பர்.*

**விலங்கு:**

*நிமிர்ந்து நடப்பவன் மாந்தன். குறுக்கே நடப்பது 'விலங்கு'; நாட்டைக் குறுக்கிட்டுக் கிடக்கும் மலையை 'விலங்கல்' என்பர். குறுக்கிடுதலை 'விலங்கு பகை' என்றது பட்டினப்பாலை (26). விலகிக் கிடக்கும் நெடுந்தொலைவைக் குறிக்கும் சொல்லாகத் திருச்செந்தூர் வட்டார வழக்கில் உள்ளது.*

**விலாங்கு (மலங்கு):**

*விலாங்கு = ஏமாற்று.*

*விலாங்கு ஒருவகை மீன். அது பார்வையில் மீன் போலவும் தோன்றும்; பாம்பு போலவும் தோன்றும். அதனால் விலாங்கைப் "பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும்" என்னும் நம்பிக்கை மக்களுக்கு உண்டாயிற்று. பாம்பையும் மீனையும் அவ்வவ்வினம் போலக் காட்டி ஏமாற்றும் என்பது கருத்தாம். அவ்வாறு ஆளுக்குத் தகப்பேசியும் நடித்தும் வாழுபவரை விலாங்கு என்பர். "அவன் ஒரு விலாங்கு; எங்கும் பிழைத்துக் கொள்வான்" என்பர். ஆளுக்குத் தகத் தன்னியல்பைக் காட்டுவது ஏமாற்றுவது தானே!*

**விலை, ஒற்றி:**

*இதற்கு இது விலை என வாங்குவது, விலை.*

*இவ்வளவு காலத்திற்கு என நிலத்தை ஒப்படைத்து அக்காலத்தில் அத்தொகையை மீளத் தந்து நிலத்தைப் பெறுவது ஒற்றி.*

*சுற்றத்தார் ஒப்பி அறம் நடத்துவதற்கு ஒப்படைத்தது உடம்பிடி. குருமடம் கோயிற்குக் கொடுப்பது நன்கொடை. அறனிலை என்பதும் அது. ஊர்ப் பொதுவிற்கென உதவுதல் விடுதலை. ஈடு வைப்பது பன்னிரண்டாண்டு அறுதியானதாம்; அறுதி தீர்ந்து அடைவது வழக்கம்.*

**விலைஞர்:**

*விலை > விலைஞர் = விற்பனை செய்பவர்.*

"பாசவர் வாசர் மைந்நிண விலைஞர்" - சிலப். 5:26

"மைந்நிண விலைஞர் = ஆட்டு வணிகர்." அடியார்க்.

**விலைநலப் பெண்டிர்:**

*விலைநலப் பெண்டிர் = விலைமாதர், பொருட்பெண்டிர்.*

"விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற" - புறம். 365

*பொருள்: "தம்நலத்தைப் பிறர்க்கு விற்கும் பெண்டிர் போலப் பலர் என்நலத்தைப் பாராட்டிக் கூற" உரை, ஔவை. சு.து.*

**விலைபோகாது:**

*விலைபோகாது = ஏற்கப்படாது.*

*"அந்தச் சரக்கெல்லாம் இங்கு விலைபோகாது அல்லது விலையாகாது" என்பது சொன்முறை. சரக்கு என்பதால் வணிகம் என்பதும், விலை என்பதால் கொடுக்கல் வாங்கல் என்பதும் தெளிவு. ஆனால், இவண் அப்பொருள் குறியாமல் சிலர் ஏய்ப்புரை ஏமாற்றுரை சிலரிடம் எடுபடுவது இல்லை. அவர்கள் ஏய்க்க வருவாரின் ஏய்ப்பை எளிதாய் எடை போட வல்லவர். அதனால் அவர்களிடம் ஏமாற்றுதல் தோற்றுப் போகின்றதாம்.*

**விலை போதல்:**

*விலை போதல் = திறமையால் பெருமை யடைதல்.*

திறமையான சிலர் எங்கே போனாலும் செல்வாக்குடன் விளங்குவர். அவரை "விலை போகின்ற சரக்கு அது" எனப் பாராட்டுவர். நல்ல சரக்காக இருந்தால் தேடி வந்து வாங்கிக் கொள்வது போலத் திறமைக்கு எங்கும் மதிப்பிருக்கும் என்னும் தெளிவில் கூறும் உரை இதுவாம். நல்ல மாடு உள்ளூரிலேயே விலைபோகும் என்பர். ஏனெனில் உழைப்பை நேரில் கண்டவர் கேட்கும் விலையைத் தந்து பிடித்துக் கொள்வர் என்பதால். ஆதலால் விலை போதல் என்பது திறமைக்கு மதிப்புண்டு என்பதை விளக்கும் வழக்காகும்.

**வில்:**

1.வில் = வளைவு. "வில்லுமிழ் கடுங்கணை" (மலை. 226)

2.வில் = ஒளி. வெ.வி.பே.

3.வில் = ஏவல். விற்க.

4.வில் = திருவில். திருவில் என்பது வான்வில்லாம்.

**வில்லங்கம்:**

விற்பதற்கோ, மாற்றுவதற்கோ, உரிமைப்படுத்தற்கோ தடையாதல் வில்லங்கமாம். தடுத்துக் குறுக்கிடுவதும் தடுப்பதும் விலங்கல், விலங்கு எனப்படும். செல்லும் செலவைத் தடுத்து நிறுத்தப் போடுவது கை விலங்கு, கால்விலங்கு, விலகுதல் விலக்கம் என்பவை இவ்வழிப்பட்டவை.

ஓடும் நீரை வழிமாற்றலும், எதிரிடுவார்க்கு வழிவிடுதலும் விலகுதலாம். தண்ணீர் விலகுதல், வழிவிலகுதல்.

**வில்லி:**

வில் + இ = வில்லி.

வில் வீரன் வில்லி எனப்படுவான். வில்லில் வல்லன் வில்லாளன் வில்லவன் என வழங்கப்பட்டான்.

வில்லவன் கோதை என்பார் சேர வேந்தருள் ஒருவன். வில்லவன் சேரன் வல்வில் ஓரி கொல்லி மலைத் தலைவன். அவன் கொடி விற்கொடி.

“வில்லேர் உழவர்” என்பார் வள்ளுவர் (திருக். 872).

“வில்லம்பு சொல்லம்புமே தினியில் ரெண்டுண்டு
வில்லம்பில் சொல்லம்பே மேலதிகம்” - கம்ப. தனிப்.

**வில்லுப்பாட்டு:**

வில்லடி, வில்லடிப்பாட்டு என்பதும் இது. வில் படைக் கருவியாகப் பழமை தொட்டே வழங்கியுள்ளது. அதன் அமைப்பில் ‘வில்யாழ்’ என்னும் இசைக்கருவியும் இருந்துளது. ‘வில்பூட்டு’ அல்லது ‘பூட்டுவில்’ பொருள்கோள் என இலக்கண ஆட்சியும் பெற்றுள்ளது. ‘வல்வில் ஓரி’ என்பவன் வில்லாண்மை தனிச் சிறப்புடையதாம். வில்லின் தோற்றம் வானவில்லை நினைவுகூரச் செய்துளது. அது ‘திருவில்’ எனக் குறிக்கப்படும் சிறப்புடையதாயிற்று.

வில்லடிப்பாட்டு சிந்து வகைப் பாடலாக இயலும்; இரு சீரடி இரண்டு இரண்டாய் இணை அடிகள் மோனைத் தொடையில் இயலும்; பொருளுக்கு ஏற்ற சந்தத்தோடும் அமையும். முன்பாட்டு, பின்பாட்டு, வில்லடி, குடமடி எல்லாம் இணைந்து சதங்கை ஒலியோடு வெளிப்படுங்கால் கேட்பவரை வயப்படுத்துதல் கண்கூடு.

பழங்கதை, குமுகாயக் கதை இவற்றைப் பற்றிய வில்லடிப் பாடல்கள் பாடப்படுகின்றன. சிலப்பதிகாரம், இராமாயணம் முதலிய காவியச் செய்திகளும், நல்ல தங்காள் கதை, கட்டபொம்மன் கதை முதலியனவும் கல்லா மக்களுக்கும் களிப்பூட்டுவனவாய் வில்லடிப் பாடலாய் அமைகின்றன. இடையிடையே வரும் உரைநடைச் செய்தி கதையைச் சுருக்கவும் பெருக்கவும் துணையாகின்றதாம்.

**வில்விருத்தம்:**

விற்படையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் யாப்பது வில் விருத்தமாம் (நவநீதப். 41).

**விழவு:**

*விழைவு > விழவு = விருப்பு.*

*விருப்புடன் எடுக்கப்படுவது விழாவாகும். முந்தை விழா எனினும் இன்றை விழா எனினும் விருப்பொடும் கூடியதாய் எடுக்கப்படுவதாம். பலரும் கூடி எடுக்கும் விழா, ஊர்விழா, நாட்டுவிழா, உலகு தழுவிய விழா என எவை எனினும் அடிப் படையாக இருப்பது விருப்பமேயாகும்.*

*மணிமேகலையின் தொடக்கமே விழாவறை காதையாகும். விழா > விழவு எனவும் படும்.*

"விழவு மேம்பட்ட என்நலன்" - குறுந். 125

"பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்து" - பட். 255

"ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனர் அகநகர் மருங்கென்" - மணிமே. 68-72

"விழாக் கால்கோள்" செய்தல் - மணிமே. 3:144

*"விழவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது" உரைபெறு. சிலப்.*

**விழித்தல்:**

*விரித்தல் > விழித்தல்.*

*1. விழித்தல் = இமை திறத்தல். மூடிய இமைகளை விரியத் திறத்தல் விழித்தலாம். கதிர் தோன்றும் விடியல் உலகு விழிக்க மூலமாம்; ஆயினும் இமை விரித்தல் இல்லாமல் விழித்தல் இயலாதே!*

"துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து" - திருக். 1216

*2. விழித்தல் = பார்க்கும் அளவில்.*

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" - தொல். 877

*3. விழித்தல் = எச்சரித்தல். "விழிப்போடு சாலையில் செல்ல வேண்டும்" ம.வ.*

**விழுங்குதல்:**

*வாயில் இட்டுத் தொண்டை வழியே குடலில் விழுமாறு செய்தல் விழுங்குதல் ஆகும். மேலிருந்து கீழே வீழ்வது வீழ்து, வீழ்ச்சி, வீழ்தல், வீழ்வு எனப்படும். ஆல வீழ்து, நீர்வீழ்ச்சி, மரம்வீழ்தல், பருந்தின் வீழ்வு ஆகியவை அவை. அவ்வாறே, வீழச் செய்தல் > விழச்செய்தல் > விழுங்கல் ஆயதாம். "குழந்தைகள் மருந்தை விழுங்கப் படும்பாடு அப்பப்பா" ம.வ.*

**விழுத்துணை:**

*விழுப்பம் > விழு + துணை = விழுத்துணை.*

**ஒ.நோ.:**

*விழுப்பம் + தண்டு = விழுத்தண்டு.*

"தொடித்தலை விழுத்தண்டு" - புறம். 243

"விழுப்புண் படாஅத நாளெல்லாம்" - திருக். 775

*விழுத்துணை = விழுப்பம் மிக்க துணை; பாதுகாப்பான - சிறந்த துணை.*

"மிக்க அறமே விழுத்துணை யாவது" - மணிமே. 22:138

**விழுநிதி:**

*விழுப்பம் > விழு + நிதி = விழுநிதி = சிறந்த செல்வம்.*

"தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்" - மதுரைக். 202-203

*நிதியம் என்பதும் அது. அளவு கடந்த செல்வம் என்பதை "விழுநிதிக் குப்பை" (குவியல்) என்னும் மணிமேகலை (16:122).*

**விழுந்து எழுதல்:**

*விழுந்து எழுதல் = வறுமைப்பட்டு வளமையுறுதல்.*

*கீழே விழுதலும், விழுந்தவர் காலூன்றிக் கையூன்றி எழுதலும் வழக்கே. இவ்வழக்கில் இருந்து பொருள் நிலையில் வீழ்ச்சியடைதல் விழுதலாகவும், பின்னர் அரிதின் முயன்று தேடி நிலைபெறுதலை எழுதலாகவும் சொல்லப்பட்டனவாம். "விழுந்தவன்தான் மேலும் மேலும் விழுந்தானே அன்றி எழுந்த பாட்டைக் காணோம்" என்பது ஏக்கவுரை. விழுந்தானா? எழுந்தானா? மாயமாக நடந்துவிட்டது என்பது வியப்புரை.*

**விழுப்பம்:**

*விழுப்பு + அம் = விழுப்பம் = பெருமை, சிறப்பு, மேன்மை.*

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" - திருக். 131

**விழுப்பு:**

*மகளிர்தம் மாதவிலக்கு 'விழுப்பு' எனப் பார்ப்பனர் வழக்கில் உள்ளது. தமிழர் வழக்கில் 'தூய்மை' எனப்பட்ட உயர்வழக்கு பின்னே இடையெழுத்துக் கெட்டு வசைச் சொல்லும் ஆயது.*

**விழுப்புண்:**

*விழுமம் = சிறப்பு. விழுமம் புண் என்பது விகாரப்பட்டு 'விழுப்புண்' என நின்றது 'விழுத்திணை' என்பது போல (புறம். 24) விழுப்பத்திற்கு இடனாகிய புண் விழுப்புண் என்க! இதனை 'முகத்தினும் மார்பினும் படும் புண்' என்பர் (திருக். 776, பரிமே.).*

**விழுமம்:**

*விழும் + அம் = விழுமம் = இடர்ப்பாடு.*

*உண்டாகியுள்ள நிலையும் செல்வமும் வீழ்ந்துபடும் இழந்துபடும் நிலையில் உண்டாம் துயரம்.*

"இருபெரு வேந்தர் பொருகளத் தொழித்த
புன்னை விழுமம்" - நற். 180

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு" - திருக். 107

**விழைவு:**

*விழை > விழைவு.*

*விழைவு = விரும்புதல்; சிறந்ததை விரும்புதல்.*

"விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே" - தொல். 788

"விழைவு வெகுளி இவைவிடுவான் ஆயின்
இழவன் றினிது தவம்"- சிறுபஞ். 30

**விளக்கமின்மை:**

*வெளிப்பட விளங்குதல் விளக்கம் ஆகும். பொருள் தெளிவு இல்லாமல் எழுதும் எழுத்து, பேசும் பேச்சு என்பவை விளக்கமின்மை யானவை எனப்படும். ஒரு பகுதியை உரைத்து மற்றொரு பகுதியை மூடி வைப்பதும் விளக்கமின்மை யாகும். ஒரு செயலைத் திறமாக முடிக்க முடியாமையும் விளக்கமின்மை யாதலால் 'விளக்கம் கெட்டவன்' எனப் பழிக்கப்படுவதும் உண்டு. விளக்கம் என்பது ஒளி ஆதலால், 'விளங்காமை' கல்வி செல்வம் முதலியவற்றால் புகழுண்டாக வாழாமையையும் குறிக்கும்.*

**விளக்கம்:**

*எடுத்துக் கொண்ட பொருளை விளக்குவதாய் அல்லது விளக்குதலில் விளக்குப் போல்வதாய் அமைந்த ஒரு நூல் வகை 'விளக்கம்' எனப்படுகின்றது.*

*மனவாசகங் கடந்தார் இயற்றியது, 'உண்மை விளக்கம்'; உமாபதியார் இயற்றியது, 'உண்மைநெறி விளக்கம்'; இவை மெய்ப்பொருள் விளக்க வழி வந்தவை.*

*குமரகுருபரர் அருளிய விளக்கம், அறநெறி விளக்கமாம். 'மேழி விளக்கம்' என்பதொரு நூல் வேளாளர் வரலாற்று விளக்கமாக அமைந்துள்ளது. 'சித்தர் பாடல்' தொகுதியில் 'நெஞ்சறி விளக்கம்' உண்டு.*

**விளக்குநிலை:**

*வேலும் வேல்தலையும் விலங்காது ஓங்கியவாறு போலக் கோலொடு விளக்கும் ஒன்றுபட்டு ஓங்குமாறு கூறுவது விளக்கு நிலையாகும்.*

"வேலும்வேற் றலையும் விலங்கா தோங்கிய

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ."

*இதனைத்,*

"துளக்கமில் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர்"

*என்றார் பன்னிரு பாட்டியலார் (325).*

*வேந்தன் விளக்கைப் பற்றிக் கூறுவதும் அவனைக் கதிருடன் ஒப்பிட்டுக் கூறுவதும் விளக்குநிலை என்னும் துறையாகப் புறப்பொருள் வெண்பாமாலை (200, 201) கூறும்.*

**விளக்கெண்ணெய்:**

*விளக்கெண்ணெய் = வழுக்குதல்.*

*விளக்கெண்ணெய், ஆமணக்கு எண்ணெயாம். விளக்கு எரிக்கப் பயன்பட்ட பழங்கால நிலையில் பெற்ற பெயர் அது. விளக்கு எரிக்க வேறு எண்ணெய்கள் வந்த பின்னரும், எண்ணெய் இல்லாமலே விளக்கெரியக் கண்ட பின்னரும் விளக் கெண்ணெய்ப் பெயர் விளக்கெண்ணெயே! விளக்கெண்ணெய் பிசுபிசுப்பு உடையது; வழுக்கல் தன்மை வாய்ந்தது. வழுக்கு மரம் என்னும் போட்டி விளையாட்டுக்கு, மரத்தில் தடவப்படும் எண்ணெய் விளக்கெண்ணெயே. அதனால் விளக்கெண்ணெய் என்பதற்கு வழுக்குதல் சறுக்குதல் என்னும் பொருள்கள் உண்டாயின.*

*இனி, பிடி கொடாமல் வழுக்குபவனும் விளக்கெண்ணெய் எனப்படுவான். உரத்துச் சொல்லாத சொல்லை விளக் கெண்ணெய் என்பதும் வழுக்கல் வழியதே.*

**விளக்கேற்றல்:**

விளக்கேற்றல் = குடித்தனமாக்கல்.

புதுமனை புகுவிழாவில் விளக்கேற்றல் சிறப்பிடம் பெறும் நிகழ்ச்சியாகும். சில நிறுவனங்களின் தொடக்க விழாக்களிலும் விளக்கேற்றல் முதல் நிகழ்ச்சியாக நிகழ்கின்றன. திருமணமாகி மணமகன் வீடு புகுந்த மணப்பெண்ணை விளக்கேற்ற வந்தவள் என்பதும், அவளை விளக்கேற்றச் சொல்வதும் நிகழ்வுகள் எனினும் அந்நிகழ்வுகளைக் கடந்த பொருளும் உண்டு. குடும்பத்திற்கு ஒளி சேர்க்க வந்தவள் என்னும் பொருளில் விளக்கேற்ற வந்தவள் என்பது வழங்குகின்றது. குடும்ப வாழ்வுக்கு உதவுபவரையும் எங்கள் குடும்பத்துக்கு விளக்கேற்றியவர் இவர் என நயந்து பாராட்டலும் வழக்கே.

**விளங்காடு:**

புன்செய் என்னும் பொருளில் விளங்காடு என்பது நெல்லை மாவட்டத்தில் வழங்குகின்றது. நன்செய்ப் பரப்பினும் புன்செய்ப் பரப்பு மிகுதியால் விரிந்த நிலம் என்னும் பொருளில் விளங்காடு எனப்பட்டது. விளக்கம், விளத்தம் என்பவை விரிவுப் பொருளவை. இனி விளை என்பதும் காடு என்பதும் நிலப் பொருளதே.

எ-டு:

வயற்காடு, தோட்டக்காடு, கூப்புக்காடு.

**விளம்பரம்:**

விளம்பரம் = பல்கால் சொல்லிப் பரப்புதல்.

விளம்புதல், பரப்புதல் என்பவை இணைந்து 'விளம்பரம்' என அமைந்தது. விளம்புதல் = சொல்லுதல்.

வணிகத்துறை, விளம்பரங் கொண்டே பெருவளம் கொழிப்பதாகின்றது. இப்பொழுது ஊடகங்கள் பலவும் விளம்பரத் தொகை கொண்டே கொள்ளை கொள்ளையாக ஈட்டுகின்றன. "நல்ல பொருளுக்கு விளம்பரம் வேண்டிய தில்லை" என்பது இந்த விளம்பர உலகில் எடுபடாப் பழ

மொழியாகவே உள்ளது எனலாம். தரக்குறைவான பொருள் களும் விளம்பரச் சிறப்பால் குறித்த அளவுக்கு விலையாவது உண்டு.

**விளம்புதல்:**

விளம்புதல் = சொல்லுதல். இது பரப்புதல் என்னும் பொருளிலும், பரிமாறுதல் என்னும் பொருளிலும் வழங்கு கின்றது. விளம்பரம் பரப்புதல் தானே. விருந்தில் பரிமாறுதலை விளம்புதல் என்பது தென்தமிழக வழக்கு.

"மயக்கும் தெய்வமிவ் வன்காட் டுண்டென
வியத்தகு மறையோன் விளம்பினன் ஆதலின்" - சிலப். 11:192-193

**விளரி:**

விளர் > விளரி.

விளர்த்துப் போதல், அரத்தம் சுண்டி இரங்கத்தக்க நிலை. விளிதலுக்கு முதலான இரங்கத் தக்க நிலை. இரங்கத்தக்க அந்நிலையில் இசைக்கப்படுவது விளரிப்பண். ஆதலால் விளரி இரங்கல் பண் எனப்படும்.

"சிறுநா ஒண்மணி விளரி யார்ப்ப" - குறுந். 336

விளரியை, வெளிரிப் போதல் என்பது ம.வ.

**விளர்ப்பு:**

வெள் > வெளிர் > வெளிர்ப்பு > விளர்ப்பு = வெளுப்பு, வெண்ணிறத்தது.

"பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
வளையில் வறுங்கை" - புறம். 253

***பொருள்:*** "பசிய மூங்கில் பட்டை யொழிந்தாற் போன்ற வெளுத்திருந்த வளையில்லாத வறியகை" ப.உ.

**விளாம்பழம்:**

விள்ளா > விளா = வெடியா.

*வெடித்தல் இல்லாத கெட்டியான ஓடுடைய பழம் விளாம்பழம். பலாப்பழம் வெடிக்கும்; அவ்வாறு வெடித்தல் இல்லாதது.*

*பழுக்கப் பழுக்கப் புளியம் பழம் போல், உட்சுருங்கித் தோட்டொடு ஒட்டாத பழம் ஆதலால் துறவு வாழ்வுக்கு உவமையாக்கப்பட்டது. "விளாம்பழமும் தோடும் போல அவர் ஒட்டாமல் வாழ்ந்தார்" ம.வ.*

**விளி:**

*விள் > விளி = அழைத்தல், கூப்பிடுதல்.*

*வாயசைத்துக் குரலெடுத்து அழைத்தல், விளியாகும். கையசைத்து அழைத்தலும் விளியாகும்.*

"வள்ளுயிர்த் தெள்விளி இடையிடைப் பயிற்றியும்" - குறிஞ்சிப். 100

"இனந்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி" - குறுந். 207

*அண்மை விளி, சேய்மை விளி என விளிவகை இரண்டாம். எ-டு: ஐய, ஐயா.*

**விளிதல்:**

*விளிதல் = இறத்தல்; உடல், வெளுப்புற்று இறந்து போதல்.*

"தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து
செருப்புகல் மன்னர் செல்வுழிச் செல்கென
மூத்து விளிதல்இக் குடிப்பிறந் தார்க்கு" - மணிமே. 23:13-15

**விளை:**

1. *விளையும் நிலம், விளையாகும்; முற்றுதல்.*
2. *விளை = விளைதல். தவசம் கனி முதலியன பயன்தருதல்.*
3. *விளை = விளைநிலம் உடைய ஊர்ப்பெயர். எ-டு: திசையன்விளை.*

"அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
அதியன்" - சிறுபாண். 100-103

**விளையாட்டு:**

*விளையாட்டு = பயன்கருதிய ஆடல். விளை = பயன்.*

*பண்பாடும் திறமும் அறிவாற்றலும் உடல்வலிவும் உண்டாக ஆடும் கட்டமைந்தது, விளையாட்டு ஆகும். பந்து விளையாடல், ஓடி விளையாடல், புனல் விளையாடல் முதலாயவை அவை. விளையாடல், விளையாட்டு என்பதுமாம்.*

*திருவிளையாடல் தெய்வத்தொடர்பொடு பின்னப்படுவது.*

*"விளையாட்டாகச் சொன்னேன்" என்பது பொருட்டாக எண்ண வேண்டா என்று கூறுவதாம். "கண்ணன் ஓயாத விளையாட்டுப் பிள்ளை" (பாரதி.).*

**விறகு:**

*விறல் > விறகு.*

*வலிய கட்டையும் கோடரியால் பிளக்கத் தக்கதும் ஆகிய எரிபொருள் விறகு ஆகும். பின்னே எரிபொருள் அனைத்தையும் குறிப்பதாயிற்று.*

*குச்சி, தட்டை, மாறு, சுள்ளி, மரப்பட்டை முதலிய எல்லாமும் விறகு எனப்படலாயின.*

"நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டி" - மலைபடு. 446

"முடலை விறகின் முளிஎரி பொத்தி" - மணிமே. 16:26

**விறலி:**

*விறல் > விறலி. விறல் = திறம்.*

*திறம்பெற ஆடல் வல்லாள், விறலியாம்.*

"நனவுப் புகு விறலி"- அகம். 82

*நனவு = விழா வரங்கம்.*

**விறல்:**

*விறல் = வலிமை, திறம்.*

"விறல்கெழு தானை" - புறம். 122

"விறல்மிகு குருசில்" - புறம். 161

"விறல்வரைக் கவாஅன்" - அகம். 3

**விற்சுளி (விச்சுளி):**

*வில்லில் இருந்து விரைந்து செல்லும் அம்பு விற்சுளி என்பது. அவ்வாறு பாய்ந்து செல்லும் பறவை மீன் குத்தி அல்லது மீன்கொத்தி. சுள் > சுளி = விரைவு. விரைந்து பாயும் பாய்ச்சல், 'விற்சுளி' எனக் கழையாட்டில் ஓர் ஆட்டமாக நிகழும். விண்வெளி ஓடத்தில் இருந்து வெளியேறி மீண்டும் விண்வெளி ஓடத்தில் தாவிப் பற்றுவது போன்ற தாவுதல் அது. முந்நீர் விழா. விச்சுளிப் பாய்ச்சல் (கி.வா.ச. பக்கம். 38).*

**விற்றல்:**

*வில் > விலை > விற்பு > விற்றல் = விற்பனை.*

*உரிய விலைக்கு ஒன்றைத் தருதல் விற்றல் ஆகும். விற்றல் வாங்கல் என்பவை பழநாளில் கொடுத்தல் கொள்ளல் எனப்பட்டன.*

"கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை" - பட்டினப். 210-212

*விற்றுக்கோள் என்பதும் பண்டே இருந்தமை, "விற்றுக் கோள் தக்க துடைத்து" என்பதால் விளங்கும் (திருக். 220).*

**வினவல்:**

*வினா > வினவல் = வினாவல், வினவுதல்.*

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோஎன வினவுதி" - புறம். 86

"வினவல் ஆனாப் புனையிழை கேள்" - நற். 109

**வினா:**

*வினவுதல் > வினா.*

"ஆ எ ஓ அம்மூன்றும் வினா"- தொல். 32

"எயா முதலும் ஆவோ ஈற்றும்
ஏஇரு வழியும் வினாஆ கும்மே" - நன். 67

*எவன், யாவன், கண்ணனா, கண்ணனோ, ஏவன், கண்ணனே.*

**வினாவிடை:**

*வினாவிடை என்பது வினாவும் விடையும் அமைந்த பாடல்களால் ஆகிய நூல்வகையைக் குறிப்பதாயிற்று. தாமே வினாவை எழுப்பிக் கொண்டு தாமே விடையிறுப்பதாகவும், பிறர் கேட்ட வினாவுகளுக்குத் தாம் விடையிறுப்பதாகவும் 'வினா விடை' அமைதலுண்டு.*

*ஆளுடைய பிள்ளையார் தாமே வினா எழுப்பி விடை யிறுப்பதாகப் பல பதிகங்கள் பாடியுள்ளார். மணிமொழியாரின் 'திருச்சாழல்' வினாவும் விடையுமாக அமைந்துள்ளது.*

*சாற்றல் = மறுமொழி கூறல். சாழல் > சாடல். முத்து ராமலிங்க சேதுபதி வினாவிய வினாக்களுக்குச் சரவணப் பெருமாள் கவிராயர் விடையிறுத்ததாக 78 பாடல்கள் தனிச்செய்யுட் சிந்தாமணியில் இடம் பெற்றுள.*

**வினாவுரை:**

"செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்த்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே"

*"கழலீர், சடையிற் பிறை பாம்புடன் வைத்தது சொலீர்" என்னும் வினாவுரை இருத்தலால் இப்பூந்தராய்ப் பதிகம் வினாவுரை எனப்படுகின்றது. 'வினாவிடை'க்கும் இதற்கும் வேற்றுமை 'விடை'இன்மையே. இப்பதிகம் ஞானசம்பந்தர் அருளியது.*

**வினை:**

*வினவுதற்கு இடமாக இருப்பது வினை ஆகும்.*

*“படித்தான்”- உயர்திணை ஆண்பால் ஒருமை தெரிநிலை வினைமுற்று. என்ன திணை? என்ன பால்? என்ன எண்? என்ன நிலை? என்ன செயல்? என்ன காலம்? என்ன இடம்? என்ன நூல்? இவ்வாறு வினாவி விடை காண்பதற்குரியது வினை ஆயிற்று.*

*ஏவல் வினை, குறிப்பு வினை, தெரிநிலை வினை, செய்வினை, செயப்பாட்டு வினை, எச்ச வினை, முற்றுவினை, தன்வினை, பிறவினை என வினை வகை பலவாம்.*

*முன்வினை, பின்வினை, இருப்புவினை முதலியன ‘விதி’ என்னும் பொருளில் சமயவாணர் கொள்ளும் வினைகளாம்.*

**வினைக்குறை:**

*எடுத்த வினையை (செயலை) முற்ற முடியாது அரைகுறையாக விடுவது வினைக்குறையாகும். முற்ற முடியாவினை, வினைக்குறை என்பதாம்.*

“வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு” - திருக். 612

***பொருள்:*** *“எடுத்த செயலை முடியாதவரை உலகம் மதியாது. ஆதலால் அதனை இடைத்தடை யின்றி முடித்தல் வேண்டும்” கருத்துரை.*

“வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்” - திருக். 674

*வினையெச்சம் = வினைக்குறை.*

“வினைமுடித்தன்ன இனியோள்” - நற். 3

*என்பது வினை நிறைவு தரும் இன்பம் இயம்பும்.*

**வினைக்கெட்டு:**

*வினை + கெட்டு = வினைக்கெட்டு = செய்கின்ற செயலை விட்டுவிட்டு.*

“வினைக்கெட்டு,

வாயல்லா வெண்மை உரையாது கூறுநின்
மாய மருள்வா ரகத்து” - கலித். 88

**பொருள்:** “நீ போகின்ற தொழிலைத் தவிர்த்து நின்று உண்மை யல்லாத வெண்மைகளைச் சொல்லாதே, நின் பொய்ம்மைகளை மெய்யென்று மயங்குவாரிடத்தே சொல்”நச்.

வினைக்கெட்டு என்பது ‘மெனக்கட்டு’என மக்கள் வழக்கில் உள்ளது.

**வினைச்சொல்:**

சொல்வகை நான்கனுள் ஒன்று வினைச்சொல். வினவுதல் வினாவாம். வினவத் தெரிந்த பருவம் வினாத் தெரிந்த பருவமாம். “எனக்கு வினாத் தெரிந்த நாள்முதல்” என்பது மக்கள் வழக்கு.

வினாக்களுக்கு இடமாய், அவ்வினாக்களுக்கு விடையாய் அமைந்த சொல் வினைச்சொல் எனப்பட்டது. வினையாவது செயல்.

ஒரு சொற்றொடர் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என மூவுறுப்புகளை உடையது. எழுவாய் தோன்றியும் நிற்கும்; தோன்றாதும் நிற்கும்; செயப்படுபொருள் இல்லாமலும் இருக்கும்; இருக்கவும் செய்யும். இவற்றை முறையே, தோன்றா எழுவாய், தோன்று எழுவாய், செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றா வினை என்று வழங்குவர்.

எழுவாயும் செயப்படுபொருளும் தோன்றாவிடினும் குன்றிவிடினும் கட்டாயம் இருந்தே ஆக வேண்டியது வினைமுற்று எனப்படும் பயனிலையாம்.

பயன் - சொற்றொடரின் பயன் - நிற்கும் இடம் ‘பயனிலை’. அவ்வாறு நிற்காதாயின் அத்தொடரால் ‘பயன் இலை’யாம். இரட்டுறல் நயம் வாய்ந்தது ‘பயனிலை’. அப்பயன் வினவுதல் வகையால் அறியப்படுதலின் ‘வினை’ எனப்பட்டது.

கண்ணன் கற்றான். இத்தொடரில், கண்ணன் எழுவாய்; பயனிலை கற்றான். அக்கற்றான் என்பதில் திணை, பால், எண், இடம், காலம், தொழில் என்னும் ஆறும் விளங்கி நிற்றல் -

தெளிவாகத் தெரிய நிற்றல் என்னும் உறுதியால் தெரிநிலை வினைமுற்று என்பர்.

கற்றான் என்பதில் உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இறந்த காலம், கற்றல் தொழில் என்னும் ஆறும் அடங்கியிருப்பதாலும் முடிநிலை எய்தி யிருத்தலாலும், ‘உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று’ என்று கற்றான் என்பதற்கு இலக்கணம் கண்டனர்.

இதனால், வினவுதல் வகையால் ‘வினை’ என்னும் சொல் கிட்டியது என்பதை அறியலாம். கற்றான் என்பது கொண்டு, “எவன் கற்றான், எதைக்கற்றான், எங்குக் கற்றான், எப்பொழுது கற்றான், எவ்வாறு கற்றான்” என்றெல்லாம் இவ்வாறு வினவுதற்கு இடமாதலுண்மை தெளிக.

**வினைஞர்:**

வினை > வினைஞர். நர், ஞர் வினையீறுகள்.

“கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி” - சிறுபாண். 257

* ‘வினை’ காண்க.

**வினைப்பயன்:**

வினை + பயன் = வினைப்பயன்.

தாம் செய்த வினையின் பயன் உழைப்புக்குக் கூலி போலவும் வேலைக்குச் சம்பளம் போலவும் ஒருகாலத்து வழக்கில் இருந்தது. அது பின்னே சமய நோக்கில் உருவும் நிழலும் போல் ஒழியாமல் தொடரும் விதி என்னும் பொருள் தருவதாயிற்று.

“வினைப்பயன் விளையுங் காலை உயிர்கட்கு
மனப்பே ரின்பமும் கவலையும் காட்டும்” - மணிமே. 30:62-63

**வினைமுகம்:**

வினை + முகம் = வினைமுகம் = செயலாற்றும் இடம், போர்க்களம்.

"முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்" - திருக். 749

**வினைவயிற் பிரிதல்:**

*வினை + வயின் + பிரிதல் = வினைவயிற்பிரிதல். வினை = தொழில்.*

*தன் தொழில் வகையாலாவது, அரசன் ஏவிய தொழில் வகையாலாவது துணையைப் பிரிந்து செல்லுதல், வினைவயிற் பிரிதலாம்.*

"எல்லையும் இரவும் வினைவயிற் பிரிந்த
உள்ளம்" - அகம். 299

**வினைவலர்:**

*வினைவலர் = வினை செயலில் வல்லமையாளர்.*

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்" - தொல். 969

**வினைவனப்பு:**

*செயல் திறனால் சிறந்து விளங்கும் அழகு.*

"வினைவனப் பெய்திய புனைபூஞ் சேக்கை" - அகம். 167

**வினை வேறுபட்டார்:**

*எண்ணம் ஒன்றாய், சொல்வேறொன்றாய், செயல் இன்னொன்றாய் இருப்பவர் வினை வேறுபட்டார் ஆவர்.*

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" - திருக். 819

*எண்ணம் சொல் செயல் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டதற்குத் தாமே சான்றாக அமைந்தவர் சான்றோர்.*

✲✲✲

# ‘வீ’ வரிசைச் சொற்கள்

**வீ:**

*வகர ஈகாரம்; நெடில்; ஓரெழுத்து ஒருமொழி.*

*வீ > வீழ்.*

*மேலிருந்து கீழே இறங்குவது வீழ்; வீழ்து, வீழ்ச்சி, வீழ்தல் என்பவற்றின் மூலம் வீ.*

*வீழ்துடைய மரம் ஆல்; வீழ்ச்சி, அருவி வீழ்ச்சி; பருந்து மேலிருந்து கீழிறங்கல் வீழ்ச்சி. அது பருந்தின் வீழ்ச்சி; நூற்பாவின் அமைப்பு வகையுள் ஒன்று அது.*

*விரும்புதல் வீழ்தல் ஆகும். "வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி" (திருக். 1192). வீழ்வர் 'வீழுநர்' எனப்படுவர்; "வீழுநர் வீழப் படுவார்" வாழுநம் என்னும் பெருமிதத்திற்கு உரியர்.*

*வீழ்ச்சியின் எதிரிடை எழுச்சி.*

*வீ என்பது வண்டு, ஈ முதலியன; மலரைக் கண்டும் வேண்டும் துய்ப்புக் கண்டும் வீழ்ந்து இறங்குதலால் வீ ஆயிற்றாம்; வீழும் மலரும் வீ ஆயது. வாழும் உயிரி இயக்கற்று வீழ்தல் ழகர ஒற்றுக் கெட்டு வீதல் ஆகும்.*

*வீழல் = சாதல். "வீழும் உயிரை எழுப்புதலோ" (ஆசிய சோதி). வீழ்தல் 'வீவு' ஆகும். வீவு = சாவு. "அம்மாமி வீவும்" (சிலப். 29:6) வீவுற்ற உடல் நாற்றம் எடுக்கும் அது 'வீச்சம்' ஆகும். நாற்றம் பொதுமையதாய் இருந்து பின் நறுமணமற்றதனைக் குறிப்பதாயிற்று.*

*"வெறி நாற்றம்" (திருக். 1113). இது நறுமணம், இயற்கை மணம். 'நாற்றம் = நாற்று நாறும் (முளையிடும்) நிலை இயற்கை மணம். சாவு - சவ - மணம் அல் நாற்றம், தீ நாற்றம்.*

*வீச்சம் காற்றுடன் வந்து நம்மொடு கலப்பது; நறுமணம் கலத்தல் "வீசு தென்றல்" (திருநா. தேவா.) "வீச்சக் காற்றை அன்றி வேறு காற்று அற்ற வீதி".*

*வீச்சாங்கை > பீச்சாங்கை; இடக்கை; இடக்கரடக்கு; கால்கழுவுதல்.*

*வீ > வீண். வீணன்; வீணி; வீணை.*

*ஒ.நோ.: மா > மாண்; மாணன்; மாணி; மாணை.*

*வீண் = வேண்டா எனத் தள்ளப்பட்டது. வீழ்நாள் > வீணாள்.*

*ஒ.நோ.: வாழ்நாள் > வாணாள்.*

**வீங்குதல்:**

*வீ > வீங்கு > வீங்குதல் = வீக்கமாதல், மேலெழுதல்.*

*உடலில் அடிபட்டால் வீக்கம் உண்டாகின்றது. மற்றைப் பகுதியினும் உயர்ந்து அல்லது தடித்துப் போகின்றது. வீங்குதல் போல் கடல்நீர் எழுந்து அலையாகின்றது.*

"வீங்குநீர்ப் பரப்பு" - சிலப். 6:149

"வீங்குநீர் ஞாலம்" - சிலப். 26:105

*வீ = மேலேறுதலும் மேலேறியது கீழிறங்கலுமாகிய இருமையும் தழுவி வரும் சொல். வீ = வண்டு; மேலேறும். வீழ், வீழ்து = கீழிறங்கும். அலை மேலேறிக் கீழே இறங்கும் என்பவை அறிக.*

**வீசுதல்:**

*விசிறுதல் > வீசுதல்.*

*சிவிறி என்பது எழுத்துமாறி விசிறி என வழக்கில் உள்ளது. பெருவழக்கும் கொண்டது. ஓலை விசிறி போய், மாழை விசிறியாகவும் உலாக் கொண்டது. காற்று வீசுதல், மணம் வீசுதல், கம்பை வீசுதல், கயிறு வீசுதல் எனப் பல்வேறு வீசுதல்கள் ஆயின.*

*வீசும் காற்றெல்லாம் 'வீச்சக் காற்று' என நல்நாற்றம் அல்லாமல் அல் நாற்றமும் ஆயது.*

"வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்" - திருநா. தேவா.

*விற்றல் பொருளில்,*

"பல்பண்டம் பகர்ந்து வீசும்" - பட்டினப். 211

*என்பது. திரித்து முறுக்குதல் பொருளில், 'கயிறு வீசுதல்' என்பது ம.வ.*

**வீச்சு:**

*வீச்சு = ஐந்து உருபாய்.*

*வீசுவது வீச்சு எனப்படும். கைவீசுதல் கயிறு வீசுதல்; சாட்டை வீசுதல்; வலை வீசுதல் என்பவை வழக்கில் உள்ளவை. இவற்றை யன்றி 'வீச்சு' ஐந்து என்னும் பொருளில் வழங்குவதும் உண்டு.*

*மாட்டுச் சந்தை எனப்படும் தாம்பணியில் மாடு பிடிப்பவரும் வாங்குபவரும் கையில் துணி போட்டு மறைத்துப் பேசுவது வழக்கம். அவர்கள் பச்சை, கடுவாய், வீச்சு எனச் சிலகுறிப்பு மொழிகளில் கூறுவர். இவற்றுள் வீச்சு என்பது ஐந்து என்னும் எண்ணைக் குறிக்கும். கை வீசுதல் வழியே கைவிரல் எண்ணிக்கை கொண்டு வந்ததாகலாம்.*

* 'கை' காண்க.

**வீடு:**

*விடு > வீடு.*

"விடுதலை யாவது வீடெனப் படுமே!

வீடு பேறே கூடு விட்டுக்
கூடு பாயும் விழுமிய அருளாம்;
மண்ணகத் தன்றி விண்ணக வீடிலை;
மனத்தகத் தன்றி மற்றொரு வீடிலை;
வீட்டை எண்ணி வீட்டை வெறுத்தல்
கூட்டை வெறுத்திடல் குடிசெயல் வெறுத்திடல்
என்பன வெல்லாம் ஏற்பன வாகா!
தொண்டில் காண்பதே துலங்கிடும் வீடு;
துறவர்க் கெனினும் அறவர்க் கெனினும்
நிறைபெறு தொண்டே நேரிய வீடாம்!
வாழும் போதே வீடு பேறு
வாய்க்கப் பெறாதவன் வீழ்ந்த பின்னரா
விழுமிய வீட்டை விளங்கப் பெறுவான்?
தொண்டில் துலங்கவே வீடு வாய்த்ததாய்
தொண்டு புரிக வீட்டொடும் இணைந்தே!
தொண்டுக் குதவவே வீடு வாய்த்ததாய்க்
கண்டவன் கண்டான் வீட்டிலே வீடே!
பிறப்பு வேண்டா என்று பேசினர்;
சிறந்த தொண்டரோ தொண்டுக் காகப்
பிறப்பு வேண்டும் என்றனர்
தொண்டே வீடாய்க் கண்டவர் அவரே!

**வீடு, நிரயம்:**

*வீடு என்பது இறப்பின் பின் எய்துவதன்று; அஃதொரு தனி இடமுமன்று; நிரயம் என்பதும் இறப்பின் பின் எய்துவதன்று; அஃதொரு தனி இடமுமன்று. ஒருவர் தாமே விடுபெற்று பேரா இயற்கை நிலையை அடையவும் தாமே நிரயத்தில் அழுந்தவும் தம் வாழ்வே இடமாக அமைகின்றது.*

*சேற்றிலே குற்றவாளிகளை அமிழ்த்தலும், இருட்டறையுள் போட்டுத் துன்புறுத்துதலும் உலகியல். ஆதலான், நிரயம் 'அளறு' என்றும் 'ஆரிருள்' என்றும் கூறப் படுகின்றன (குறள்:235, 919,121).*

**வீட்டிலாய்விடல்:**

*இரணியல் வட்டாரத்தில் பூப்பு நீராட்டை வீட்டில் ஆய்விடல் என வழங்குகின்றனர். அதன்பின் அவள் வீட்டோடே இருப்பவள் என்னும் அக்கால வழக்கின் வெளிப்பாடு இது.*

**வீணாய்ப் போதல்:**

*கைம்மை யுற்றவளை வீணாய்ப் போனவள் என்பது பார்ப்பனர் வழக்கு. 'வீணாய் அவளா போனாள்?' என்பதை எண்ணின் வீணாக்கியவர் பட்டியல் எண்ணத் தொலையாது. படித்த கூட்டமெல்லாம் அப்பழிக்கு விலக்கு ஆக முடியாதே!*

**வீணை:**

*விண் > வீண் > வீணை.*

*நரம்பு சுண்டப்படும் போது உண்டாம் ஒலி விண் என்பதாம். நரம்பு வலித்தால் நரம்பு விண்விண் என்று சுண்டுகிறது என்பர். இவற்றின் மூலம் 'விண்' என்னும் முதற்பூதப் பெயரேயாம். விண் வளி ஒளி நீர் நிலம் என்பவற்றில் முதலாக நிற்பது அது.*

*வீணையும் யாழும் வேறுபடல், "வீணையர் யாழினர்" என்னும் தேவாரத்தால் விளங்கும்.*

"நாரதன் வீணை நயந்தெரி பாடலும்" - சிலப். 6:18

"மகர வீணையின் கிளைநரம்பு வடித்த" - மணிமே. 19:25

*'யாழ்' பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் உண்டு. வீணை பழந்தமிழ்ச் சொல்லடைவில் சிலம்பு மேகலை ஆயவற்றில் மட்டுமே உண்டு. ஆதலால் வீணையின் பின்வரவு புலப்படும்.*

**வீதல்:**

*வீழ்தல் > வீதல்.*

*நின்ற ஒன்று நில்லாமல் வீழ்தல் வீதல் எனப்பட்டு, இறப்புப் பொருள் தந்தது. இனி வீய்தல் என்பது வீதல் ஆதலும் எண்ணலாம். வீய்தல் வீவு என்பன இறப்புப் பொருள் தருவன.*

"குறுநெடுந் துணையொடு கூர்மை வீதலில்" - புறம். 393

*வீதல் = கெடுதல், அழிதல்.*

"ஈயாது வீயும் உயிர்தவப் பலவே" - புறம். 235

**வீதி:**

*வீதி என்பது நீளம் அகலம் என்பவற்றுள் அகலப் பொருட்டது. "வேட்டி வீதி (அகலம்) குட்டையாக உள்ளது" என்னும் மக்கள் வழக்கால் அகலப் பொருள் தருதல் அறியலாம்.*

*"அகலுள் மங்கல அணி எழுந்தது" என்னும் (சிலப். 41:47) அகல், தெருவாதல் விளங்கும். அகல் ஊருமாம்.*

"பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்" - சிலப். 5:14-15

**வீயும்:**

*வீயும் = இறக்கும்.*

"ஈயாது வீயும் உயிர்தவப் பலவே" - புறம். 235

** 'வீதல்' காண்க.*

**வீரகாவியம்:**

*போர்க்களம் சென்று மாண்டாரை 'அமரர்' என்பர். அமர் = போர்.*

*அமரர் அப்பொருளில் இருந்து பொதுமையுற்று, இறந் தாரைக் குறிப்பதாக இக்காலம் வழங்கி வருகின்றது. ஈழத்தமிழர் போர்க்களத்தில் மாண்டாரை வீர காவியம் ஆனார் என்கின்றனர். பழந்தமிழர் நெறியை மீட்டெடுத்தல் இஃதாம். போர்க்களத்தில் இறந்தாரைப் போற்றும் வகையில் நடுகல் எடுத்து, பீடும் பெயரும் எழுதி வழிபட்ட தொல்காப்பியத்தை யும் தொல்பழந்தமிழர் வழக்கையையும் மெய்ப்பித்துக் காட்டுவது இஃதாம்.*

**வீரமக்கள்:**

*தீக்குழி எனப்படும் பூக்குழி இறங்குபவரை வீரமக்கள் என்பது அந்தியூர் வட்டார வழக்கு. பூக்குழி இறங்கும் வீரமக்கள் நாங்களும் தாம் என்று நம்பா மதத்தரும் நாட்டி விட்ட நாள் இது.*

**வீரம்:**

*விர் > வீர் > வீரம் = இயல்பாக வலிமையில் விரிந்து அல்லது மிக்கு இருத்தல்.*

"வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே" - அகம். 36

"வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலான்" - கம். அயோத். 207

**வீவு:**

*வீழ்வு > வீவு = இறப்பு, அழிவு.*

*"விய்யுஞ் சமயத்துக்கூட உதவாதவன்" என்று ஒருவர் சினந்து உரைத்த போது இதன் கருத்து என்ன என்று எண்ணலானேன். 'காதலன் தன் வீவும் காதலி நீ பட்டதூஉம்' என்பது சிலப்பதிகாரம். வீவு = திடீரெனச் சாதல். வாழ்வரசி என்பதனை வாவரசி என ழகரமின்றிச் சொல்லுகின்றனர். அது போல் தமிழ் தொன்மை மொழியாதலின் வீழ்வு என்பது வீவு என இளங்கோவின் காலத்தே மரூஉ ஆயிற்றுப்போலும். திடீரென இறக்குங் காலத்துக்கூட உதவாத கொடியன் என்ற கருத்தை விய்யும் (வீயும்) சமயம் என்னும் தொடர் குறிக்கின்றது என்று சிலப்பதிகாரத்தால் அறிந்தேன். (தொல்காப்பியப் புதுமை, பக். 78)."*

*(உ.க.சொ.நு.வி., பக். 231)*

"நாவலந் தண்பொழில் வீவின்றி விளங்க" - பெரும்பாண். 465

"அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழி;
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழி" - சிலப். 29:5

***ஒ.நோ.:***

*வாழ்வு > வாவு.*

**வீழ்ச்சி:**

***வீழ்ச்சி:***[1]

*வானில் பறக்கும் பருந்து கீழே இருக்கும் கோழிக் குஞ்சையோ அதற்கு இரையாம் ஒன்றையோ எடுக்க இறங்கி*

*வருதல் பருந்தின் வீழ்ச்சி எனப்பட்டது. இயல்பாகச் சொல்லிச் செல்லும் ஒன்றில் இருந்து விலகித் திடுமென வேறொரு பொருளைப் பற்றிக் கூறுதல் பருந்தின் வீழ்ச்சி.*

***வீழ்ச்சி:***[2]

*மேலே இருந்து கீழே விழுதல் வீழ்ச்சியாம். உள்ள பொருள் கையைவிட்டுப் போய்விடுதல் வீழ்ச்சி எனப்பட்டது. உள்ளது வீழ்தலால் உள்வீழ்தல் ஆயது. "உள்வீழ்தல்" உள்ளவெல்லாம் இழத்தலாய் வழங்கலாயிற்று.*

***வீழ்ச்சி:***[3]

*அருவி வீழ்வது வீழ்ச்சியாம். கீழே விழும் அதன் காட்சியின்பம், முழக்கு இன்பம், மூழ்கு இன்பம் எல்லாமும் கூடி வீழ்தல் அல்லது வீழ்ச்சிக்கு இன்பப் பொருள் தருவதாயிற்று.*

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி" - திருக். 1192

**வீழ்தல்:**

***வீழ்தல்:***[1]

*வீழ்தல் = கீழிறங்குதல். மலையிலிருந்து வீழும் அருவியை நீர்வீழ்ச்சி என்பது வழக்கம் ஆல் அரசு மரங்களிலிருந்து கீழிறங்கும் மேல்வேர் வீழ்து, விழுது எனப்படுதல் பண்டே உள்ளவை. உயிருடைய ஒன்று அதனை இழந்து எழும்பாத இறப்புநிலை 'வீதல்'வீவு எனப்பட்டன. வீழ்தல், வீழ்வு என்பவற்றின் ழகர ஒற்று வீழ்ந்த நிலை அது. இவையெல்லாம் பழந்தமிழ் ஆட்சியவை.*

***வீழ்தல்:***[2]

*வீழ்தல் = விரும்புதல். வானில் வட்டமிடும் பருந்து கோழிக் குஞ்சையோ அல்லது தான் விரும்பும் உணவையோ பற்றிக் கொள்ளும் ஆர்வத்தால் கீழே வீழ்ந்து பறத்தல் போல விரும்புதல் வீழ்தல் ஆகும். விரும்புதல் என்னும் - விரும்பிப் பற்றுதல் என்னும் - அளவிலேயே பொருள் கொள்ளல் வேண்டும். அதனைப் பற்றுதல், கொல்லுதல் தின்னுதல் என்பவை கொள்ளப் பெறா. உவமை என்பது எல்லாவற்றையும் தழுவிக் கொள்வது இல்லை.*

"வீழப்படுவார்", "வீழ்வார்க்கு வீழ்வார்" - திருக். 1194, 1192

*என்பன வள்ளுவ ஆட்சிகள்.*

**வீழ்து:**

*ஆலமரம், அகலமரம். அவ்வகலமாக வாய்த்த இயற்கைக் கொடை வீழ்துகளே. கிளையும் கொப்பும் விரிய, அவற்றில் இருந்து வீழ்து என்னும் மேல்வேர் வீழ்கிறது. அது நிலத்தைத் தொட்டு ஊன்றுகோலாய் அமைகின்றது. அடிமரம் போல அவ்வீழ்து அமைந்து மேலும் அகலமாக்க உதவுகின்றது. அடிமரம் அற்றால் கூட அம்மரத்தைத் தாங்குகின்றது.*

"சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன்வீழ் ஊன்றியாங்கு" - நாலடி. 197

*என்கிறது.*

**வீளை:**

*வீளை = வாயால் உணர்வில் எழுப்பும் ஒலிக்குறிப்பு; சீழ்க்கை, விசிலடித்தல், சீட்டி என்பவை அவை (ம.வ.).*

"மடிவிடு வீளையொடு கடிதெதி ரோடி" - அகம். 191

***பொருள்:*** *"மடிவிடுவீளை = வாயினை மடித்து எழுப்பும் சீழ்க்கை ஒலி". வேங்கட.*

"மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
தெறிமறி பார்க்கும் குறுநரி வெரீஇ
முள்ளுடைக் குறுந்தூறு இரியப் போகும்" - அகம். 274

"குறுநரி நெடுங்குரல் கூவிளி கேட்டு" - சிலப். 10:235

*கூவிளி = ஊளை. ஊளை போல்வது வீளைத் தோற்றம்.*

**வீறு:**

*வீறு = பெருமிதம், வெற்றிக் களிப்பு.*

"கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல" - குறுந். 225

"வீறுசால் அவையம்" - அகம். 256

"வீறுசால் நன்கலம்" - புறம். 150; 389

**வீற்றிருக்கை:**

***வீற்றிருக்கை:[1]***

*வீறு > வீற்று + இருக்கை = வீற்றிருக்கை. வீறு = பெருமிதம்.*

*பெருமிதத்துடன் அரசன் திருவோலக்கத்தில் இருத்தல். அரசன் நடுவில் இருக்க வலப்பாலும் இடப்பாலும் அவன் முகம் காணும் வகையில் அமைச்சர் படைத்தலைவர் புலவர் முதலோர் இருத்தல் வீற்றிருத்தலாம், வீற்றிருக்கை.*

"வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணும் காலை" - புறம். 27

"வீற்றிருத்தல் = கவலை இன்றி இருத்தல்" குறிப். உ.வே.சா.

***வீற்றிருக்கை:[2]***

*வீற்றிருக்கை = ஆட்சி புரிதல்.*

"இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டு
யாண்டு வீற்றிருந்தான்" - பதிற். பதி. 2

***வீற்றிருக்கை:[3]***

*வீற்றிருக்கை = சீரிய இருப்பிடம்.*

"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்று நிலை" - திருக். 789

**வீற்று வீற்று:**

*வீற்று வீற்று = பக்கம் பக்கம்; வரிசை வரிசையாகவுமாம்.*

"வெளிற்றுப் பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப" - புறம். 35

* * *

# ‘வெ’ வரிசைச் சொற்கள்

**வெ:**

*வகர எகரம்; இடையின உயிர்மெய்களுள் ஒன்று; குறில்.*

**வெஃகாமை:**

*வெஃகுதல் என்பது பிறர் பொருளைத் தன்னதாக்க விரும்புதல். வெஃகாமை என்பது அவ்வாறு ஆக்க விரும்பாமை. பொறாமையின் பின் பிறப்பு வெஃகுதல் ஆகும்.*

*அயரா முயற்சியாளன் நேரிய வழியால் பொருள் தேடுகிறான். அவனைத் தன் வழிகாட்டியாகக் கொண்டு பாடுபட்டு முன்னுக்கு வருதல் பாராட்டுக்கு உரியதாகும். அவன் முன்னேற்றம் கண்டு பொறாமையால், அவன் தேடிய பொருளைக் கவர்ந்து கொள்ள விரும்புபவன் மக்கட் பண்பு உடையவன் ஆகான்.*

**வெஃகு:**

*வெள் - வெள்கு - வெஃகு. வெள்குதல் = விரும்புதல். (தி.ம. 115).*

**வெகுளாமை:**

*"உண்மை கசப்பானது; எவரும் ஏற்றுக் கொள்வது எளிது அன்று" என்பர். உண்மை கசப்பானாலும் மருந்து போல நன்மை செய்வதேயாம்.*

*உண்மை பேசுவார் அத்தன்மை இல்லாரை மதியார் என்றும், அவர் மேல் சினம் கொள்வர் என்றும்; சினம் இருக்கும் இடத்தில்தான் சிறப்பும் இருக்கும் என்றும் உலகோர் கூறுவர். மெய்யாகக் கூறின் உண்மை இருப்பவனுக்குச் சினம் இருத்தல் ஆகாது என்பதே.*

சினம் என்பது சீற்றம் அன்று. வெகுளியும் அன்று; உருத்திரமும் அன்று; உள் வெதுப்ப நிலையே சினம். அதனையும் கூட 'ஆறுவது சினம்' என்றார் ஔவையார்.

மன அடக்கம் பெற்றவன், சினம் அடங்கப் பெறவில்லை என்றால், அவன் பெற்ற மன அடக்கம், அடக்கம் அன்று என்பதே பொருள்.

சினங்கொள்பவன் தன் கடுகடுப்பையும் துடிப்பையும் படபடப்பையும் கண்ணாடி முன் நின்று ஒருமுறை காண வேண்டும். "இவ்விழி தோற்றம் உண்டாகுமா நாம் சீறும் போது" என உணர்ந்து நலம் பெறக் கூடும்.

**வெகுளி:**

வேகு > வெகு > வெகுளி.

வேகின்ற உள்ளத்தின் வெளிப்பாடு வெகுளியாம். சினத்தினும் மிக்குத் தீயாய் வேக வைப்பது வெகுளி என்க. வெகுளாமை திருக்குறளில் ஓர் அதிகாரம் (31).

"இரப்பான் வெகுளாமை வேண்டும்" - திருக். 1060

**வெக்களித்தல்:**

வெக்கை என்பது வெப்பம், வெதுப்பம். ஈரம் காய்ந்த தன்மையைக் குறிப்பது அது. வேக்காடாக இருக்கும் பொழுதை வெக்களிப்பாக உள்ளது என்பதும் உண்டு. இது, ஈரலித்தல் என்பதற்கு எதிரிடைச் சொல்லாகும். தென்பகுதி வழக்குச் சொல் இது.

**வெங்கதிர்:**

வெம்மை + கதிர் = வெங்கதிர் = வெப்பமிக்க கதிர்; கதிரோன்.

வெப்பமிக்க நாட்டுக்கு வெதுப்பும் கதிர், கொடிய கதிராக இருக்கும். குளிர்மிக்க நாட்டுக்கு வெதுப்பும் கதிர், விரும்பத்தக்க கதிராக இருக்கும். இருவேறு இயற்கை போலச் சொல்லும் கொடுமை காட்டலும் குளுமை காட்டலும் சொல்லால் விளக்கியது வெங்கதிர்.

"வெங்கதிர்க் கனலி" - புறம். 41

"வெங்கதிர் வெம்மை" - சிலப். 11:203

*"வெம்மை வேண்டல்" என்பது தொல்காப்பியம் (817). பனிவாட்டும் நாளில் வெதுப்பு நீர், வெதுப்பு உணவு, வெப்புடை என்பவை வேண்டியிருத்தலால் வெம்மை வேண்டல் பொருள் தந்தது. "வெங்கள்" என்பது புறம் (212).*

**வெங்கன்:**

*வெங்கன் = வறியன்.*

*வெம்மை என்பது வெங்கு எனப்படும். வெம்மை என்பது பசி வெம்மை, தீப்பசி, காய்பசி, கொல்பசி எனப் பசி குறிக்கப்படுவது கொண்டு பசியின் வெப்பம் புலப்படும். நெருப்பினுள் கண் மூடினாலும் நிரப்பினுள் (வறுமையுள்) கண் மூட முடியாது என்னும் திருக்குறள் வறுமையின் வெம்மையை வளமாக உரைக்கும். "அவன் வெங்கன்; என்ன வைத்திருக்கிறான்" என்பதில் வெங்கன் வறுமை புலப்படும். இல்லானை எல்லாரும் எள்ளுவர் என்பதற்கு ஏற்ப, 'வெங்கன்' என்பது வசைச் சொல்லாகவும் ஆகிவிட்டது.*

**வெங்காயம் (வெண்காயம்):**

*வெங்காயம் = ஒன்றும் இல்லாதது.*

*வெங்காயம் என்பது வசைமொழி. "அவன் கிடக்கிறான் வெங்காயம்", "அந்த வெங்காயம் என்னதான் செய்து விடுவான்" என்பன போல வெங்காயம் வழக்கில் உள்ளது.*

*உரிக்க உரிக்க ஒன்றும் இல்லாதது. தோலாகவே இருப்பது - வெண்காயமாம். அதனால் ஒன்றும் இல்லாதது என்னும் பொருளில் வழங்கிற்றாம். 'உள்ளி' என்பதும் அதன் பெயர். உரிக்க உரிக்க உள்ளே ஒன்றும் இல்லாதது 'உள்ளில்' என்றாகி, 'உள்ளி' என வழக்கில் உள்ளதாம்.*

**வெங்கோல்:**

*வெம்மை + கோல் = வெங்கோல் = கொடுங்கோல். செங்கோல் x வெங்கோல்.*

"செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமும் சீரிலா
வெங்கோலான் கீழ்க்குடிகள் வீந்துகவும்" - ஏலாதி. 10

**வெடிப்பு:**

வெப்பினால் ஏற்படுவது வெடிப்பு.

கோடை வெயிலில் நீரற்ற நிலம் வெம்பி வெடித்தல் இயற்கை, நிலவெடிப்பு என்பதும், விரிவு என்பதும் மக்கள் வழக்கு.

பருத்திக்காய் முதிர்ந்து பஞ்சு வெளிப்படுமாறு நெற்று விரிதல் பருத்தி வெடித்தல் ஆகும்.

பித்தமிக்க உடலில் உண்டாகும் வெப்ப வெடிப்பு பித்த வெடிப்பாம். காட்சிப் பொருளாக இருந்த வெடிப்பு, கருத்துப் பொருளாகி, அவன் வெடிப்பானவன்; வெடிப்பான காளை எனப்பட்டது. அதன் விளைவு விரைவு ஆகியது.

நிலம் மண்வெட்டி, கடப்பாறை முதலியவற்றால் அகழப் படினும், கெட்டியான பாறையும் மலையும், வெடி வைத்துத் தகர்க்க வேண்டியதாக இருந்தது. இயற்கை வெடிப்பு செயற்கைச் செய்பொருள் மருந்து, கருவிகளால் வெடிக்க வைப்பதாயிற்று. ஒலியும் ஒளி வண்ணங்களும் உண்டாக்கும் வாண வெடிகளும், கொல்லும் வெடிக் கருவிகளும் இந்நாளில் குடிசைத் தொழிலாகவும் பெருந்தொழிலாகவும் நிகழ்கின்றன. விழாக்கள் என்றால் வெடிக்கோலங்களாகவும், போர் என்றால் கொலை வெடிகளாகவும் திருவிளையாடல்கள் புரிகின்றன வெடிகள். வெடி மருந்து கண்ட மூளையாலேயே அதனைக் காணாத நாடுகளை அடிமை நாடுகள் ஆக்கின என்னும் வரலாறு உலகறிந்த வரலாறாம்.

"கூடிக் கூடி இருந்தான்; கடைசியில் கூட இருந்தே எனக்கு வெடிவைத்து விட்டான்" என்று கெடுத்தழித்தல் பொருளில் மக்கள் வழக்கில் வெடி வழங்கலாயிற்று. வெடி வெடிக்குமுன் வெட்டி உதறிப்போகும். அதனால்,

"வெட்டு > வேட்டு"

எனப்பட்டு அதன் விளக்கம் காட்டியது. கிணறு வெட்டுவதற்கு அதனைப் பயன்படுத்தியதற்கும் விளக்கம் ஆயிற்று. வெட்டு வாணம், வெட்டுவான்கேணி என்பவை சென்னை சார் ஊர்கள்.

**வெடி வைத்தல்:**

வெடி வைத்தல் = அழித்தல்.

பாறை யுடைத்தலுக்கு வெடி வைத்தல் பழங்காலச் செய்தி. இப்பொழுது வெடி வைத்தல் விளையாட்டுச் செயல் போலச் செய்தித்தாள்களில் விளம்பரப்படுகின்றன. விளைவுகளும் கொடுமையானவையாக உள. வானூர்தியையும், கப்பலையும், மக்கள் நெருக்க மிக்க அலுவலகம், தொழிலகம் ஆயவற்றையும் வெடி வைக்கும் கொடுமை நினைக்கவும் அச்சமிக்கவை. போர், 'பாலத்தை' வெடி வைக்கும் என்றால், வெறித்தனம் வைக்கும் வெடி அதனினும் மிக மிகக் கொடுமையானதாம். வெடி வைத்தல் அழித்தலுக்காகத்தானே நிகழ்கின்றது. ஆதலால், 'எனக்கே வெடி வைத்துவிட்டான்' என்பதில் என்னை அதிர்ச்சிக்கும் அழிவுக்கும் ஆளாக்கி விட்டான் என்னும் பொருள் வெளிப்படுகின்றதாம்.

**வெட்சி:**

வெள் + சி = வெட்சி.

வெட்சி என்பதொரு மரம். அதன் பூ வெண்ணிறமானது. பகைவரின் பசுத் திரளைத் திரட்டிக் கொண்டு வருவதற்காகச் செல்லும் வீரர் வெட்சிப் பூ அணிவரெனப் புறப்பொருள் இலக்கண நூல்கள் கூறுகின்றன. அவ்வெண்ணிறப் பூவணிந்த வெட்சி மறவரை எதிரிட்டுப் பசுவைத் திருப்பிக் கொண்டு போக வருவார் கரந்தைப் பூவை அணிவர். அதன் வண்ணம் கருமை யாகும். இழப்புக்குச் சான்றாக உள்ள 'கருமை', அவ்வழிப் பட்டதோ என நினைத்துப் பார்க்கலாம்.

**வெட்சி மாலை:**

சீரிய வீரனொருவன் பகைவரூர் சென்று பசுநிரை கவர்ந்து வருவதை மிகுத்துக் கூறுவது வெட்சி மாலை யாகும். இதனை வீரவெட்சி மாலை என்றும் கூறுவர்.

"ஆனிரை கவர்ந்து வருபவன் வெற்றி
விளம்புதல் வீர வெட்சி மாலை" - முத்துவீ. 1069

**வெட்டி:**

வெட்டி அமைக்கப்பட்ட கால்வாய் உடைய ஊர். நடுவெட்டி, மேலவெட்டி என்பவை கல்லணை கொள்ளிட வடகரை சார்ந்த ஊர்கள்.

**வெட்டி முரித்தல்:**

வெட்டி முரித்தல் = கடிய வேலை.

குச்சியாக இருக்கும் போது கையால் ஒடித்து விடலாம். முளையாக இருக்கும் போது கிள்ளி எடுத்து விடலாம். மரமாகிய பின்னர் வெட்டியே ஆக வேண்டும். கோடரி, வெட்டரிவாள், கம்பி, அரம்பம் ஆகிய வெல்லாம் வேண்டும். ஆதலால் வெட்டி முரித்தல், கடு வேலை செய்தல் பொருளதாம்.

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து" - திருக். 879

என்பதில் வெட்டி முரித்தற் கடுமை யுரைக்கும். உழையாத சோம்பர் சிலர் உடல் அலுப்பாக இருக்கிறது என்றால், "வெட்டி முரித்தவன்; அலுப்பாக இருக்கத்தான் செய்யும்"என ஏற்பது போல் எள்ளுவர்.

**வெட்டி விடுதல்:**

வெட்டி விடுதல் = நட்பைப் பிரித்தல்.

வெட்டிவிடுதல், துண்டித்தல் பொருளது. கத்தரிக்கோல், கத்தரிப்பாலேயே பெற்ற பெயர். வெட்டரிவாள், வெட்டறுவாள், பாக்கு வெட்டி, மண்வெட்டி என்பன வெல்லாம் வெட்டுதலால் பெற்ற பெயர்கள். வெட்டி விடுதலுக்குரிய துண்டித்தல் பொருள் நட்பைப் பிரித்தலுக்குப் பயன்படுத்தப் படுவதுண்டு. "நீ தலையிட்டாய்; எங்களை வெட்டிவிட்டாய்" என்பதில் உயிர்க் கொலையை வெட்டுதல் சுட்டாமல் நட்புக் கொலையைச் சுட்டிற்றாம். கத்தரியிடுதல் என்பதும் துண்டித்தல் பொருளதே. "கிடைக்க இருந்த அந்த வேலை அவனால் கத்தரியிடப்பட்டது"என்றால் துண்டிக்கப்பட்டது; கிடைக்காமல் செய்யப்பட்டது என்பதே பொருளாம்.

**வெட்டு விலக்கு:**

வெட்டு = எதிர்த்தும் மறுத்தும் வெட்டிப் பேசுதல்.

விலக்கு = எடுத்ததை மாற்றிப் பிறிதொன்றால் பேசி மறுத்தல்.

வெட்டு விலக்கு இரண்டுமே மறுப்புரைகள். எனினும் இரண்டற்கும் வேற்றுமை உண்டாம். 'ஒட்டிப்பாடல்'' வெட்டிப் பாடல்' என இருவகைப் பாடுமுறை உள்ளது போல் இவ்வுரை முறையும் இரண்டாயிற்றாம். நேரிடையாக மறுத்துப் பேசுதலும், மறுக்காதது போல் மறுத்து மறுப்பை உறுதிப் படுத்துதலுமாம்.

**வெட்டை வெளி:**

வெட்டை = மேட்டுப்பாங்கான இடம்.

வெளி = அகன்று பரந்து திறவையான இடம்.

'வெட்டை வெளி' என வானத்தைச் சுட்டுவர். மேட்டுப் பாங்கான திறந்த வெளியிடமும் வெட்டை வெளி எனவே படும். வெள்ளிடை மலை என்பது வெட்ட வெளியாம் பரப்பில் அமைந்த மலையாம்.

"இந்தப் பொருளை வெட்டையில் வை"

என்றால் 'மேட்டில் வை' என்பது பொருளாகும். இன்றும் வழக்கில் உள்ளது. வெளி வெளிப்படை.

**வெண்கலம்:**

வெண்மை + கலம் = வெண்கலம்.

"அமிழ்தன மரபின் ஊன்துவை அடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்டல் அன்றி" - புறம். 390

வெள்ளி வெண்கலம் = "வெள்ளியால் ஆகிய வெள்ளிய கலம்".

வெண்கலம் ஆகிய மாழை பின்வரவாம். 'வெங்கலம்' ஊர்ப்பெயர். 'வெங்கலக் கடைத்தெரு' மதுரையில் ஒரு தெரு.

**வெண்டு:**

வெண்டு என்பது முகவை நெல்லை வழக்குகளில் நரம்பு என்னும் பொருளுடன் வழங்குகின்றது. "சொன்னபடி கேட்க வில்லை வெண்டை எடுத்துவிடுவேன்" என்பது அச் சுறுத்தல் மொழி. வெண்டு என்பது மேல்மிதக்கும் தக்கை என்னும் பொருளில் பழனி வட்டாரத்தில் வழங்குகின்றது. முன்னது விண் > விண்டு > வெண்டு எனவும், பின்னது வெண்ணிலை (பழு இன்மை) எனவும் வழங்கும் வழக்குப் பட்டவையாம்.

**வெண்டைக்காய்:**

வெண்டைக்காய் = 'வழவழா' வெனப் பேசல்.

வெண்டைக்காய், வழுவழுப்புடையது. அத்தன்மை யுடைய பேச்சுக்கு ஆகி வருதல் வழக்காயிற்று. யாராவது 'வழவழா' எனப் பேசினால் "வெண்டைக்காய் நிறையப் பிடிக்குமா?" என்றோ, "விளக்கெண்ணெய் அளவுக்கு மேல் போட்டு விட்டார்களோ?" என்றோ கேட்பது வழக்கம். "விளக்கெண்ணெய் விட்டு ஆக்கிய வெண்டைக்காய் குழம்பிலே தொட்டு எழுதிய எழுத்து" என்பது எவ்வளவு வழுவழுப்பு. ஆனால் அதனைப் புரட்சி, விறுவிறுப்பு நடைக்கு ஒருவர் சொன்னால் சொன்னவர் புரட்சிப் போக்கின் அழுத்தம் புலனாம்; அல்லது வெறுப்புணர்வு புலனாம்.

**வெண்ணீர்:**

வெண்ணீர் = வெண்ணிறமான உருள் நீர் (பாதரசம்). உருள்நீர் = எத்துணைச் சிறிய துண்டமாக்கினும் உடன் உருண்டை யாகிவிடும்.

ஒன்றை மிகப் பலவாக்கிப் பின்னர் இணைப்பினும் எல்லாமும் ஒன்றாய்த் திரளையாகிவிடும். இரசம் என்றும் பாதரசம் என்றும் வழங்குவது ம.வ. கட்டட வேலையர் மட்டம் பார்க்கப் பயன்படுத்தும் கருவி ஆதலால் இரசமட்டம் என்பர்.

வெம்மை + நீர் = வெந்நீர் என்பது வேறு. வெண்ணீராம் இது வேறு.

**வெண்தலை:**

*தலையில் வெண்ணிறம் இருப்பதால் வெண்தலை எனப்படும் இப்பறவை கனடா, கிரீன்லாந்து, நார்வே முதலாம் நாடுகளைச் சேர்ந்தது. 'பென்கிவின்' எனப்படுவது. பறவை எனினும் பறக்க முடியாதது. நீருள் மூழ்கவும் நீந்திச் செல்லவும் வல்லது.*

*இதன் இறகின் மென்மையும், இதன்கறியின் சுவையும் இதற்கு அழிவு செய்துவிட்டன. இறகு மெத்தைக்காகவும், கறி ஊணுக்காகவும் ஆகியதால் வேட்டையாடி அழிக்கப்பட்டது. அன்றியும் ஆண்டுக்கு ஒரே ஒருமுறை ஒரே ஒரு முட்டை யிடுவதும் இனப் பெருக்கம் இல்லாமை ஏற்படுத்தியது. 03.07.1844 இல் இப்பறவை இனத்தில் இருந்த இணைகள் கொல்லப் பட்டனவாம்! அன்னம் அனிச்சம் அசுணம் என்பவற்றின் வழிநடையிட்டதாயிற்று இவ்வெண்தலைப் பறவை. (தினமலர் 10.10.2010).*

**வெண்பா:**

*நாற்பா வகையுள் ஒன்று. அவை: வெண்பா, அகவல், கலிப்பா, வஞ்சிப்பா.*

*வெண்டளையால் அமைந்த பா, வெண்பா. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என்பவை வெண்பாவின் தளைகள். மா முன் நிரையும், விளமுன் நேரும், இயற்சீர் வெண்டளை. காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை.*

*ஈரடி வெண்பா குறள்; மூவடி வெண்பா சிந்து; நாலடி வெண்பா அளவு; அதன்மேல் 12 அடி வரை உடையவை பஃறொடை. அதன்மேல் நீண்ட வெண்பா கலிவெண்பா.*

*வெண்பாவின் ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிதல் வேண்டும். (யா.கா.; யா.வி.).*

**வெண்புணர்ச்சி மாலை:**

* 'தண்டக மாலை' காண்க.

**வெதிர்:**

*வெதிர் என்பது மூங்கிலைக் குறிக்கும் இலக்கியச்சொல். "வெதிரின் நெல்" என்னும் புறநானூறு. வெதிர் என்பது துளுநாட்டில் 'பெதிர்' என வழங்குதல், வகரம் பகரமாகும் சொல்லியன் முறைப்படி அமைந்து விளங்குவதாம்.*

**வெந்த தண்ணீர்:**

*வெந்நீர் என்பதை வெந்த தண்ணீர் என்பது பழனி வட்டார வழக்கு. இனி, வெந்நீர்த் தண்ணீர் சுடு தண்ணீர் என்பவை பிழை வழக்கு. பிழை வழக்கே பெருவழக்காய் நாட்டில் உள்ளது.*

**வெந்நீரைக் காலில் விடல்:**

*வெந்நீரைக் காலில் விடல் = தங்காது புறப்படல்.*

*வெந்நீர் வெதும்பிய நீர். அதனைத் தண்ணீர் போல் விட்டுக் கொண்டிருக்க முடியாது. குறைவாகவும் விரைவாகவும் வெந்நீரை விடுவதே வழக்கம். ஏன் வெந்நீர் விடுகின்றனர்? கட்டி, புண் உண்டாகி யிருந்தால் கழுவவும், காய்ச்சி யடிக்கவும் வெந்நீர் பயன்படுத்துவர். அதனை மொத்தமாக வைக்காமல் ஒற்றி ஒற்றி எடுப்பர். அவ்வழக்கில் இருந்து, விருந்தாக வந்தவர் ஆர அமர இல்லாமல் புறப்பட்டால், "எப்பொழுது வந்தாலும் வெந்நீரைக் காலில் விட்டுக் கொண்டுதான் வருவது" என்னும் வழக்கு உண்டாயிற்று.*

**வெப்பம்:**

*வெப்பு + அம் = வெப்பம்.*

"நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்" - நாலடி. 88

**வெப்புள்:**

*வெப்பு > வெப்புள் = வெப்பமிக்க மேட்டு நிலம்.*

"வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்" - புறம். 120

***பொருள்:*** *"வெம்மை முதிர்ந்த வேங்கை மரத்தையுடைய சிவந்த மேட்டுநிலம்" ப.உ.*

**வெம்பரம்:**

*வெண்பரம் > வெம்பரம். வெண்மை, வெளிறு என்பவை உள்ளீடு அற்றவை. உள்ளவற்றையெல்லாம் இழந்தமை வெம்பரம் என மதுரை முகவை மாவட்ட வழக்குகளாக உள.*

**வெம்புதல்:**

*வெப்புதல் > வெம்புதல்.*

*வெப்பத்தால் அழலுதல் வெம்புதலாகும்.*

*"காய்வெம்பிப் போனது; கறிக்கு உதவாது"; "பழம் வெம்பிப் போனது; தின்ன ஆகாது" என்பவை ம.வ.*

"பைதற வெம்பிய கல்பொரு பரப்பின்" - அகம். 185

**வெம்மை:**

*வெம்மை என்பது விரும்ப (அ) வேண்டத்தக்கது. "வெம்மை வேண்டல்" என்னும் தொல்காப்பியம் (817).*

** 'வெங்கதிர்' காண்க.*

**வெயில்:**

*வெய் + இல் = வெய்யில் > வெயில்.*

***ஒ.நோ.:***

*எய் + இல் = எய்யில் > எயில்.*

"வெயில்முளி சோலைய வேயுயர் சுரனே" - ஐங்குறு. 327

***பொருள்:*** *"வெயிலால் உலர்ந்த சோலையில் உள்ள மூங்கில் சுரன்"*

**வெய்து:**

*வெய் + து = வெய்து; வெய்யதும் அது.*

*வெய்து = வெப்பமானது.*

"வெய்துண்டல் அஞ்சுதும் வேபாக் கறிந்து" - திருக். 1128

"வெய்துண்ட வியர்ப்பல்லது
செய்தொழிலான் வியர்ப் பறியாமை" - புறம். 386

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்" - ஔவை. தனிப்.

**வெருகு:**

*வெருவுதல் = அஞ்சுதல்.*

*அஞ்சத்தக்க பார்வை யுடைமையால் காட்டுப் பூனையை வெருகு என்றனர்.*

*"வெருகு என்ற பெயரே காட்டுப்பூனையின் வெருள் நோக்கினால் தோன்றிற்று என்பது தெளிவாகின்றது. இஃது இளம்பூரணரின் தொல்காப்பிய உரையில் இருந்து விளங்குகிறது. வெரூஉதல் என்ற மெய்ப்பாட்டை விளக்க வந்த இளம்பூரணர் அஃது "அச்சம்போல நீடு நில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதொரு குறிப்பு. அதனைத் துணுக்கு என்றான் என்பது" என்று கூறினார். வெரூஉதலைத் தரும் விலங்கை வெருகு என்று இயற்கை யறிவோடு வழங்கினர். (சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், பக். 220)."*

*(உ.க.சொ.நு.வி., பக். 232)*

"பார்வல் வெருகு" - அகம். 391

"பார்நடை வெருகு" - புறம். 326

"வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்" - தொல். மரபு. 68

*பூசை என்பதன் பின்வரவே பூச்சை, பூனை என்பனவாம்.*

** 'பூசை' காண்க.*

**வெருவரல்:**

*வெரு + வரல் = வெருவரல்.*

*வெருவுதல் வருதல் > வெருவரல். வெருவுதல் = அச்சம்.*

"மெய்ப்பைப் புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்" - முல்லைப். 60-61

**வெல்லக்கட்டி:**

வெள்ளைக்கட்டி > வெல்லக்கட்டி.

வெள்ளை நிறப் பதனீரைக் காய்ச்சி எடுக்கப்பட்ட கட்டி ஆதலால் வெள்ளைக் கட்டி எனப்பட்டு வெல்லக்கட்டி ஆனது.

கள்ளை 'வெள்ளை' என்று மக்கள் வழங்குதல் அறிக. சுண்ணாம்பு இடப்படாத பனைப் பாளை நீரே கள் என்பது கருதுக.

பனையின் வெல்லம் பின்னே, கரும்பு வெல்லத்திற்கும் ஆயது. 'வெல்லக்கட்டி' என்பது இனிய பாராட்டுச் சொல்லும் ஆயது.

**வெல்லல்:**

வெல் + அல் = வெல்லல். வெல் = வெற்றி; அல் = சொல்லீறு.

"வெல்போர் அண்ணல்" - பதிற். 70

"வெல்போர்க் குருசில்" - மதுரைக். 151

**வெளி:**

வெள் + இ = வெளி = வெண்ணிற வழிவந்தது வெளி.

தடையின்றிக் காணவாய்க்கும் பெரும்பரப்பான இடம். திறந்த வெளி, பாலை வெளி, கடல்வெளி, புல்வெளி என்பவை காண்க.

வைகறை இருள் அகல 'வெள்' என விடிகின்றது. கதிர் மறைவகன்று வெளிப்படுகின்றது. அவ்வாறு வெள்ளெனவும், வெளிப்படவும் தோற்றம் தரும் இடம் வெளி எனப்பட்டது. வேறு எதுவும் இல்லாமல் - காற்றுத் தானும் இல்லாமல் இருக்கும் விண் 'வெளி' என்பதை நம்முன்னோர் குறித்துள்ளர். வெற்று வெளி, பாழ்வெளி, "வளியிடை வழங்கா வானம்" என்றெல்லாம் கூறியுள்ளனர்.

**வெளிச்சம் போடல்:**

வெளிச்சம் போடல் = தம்மைத் தாமே விளம்பரப்படுத் துதல், விளம்பரப் படுத்தச் செய்தல்.

சிலர் தங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுவர். அதிலேயே பேரின்பம் காண்பர். அத் தகையரை வெளிச்சம் போடுபவராகக் கூறுவர். இருட்டில் இருக்கும் ஒன்றோ, மூடி வைக்கப்பட்ட ஒன்றோ பிறரால் அறியப்படுவது அருமையாம். அதனால், அவர்கள் தன்மையையும் செய்கையையும் பரபரப்பு மிக்க உலகம் அறிந்து கொள்வது இல்லை. ஆனால், தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளும் வேட்கை யுடையவர்களை உலகம் வெளிப்பட அறிகிறது. தான் விரும்பா விட்டாலும் கூட உலகம், அத்தகையரைப் பொருட்டாக எண்ண வேண்டிய சூழ்நிலை உண்டாகிவிடுகிறது. வெளிச்சம் போடல், விளக்கேற்றலைக் குறியாமல் விளம்பரப்படுத்துதலைக் குறித்தல் வழக்குச் சொல்லாம்.

**வெளிச்செண்ணெய்:**

நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் கடலை எண்ணெய் இவற்றொடு தேங்காய் எண்ணெயை ஒப்பிட்டுப் பார்த்தால் இப்பெயரீட்டின் வெளிப்பாடு புலப்படும். வெளிச்ச (வெள்ளை) எண்ணெய் = தேங்காய் எண்ணெய். இது கொங்கு நாட்டு வழக்கு. விளக்கெண்ணெயை வெளிச்செண்ணெய் என்பது பொது வழக்கு.

**வெளிது:**

வெள் > வெளி > வெளிது.

1. வெளிது = வெண்ணிறமானது. வயிரமற்ற மரம் (ம.வ.).
2. வெளிது = வெள்ளை நிற உடை.

"வெளிது விரித் துடீஇ" - புறம். 279

**வெளியே கிடத்தல்:**

செட்டிநாட்டு வழக்கில் வெளியே கிடத்தல் என்பது விலக்கு நாள் குறித்ததாம். வீட்டுப் பணியிலோ, வீட்டுள்ளோ சேரா ஒதுக்க நாள்.

**வெளில்:**

***வெளில்:***[1]

*வெள் + இல் = வெள்ளில் > வெளில்.*

*அணில் வகையுள் ஒன்று; மூவரி அணில் எனப்படுவது அன்று; அதன் நிறமும் கரியது. அதனால் வெளில் என்றனர். வெண்ணிறம் அற்றது என்பதாம். அணில் வரி, வெள்வரி, வெள்வரிக்காய்க்கு ஒப்பிட்டுக் கூறப்படுவது.*

"வெளில்" - அகம். 12, 109

***வெளில்:***[2]

*வெளில் = வயிரமேறியது, யானை கட்டும் தறி; தூண்.*

"வெளிலிளக்கும் களிறு" - பட்டினப். 172

***பொருள்:*** *"அசையாத கம்பத்தினை அசைக்கும் யானை" நச்.*

"நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினம் தணித்துப் பெருவெளிற் பிணிமார்" - மலைபடு. 325-326

**வெளிறு:**

***வெளிறு:***[1]

*வெளிறு = வயிரம் இல்லாதது; வெண்ணிறத்தது.*

"வெளிற்றுப் பனந் துணி" - புறம். 35

***பொருள்:*** *"இளைய பனையினது துண்டம்" ப.உ.*

"வெளிற்றுப் பனை" - அகம். 333

***வெளிறு:***[2]

*"ஒள்ளியார்' என்றது மிக்காரையும் ஒத்தாரையும்; அது விகாரத்தால் ஒளியார் என நின்றது. ஒள்ளியர் ஆதல் - தம் நூலறிவும் சொல்வன்மையும் தோன்ற விரித்தல். அவை அறியாத புல்லரை 'வெளியார்' என்றது வயிரம் இல் மரத்தை 'வெளிறு' என்னும் வழக்குப் பற்றி. அவர் மதிக்கும் வகை, அவரினும்*

வெண்மை யுடையராக என்பார் வான்சுதை வண்ணம் கொளல் என்றார்'' என்னும் பரிமேலழகர் உரையையும் கருதுக (திருக். 714).

இன்னும் 'வெண்மை, வெளிறு' என்பவை அறிவின் மையைக் காட்டுதலை,

''வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு'' - திருக். 844

என்றும்,

''அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு'' - திருக். 503

என்றும் வருவனவற்றால் தெளிக.

**வெளுத்துக்கட்டல்:**

வெளுத்துக்கட்டல் = வெற்றி பெறல்.

வெளுத்தல், அழுக்குப் போக்கல், வெள்ளையாக்கல் என்னும் பொருள. இருளகற்றல் என்பது வெளிச்சப் பொருள. வெளுத்துக் கட்டல் பளிச்சிடக் காட்டலாம். பத்துப் பேர்கள் ஒரு மேடையில் உரையாற்ற அவர்களில் ஒருவர் சொல்லாலும் கருத்தாலும் உயர்ந்து நின்றால் நீங்கள் வெளுத்துக் கட்டி விட்டீர்கள் என்பர்.

இதில் வெளுத்துக்கட்டல் பிறர் குறைகளையும் கறை களையும் வெளிப்படக் காட்டி உண்மையை வெளிப் படுத்தலாம். ஆதலால் வெளுத்துக் கட்டல் வெற்றிப் பொருள் தருவதாயிற்றாம்.

**வெளுத்துள்ளி:**

வெள்ளைப் பூண்டு, வெள்ளுள்ளி, பூண்டு என்பவை பொதுவழக்கு. உசிலம்பட்டி வட்டாரத்தில் வெள்ளைப் பூண்டை வெளுத்துள்ளி என்பர். உரிக்க உரிக்க உள்ளே ஒன்றும் இல்லாமல் தோடாக இருப்பது. உள் + இல் = உள்ளி.

**வெளுப்பாங்காலம்:**

விடிகாலையை, 'வெள்ளென' என்பது தென்தமிழக வழக்கு. காரிருள் படிப்படியே குறைந்து கதிரொளி வரவால் விண்ணும் மண்ணும் வெளுப்பாகும் காலத்தை வெளுப்பாங்காலம் என்பது குமரி மாவட்ட மேல்புர வழக்கு.

**வெள்:**

"வெள்ளென வந்துவிடு" வெள்ளென எழுந்தால்தானே வேலை முடியும்" என்பன நடைமுறை ஏவல்கள். 'வெள்' என என்பது கதிரோன் எழுந்து ஒளி செய்யும் விடிகாலைப் பொழுதைக் குறிக்கும். 'வெள்' என்பது 'வெளிச்சம்' என்னும் பொருள் தருவது.

'வெள்' என்பது வெளிச்சப் பொருள் தருவதுடன், வெண்ணிறப் பொருளும் தரும். 'வெள்ளை' சலவைத் துணியைக்குறித்தலும், 'வெள்ளை' யடித்தல் சுண்ணாம்பு நீர் அடித்தலைக் குறித்தலும், 'வெள்ளை' வெண்ணிற மாடு ஆடுகளைக் குறித்தலும், 'வெள்ளை' கறையிலா உள்ளத்தைக் குறித்தலும் வழக்கில் உள்ளவை. இவை உலக வழக்கிலே மட்டுமன்றிச் செய்யுள் வழக்கிலும் உள்ளவை.

வெள்ளை தூய்மை, கறை யின்மை என்பவற்றைக் குறிப்பதால் குழந்தை உள்ளத்தைக் குறிப்பதுடன், 'வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை' எனப் பழமொழியும் எழுந்தது.

'வெள்ளை' வெள்ளை நிறத்ததாம். கள்ளைக் குறித்தலும் உண்டு. வெள்ளைக் குதிரையில் வருகிறான் எனக் கட்குடியனைக் குறிப்பதும் உண்டு. ஆடியும் அசைந்தும் தள்ளாடியும் வரும் நடைக்குறிப்புக் கொண்ட உவமையது. வெள்ளை யுடை கலைமகள் உடையெனப் பட்டுப் பின்னே கைம்மை யுடையாயும் நிற்பதாயிற்று.

வெண்ணிறம் காட்டும் விண்மீன்களை வெள்ளி எனல் தொன்றுதொட்ட வழக்கு. அதிலும் பேரொளியுடைய சுக்கிரனுக்கு வெள்ளி என்பது சிறப்புப் பெயராகவும் வழங்கும். 'வெள்ளி' தென்புலம் படரினும் காவிரி வெள்ளம் குன்றாது

என்பது பழம்பாடல். வெள்ளிக்கிழமை வெள்ளிக் கோளால் பெற்ற பெயர்.

வெளி என்பதற்கு வெளிப்படை என்னும் பொருளும் உண்டு. முயன்று பொருள் கூற வேண்டாமல் பார்த்த பார்வையால் பொருள் புலப்படும் பாடல் ‘வெளிப்படை’ எனப்படும். பொருள் வெளிப்படை என எழுதி உரை எழுதாமல் விடுவது பண்டை உரைமரபு.

வெண்ணிற நெய்ப்பொருள் வெண்ணெய் எனப்படுதலும், வெண்ணிறப் ‘பாதரசம்’ வெண்ணீர் என மருத்துவ உலகில் வழங்கப்படுதலும் நடைமுறைச் செய்திகள்.

பிற தளைகள் சேராத் தூய்மையுடைய பா ஆகலின் ‘வெண்பா’ என ஒருவகைப்பா பெயர் பெற்றது. பாக்களில் சிறந்ததும் தலைமையானதுமாகச் சொல்லப்படுகின்றது.

பகைவர் பசுக்களைக் கவரச் சென்ற வீரர்கள் வெண்ணிறப் பூக்களால் ஆயதோர் மாலை அணிந்து சென்றமை புறத்திணை இலக்கணம் சொல்லும் செய்தி. அதன்பெயர் வெட்சி (வெள் + சி = வெட்சி) என்பதாம்.

வெள்ளை வெட்டை என்பன வெண்ணீர் ஒழுக்கு நோய்கள். வெள்கல் வெட்கல் வெட்கம் என்பவை நாணத்தால் முகம் வெளுத்தலால் பெற்ற பெயர்.

வெள், வெண் என்பவை அடைமொழியாக வருதல் பெருவழக்கு. வெள்ளைத் தாமரை, வெண்டாமரை, வெள்ளரளி, வெண்கடுகு, வெள்ளெலி, வெள்ளாவி, வெள்ளாடு, வெண்மதி, வெள்ளெருக்கு, வெள்ளறை (வெண்ணிறப் பாறை) முதலியவை காண்க.

குருகு என்பது கொக்கு, நாரை முதலியவற்றைக் குறிக்கும். இவை வெண்ணிறத்தன ஆகலின் வெள்ளாங் குருகு என வழங்கப்படுதலும் உண்டு. வெள்ளுள்ளி - வெள்ளைப் பூண்டு - என்பது அடுமனைப் பொருள்களுள் ஒன்று. மருந்துப் பொருளுமாம். பகைவர் புலத்தைக் கொண்டு ஆங்கு வெள்ளெள் வித்துதல் பழவழக்கு.

வெள், வெண் என ஆகி வெண்மை, வெண்ணெய், வெண்ணிலைக்கடன் (எழுதித் தாராக்கடன்), வெண்மணி (முத்து), வெண்ணீறு, வெண்டாமரை, வெண்ணாறு என்பவை ஆகின்றன. வெள்விதைக்காய், வெண்டைக்காய் ஆகின்றது.

வெள்ளூர், வெண்ணி என்றும், வெள்ளிவீதியார், வெள்ளைமாளர், வெள்ளைக்குடி நாகனார், வெண்ணிக் குயத்தியார் என்றும் ஊர்ப்பெயர்களும் சான்றோர் பெயர்களும் உண்டாகின்றன. வெள்ளியம்பலம் வெள்ளானை என்றும் இறைமை வழிப்பெயர்களும் எழுகின்றன. வெள்ளியம்பல வாணத் தம்பிரானும் அவர் ஊடு ஊடு செறித்த 'வெள்ளி' பாடல்களும் ஆய்வாளர் அறிந்தவை.

**வெள் வரகு:**

வெண்மை > வெள் + வரகு = வெள்வரகு.

"வெள்வர குழுத கொள்ளுடைக் கரம்பை" - பதிற். 75

பகைவர் நாட்டைப் பண்டு அழிவு செய்வகையில் விதைப்பது வெள்ளை எள்ளும், வெள்ளை வரகுமாம்.

**வெள்ளக்குடி:**

வெள்ளம் = தண்ணீர். வெள்ளக்குடி என்பது கஞ்சியைக் குறித்து வழங்கும் குமரி மாவட்ட வழக்காகும். வெள்ளம் பெருக்கு நீரையன்றி, ஒரு குவளையில் இருக்கும் நீரையும் குறித்தல் உண்டு. கஞ்சி வெள்ளம், கடி வெள்ளம் சேரல வழக்கு.

**வெள்ளாங்குருகு:**

குருகு என்பது நாரை; கொல்லர் உலைத்துருத்தி மூக்குப் போன்ற முகமும் மூக்கும் உடைமையால் குருகு என்னும் அத் துருத்தியின் பெயரையும் ஏற்றது. 'கிரௌஞ்சம்' என்னும் மலையைக் 'குருகு' பெயர்க்குன்றம் என்கிறது பரிபாடல்.

'குருகு' மூமெய்யும் உகரம் பெற்ற சொல். 'முருகு' என்பதன் எழிலை எண்ணலாம்!

வெள்ளாங்குருகு நீர்ப்பறவை, வயிறு வெண்ணிறத்தது; சலவை வெள்ளை ஒத்த நிறத்தது அது என்பதை "அறுவைத் தூமடி யன்ன நிறங்கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே" என்பது நற்றிணை (70)! தூவியாவது இறகு. 'அன்னத்தின் தூவி' என்பார் வள்ளுவர்.

ஆண் குருகினும் பெண் குருகு வண்ணமும் வனப்பும் மிக்கதாம். யானை தலையும் கையும் அசைத்துக் கொண்டே இருப்பதுபோல் பறவாப் பொழுதில் வாலை ஆட்டிக் கொண்டே இருப்பதால் இதனை 'வாலாட்டிக் குருவி' என்பர் பொதுமக்கள்.

ஆண்குருவியின் எண்ணிக்கையினும் பெண்குருவியின் எண்ணிக்கை மிகுதியாம். அதனால் பெண்குருகுகள் ஆண்குருகுகளை வயப்படுத்த வேண்டும் வகையெல்லாம் ஆடியும் நாடியும் போட்டியிட்டு வளைத்துக் கொண்டு போய்விடுமாம். அதனொடு கூடியிருந்து முட்டைகள் இடுமாம். முட்டையிட்டால் அடைகாக்கும் கிடைநிலையை ஒப்பாதாம். ஆண் குருகை அடைகாக்க வைத்துவிட்டு அப்பாலே ஆண் தேடு படலம் தொடங்குமாம்; அங்கும் அப்படியே தொடருமாம்!

இனபெருக்க எண்ணிக்கைக் குறையையும் மிகையையும் இயற்கை இப்படிச் சமன்பாடு செய்து கொள்வது! வியப்பு இல்லையா?

குயில் முட்டையிட்டுக் காக்கைக் கூட்டில் போட்டுத் தன்னினம் பெருக்க வில்லையா? இனப்பெருக்கத்திற்குத் தடை அல்லவோ அடைகாக்கும் கிடைநிலை!

அடைகாக்கும் ஆண்குருகு குஞ்சுபொரித்த பின்னேனும் விடுதலை பெறுமா? குஞ்சுகளுக்கு இரைவேண்டுமே! தேடவேண்டுமே! ஊட்டி வளர்க்க வேண்டுமே! தாயுமானவராகி விடுகிறது தந்தையாம் குருகு!

மழைநாள் எவ்விடத்து - எக்கண்டத்து உண்டோ, அவ்விடத்து அக் கண்டத்துப் பறந்து போய்விடும்; பருவநிலை மாறியதும் மீளவும் வந்துவிடும்.

வெள்ளாங்குருகுப் பத்தின் பத்துப் பாடல்களிலும் வரும் தொடர்,

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை"

என்பதுதான்!

"நாம் இழவு கேட்டுச் செல்லும் வழக்கம் போல நாரையும் குருகின் பிள்ளை செத்தது கேட்டுப் போனதோ? என மயக்கம்

உண்டாகலாம். நாரை மயங்கிய மயக்கம் செத்து என்பதன் பொருளறியா மயக்கமே. செத்து என்பதன் பொருள் போல என்பது.

செத்திரம் - ஒவ்வியம் - ஓவியம் போன்றது. ஒன்றைப் போல ஒன்றை வரைவது. அது சித்திரம், ஓவியம்.

வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தன்பிள்ளை எனக் கருதிக் கொண்டு சென்றது மெல்லிய நடையுடைய நாரை; அது குருகின் பிள்ளையும் அன்று; தன் பிள்ளையும் அன்று; அது நெய்தல் பூ; அல்லில் மலரும் அப்பூவை நாரை மிதித்தலால் மிதிபட்டு மலர்ந்தது. இயற்கை எழுச்சியால் மலராமல் மிதியால் மலர்ந்தது!

என் அன்புக் குரியவனாம் தலைவன் நீர்த்துறை இத்த கையது!

தனக்குரியதல்லாத வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தன்பிள்ளையாகக் கருதித் தன்பிள்ளையைக் கைவிட்டுக் காணச் சென்று அழிசெயல் செய்தது போலத் தலைவன் தன்னவளாம் என்னைக் கைவிட்டு எவ்விடமோ போய்விட்டான் என்பதை உட்கொண்டு கூறியது இது.

**வெள்ளி:**

வெள்ளி = விண்மீன், வெண்மீன், ஒருமாழை (உலோகம்) வெண்ணிறம் உடையவையாம் விண்மீன்கள் வெள்ளி எனப் பொதுவாக வழங்கப்படினும் முதற்கண் வெண்மீனையே (சுக்கிரன்) வெள்ளி என வழங்கினர். சகடு எனவும் (சக்கரம்) எனவும் கூறினர். "வசையில் புகழ் வயங்கு வெண்மீன்" என்கிறது பட்டினப்பாலை. அம்மீனை முதற்கண் வெள்ளி என்று வழங்கி, அதன்பின் மற்றை விண்மீன்களின் பொதுப்பெயராக வழங்கினர். சுக்கிரன் என்பவனை 'வெள்ளி' என்றார் கம்பர். வெண்ணிற மாழை தன்நிறத்தால் வெள்ளி எனவும் வழங்கலாயது. நுட்பமில்லா அறிவு 'வெள்ளறிவு'; வெளிறிய ஓலை வெள்ளோலை! வெண்ணிறத் தாழை பனைச் செதும்பு (செறும்பு) வெளிறு.

**வெள்ளிடை:**

வெள் + இடை = வெள்ளிடை.

எத்தடையும் இல்லாமல் காணும் வகையில் வெளியாக அமைந்த இடம் வெள்ளிடையாகும்.

"வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழல் பள்ளிப் பாயல் சேர்த்தி" - புறம். 245

**வெள்ளென:**

வெள்ளென = விடிய.

வெள் என என்பது வெளிச்சம் உண்டாக என்பதாம். காலையில் கதிரோன் எழுந்ததும் கப்பி இருந்த இருள் அகலுதலால் 'வெள்'ளெனத் தோன்றும். அத்தோற்றத்தின் வெள்ளெனல், வைகறைப் பொழுதைக் குறிப்பதாக வழக்கில் வந்தது. "வெள்ளெனவா. அப்பொழுதுதான் நாம் வேலையை முடித்து இருட்டுவதற்கு முன் திரும்ப முடியும்" என்பதில் வெள்ளெனல் வைகறைப் பொழுதாம். வைகறை என்பதும் (வைகு அறை) கப்பிய இருளை அகற்றுதல் என்னும் பொருளதே.

**வெள்ளை:**

வெள் + ஐ = வெள்ளை.

1. வெள்ளை = வெள்ளை என்னும் நிறம்.
2. வெள்ளை= கள். 'கள்'ளை வெள்ளை என்பது வியப்பானதே. 'கள்' கருமைப் பொருளது. மதியை மயக்குவதால் அதனைக் கள் என்றனர். 'காரறிவு'க்கு இடம் என்பது அது. ஆனால், கள்ளின் நிறம் வெள்ளையாதலால் கட்குடியர் கள்ளை, 'வெள்ளை' என்றும், 'வெள்ளைத் தண்ணீர்' என்றும் குறிப்பர். வெள்ளைக் குதிரையில் வருதல் என்பதும் அதுவே. காரறிவு ஆக்குவது கள் என்பது தெரிந்தாலும் குடியர்கள் ஒப்புவது இல்லையே. அதனால், வெள்ளை என்பது அவர்கள் விருப்பு.

3. வெள்ளை = சலவைத் துணி.

4. வெள்ளை = களங்கமில்லாதவன்/ள்/ர்.

5. வெள்ளை = வெண்பா.

6. வெள்ளை = சுண்ணாம்பு; வெள்ளைக் கலவை.

7. வெள்ளை = வெள்ளையாடு.

* 'வெள்' காண்க.

**வெள்ளையும் சொள்ளையும்:**

வெள்ளை= வெளுத்த வேட்டி சட்டை.

சொள்ளை= வெளுத்த துண்டு.

"ஆடை பாதி ஆள்பாதி" என்பது பழமொழி. மேலாடை யின்றி அவையில் புகுந்தால் எவரும் மதியார் என்பதொரு வழக்கம் உண்டு. ஆதலால் வெள்ளை என்பது வெளுத்த வேட்டியையும் வேண்டுமானால் சட்டையையும் குறித்து வந்தது. உடுப்பவை இரண்டே என்னும் வழக்கமிருந்த நாளில் வேட்டி மேலாடை என இரண்டே ஆடவர் உடை. சொள்ளை = துண்டு, மெல்லிது சிறிது என்னும் பொருளது. 'சொள்' என்பது. சொள் ஒருவகைச் சிறுபூச்சியும் சிறு துகளுமாம்.

**வெள்ளை வெட்டை:**

வெள்ளை= வெள்ளை நீர்.

வெட்டை= வெக்கை அல்லது வேக்காடு.

'வெள்ளை வெட்டை' என்பவை மக்கள் நோய்கள். வெள்ளை நீர் ஒழுக்கு வெள்ளையாம். இதன் முதிர்ச்சியால் வேக்காடு மிக்கு எரிச்சலும் தினவும் மிகுநிலை 'வெட்டை' யாம்.

'வெட்டை வந்தால் கட்டை' என்னும் மொழி, வெட்டையின் கொடுமையைச் சுட்டும் மொழி.

**வெறி:**

1. வெறி = இயற்கை மணம். "வெறி நாற்றம்" திருக். 1113

2. வெறி = வெறியாடல். வேலன் வெறியாடல்.

3. வெறி = இயற்கை எழுச்சி. "வெறிகொண்ட புள்ளினம்" கலிட்.123

4. வெறி = கள்வெறி. "கள்வெறிகொள்ளு தடி" பாரதி.

5. வெறி = மிகுபற்றுமை. சாதிவெறி, மதவெறி.

6. வெறி = காம மிகல். "வெறி பிடித்தவன்" ம.வ.

7. வெறி = கிறுக்கு.

**வெறுக்கை:**

வெறுக்கை = வெறுப்படையத் தக்க அளவு பெருஞ்செல்வம்; வெறுக்கத்தக்க ஒன்று.

"பொலங்கல வெறுக்கை" - அகம். 1

"அருங்கல வெறுக்கை அவைபெறல் வேண்டேம்" - புறம். 146

"உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதிலார்
மரம்மக்கள் ஆதலே வேறு" - திருக். 600

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்" - திருக். 363

என்பது கண்ட அவாவறுத்தார்க்குச் செல்வம் வெறுக்கையாம். பத்துடைமை வைத்த திருவள்ளுவர் பொருளுடைமை என ஓர் அதிகாரம் வைக்காமை எண்ணத் தக்கது.

**வெறுங்கறி:**

விடு சாறு, சாறு, மிளகுசாறு, மிளகுதண்ணீர் எனப்படு வதை விளவங்கோடு வட்டாரத்தார் வெறுங்கறி என்கின்றனர். அதில் காய், கிழங்கு, கீரை என எதுவும் இல்லாமையால் பெற்ற பெயர் இது.

**வெறுதலை:**

விறுதலை என மகப்பேறு இல்லா மகளிரைச் சுட்டுதல் மக்கள் வழக்காக உள்ளது. விறுதலை என்பது வெறுதலையாம். வெறுதலை - வெறுமை; வயிறு வாயாமை எப்பொருளும்

எச்சான்று எழுத்தும் இன்றித் தரும் கடனை வெண்ணிலைக் கடன் என வழங்குதல் உண்டு. அத்தகையது வெறுதலை. வந்தி என்பது இலக்கியவழக்கு.

**வெற்பு:**

வெற்பு = மலை.

நீர்வளமற்று, மலைமேல் கிடந்த மண் அரிப்புண்டு பயிர் பச்சை செடி கொடி இன்றி வெப்பால் வெடித்துப் பாளம் பாளமாகப் பிளந்த - வெடிவைத்துத் தகர்த்த - பாறைகளைப் போல் உள்ள கல்மேடே வெற்பு என்பதாம். வளமற்ற வெப்பமைந்த நிலம் தமிழகத்துப் பாலை நிலமாகக் கூறப்பட்டதாம். வெப்பு, வெடிப்பு, வெற்பு என்பவை ஒருவழிப்பட்டவை.

**வெற்றி:**

வெல் > வெற்றம் > வெற்றி.

இருவர் பொருது அவருள் ஒருவர் வெல்லுதல் வெற்றியாம் வெல்லல் வேறல் எனவும் வழங்கும். "இருவீர் வேறல் இயற்கையும் அன்றே" என்பது புறம் (45). வெற்றி பெறுதல் வெற்றம் என்றுமாம். சுற்றி இருப்பது சுற்றமாவது போல.

"வெற்றமொடு வெறுத் தொழுகிய" - மதுரைக். 73

**பொருள்:** "வெற்றியோடே செறிந்து நடந்த" நச்.

"வெற்றிவேற் செழியன்" - சிலப். 27:127

உரைபெறு கட்டுரை

"வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை" - சிலப். 20:36

"வெற்றி வேற்கை" என்பதொரு நூற்பெயர்.

**வெற்றிக் கரந்தை:**

பகைவர் கொண்ட தம் பசுநிரையைக் கரந்தைப் பூமாலை சூடிப் போய் மீட்பது பற்றிக் கூறுவது வெற்றிக் கரந்தையாகும். இதனை வெற்றிக் கரந்தை மஞ்சரி என்றும் கூறுவர்.

"தழுவார் கொண்ட தந்நிரை மீட்போர்
கரந்தை புனைந்து கனன்றுலவை யிற்செலீஇ
மீட்பதைக் கூறல் வெற்றிக் கரந்தை" - முத்துவீ. 1070

**வெற்றிலை:**

வெறுமை + இலை = வெற்றிலை.

வெற்றி என்பது வெல் வழிவந்த சொல். இது இன்மைப் பொருள் தரும் 'வெறுமை' வழிவந்த சொல். வெற்றிலையின் வித்து அதன்கொடியே. அதனால் 'கொடிக்கால்' என்பது அதன் வளர்நிலப் பெயராயிற்று. அது காய்ப்பது இல்லாமல் இலை மட்டுமே கொண்டிருப்பதால், அவ்வெறுமை கருதி இடப்பட்ட பெயர் வெற்றிலை ஆயிற்று. "வெற்றிலை கண்ணன்" என்பது ஆழ்வார் மொழி.

**வெற்றிலை போடுதல்:**

வெற்றிலை போடுதல் உவகைக் குறிப்பு

வெற்றிலை மங்கலப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. வெற்றிலை வைத்து அழைத்தல் திருமண அழைப்பாகும். வெற்றிலை தருதல் உறுதி மொழிதல் அமைதிப்படுத்தல் ஆயவற்றுக்கு அடையாளமாம். இம்மங்கலப் பொருளாம் வெற்றிலை உவமைப் பொருளாகவும் வழங்குகின்றது. மகிழ்ச்சியின் அடையாளமாகவும் முழுநிறைவாக உண்ட அடையாளமாகவும் வழக்கில் உள்ளது. இவற்றினும் உயர்ந்து பாலுறவுக் குறிப்பாகவும் 'வெற்றிலை போட வேண்டும்' என்பதுள்ளது.

* 'சருகு போடுதல்' காண்க.

**வெற்றிலை வைத்தல்:**

வெற்றிலை வைத்தல் = அழைத்தல்.

மங்கல நிகழ்வுக்கு அழைப்பார் வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தல் வழக்கு. முன்னாளில் திருமண அழைப்பு வெற்றிலை வைத்தலாகவே இருந்தது. இன்றைக்கும் தேடி வந்த ஒருவர் ஏதாவது அடாவடியாகப் பேசி எனக்கு அது செய்யவில்லை இது

*செய்யவில்லை என்றால், "உங்களை வெற்றிலை வைத்தா அழைத்தேன்" என்பர். வெற்றிலை வைத்து அழைத்து வருதலும், அவ்வாறு வருவாரை மதித்து ஆவன செய்தலும் கட்டாயம் என்பதை வலியுறுத்தும் வழக்கு இஃதாகும். இறங்க வேண்டிய இடம் வந்தும் இறங்காமல் இருந்ததைக் கண்ட பேருந்து நடத்துநர் "வெற்றிலை பாக்குக் கொண்டு வர வேண்டுமா?" என்றார். இதில் அழைப்பு முறைச் சுட்டு அறிக.*

**வெற்றி விளக்கம் (விசய வித்தாரம்):**

*எண்திசை மேலும் படைகொண்டு சென்று, ஆங்குள்ள அரசர்கள் பணிந்து கப்பம் செலுத்த அவர்களைப் பகையாகக் கொள்ளாமல் அவர்கள் நாட்டை அவர்க்கே ஆளவிட்டு வருதல் பற்றிக் கூறும் பனுவல் விசயவித்தாரம்.*

"அட்டதிக்குப் பாலர் திறைதர வாள்இறைவன்
விட்டு வரல்விசய வித்தாரம்" - பிர. திர. 48

*இது 'திசை வெற்றி' (திக்கு விசயம்) என்பதுமாம்.*

✲ ✲ ✲

# 'வே' வரிசைச் சொற்கள்

**வே:**

வகர ஏகாரம்; இடையின உயிர்மெய் நெடில். வே = வேழல், வேக்காடு.

"வேகும்பம் வேண்டான் விடும்" - சிறுபஞ். 69

ஏ, ஏய் என்பவை போல வே, வேய் என்பவை விளிப்பு வழக்கு. ஓ, ஓய் என்பவையும் அவையே.

**வேஎள்:**

வேள் > வேஎள்.

**ஒ.நோ.:**

ஆய் > ஆஅய்.

வேள் = விருப்பு; வேள் > வேட்கை = விருப்பம். வேஎள் = விருப்பத்திற்குரிய முருகன்.

"பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்" - திருமுரு. 273

"வேஎள் ஆவிக் கோமான்" - பதிற்றுப். 6. பதி.

**வேகடை:**

வேலையின்றி வீடுவீடாகத் தெருத்தெருவாகத் திரிபவனை வேகடை என்பது ம.வ.

**வேகம்:**

வேகு + அம் = வேகம்.

வெப்பால் அல்லது வெதுப்பால் செல்லும் விரைவு வேகம் ஆகும். இயல்பாகச் செல்லும் செலவினும் வேகும் இடத்தில் இருந்தும், வேகும் உளத்தொடும் இருந்தும் செல்லும் செலவு வேகம் ஆகும்.

வேகும் கரி, எண்ணெய், கன்னெய் முதலியவற்றின் வேதலே இயங்கிகளின் வேகமாதல் அறிவியல் சிறப்பாகியுள்ளமை அறிக. தீப்பற்றி வேகும் இடத்தில் இருந்து வெளிப்படுவார் அசை நடையா புரிவர்?

**வேகாது:**

வேகாது = நடைபெறாது.

"அந்தப் பருப்பெல்லாம் இங்கு வேகாது" என்பதொரு மரபுத்தொடர். பருப்பு சிலவகைத் தண்ணீரில் வேகும். சில வகைத் தண்ணீரில் வேகாது. கடுந்தண்ணீர், பருப்பு வேதற்கு உதவாது. அது போல் சிலர் ஏமாற்று அல்லது பசப்புதல் சிலரிடம் எடுபடுவதோ ஏற்கப்படுவதோ இல்லை. அத்தகையர் மேற்சொன்ன மரபுத் தொடரை வழங்குவர். புரிந்து கொண்டவர்க்கு - நாலும் தெளிந்தவர்க்கு, ஏமாற்றுவார் இயல்பு வெட்ட வெளியாதலால் அவர்களிடம் செல்லாது என்பதாம்.

**வேகாரி:**

வேகாரி = வெட்டிச் சோறு தின்னுபவர்.

வேகு ஆரி என்பவை சேர்ந்தது வேகாரி; வெந்ததை உண்பதை அன்றி வேறொரு வேலை செய்யாதவனை 'வேகாரி' என்பர். 'வெட்டி' என்றும் 'தண்டச்சோறு' என்றும் கூறுவதுண்டு. வெட்டியினும் வேகாரிக்கு வேறொரு சிறப்பும் உண்டு. வெட்டி, சோற்றைத் தின்னும் கேட்டுடன் அமைவான். வேகாரியோ வேறு வேறு கேடுகளும் செய்வான். சண்டை போடல், இழுத்துவிடல், கோள்மூட்டல் இன்னவெல்லாம் அவன் செய்யும் சிறுமைகளாம். "வெட்டிப் பயலைக் கட்டி அழுதாலும் வேகாரிப் பயலை ஒட்டக் கூடாது" என்பது வழக்குமொழி.

**வேங்கடம்:**

வேம் + கடம் = வேங்கடம். வெப்புமிக்க பாலை அன்னது.

வேங்கடம் = திருவேங்கடம், திருப்பதி, ஏழுமலை என்பனவெல்லாம் அது.

*தமிழகத்தின் வடவெல்லையாக இருந்தமையால் திசைசுட்டி "வடவேங்கடம்" என்றார் பனம்பாரர் (தொல். பாயி.).*

"புல்லிய வேங்கட விறல்வரை" - புறம். 385

***பொருள்:*** *"புல்லிய வேங்கடம் = புல்லி என்பவனுடைய வேங்கடம்" ஔவை. சு.து.*

**வேங்கை:**

*மூண்டெழும் எரிபோன்ற நிறத்தையுடைய மலர்களைக் கொண்டதால் வேங்கை எனப்பட்டது.*

"எரிமருள் வேங்கை" - நற். 216

***பொருள்:*** *"எரி போன்ற பூவை யுடைய வேங்கை".பின்னத்.*

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை" - நற். 112

*அரும்பு முழுவதும் ஒரு சேர மலர்தலால் எரி பற்றிய தோற்றம் தருதல் கண்டு இடப்பட்ட பெயர் வேங்கை. வேங்கையின் கீழ் விழும் வரிநிழல் போல நிறம் கொண்டது புலி ஆதலால் அதுவும் வேங்கை எனப்பட்டது.*

"விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேழம் புலம்பத் தாக்கிக்
குருதி பருகிய கொழுங்கவுள் கயவாய்
வேங்கை முதலொடு துடைக்கும்" - நற். 158

"இருங்கேழ் வயப்புலி வெரீஇ அயலது
கருங்கால் வேங்கை ஊறுபட மறலிப்
பெருஞ்சினம் தணியும்" - நற். 217

*இது வேங்கை மரத்தை வேங்கைப் புலியாகவே எண்ணி யானை தாக்கியதாம்.*

**வேசடை:**

*வேலையின்றி உண்டு கொழுத்து ஓயாத் துயர் தருபவனை வேசடை என்பது ம.வ.*

**வேசாரி:**

*வேலையின்றி ஒழுக்கக் கேடாகத் திரிபவள் வேசாரி எனப்படுதல் ம.வ. "அந்த வேசாரியிடம் பேச்சுக் கொடாதே" என்பர்.*

**வேடத்தணைதல் (வேடர் வினோதம்):**

*தன்னை அடைவதை விரும்பாத நங்கையை அடைதற்குத் தக்க வேடத்தைக் கொண்டு சென்று வயப்படுத்துதல் பற்றிக் கூறுவது வேடர் வினோதம் என்னும் பனுவல் செய்தி.*

"மேவலுறா மானையொரு வேடத்தான் மேவுதல்
மேவலுறு வேடர் வினோதமாம்"- பிர. திர.

*முருகன் வள்ளியை அடைந்த தொன்மக் கதையை உட்கொண்டு இத்தகு சிறு பனுவல் கிளர்ந்ததாகலாம். வேலன் வேடன் முதுவன் என முந்நிலை கொண்டு மணமுடித்துக் கொண்ட கதையைக் கருதுக.*

**வேடம்:**

*வேடு, வேட்டை, வேட்டம், வேட்டல் என்பவை எல்லாம் விருப்பம் என்னும் பொருள் தரும் 'வேள்' என்பதன் வழியாக வந்த சொற்கள். எடுத்துக் கொண்டு நடிக்கும் நடிப்புக்குத் தக விரும்பிப் போட்டுக் கொள்ளும் உடை, ஒப்பனை, கருவி, பேச்சு முதலியவை வேடம் எனப்பட்டன. வேடம் 'வேஷம்' எனப்பட்டது. பலவேடம் போட்டு நடிப்பவர் ஒருவர் பெயர், பலவேடம். அவரைப் 'பலவேஷம்' என மக்கள் வழங்கினர். வேடம் போட்ட 'வேஷம்' அது.*

**வேடு:**

1. *வேடு கட்டுதல்; உள்ளிருப்பது புலப்படாமல் மறைத்துக் கட்டுவது வேடு ஆகும்.*
2. *வேடு = வேடர்.*

"வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ" - கம். அயோத். 1032

*3. வேடு = வேடம். தன்தோற்றம் இயல்செயல் ஆயவற்றைப் புனைவால் மறைத்து உரிய நடிப்பு உறுப்பினனாகக் காண வைத்தல். வறுமை நடிகன், வள்ளல் பாரி வேடமிட்டு அள்ளி வழங்கல் நாடகக் காட்சிதானே!*

*வேட்டையாடுபவன் வேட்டைக் குரியவை கூவும் குரலில் கூவி அழைத்தலும், வேட்டைக்குரியவை காணா வகையில் மறைந்திருத்தலும் உண்மையாகலின், "தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" என்றார் வள்ளுவர் (திருக். 274).*

**வேடுபறி:**

*வழியே செல்வார் வைத்திருக்கும் பொருள்களை வேடர்கள் சென்று வழிப்பறி செய்ததைப் பற்றிய பனுவல் வேடுபறி.*

*சுந்தரர் கூடலை யாற்றூர் வழியே போன போது இறைவன் பூதகண வேடரைக் கொண்டு பொன்மணிகளைப் பறிப்பித்து, மீட்டளித்த செய்தி பற்றியமைந்த ஒரு நூல் சுந்தரர் வேடுபறி என அமைந்தது. (சரசுவதிமால் சுவடி. 681ஆ).*

**வேட்கை:**

*வேள் + கை = வேட்கை. வேள் = விருப்பம்; கை = சொல்லீறு.*

*1. காதல் வேட்கை.*

"உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ" - அகம். 64

"வேட்கை ஒருதலை உள்ளுதல்" - தொல். 1046

*2. நீர்வேட்கை. உண்ணு நீர்த்தாகம் வேட்கையாம்; நீர் வேட்கை அது.*

"வேணீர் உண்ட" - கலித். 23

"துளிநசை வேட்கை" - கலித் 46

*3. பொருள்வேட்கை.*

"அரும்பொருள் வேட்கை" - கலித். 18

**வேட்கோ:**

*வேள் + கோ = வேட்கோ. வேள் = மண்; வேட்கோ = மண்ணால் கலம் வனையும் குயவர்.*

**ஒ.நோ.:**

*வேளிர் = மண்ணாட்சி கொண்டவர்; வேளாளர் = நிலத்தை ஆளுபவர்.*

"வேட்கோச் சிறாஅர்" - புறம். 32

**வேட்டம்:**

*வேட்டம் = விருப்பம்.*

*வேட்டமிட்டுக் கொண்டு செய்யும் நகைவிளையாட்டு. ஆடல், பாடல், உரையாடல் வேடிக்கையாம்.*

*ஒருவர் ஒப்பத் தோற்றம் தர ஒப்பனை செய்து கொண்டு அவரியல் செயல் போலச் செய்வது வேடம் ஆகும். அது கூத்து நாடகம் ஆகிய கலை வழியது. மாறுவேடம் போடல் பழங்கால வேந்தர் ஒற்றர் வழக்கம். இற்றை நாளில் ஒற்று வேலை செய்வாரும் வேடத்தராதல் உண்டு. துறவியராக வேடமிடலும் ஒற்றர் வழக்கம்.*

"துறந்தார் படிவத்த ராகி"

*என்பது குறள் (586).*

*வேட்டுவர், வேட்டையர் என்பாரும் வேடத்தரே. மறைதல் உருமாறல், ஒப்ப ஒலித்தல் வகைகளால் பறவை விலங்கு ஆயவற்றைப் பற்றுபவர் அவர். "வேடநெறி நில்லார் வேடம் பூண்டு என்பயன்" என்பார் திருமூலர்.*

*வேடப்பர் - வேலப்பர்க்கு ஒருபெயர். அவர் வேட மிட்டதாம் தொன்மம் தழுவிய பெயர். வேட்டல் = விரும்பல். வேள்வி செய்தல், மணம்பூணல்; யாவும் விரும்பிச் செய்தல் வழியவை.*

**வேட்டல்:**

*வேட்டல் = விரும்புதல். வேண்டுதல் பொருள் வேட்டலாக வரும்.*

ஞான சம்பந்தர், பாடிய 'மழைவேட்டல்'தேவாரத்து இடம்பெற்றுள்ளது. வேட்டலைப் பெருவரவிற்றாகச் செய்தவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆவார்.

இறைவர் பலர் பெயரிலும், 'அருள்வேட்டல்' பாடிய அவர் 'புதுமை வேட்டலும்', பொதுமை வேட்டலும் பாடுகிறார். கிறித்துவின் அருள் வேட்டலும் நபிகள் அருள் வேட்டலும் இசைக்கிறார்.

**வேட்டி:**

நெடிய பாவில் இருந்து வெட்டி எடுக்கப்படுவது 'வெட்டி' > வேட்டி எனப்பட்டது. இட்டத்தைப் பற்றிக் கொண்ட நோய் வேட்டியையும் பற்றிக் கொண்டு 'வேஷ்டி' ஆயது. ஒரு குறும்பன் வேட்டி 'வேஷ்டி'யானதை எண்ணி, இட்டன்னா வரும் இடங்களி லெல்லாம் 'ஷ்'போட்டு விட்டால் வடமொழி வல்லான் என அவனைப் பாராட்டுவார்கள் என எண்ணி, "ஓர் ஆட்டுக்குட்டி வேட்டியைத் தின்றதைப் பார்த்து, ஓட்டு ஓட்டு"என்று கூறும் வகையால், "ஆஷ்டு குஷ்டி வேஷ்டியைத் திஷ்றது ஓஷ்டு ஓஷ்டு"என்றானாம். இஃது ஒரு சொலவடையாக வழங்குகிறது.

**வேட்டி துண்டு கட்டல்:**

வேட்டி துண்டு கட்டல் என்பது நீத்தார் கடனில் நிறைவாகச் செய்யப்படுவதாம். மகளிர்க்குக் கோடி போடுதல் என்பதும், ஆடவர்க்கு வேட்டி துண்டு கட்டுதல் என்பதும் வழக்கு.

பெண் கொண்டு கொடுத்தவர்கள் இதனைச் செய்வர். இழப்புக்கு ஆட்பட்டவர்களுக்கு மொட்டையடித்து நீராட்டி, வேட்டி துண்டு கட்டுதல் வழக்கம். சில இடங்களில் தலையில் துண்டைக் கட்டுதல் உண்டு. அதனால், 'லேஞ்சி கட்டு'என்றும் வழங்கப்படுகிறது. "லேஞ்சி" என்பது தலைப்பாகையாம்.

**வேட்டு:**

வெட்டு > வேட்டு.

கிணறு வெட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு அதனால் பெயர் பெற்றது வேட்டு. கல் உடைக்கப் பயன்பட்ட அது

கற்பகுதியாம் இடத்து வாணம் தோண்டப்பயன் பட்டமையால் வாணவேட்டு எனப்பட்டது. பின்னே, விழாக்களுக்குப் பெருவரவாகப் பயன்படுத்தும் வழக்கத்தால் குடிசைத் தொழில் வகையில் பேராலைத் தொழிலையும் விஞ்சுமாறு பெருகி வருகிறது.

சீனநாட்டில் இருந்து இறக்குமதியாய அது சீனவெடி, சீனவேட்டு என்பனவாய்ச் சீனிவெடி, சீனிவேட்டு, சீனிச்சரம் எனலாயது.

**வேட்டை:**

வேட்டை = வாய்ப்பு, வாய்ப்பாகக் கிடைத்த இன்பு.

வேட்டையாடுவது ஆடுபவர்க்கு இன்புப் பொருளாக இருக்கலாம். ஆனால் ஆடப்படும் உயிர்க்குத் தீராத் துன்பாதல் வெளிப்படை. சுட்ட சுட்ட குறியெல்லாம் வாய்த்து விட்டால் வேட்டையர் கொண்டாட்டத்தில் தலைகால் தெரியாமல் மகிழ்வர். அதிலிருந்து வேட்டை என்பதற்கு வாய்ப்புப் பொருளும் இன்புப் பொருளும் வாய்த்தன.

அரசியலார் பொருளீட்டல் பெருவேட்டை! பதவியால் வேண்டிய வெல்லாம் தேடிக் கொள்ளல் தனி வேட்டை! காமுகர் நினைத்தவை நிறைவேறல் கொள்ளை வேட்டை! இப்படி வேட்டைக் காடாகக் குமுகாயம் அமைவதும், அறிவுடையோரும் உணர்வுடையோரும் கூட வேட்டையராகத் திரிவதும் நல்ல அடையாளம் ஆகாது.

**வேணவா:**

வேள் > வேண் + அவா = வேணவா. வேள் = விருப்பம். அவா = ஆசை.

விருப்பின் மேலாம் விருப்பு பேராசையாம். "ஆரா இயற்கை அவா" அஃதாம் (திருக். 370). ஆரா இயற்கை, அளவிடற்கு அரியதாக விரியும் ஆசை என்க.

**வேதிகை:**

*வேதிகை = திண்ணை. மதில்போல் செம்புருக்கு நீர்விட்டுச் செய்யப் பட்டமையால் வேதிகை எனப்பட்டது. வெந்துருகிய நீர் வேதிகை. செம்பிட்டுச் செய்த இஞ்சி போல்வது. இஞ்சி = மதில்.*

"பவளத் திரள்கால் பைம்பொன் வேதிகை" - சிலப். 5:148

***பொருள்:*** *"மரகத மணியொடு வயிரத்தைக் குயிற்றிய திண்ணை" அரும்பத.*

**வேதினம்:**

*வேதினம் = வேக வைத்து வடிக்கப்பட்ட வலியவாள்.*

"வேதினத் துப்பவும்" - சிலப். 14:176

"வேதின வெரிநின் ஓதிமுது போத்து" - குறுந். 140

***பொருள்:*** *"கருக்கரிவாளைப் போன்ற முதுகுடைய ஆண் ஓந்தி" உரை, உ.வே.சா.*

**வேத்து:**

*வேந்து > வேத்து.*

*பள்ளிக்கு முதற்கண் வரும் மாணவன் வேத்து எனப்படு வான். தலைமையாக - முதன்மையாக - வந்தவன் என்பது பொருள். அவன் தனக்குப் பின்வருபவரை வரிசையாக எழுதி வைப்பான். தென்தமிழகத்தில் ஏரான் எனப்படுவது, தொழுதூர்ப் பகுதியில் வேத்து எனப்பட்டது. (தாய் தந்த வாழ்க்கைத் தேன் பக்.42).*

**வேந்தர்:**

*ஏய் = உவமை உருபு. 'இயைவ' என்பதும் அது.*

"போலப் புரைய ஒப்ப உறழ
மான கடுப்ப இயைவ ஏய்ப்ப"

*முதலாக உவமை உருபுகளைக் கூறும் நன்னூல் (367). ஏய்தல் > வேய்தல். கூரை வேய்தல் என்பது மக்கள் வழக்கு.*

சுவரின் மேல் வளை வைத்து முகடு கூட்டி வேய் பொருளை முடிமுடியாகக் கட்டி மேலே முகட்டில் வேய்ந்து அமுக்குப் போடல் கூரை வேய்தலாம். மழைநீர் உள்ளே இறங்காமல் இருப்பதற்குப் படப்பை போல் முகடு கூட்டி அமுக்குப் போட்டு வேய்தலும் வேளாண் துறை வழக்கு.

கொன்றை மலரைச் சூடிய இறையைக் கொன்றை வேய்ந்தவன் 'கொன்றை வேந்தன்'என்றனர். 'கொன்றை வேந்தன்' ஔவையார் இயற்றிய நூலாகத் திகழ்கின்றது.

"போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர்"

எனப்பட்ட வேந்தர் மூவர் 'முடிவேய்ந்தர்'(வேந்தர்) எனப் பட்டனர்.

முடி வேய்தல், 'காவல்'பொருளாய் இருந்து, ஆளும் கடமையாய் விரிந்தது. அப்பழைய ஆட்சியே இந்நாள் வேந்தர் (ஆளுநர்) பல்கலைக்கழகத் துணைவேந்தர், இணைவேந்தர் ஆயோர் பதவிப் பெயர்களின் கலைச்சொற்களாய்த் திகழ்கின்றன வாம்.

ஆளும் அரசுக்கு அமைந்த துறைகள் போலப் பல்கலைக் கழகங்களுக்கும் துறைபலவாதல் கண்கூடு. வேந்தர் முறை செய்தலைத் திருவள்ளுவர் "நாள்தொறும் நாடி முறை செய்தல்" என்பார். ஏனெனில், காவல் கடமை எவ்விடத்தும் எவராலும் சோர்வுறல் ஆகாது.சோர்வு ஏற்படின் காவன்முறைக் கட்டமைவு குன்றுமாறு செய்யும் உட்பகையும் உண்டு. அது மட்பகையின் மாணக் கெடுக்கும் என்பது வள்ளுவமாம். ஆதலால் வேந்தர் திறமாக, மைந்து பொருளாக வந்த வேந்தன் என்பார் தொல்காப்பியர். மைந்தாவது உரம்; அறிவும், அறிவொடு கூடிய மன உறுதியுமாம்.

**வேந்தன் குடைமங்கலம்:**

கொற்றவன் குடையைச் சிறப்பித்து நேரிசை வெண்பாவால் பாடுவது வேந்தன் குடைமங்கலம் எனப்பெறும்.

நேரிசை வெண்பாவின் முன் இரண்டு அடிகளிலும் குடைத்தொழிலும் தனிநிலை தொடங்கிப் பின்னிரண்டு

*அடிகளிலும் வேந்தன் புகழும் கூறப் பெற்றுக் 'குடை'என்று முடியும் அமைதியுடையது குடைமங்கலப் பாட்டு.*

*முன் மூன்று அடிகளும் கட்டளை அடிகளாக அமைதல் வேண்டும் என்றும், கட்டளையாவது குற்றியலிகரம், குற்றியலுகரம், ஒற்று, ஆய்தம் நீங்கிய உயிர், உயிர்மெய் அளவால் ஒத்து இருத்தல் என்றும் கூறுவர்.*

*'கடை மங்கலம்'ஒரு புறத்துறை ஆதலைப் புறப்பொருள் வெண்பா மாலையால் அறிக (222).*

"முன்னீ ரடியிலும் குடைத்தொழில் இயம்பியும்
பின்னீ ரடியில் தனிநிலை இரட்டியும்
கொற்றவற் புகழ்ந்து குடையென முடிக்கும்
நற்றிற நேரிசைக் குடைவெண் பாட்டே" - பன்னிரு. 199

*இந்திரகாளியார்*

"அதுவே,
குடைச்சொற் சிந்தடி ஈற்றில்வைத் தந்தக்
குடைச்சொல் லாதிக் குறளகத் தடக்கி
ஈற்றய லடியினும் ஈற்றினும் இறைவனைப்
போற்றிப் புகழ்ந்து புகறல் வேண்டும்" - பன்னிரு. 200

*இந்திரகாளியார்*

"ஒட்டிய குடைப்பொருள் உரைக்கும் நேரிசை
கட்டளை யாகுதல் கடனென மொழிப" - பன்னிரு. 201

"கட்டளை என்பது கருதுங் காலை
ஈற்றடி ஒழிய ஏனைமூன் றடியும்
பாற்படும் எழுத்தின் பகுதியொப் பதுவே" - பன்னிரு. 202

"இதற்கே யாமெழுத் தெண்ணுங் காலைக்
குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும்
ஒற்றுமாய் தமுமொழித் துயிர்மெய்யும் கொளலே" - பன்னிரு. 203

**வேந்தன் வெள்ளி (வச்சிராங்கி):**

*வேந்தன் = இந்திரன்.*

"வேந்தன் மேய தீம்புனல் உலகம்" - தொல். 951

அரம்பையராம் தெய்வப் பெண்டிர் மன்னவன் ஒருவனைக் கண்டு அவன் அழகால் மயங்கி அவனை நெருங்கி வர இந்திரன் மன்னனை எதிர்த்து நின்றானாக இந்திரன் மன்னனால் வெல்லப்படுவதாகப் பாடுதல் 'வச்சிராங்கி' என்பதாம். வச்சிரம், இந்திரன் படைக்கருவி, அவனை வெற்றி கொள்ளுதலால் வச்சிராங்கி எனப்பட்டது.

"அரம்பையர் இவனழகாற் - சாலவர இந்திரன்
எதிர்க்க இறைவெல்லப் பாடல் மகிழ்ந்திலங்கு
வச்சிராங்கி" - பிர. திர. 38

**வேம்பா:**

மதுக்கூர் வட்டாரத்தார் வெந்நீர் ஆக்கும் கலத்தை வேம்பா என்கின்றனர். பாய்லர், கீற்றர் என்பவற்றைக் குறிக்க நல்ல வழக்குச் சொல் வேம்பா. வெப்பமாக்குவது வேம்பா ஆயது. இது பொதுவழக்கு எனவும் தக்கது.

**வேம்பு:**

வெப்பு > வேப்பு > வேம்பு.

வெப்பக் காலத்தில் கொழுமையாகத் தளிர்த்துக் குளுமை தருவது. வெப்பும் வெப்பு நோயும் தணிப்பது.

வேம்பு மாலையன் பாண்டியன்

"கருங்கால் வேம்பின் ஒண்பூ" - குறுந். 24

"வாடா வேம்பின் வழுதி கூடல்" - அகம். 93

**வேய்:**

வே > வேய்.

வெப்பமிக்க மூங்கில் வேய் எனப்பட்டதாம். அதன் உராய்தலால் தீப்பற்றும் தகையது.

"வேயென விறல்வனப் பெய்திய தோளும்" - குறுந். 226

"கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கல்" - அகம். 17

**வேய்தல்:**

வேய்தல் என்பது முகடு கூட்டுதலைக் குறிக்கும் வழக்குச் சொல். கூரை வேய்தல் என்பதறிக. முடிமுடியாகக் கட்டிக் கூரை அமைத்தலையும் படைப்பை இடுதலையும் வேய்தல் என்பர். தலையில் முடிசூடிய மன்னவர் 'வேய்ந்தர்' ஆகி வேந்தராயினார். கொன்றை வேய்ந்த செல்வன் 'கொன்றை வேந்தன்' ஆனதறிக.

**வேரி:**

வேர் > வேரி = தேன், மணம், மது. வேரி = மணம்; மணமுடையதுமாம்.

"ஆனுருக் கன்ன வேரியை நல்கி" - புறம். 150

"வேரி கமழும் விரிதிரைத் தண்சேர்ப்ப" - பழ. 396

**வேர்:**

வியர் > வேர்.

வியர்வை > வேர்வை. வியன் > வியர் = விரிவு.

விரிந்து படர்ந்து செல்வதால் வியர் எனப்பட்டது வேர் ஆயது. வேரில் மண்ணின் மணம் இருத்தலால் வேர் என்பதற்கு மணம் என்னும் பொருளும் உண்டாயது. அது நல்மணம் வியர்வை அல்லது வேர்வை மணம், அல் மணமாம். "வேர்பார் தழைபார்" என்பது தமிழர் மருத்துவம்.

**வேலி:**

ஊருக்கும் நிலத்திற்கும் எல்லையாகப் புள்ளடிக்கல் நடுவதுடன் வேலியிடலும் வழக்கம்.

கருவேல், வெள்வேல் முதலாம் முட்படல்களை எல்லை யாக ஊன்றலின் வேலி எனப்பட்டது. மறம் பாடலில் வேல், வாள் ஆயவற்றை வேலியாக இடப்பெற்றதாகக் கூறும் செய்தி, உயர்வு நவிற்சி. "முல்லை வேலி நல்லூர்" ஊர்வேலி இது. வேலிக்கருவேல், வேலிப்பருத்தி நிலவேலி.

**வேல்:**

*வெல் > வேல்.*

*போரில் வெல்லுதற்குரிய கருவி வேல் ஆகும். யானைப் போரே உயரிய போர்; அப்போர்க்குரிய கருவி வேல்.*

"வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே

..........................................................

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" - புறம். 312

*வேல் + அன் = வேலன். வேல் வழிபட்ட இடம் படைவீடு.*

**வேல்விருத்தம்:**

*வேற்படையைப் பற்றிப் பத்து ஆசிரிய விருத்தம் பாடுவது வேல்விருத்தம் என்பதாகும் (நவநீதப். 41).*

*வேலன் வழிபாட்டு வழிப்பட்டது, வேல் வழிபாடு. வேல் உடையான் வேலனாயினமை வேற்சிறப்பை வெளிப்படுத்தும். வேல் வழிபாட்டு இடமே 'படைவீடு' எனப்பட்டதும், படை வீட்டுப் பதிகம் அது பெற்றதும் அறியத் தக்கவை.*

**வேளம்:**

***வேளம்:[1]***

*வேளம் என்பது செய்தி என்னும் பொருளில் குமரி மாவட்ட வழக்காக உள்ளது. வேள் = விரும்பத்தக்கது. நல்ல செய்தியை வேளம் என்று பின்னர்ப் பொதுவில் செய்திப் பொருள் தந்திருக்கும். தாக்கல் என்னும் முகவை மாவட்ட வழக்குச் சொல் துக்கச் செய்தியை முன்னர்க் குறித்துப் பின்னர்ப் பொதுச்செய்திக்கு ஆனது போன்றது அது.*

***வேளம்:[2]***

*பகைவர் நாட்டை வென்று அவர் நாட்டு மகளிரைச் சிறைப்படுத்தித் தம் நாட்டுக்குக் கொண்டு வந்து தம் காப்பில் வைக்கப்பட்ட இடம் வேளமாகும்.*

"பெண்டு பண்டாரங்களுடன் அகப்படுத்தி" கல்வெட்டு.

**வேளாண்மை:**

*வேள் = மண்.*

*வேளாம் மண்ணைப் பயிரீடு முதலாம் வகைகளால் ஆள்பவர் வேளாளர் ஆவார். வேளாம் மண் வளம் கொழிப்பது போல் வளம் வழங்குவார் வேளாளர் எனப்பட்டார்.*

*வேள் என்பார் குறுநில மன்னர். சங்கநாள் வேளிர் எழுவர் எனப்பட்டனர். அவர்கள் வண்மையால் பாடுபுகழ் பெற்றவர்.*

"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்"

**வேளை:**

*வேள் + ஐ = வேளை.*

*1.வேளை = வேளைக்கீரை. விரும்பியுண்ணும் கீரை வகையுள் ஒன்று வேளைக்கீரை.*

*2.வேளை = விரும்பத்தக்க பொழுது வேளை. முதற்கண் நற்பொழுதைக் குறித்துப் பின்னர் பொழுதுக் குறியாயிற்று.*

*3.வேளை = வேளைப்படை. படையில் ஒரு பிரிவினர். உற்ற இடத்து உயிரும் கொடுத்துத் தலைவனைக் காக்கும் படைஞர். இறுதி வரும்போதும் உறுதி தவறா உரவர் அவர்.*

"வேளை இலை வேவை" - புறம். 246

"வேளை வெந்தை" - புறம். 240

**வேள்:**

*வேள் = விருப்பம், மண், முருகு, மணம், வேளிர்.*

*விருப்பப் பொருளில் நிலம் 'வேள்' எனப்பட்டது. அதே பொருளில் வழங்கப்பட்ட சொற்களே நாடு, தேம் என்பன.*

*வேள் ஆகிய மண்ணின் உடைமையால் அதனை ஆட்சி புரிந்தவர் வேள் எனவும், வேளிர் எனவும் பெயர் பெற்றனர். வேள் வழியாகவே வேளாண்மை, வேளாளர், வேளார் என்னும் சொற்களும் தோன்றின. விரும்பத்தக்க மணமும், மணவாளனாம் இறையும் 'வேள்' எனப்பட்டன.*

*வேள் = முருகன். முருகு = மணம். திருமணம் வேள் ஆதல், "வேள் வாய்க் கவட்டை நெறி" என்னும் செய்யுளால் தெளிவுறும்.*

**வேள்வி:**

*வேள் என்பது விரும்புதல் பொருளது. வேள் வழியாக வந்த சொல்லே வேள்வி. அது 'யாக'ப் பொருள் தருவது அன்று. 'விருந்து என்னும் வேள்வி' என்பது வள்ளுவம் (87, 88) அவிசொரிந்து ஆயிரம் வேட்டலினும் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமையைப் போற்றுவது திருக்குறள். புதல் மறைந்து வேட்டுவன் வேட்டை யாடுதலைக் கூடா ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டு ஆக்குவது திருக்குறள். புலை, கொலை நீக்கம் கூறிய புகழ் நூலாம் திருக்குறளில் கொலை வேள்வி யாகத்திற்கு இடமில்லை! 'அவி' என்பது அவித்து படைத்தலையும் 'பலி' என்பது சோறும் நீரும் பூவும் படைத்தலையும் குறித்தது தமிழ்வழக்கு. 'குழவி பலி' என்பது வறியோர் இல்லத்து இளங்குழவிக்கு, வளமையாளர் வழங்கும் குழந்தைச் சோறே; அல்லது பிள்ளைச் சோறே; அதனைக் குழவிப் பலியாக்கிய கொடுமை தட்டுக் கெட்ட தமிழர்தம் பின்னைச் செயற்பாடு.*

**வேறுவிடுதல்:**

*தனிக் குடித்தனமாக்குதல் என்பதை உசிலம்பட்டி வட்டாரத்தில் வேறு விடுதல் என்கின்றனர். செட்டி நாட்டு வட்டாரத்தில் வேறு வைத்தல் என வழங்குகின்றனர். மனையறம் படுத்தல் என்பது சிலப்பதிகாரம்.*

**வேற்றுமை:**

*ஒன்றில் இருந்து வேறுபட்டது வேற்றுமை. தொகை வகையுள் ஒன்று.*

வேற்றுமை வேறுபாடு. ஒப்பிட்டுக் கண்டு வேறுபாடு கூறுவது அணி வகையுள் ஒன்று. வேற்றுமை = பகைமை. வேறுபட்ட தன்மை.

**வேனில் மாலை:**

இளவேனிலையும் முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுவது வேனில் மாலை எனப்படும்.

"வேனிலைப் பாடுதல் வேனில் மாலை" - இலக். பாட். 73

"வேனிலொடு முதிர் வேனிலும் புனைந்து
விளம்புதல் வேனின் மாலை யாகும்" - முத்துவீ. 1062

அறுவகைப் பெரும்பொழுதுகளில் இருவகையை உள்ளடக்கியது வேனில். இளவேனில் செல்வன் காமன், ஆகலின் அவன் வண்ணிப்பும் இம்மாலையில் இடம் பெறுவதாம்.

✻✻✻

# ‘வை’ வரிசைச் சொற்கள்

**வை:**

*வகர ஐகாரம்; நெடில்; உயிர்மெய்; ஓரெழுத்து ஒருமொழி.*

**வை:**[1]

*வை = நெல்.*

*மணியை வைத்திருத்தலால் 'வை' எனப்பட்டது. நெல்லைக் காணின், மணியை வெளிப்படா வகையில் நன்கு பொதிந்து வைத்துள்ள பேழை போல் விளங்குதல் புலப்படும்.*

*மூடி மறைத்து வைப்பதே 'வை' என்னும் ஏவல் ஆகும். வையம், வைப்பு, வையகம், வைப்புழி என்பவற்றின் 'வை' வைத்திருத்தல் வழிப்பட்டதே.*

***வை:***[2]

*வை = கூர்மை.*

*வை = நெல்; நெல்லின் நுனி கூர்மை மிக்கது. மழி தகடு போலவும் ஊசி போலவும் கிழிக்கவும் குத்தவும் வல்லது. அக் கூர்மைச் சிறப்பே 'வை' என்பதை உரிச்சொல் ஆக்கிற்று.*

"சால உறு தவ நனி கூர் கழி மிகல்" - நன். 456

"வையே கூர்மை" - தொல். 870

***எ-டு:***

*வைந்நுனைப் பகழி, வைவேல்.*

**வைகல்:**

*வைகல் = நாள், தங்குதல், நிலைபேறு. வைகுதல் = தங்குதல்.*

*இரவுப் பொழுது அல்லது இருள் தங்கியுள்ள பொழுது. நாள் என்னும் பொருளதுமாம்.*

"வரும் வைகல் மீன்பிறழினும்" - மதுரைக். 108

ஒவ்வொரு நாளையும் நிலைபேற்று நாளாக--ச் செய்தலே நிலைபேறில்லா உலகில் நிலைக்கத் தக்க செயன்மையாகும். 'நிலையாது நிலையாது' என்று சொல்லுதற்கும், அழுதற்கும் அமைந்ததன்று வைகல்! நிலைபெறத் தக்கவை செய்க என்பதே அதன் பொருளாம்.

"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவார்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்" - நாலடி. 39

நிலைபேறாக்கும் வைகலை - நிலைபேறாக்க வந்த வைகலைத் - தொல்காப்பியம் பாங்கருஞ் சிறப்பினது என்பதை எண்ணுக. "நில்லா உலகம் புல்லிய நெறித்தே" என்பதில் வரும் புல்லுதல் பொருந்துதல் பொருளதாதல் அறிக.

"பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே" - தொல். 1024

உடலுக்கு 'மெய்' என்றும், 'மேனி' என்றும் இறந்தாரை 'மாண்டார்' என்றும் கூறிய பண்டைப் பெருமக்களை எண்ணுக.

**வைகறை:**

வைகு + அறை = வைகறை. அறை = அகற்றுதல், விலகுதல்.

இரவுப் பொழுது அல்லது இருள் அகலும் பொழுது; விடியற் பொழுது.

"தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே" - குறுந். 157

வைகறைப் பொழுதை வாய்ப்பப் பொருள் விளக்குவது இது.

**வைட்தூறு:**

வைத்தூறு = வைக்கோல், வைக்கோல் போர்.

*வை = நெல். அதன்தாள் அல்லது அடி வைத்தூறு எனப்பட்டது. 'வேரும் தூறும்' என்பது இணைமொழி.*

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" - திருக். 435

*வைத்தூறு = படைப்பு (படப்பு).*

**வைத்தூற்றி:**

*புனல் எனக் கூறப்படும் கருவியை வைத்தூற்றி எனக் குமரி மாவட்ட முஞ்சிறை வட்டாரத்தார் வழங்குகின்றனர். புட்டிலில், தகரத்தில், குடத்தில் வைத்து ஊற்றும் வாயகல் குழலை வைத்தூற்றி என்பது இயல்பான பொருள் விளக்கப் படைப்பாகும். பாவாணர் அன்ன புலமக்களும் போற்றிய சிறப்பினதாம்.*

**வைப்பகம்:**

*வைப்பு + அகம் = வைப்பகம், பாங்கு, கருவூலம்.*

*பொருள் சேர்த்து வைக்கும் இடம் வைப்பகம், இது புத்தாக்கக் கலைச்சொல்.*

"நிலைவைப்பு இன்று முடிகிறது; வைப்பகம் சென்று எடுக்க
வேண்டும்" என்பது ம.வ.

**வைப்பு:**

*பாதுகாத்து வைக்கப்படும் செல்வம், வைப்பு எனப்படும். "எய்ப்பினில் வைப்பு".*

*1.வைப்பு = பொருள் வைத்து வேண்டும் போது கொள்ளும் வங்கி.*

*2.வைப்பு = பொருள் போல வைத்துப் பேணும் பெண்டு. வைப்பு, வைப்பாட்டி.*

*3.வைப்பு = உலகம், இடம்.*

"நாடிடை விலங்கிய வைப்பு" - ஐங்குறு. 313

**வையகம்:**

*வை + அகம் = வையகம் = உலகம். வைத்திருக்கும் இடம்.*

*வையம், வையகம் என்பதன் ககரம் தொகுத்தல். வைப்பு, வைப்புழி என்பவற்றைக் காண்க. பல்வகை வளங்களையும் தன்னகத்துக் கொண்டுள்ள அல்லது வைத்துள்ள நிலம்.*

*வெளி, வளி, தீ, நீர் என்னும் நாற்பூதங்களின் விரிவே நிலம் ஆகலின் நிலத்தைக் கூறிய அளவில் மற்றவை அடங்கும். முயற்சி யுடையவர்க்கு நிலம் வேண்டுவ வெல்லாம் வழங்கும் என்பது வள்ளுவம் (1040).*

**வையம்:**

*வை + அம் = வையம் = உலகம்.*

"வையங் காவலர் வழிமொழிந் தொழுக" - புறம். 8

*வையம் = இயங்கு (அ) இயக்கும் வண்டி, தேர்.*

"வைய வலவன் வந்தனன்" - பெருங். 3:6:3

**வையிட்டு:**

*வைகிருட்டு என்பது வைகு இருட்டுப் பொழுது; மாலைக் கருக்கல் என்பதும் அது. இது குமரி மாவட்ட வழக்கு. வைகறை என்பது வைகிய இருளை அகற்றும் விடிகாலை என்பது. வைகிற்று என்பது இருட்டாயிற்று என்னும் இலக்கிய ஆட்சியது. மாலையை வைகும் நேரம் என்பது விளவங்கோடு வட்டார வழக்கு.*

**வையை:**

*வை + ஐ = வையை.*

*வையகத்தின் தாயென்ன ஊட்டிக் காக்கும் ஆறு. வையமாம் படகு பரிசல் கொண்டு கடக்கும் ஆறுமாம்.*

*"காவிரி தென்பெண்ணை பாலா று - தமிழ்*

*கண்டதோர் வையை பொருநைநதி"- பாரதி.*

*வையை வரவு, வளமை, புலனாட்டு முதலாயவற்றை விரியக் கூறுவது பரிபாடல்.*

"வையைப் புதுப்புனல்" - கலித். 98

***

# ‘வெள’ வரிசைச் சொற்கள்

**வெளவல்:**

*வெளவு + அல் = வெளவல் = கையால் பற்றிக் கொள்ளுதல்.*

“கைப்பொருள் வெளவும் களவோர் வாழ்க்கை” - பெரும்பாண். 40

“வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடிய” - அகம். 1

**வெளவால்:**

*வெள > வெளவால் = வாவிச் செல்லுதலும் வாவித் தொங்கலும் உடையது. வாவல் என்பதும் இது.*

**ஒ.நோ.:**

*ஔவுதல் > ஆவல்.*

“உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்
ஓங்கல் அஞ்சினைத் தூங்குதுயில் பொழுதின்” - நற். 87

**வெளவுதல்:**

*வெளவு > வெளவுதல் = கவர்ந்து அல்லது பறித்துக் கொள்ளுதல்.*

** ‘வெளவல்’ காண்க.*

**நிறைவுக் குறிப்பு**

*ட, ண, ர, ல, ழ, ள, ற, ன இவ்வெட்டு உயிர்மெய்களும் இவற்றின் வரிசையும் மொழிமுதலாக வாரா.*

*ஒற்றெழுத்துகளும் மொழிமுதலாக வாரா.*

*டகாரம், ணகாரம், ழகாரம் என அவ்வெழுத்துச் சுட்டாக வருதல் உண்டு. அவை பெயர், பிறப்பு, மொழிநிலை பற்றி வருவன ஆதலால் மொழிமுதலாகா.*

*'டம்பம்', 'டமாரம்', 'லங்கா' முதலியன தமிழியல் முறைச் சொற்கள் அல்ல.*

*டபடப, டம்டம், டமடம, லல்லல்லா முதலன ஒலிக்குறிப்பு வழிய வழக்குகள். மொழிநிலைப் பட்டவை அல்ல.*

*மொழிநிலை போற்றல் முறையாம் கடனே!*

✲ ✲ ✲

## தமிழ்மண் பதிப்பில்

### இளங்குமரனார் தமிழ்வளம் - 1-40

1. வழக்குச்சொல் அகராதி வட்டார வழக்குச் சொல் அகராதி
2. இணைச்சொல் அகராதி இலக்கிய வகை அகராதி
3. உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம் (அகரவரிசை)
4. இலக்கண அகராதி (ஐந்திலக்கணம்)
   1. எழுத்து, 2. சொல், 3. பொருள், 4. யாப்பு, 5. அணி
5. புறநானூற்றுக் கதைகள்
   1. அந்த உணர்வு எங்கே? 2.பெரும் புலவர் மூவர்
   3. பண்டைத் தமிழ் மன்றங்கள்
6. திருக்குறள் ஆராய்ச்சி - 1
7. திருக்குறள் ஆராய்ச்சி - 2
8. திருக்குறள் கதைகள்
9. திருக்குறள் கட்டுரைகள்
10. காக்கைபாடினியம்
11. களவியற் காரிகை 16
12. தகடூர் யாத்திரை - மூலமும் உரையும்
13. யாப்பருங்கல விருத்தி - (பழைய விருத்தியுரையுடன்)
14. தமிழ்க் "கா.சு" கலைக் களஞ்சியம்
15. தமிழ் வளம் - சொல்
16. தமிழ் வளம் - பொருள்
17. புறத்திரட்டு

18. வாழ்வியல் வளம்

19. தமிழர் வாழ்வியல் இலக்கணம்

20. 1. கல்விச் செல்வம்
2. இருசொல் அழகு
3. தனிப்பாடல் கனிச்சுவை
4. பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி

21. சான்றோர் வரலாறு: அரசஞ்சண்முகனார், வேதநாயகம் பிள்ளை, தாமோதரனார்

22. தமிழ்மலை, மறைமலையடிகள் ஆராய்ச்சித்திறன்

23. பாவாணர் - பொன்மொழிகள் - உவமைகள்

24. பாண்டி நாட்டுப் புலவர்கள் 1,2

25. தமிழ்க் கா.சு.வின் தமிழர் சமயம் ஓர் ஆய்வு, திரு.வி.க. தமிழ்த் தொண்டு

26. திருவரங்கர் வரலாறு

27. வ.சு. வரலாறு

28. ஈரோடு வேலா (வரலாறு), குணநலத் தோன்றல் குப்புமுத்து ஐயா

29. கவிஞர் தாகூர் - பிணி தீர்க்கும் பெருமான், அறப்போர், இரு கடற்கால்கள்

30. அண்ணல் ஆபிரகாம், அறவோர் அமைதிப் பணிகள், உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்

31. மதுரைக் கோயில் வரலாறு, மதுரைத் திருக்கோயில், திருவிளையாடற் கதைகள், மதுரை நான்காம் தமிழ்ச சங்கம்

32. அன்பும் அறிவும், பழனி பாலநீதி, நீதிபோத வெண்பா, நீதி சாரம்

33. சிற்றருவி (குழந்யைர் பாடல்), வானவில், முல்லாவின் கதைகள் முப்பது

34. வள்ளுவர் வழியில் வள்ளலார், வள்ளலார் கண்ட சாகாக்கலை

35. பரிபாடலில் திருமுருகன்,
பெரும்பொருள் விளக்கம் (உரை நூல்)

36. சொல்லியன் நெறிமுறை - அகல், செந்தமிழ்ச்
சொல்வளம், வேர்ச்சொல் விரிவு, பேரகத்தியமும்
புதிய ஐந்திறமும், தொல்காப்பியர் காலம்

37. சிவ வாக்கியர், குதம்பைச் சித்தர், சிவஞானபோதம்

38. திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா,
திருவருணைக் கலம்பகம், மதுரைச் சொக்கநாதர்
திருவிளையாடல் அம்மானை, மீனாட்சியம்மை
குறம் - இரட்டை மணிமாலை

39. வாழ்வியல் வழிநடை, வையகம் தழுவிய வாழ்வியல்,
வாழ்வியல் சிக்கல்களும் வள்ளுவத் தீர்வுகளும்

40. வள்ளுவமும் வாழ்வியலும், திருக்குறள் நோக்கு,
திருக்குறளில் ஒப்புரிமை, தரக்கட்டுப்பாடும் திருக்குறளும்.

குறிப்புகள்

குறிப்புகள்